வெளியீட்டுத் தொடர் எண் :

# அனுபோக வைத்திய நவநீதம்

எட்டாம் பாகம்

ஆசிரியர் :

ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975

விலை ரூ.

முதற் பதிப்பு : 1905

இரண்டாம் பதிப்பு :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சி. ம. நூ. வெ. குழு — 1975ஆம் ஆண்டு

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்
சென்னை-600029.

அச்சிட்டோர் :

மேகலா அச்சகம்,
13-ஆ, கந்தப்ப கிராமணி தெரு,
சென்னை-600 007.

## அருள்மிகு
## பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

### அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்
திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி பி. எஸ்ஸி., அறங்காவலர்
திரு. என். நாச்சிமுத்து எம். எல். ஏ. ,,
புலவர் திரு. சி. பழனிச்சாமி எம். எல். ஏ, ,,
திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் ,,

வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி. எல்,
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி

## அருள்மிகு
## பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
## சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. ஸி. ஐ. எம்.,
தலைவர்,
தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ மத்தியக் கழகம்,
சென்னை-600005. ... பொருளாளர்

திரு. பு. மனோகரன்,
தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம். ... உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி. எல்.,
நிர்வாக அதிகாரி,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமீ
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்., சிறப்பு
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, ... அழைப்பினர்
சென்னை-600029.

## சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு
### உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்.,
இயக்குநர், இந்தியமருத்துவத்துறை, செயலர்
சென்னை-600029. உறுப்பினர்

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன் எச். பி. ஐ. எம்.,
முன்னுள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை-600005. உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு எச். பி. ஐ. எம்.,
முன்னுள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம். உறுப்பினர்

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் எல். ஐ. எம்.
மருத்துவ அலுவலர்,
ஊராட்சி ஒன்றிய மருந்தகம்,
காவேரிப்பாக்கம், வட ஆற்காடு. ,,

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி எல். ஐ. எம்.
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி. ,,

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ,,

8. டாக்டர் ப. சிற்சபை ஆர். ஐ. எம். பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம். ,,
சென்னை-600005.

9. பண்டிட் பெ. முத்துக்கருப்பப் பிள்ளை ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம்,
மதுரை. ,,

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம் ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சென்ட்ரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை-600012. ,,

11. டாக்டர் என். சேது ரகுநாதன்,
தமிழ்ப் பேராசிரியர்,
விருதுநகர்.

12. திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை,
முன்னாள் செயலர்,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சை. ,,

## சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி பி.ஏ., ஜி.சி.ஐ எம்.,
முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன் எல்.ஐ.எம்.,
பேராசிரியர், மேல்பட்டப் படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி,
கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. டாக்டர் இரத்தினவேலு சுப்பிரமணியம்,
பி.எஸ்ஸி., எம்.டி., எம்.ஆர்.சி.பி., (லண்டன்),
சென்னை-600010.

**மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்**

**மாண்புமிகு பேராசிரியர்**

# க. அன்பழகன் எம்.ஏ.

**அவர்கள் அளித்த**

## அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால்—வழிவழியாகவும் கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலை பெறுதற்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்—இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளுமாறு ஆய்வுகள்மூலம் நிலை நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும்—ஒரு காலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள்—உடனடியாகப் பதிப்பிக்கப்படவேண்டும். இவை வெளிவந்தால்தான், இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும், இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன் பெற இயலும்; மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி

உண்மை தெரியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப் படுத்தவும், அரிய மூலப்பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப் பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்ப தால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்து களுக்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெற வும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவ வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங் காவல் குழுவினரும்—அதன் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும்—இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளி யீட்டுக்கென இரா. தியாகராஜன் எல்.ஐ.எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத் துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்—பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணைநிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும் அக் குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந் தெடுக்கப்பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையே அனுபோக வைத்திய நவநீதம் - ஒன்று முதல் பத்து பாகங்களும் – அவற்றின் திறவு கோலும் ஆகும். இன்று கிடைக்காத பதிப்பாக உள்ள இந்த மருத்துவக் களஞ்சியம் வெளிவருவது மிகுந்த பயன் தரவல்லதாம்.

இந் நூல்களின் ஆசிரியர் - சித்த மருத்துவ வல்லுநர் ஹக்கீம். ப. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள் – இளமை முதலே – தமது முன்னோர்தம் மருத்துவக் கலையைப் பொன்னேபோல் போற்றிப் பயின்று,

தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டும் பயன்படுத்தித் தேர்ந்து தெளிந்து – உலகோர்க்குப் பயன்படவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச் செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள் - இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு - ஒளி காண்பதற்கு வழி கண்ட வல்லுநரில் அவர் தலை சிறந்தவர் என்பது மிகை யாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்றலுடனும், நெறியுடனும், பொறுப்புடனும் எளிய இனிய தமிழில் – இத்தனை நூல்களை இயற்றியமைக்கு, சித்த மருத்துவ உலகம் – ஹக்கீம் அப்துல்லா அவர் கட்கு எந்நாளும் நன்றி செலுத்தக் கடமைப்பாடுடைய தாகும்.

அவர் இயற்றிய அனுபோக வைத்திய நவநீதம் முதற் பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

''மிகக் கொடிய நோய்களையும் அறத்தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பது போல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கின்றார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது :

''அறுவைசெய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது; ஆனால், நாள்பட்ட நோய்களையும், பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய் நோய், பாண்டு, மந்தாக் கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய் களையும் அறத்தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ

முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங் களே மிக மேன்மை பெற்றவை'' என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியான தெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையான தெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழு மனதோடு ஏற்றுக்கொள்வார்கள்.

இக் கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால்—ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும்வண்ணம் நடைமுறை யில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகு மாறு—மருந்து செய்முறைகளை—அரிய நூல் வடிவத் தில் வழங்கிச்சென்ற—ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்களின் தொண்டு,

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.''

என்னும், குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப் படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர்தம் முயற்சி வளர வாழ்த்துகின்றேன்.

சென்னை
20—3—1975

**க. அன்பழகன்**

# இரண்டாம்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; தமிழ் மருத்துவமுறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால் இம் மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலா யிற்று. அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும் மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளை யும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடு களில் பதிவுசெய்தும் உலகோர்க்கு உதவிசெய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்—நிலநடுக்கம், கடற்கோள் போன்ற—சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்கு தலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில, மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும் அம் மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டு கையாண்டுவரும் மருத்து வர்கள் வாயிலாகவும் பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித் தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழி யாது நிலைபெற்றிருக்கிறது.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித் தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழைய படி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சிச் சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924-ல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து, பல கிராம மருத்துவ மனைகளையும் அமைத்து இயங்கச்செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச் சிக்கு வித்தூன்றினர். அக் காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில்

பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப்படி கற்பிக்கப் போதிய பாடப் புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக் குறையை ஓர்ந்து பாடப் புத்தக ஆக்கக் குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்தமருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட், வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசு வழி வெளியிட்ட நஞ்சுநூல், பால வாகடம் என்னும் நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக் குழுவினர் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல்நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950-ல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்துவந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப்பெற்றன.

அக் கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங்கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாடநூல்களும் துணைநூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும், கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாட நூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (pharmacopea committee 1966 G.O. M.S. 2163 Dt. 23-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாட நூற் குழு என்று (G. O. MS. No. 1060 health Dt. 13-6-66) ஒருகுழுவும், திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும் விரைவில் பயன் காணவேண்டி 1973 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15 ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு என்னும் ஒரு குழுவைத் (G.O. MS. No. 2571

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகளுக்கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்குகொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்று தங்குதடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக்கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக் குழுவினரும் இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்துவரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியாகிய உயர்திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்துசமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத் தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் இக் குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக் குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெறவேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர். பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அச்சடிக்கும் தாள்கள் அடக்க விலையில் திருவாளர்கள் சேஷசாயி பேப்பர்மில்சாரிடமிருந்து மிக விரைவில் கிடைக்கும் படிச்செய்த முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக் குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும் இந் நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக் குழுவுக்குத் துணைபுரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன், எல். ஐ. எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் புலவர்கள் வை. முரு. முத்துக்குமாரசாமி,

மு. சௌரிராசன், வி.செ. விநாயகம், வே. வாசுதேவன் ஆகியவர் களையும் இக் குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்து உதவிய சித்த மருத்துவர்கள் திரு. ப. சிற்சபை, திரு. கே. சீனி வாசன், திரு. மு. சௌரிராசன் ஆகியோருக்கும் அந் நூல்களைத் திரட்டித்தர துணைபுரிந்த சித்த மருத்துவர்கள் திரு. டி. வி கல்யாண சுந்தரம், திரு. மு. பூசலிங்கம் ஆகியோருக்கும் இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக் கோப்புகளின் திருத்தங்களைச் செய்து உதவியமையை இக் குழு பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய அந்தந்த அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மன முவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந் நூல்களை வெளியிடுகின்றனம்.

**டாக்டர் இரா. தியாகராசன்**, எல். ஐ. எம்.,
தலைவர்,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை - 600029.

## முதற்பதிப்பின் முகவுரை

பெரியோர்களே !

இந்த அனுபோக வைத்திய நவநீதத்தின் அருமை பெருமை ஆகியவைகளெல்லாம் இதற்கு முந்தின ஏழு பாகங்களையும் படித்தவர்க்கு நன்கு விளங்கி இருக்கும். அவ்வாறு, இது அருமை பெருமை வாய்ந்ததாயிருப்பதை முன்னிட்டு, இதைக் கடைசிவரை விரைவில் வெளிப்படுத்தி விடவேண்டும்; என்று பல நண்பர்கள் கேட்டுக்கொண்டதை முன்னிட்டு ஏழு பாகங்கள்வரை வெகு சீக்கிரமாகவே வெளிப்படுத்தி வந்தோம். அப்படி வெளிப்படுத்தி வந்தும் இதன் ஏழாம் பாகம் வெளியிட்ட பின்பு நமக்கேற்பட்ட உடல் நலமின்மையாலும் வேறு பல காரணங்களாலும் இவ் வேலை நடைபெறுமல் நின்றுபோயிருந்தது. ஆயினும், மேற்படி ஏழு பாகங்களையும் வாங்கிப் படித்த நண்பர்கள் அடுத்த பாகங்களையும் வெளிப்படுத்திச் சீக்கிரம் இந் நூலைப் பூர்த்தி பெறும்படி செய்ய வேண்டுமென்று அடிக்கடி எழுதிக்கொண்டிருந்தார்கள். அப்படி எழுதிய கடிதங்கள் நாளுக்குநாள் அதிகப்பட்டன. அதனுல், எமது சிரமத்தை உத்தேசிக்காமல் நண்பர்களின் மனதைத் திருப்தி செய்யும் பொருட்டு இச் சமயம் ஒரே பிடிவாதமாயிருந்து இந்த எட்டாம் பாகத்தை ஆரம்பித்துச் சில நாள்களில் அச்சிட்டு வெளிப்படுத்தி இருக்கிறோம். இதன்பின் இன்னும் இரண்டு பாகங்களில் இந் நூலை முடித்து விடவேண்டுமென திட்டமிட்டிருக்கிறோம். அத் திட்டப்படியே அவைகளும் விரைவில் வெளிவரும். மற்ற பாகங்களைப்போலவே இந்த எட்டாம் பாகமும் மிகவும் சிறப்புப் பொருந்தியது. இதன் உயர்வனைத்தும் இதை முழுவதும் படித்துப் பார்ப்போருக்கு நேர்த்தியாய் விளங்கும்.

இதில், நாகராதி உருண்டை, பஞ்சதீபாக்கினி இளகம், நாகராதி இளகங்கள், தீபாக்கினி ரசாயனம், குன்மச் சூரணம், சுவாச உருண்டை, நாகரசிங்காதிச் சூரணம், நாகராதி நெய்கள், நாகராதி மதன காமேசுர இளகங்கள், நாகரவிந்தாதி மகா காமேசுர இளகம், கறியாதித் தீபனச் சூரணம், மிளகு இளகம், கறியாதி மதனகாமேசுரம், திப்பிலி இளகம், திப்பிலியாதி நெய், யானைத்திப்பிலி நெய், அரிதகி இளகங்கள், கடுக்காய் முறப்பா, கடுக்காய் நெய்கள், திரிபாலாதிச் சூரணம், திரிபாலாதி நெய்,

நெல்லிமுள்ளி இளகம், அநுஷ்தவா, ஆமலக இளகம், நெல்லிக் காய் இளகம், பாவன நெல்லிக்காய், தான்றிக்காய் இளகம், சீரகப்பாவனை, சீரகாதிச் சூரணம், சீரகாதி இளகங்கள், சீராகாதி நெய், வெந்தய இளகம், மல்லியாதிச் சூரணம், ஏலாதிச் சூரணங்கள், ஏலாதி இளகம், தாளிசச் சூரணங்கள், தாளீச இளகம், துரிதஸ்கலித நிவாரணி, மன்மதகாமினி புஷ்டி இளகம், இலவங்காதி இளகம், உள்ளி இளகங்கள், உள்ளி நெய், இலிங்கச் செந்தூரம், வெள்ளுள்ளி நெய், இஞ்சி ரசாயனம், இஞ்சி இளகங்கள், கண்டங்கத்திரிப் பழச் சூரணம், கண்டங்கத்திரிப் பழ இளகம், தூதுவளைக் கற்பம், இளைத்த உடல் பருக்க உசிதம், பருத்த உடல் இளைக்க உசிதம், தேகசோஷணை, தூதுவளை இளகம், தூதுவளை நெய்கள், அயவத்திச் சூரணம், இன்பூரா இளகம், குக்கி லாதிச் சூரணம், குக்கில் வல்லாதி, குக்கிலாதி உருண்டை, புடலாதிக் குக்கில் நெய், குக்கில் நெய், குக்கில் இளகம், சரீரபோஷ ணங்கள், அசுவகெந்திச் சூரணங்கள், அசுவகெந்தி நெய்கள், அசுவகெந்தி ரசாயனம், அட்டச் சூரணம், அட்டாதிச் சூரணம், இங்குட்டாதி உருண்டை, பெருங்காய இளகம், பச்சைக் கற்பூராதிச் சூரணம், கற்பூராதி இளகம், பறங்கிப்பட்டை இளகம், பட்டைச் சூரணம், பறங்கிப் பட்டைப் பதங்கங்கள், கற்பூரவள்ளி நெய், கற்பூரவள்ளி சர்பத்து, பொடுதலைச் சூரணம், திராட்சாதிச் சூரணம், மதனகாமேசுரச் சூரணம், திராட்சாதி நெய், திராட்சாதி மாத்திரை, திராட்சாதி மதூகம், முசுமுசுக்கை இளகம், சந்தனாதிச் சூரணம், சந்தன நெய், சிறுவில்வாதி இளகம், மகாவில் வாதி இளகம், வல்லாதகித் தூய்மைகள், வல்லாதகித் தைலம், வல்லாதகி இளகங்கள், நரசிம்ம இளகம், மேக வல்லாதி, பால் வல்லாதி, இடிவல்லாதி, நீரடிமுத்து வல்லாதி, இலகு வல்லாதி, கலிவல்லாதி, இராமபாண வல்லாதி, இராச வல்லாதி, இராசப் பதங்கம், வல்லாதகிப்பருப்பு இளகம், சுக்கு இளகம், பெருங்காய இளகம், பறங்கிப்பட்டை இளகம், திராட்சாதி நெய், சந்தனாதி நெய், எலுமிச்சம்பழ இளகம், சதாபல இளகம், விளாம்பழ வில்வாதி இளகம், விளாம்பழ பானம், விளாம்பழ திராவகம், விளாம்பழ சர்பத்துகள், சதாபல சர்பத்து, துருஞ்சி நாரத்தம்பழ சர்பத்து, துருஞ்சி சர்பத்து, பொதினா சர்பத்து, திராட்சை சர்பத்து, கொத்துமல்லி சர்பத்து, இஞ்சி பானம், கற்பூரவள்ளி பானம், ரோசாப்பூ சர்பத்து, வாழைப்பழ சர்பத்து, வெந்தயச் சூரணம், நீரடிமுத்துப் பிரயோகம், அசுவ கெந்திப்பற்று, மைசாட்சி வில்லை, கருவேப்பிலைச் சூரணம், கருவேப்பிலைக் கருக்குக் குடிநீர், தேங்காய் மதனகாமேசுரம், தேங்காய்ப்பால் இளகங்கள், தேங்காய்ப்பால் நெய், இளநீர் நெய், தேங்காய் நெய், பூநாக மெழுகு, பூநாக பற்பம், பூநாகப் பிரயோகம், இலவங்கப்பட்டைச் சூரணம், ஊர்க்குருவி உருண்டைகள், ஊர்க்குருவி இளகம்,

பேரீச்சங்காய்ப் பூரி, பேரீச்சங்காய் அல்வா, பேரீச்சம்பழ இளகம், சாலாமிசிரி இளகம், தேற்றுன்கொட்டை இளகம், மகிழம் பட்டைச் சூரணம், பூரணுதி இளகம், ஊர்க்குருவி இளகம், தாளிசப்பத்திரி வடகம், தேற்றுன் இளகம் ஆகிய சுமார் 178 முறைகள் அடங்கியிருக்கின்றன.

இவைகள் யாவும் நமது பரம்பரையில் பத்திரமாகவும் மறை பொருளாகவும் வைக்கப்பட்டிருந்த பல்லாயிர முறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவைகள். இவையாவும் குணத்தில் சிறப்புள்ள வைகளும் செய்வதற்கு எளிதானவைகளுமாம். மற்ற பாகங் களிலுள்ள முறைகளைக் காட்டிலும் இதிலுள்ள முறைகள் இளகங் களாகவும்,சூரணங்களாகவும், தைலங்களாகவும், நெய்களாகவும், சர்பத்துகளாகவுமிருப்பதால் எவரும் இவற்றை எளிதாகச் செய்து குடும்ப வைத்தியம் நடத்தி வரலாம். இப்புத்தகம் முன் பாகங்களை வாங்கிஞேர் வாங்காதவர்கள் ஆகிய எல்லோருக்குமே மிகவும் அவசியமுள்ளது. இது 143 பக்கங்களுள்ளதாக உயர்ந்த தாள்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆயினும், உலகோர்க்கு உதவும் நோக்கில் இதற்கு மிகவும் குறைந்த விலை ஏற்படுத்தியிருக் கிறேம். ஆதலின், வைத்தியாபிமானமுள்ள கனவான்கள் இதற்குமுன் வெளிப்படுத்திய இதன் மற்ற பாகங்களையும், இன்னுமுள்ள வைத்திய நூல்களையும் வாங்கி எம்மை மகிழ்வித்துக் கனப்படுத்தி வந்தது போலவே இதனையும் வாங்கி இதன் மற்ற பாகங்களையும் விரைவில் வெளிப்படுத்துதற்காக ஊக்கத்தை யுண்டாக்கி எம்மை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேம்.

இங்ஙனம்

**அக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு,**
12, அப்பு மேஸ்திரி தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை

# பொருளடக்கம்

## அ


| | | |
|---|---|---|
| அசுவகெந்திச் சூரணம் | ... | 64—65 |
| அசுவகெந்தி நெய் | ... | 66—68 |
| அசுவகெந்திப் பற்று | ... | 120 |
| அசுவகெந்தி ரசாயனம் | ... | 66 |
| அட்டச் சூரணம் | ... | 69 |
| அட்டாதிச் சூரணம் | ... | 69 |
| அநுராஷ்தவா | ... | 29 |
| அயவத்திச் சூரணம் | ... | 56 |


## ஆ


| | | |
|---|---|---|
| ஆமலக இளகம் | ... | 30 |


## இ


| | | |
|---|---|---|
| இங்குஷ்டாதி உருண்டை | ... | 70 |
| இஞ்சிபானம் | ... | 117 |
| இஞ்சி ரசாயனம் | ... | 50 |
| இஞ்சி இளகம் | ... | 51, 52 |
| இடிவல்லாதி | ... | 96 |
| இராசப் பதங்கம் | ... | 104 |
| இராசவல்லாதி | ... | 102 |
| இராமபாணவல்லாதி | ... | 101 |
| இலகுவல்லாதி | ... | 100 |
| இலவங்கப்பட்டைச் சூரணம் | ... | 130 |
| இலவங்காதி இளகம் | ... | 44 |
| இலிங்கச் செந்தூரம் | ... | 48 |
| இளநீர் நெய் | ... | 126 |
| இளைத்த உடல் பருக்க உசிதம் | ... | 54 |
| இன்பூரா இளகம் | ... | 57 |


## உ


| | | |
|---|---|---|
| உள்ளி நெய் | ... | 47 |
| உள்ளி இளகம் | ... | 45, 46 |

நாகராதி உருண்டை ... 2

நாகராதி இளகம் ... 4, 5

**நீ**

நீரடிமுத்துப் பிரயோகம் ... 119

நீரடிமுத்து வல்லாதி ... 97

**நெ**

நெல்லிக்காய் இளகம் ... 31

நெல்லிமுள்ளி இளகம் ... 28

**ப**

பச்சைக்கற்பூராதிச் சூரணம் ... 71

பஞ்சதீபாக்கினி இளகம் ... 3

பட்டைச் சூரணம் ... 74

பருத்ததேகம் இளைக்க உசிதம் ... 54

பறங்கிப்பட்டைப் பதங்கம் ... 75, 77

பறங்கிப்பட்டை இளகம் ... 108

**பா**

பால் வல்லாதி ... 94

பாவன நெல்லிக்காய் ... 31

**பு**

புடலாதி குக்கில் நெய் ... 60

**பூ**

நாக பற்பம் ... 128

நாகப் பிரயோகம் ... 129

ாக மெழுகு ... 128

ணுதி இளகம் ... 138

**பெ**

பருங் காய இளகம் ... 71, 107

**பே**

பேரீச்சங்காய் அல்வா ... 135

பேரீசங்காய்ப் பூரி ... 134

ஊ


ஊர்க்குருவி உருண்டை 130—132
ஊர்க்குருவி இளகம் 133, 139



எலுமிச்சம்பழ இளகம் 110


ஏ


ஏலாதிச் சூரணம் ... 38, 39
ஏலாதி இளகம் ... 38


க


கடுக்காய் இளகம் ... 23
கடுக்காய் நெய் ... 26
கடுக்காய் முறப்பா ... 24
கண்டங்கத்திரிப் பழச் சூரணம் ... 52
கண்டங்கத்திரிப் பழ இளகம் ... 53
கண்டாதிச் சூரணம் ... 49
கருவேப்பிலைக் கருக்குக் குடிநீர் ... 121
கருவேப்பிலைச் சூரணம் ... 121
கலிவல்லாதி ... 100
கறியாதி தீபனச் சூரணம் ... 18
கறியாதி மதனகாமேசுரம் ... 20
கற்பூரவள்ளி சர்பத்து ... 78
கற்பூரவள்ளி நெய் ... 78
கற்பூரவள்ளி பானம் ... 117
கற்பூராதி இளகம் ...


கு


குக்கிலாதிச் சூரணம் ...
குக்கிலாதி உருண்டை ...
குக்கில் நெய் ... 61
குக்கில் வல்லாதி ...
குன்மச் சூரணம் ...


கொ


கொத்துமல்லி சர்பத்து ... 117

பேரீச்சங்காய் இளகம் ... 133
பேரீச்சம்பழ இளகம் ... 136

பொ

பொடுதலைச் சூரணம் ... 78
பொதினா சர்பத்து ... 115

ம

மகாவில்வாதி இளகம் ... 85
மகிழம்பட்டைச் சூரணம் ... 138
மதனகாமேசுரச் சூரணம் ... 80
மல்லியாதிச் சூரணம் ... 37
மன்மதகாமினி இளகம் ... 42

மி

மிளகு இளகம் ... 19

மே

மேகவல்லாதி ... 93

மை

மைசாட்சி வில்லை ... 120

மு

முசுமுசுக்கை இளகம் ... 82

யா

யானைத்திப்பிலி நெய் ... 22

ரோ

ரோஜாப்பூ சர்பத்து ... 116

வ

வல்லாதகித் தூய்மை ... 87, 88
வல்லாதகித் தைலம் ... 88
வல்லாதகிப் பருப்பு இளகம் ... 105
வல்லாதகி இளகம் ... 88, 92

**வா**


| | | |
|---|---|---|
| வாழைப்பழ சர்பத்து | ... | *118* |


**வி**


| | | |
|---|---|---|
| விளாம்பழ சர்பத்து | ... | *114* |
| விளாம்பழத் திராவகம் | ... | *113* |
| விளாம்பழப் பானம் | ... | *112* |
| விளாம்பழ வில்வாதி இளகம் | ... | *111* |


**வெ**


| | | |
|---|---|---|
| வெந்தயச் சூரணம் | ... | *119* |
| வெந்தய இளகம் | ... | *36* |
| வெள்ளுள்ளி நெய் | ... | *48* |


அனுபோக வைத்திய நவநீதம் எட்டாம் பாகம்

முற்றிற்று

# அனுபோக வைத்திய நவநீதம்

## எட்டாம் பாகம்

### கடவுள் வணக்கம்

நாவா ரனுபோக வைத்ய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே — நாவாகும்
ஆதியே பல்கோடி யண்டமனைத் தும்படைத்தான்
சோதியே செய்வாய் துணை.

### குரு வணக்கம்

திருவும் புகழுந் திகழறிவுஞ் சேரெங்
குருவின் பதம்பணிந்து கொண்டு — வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்றுநவ நீதமுயர்
வாகவியற் றத்தொடங்கு வாம்.

### நூல்

இயற்கையினது அருளினாலும், பெரியோர்களின் வாழ்த்தினாலும் பல மருத்துவ வல்லுநர்களின் உதவியாலும் இதற்கு முந்திய ஏழுபாகங்களிலும் உலோகவகைகள் பாடாணவகைகள் ஆகியவைகளின் பற்பங்கள், செந்தூரங்கள் முதலிய அநேக அற்புத முறைகளை யெழுதி வந்தோம்; அவைகளெல்லாம் பல தலை முறைகளாக அனுபோக சித்தி பெற்றவைகள்; ஆதலின், அவற்றை நமது நண்பர்களெல்லோரும் நன்கு மதித்துக் கொண்டாடி வருவதோடு மேலும் அவற்றிற்கனுசரிப்பான பலமுறைகளையும் எழுதும்படி வற்புறுத்தி வருகின்றார்கள். ஆதலால், முன்னினும் அதிக உற்சாகமுண்டாகி அம் முறைகளுக்கு துணைமருந்து முதலியவைகளாகவும் பல நோய்களைத் தீர்ப்பதற்கும் உபயோகப்படும் கடைச்சரக்கு சம்பந்தமான பல அற்புத முறைகளை இப் புத்தகம் முதல் எழுதத்தொடங்குகின்றோம். இந்தக் கடைச்சரக்கு சம்பந்தமான முறைகளெல்லாம் மேற்கூறியபடி பற்ப செந்தூரங்

களுக்கு துணைமருந்துகளாக உபயோகப்படுவதோடு, செய்வதற்குச் சுலபமானவைகளாகவும், ஒவ்வொருவரும் தாம் தாமே செய்து பற்பல நோய்களைத் தீர்த்துக்கொள்ளக்கூடியவைகளாகவுமிருப்பதால் உலகத்துக்குப் பெரும் உதவியைத் தருமென்பதிற் சந்தேகமில்லை; இதனுண்மையை ஒவ்வொருவரும் அனுபவத்தில் தாம்தாமே தெரிந்து கொள்ளக்கூடும்.

## 1036. நாகராதியுண்டை

மேற்றோல் சீவின சுக்குச்சூரணம் 1 பலம் (35 கிராம்), நற்சீரகச்சூரணம் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), அரிசித்திப்பிலிச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), தாளிசப்பத்திரிச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) சோம்புச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) ஏலரிசிச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கொத்துமல்லி விதைச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) நெல்லிமுள்ளிச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கோட்டச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), அக்கராகரச் சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) அதிமதுரச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கண்டத்திப்பிலிச் சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), † சிற்றரத்தைச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இலவங்கச்சூரணம் 1 விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), சாதிக்காய்ச் சூரணம் 1 விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), சாதிப்பத்திரிச் சூரணம் 1 விராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), சன்னலவங்கப்பட்டைச் சூரணம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), மிளகு 5 பலம் (175 கிராம்), வெல்லம் 10 பலம் (350 கிராம்), நெய் 5 பலம் (175 கிராம்).

செய்முறை:— மேற்படி நெய்யில் சுமார் $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ பலத்தைச் சட்டியிலிட்டு அது கொதித்தவுடன் மேற்படி மிளகைக் கல்லாய்ந்து பதர் முதலியவைகளை நீக்கித் தூய்மைசெய்து மேற்படி நெய்யிற்போட்டு வறுத்து, மிளகு பொரிந்து பொன்னிறமான தருணத்தில் எடுத்து அம்மியில் வைத்து அரைத்து அதிக நுண்மையாகச்சூரணம் செய்து முன் சூரணங்களெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அதனுடன் இந்த மிளகுச்சூரணத்தையும் கலந்து கல்வத்தில் அல்லது அம்மியில் வைத்து அரைத்து எல்லாம் ஒன்றாக நன்றாய்க் கலந்தபின்பு தனியே எடுத்து வைத்துக்கொள்க. வெல்லத்தில் கொஞ்சம் நீரைவிட்டுக் காய்ச்சி ஒரு கொதி வந்தவுடன் வடிகட்டி அதிலுள்ள சக்கைமுதலியவைகளை நீக்கி மறுபடியும் அதைக் காய்ச்சிப் பாகு பதத்தில் மேற்படி சூரணங்களைச் சிறுகச் சிறுகத்தூவிக் கீழ் மேலாகக் கிளறி நெய்யை விட்டு மறுபடியும் கிளறிக் கீழிறக்கி இளஞ்சூடாயிருக்கும்போது ஒரு வராகனெடை

† சன்னராஷ்டம்

யுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1½ மாத்திரை சமயோசிதம்போல் உப யோகிக்கவும்.

துணைமருந்து:— மோர், தயிர், தேன், நெய், சோம்புக்குடிநீர், காசினிக்குடிநீர், † காவுஜூபான் குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள் :**— அக்கினி மந்தம், பித்தவாயு, மூலவாயு, கிராணி, அரைச்சோறுபட்டுக் கழிதல், பலவகை இரைப்பை நோய்கள், ஆரம்பகுன்மம், சீரணமாகாமல் புளியேப்பம் வருதல், அசீரணநோய் ஆகிய இரைப்பை சம்பந்தமான அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு :**— புளி, புகை, புணர்ச்சி நீக்கவேண்டும்.

## *1037.* பஞ்சதீபாக்கினி இளகம்

மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, ஏலரிசி, நற்சீரகம் ஆகிய இவைகளைத் தனித்தனி இடித்து துணியில் வடி கட்டிய சூரணம் வகைக்கு 1 பலம் (35 கிராம்), பனைவெல்லம் 10 பலம் (350 கிராம்), பசுவின்பால் ½ படி., நெய் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை :**— பனைவெல்லத்தை நசுக்கிக் கொஞ்சம் நீரில் போட்டுக் காய்ச்சி இரண்டொரு கொதி வந்தவுடன் வடிகட்டி அதிலுள்ள திப்பியை நீக்கி அந்தப் பாகுடன் பாலைச்சேர்த்து மறு படியும் காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படி சூரணங்களையும் ஒன்றாகக் கலந்து அதில் சிறுகச் சிறுகத் தூவி நன்றாகக் கீழ் மேலு மாகக் கிளறி நெய்யைவிட்டு மறுபடியும் ஒருமுறை கிளறிக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— ½ முதல் 1 வராகனெடை

**தீரும் நோய்கள் :**— எட்டுவகை பித்தவாயுவுகள், செரியாமை அக்கினிமந்தம், வயிற்றிரைச்சல், பொருமல், குன்மம், வாயு

---

† காவுஜூபான் = இது ஒரு யூனானி மூலிகை சரக்கு. (இலை - பசுவின் நாவைப்போல் சுரசுரப்பாக இருக்கும்).

முதலிய இரைப்பைச் சம்பந்தமான எல்லாவகை நோய்களும் தீரும்.

## குறிப்பு

இந்த இளகமானது அகத்தியர் இரத்தினச்சுருக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறையென்பது பல அனுபவசாலிகளுக்குத் தெரிந்ததேயாயினும் நமது அனுபவத்தில் வந்தபடியும் இதனை எழுதியிருக்கின்றோம். இன்னும் இந்தப் பாகமானது சில சூடான உடலினர்க்கு ஏற்றுக்கொள்கிறதில்லை. சிலருக்கு நல்ல குணத்திற்குப் பதிலாகத் தீய குணமுண்டாகியுமிருக்கிறது; ஆகையால் இதிலுள்ள சூட்டை சாந்தப்படுத்துவதற்காகவும் அவரவர்களின் உடல் நலத்திற்குத் தகுந்தவிதமாகவும் இந்த முறையையே பலவிதமாக மாற்றிச் செய்துகொடுத்து வெற்றியடைந்திருப்பதால் பலர் உபயோகத்திற்காக நமது அனுபவப்படியும் இங்கெழுதுகின்றோம்.

## 1038. நாகராதி இளகம்

மேற்றோல் சீவின சுக்குத்தூள் 1 பலம் (35 கிராம்), கடுக்காய்ப் பிஞ்சுத்தூள் ½ பலம் (17½ கிராம்), இவ்விரண்டையும் எருமைத் தயிரில் ஊறவைத்து வெண்ணெய்போலரைத்துக் கொஞ்சம் பசுவின் நெய்யில் இளவறுப்பாக வறுத்தெடுத்து மறுபடியும் முன்போல் எருமைத் தயிரில் மூன்று மணிநேரம் ஊறவைத்துக் கொஞ்சநேரமரைத்து முன்போல் பசுவின் நெய்யில் கொஞ்சம் வறுத்துக் கொள்ளவும். மூன்றாந் தடவையும் எருமைத்தயிரில் இரண்டு மணிநேரம் ஊறவைத்துக் கொஞ்சநேரமரைத்து முன்போற் பசுவின் நெய்யில் பொன்வண்ணமாக வறுத்து அம்மியில்வைத்து வெண்ணெய்போலரைத்து அரை வராகனெடையுள்ள உருண்டைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

அளவு:— 1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து:— நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:— மூலவாயு, குருதிஎருவாய் முளை, † நிணக்கழிச்சல் †† ஆகியவைகள் தீரும்.

† இரத்தமூலம் †† சீதபேதி

## 1039. நாகராதி இளகம் (வேறு)

மேற்றோல் சீவின சுக்கு 1 பலம் (35 கிராம்), (இதனைப்பொன் னிறமாக வறுத்துச்சூரணித்துத் துணியில் சலித்துக் கொள்ளவும்) தண்ணீரில் ஊறவைத்துத் தோல்போக்கி உலர்த்தின எள் 1 பலம் (35 கிராம்), இதனை அம்மியில் வெண்ணெய்போலரைத் துக்கொள்க. ஏலரிசிச்சூரணம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), முசுமுசுக் கையிலை 1 பலம் (35 கிராம்), (இதைக்கொஞ்சம் வெண்ணெயின் போட்டுக் காய்ச்சி வறுத்துத் தூள் செய்துகொள்ளவும்.) கற் கண்டுத்தூள் 1 பலம் (35 கிராம்), பசுவின் வெண்ணெய் தேவை யான அளவு.

**செய்முறை :—** அடுப்பில் ஒரு மண்பாத்திரத்தைவைத்து அதில் கொஞ்சம் வெண்ணெயையும் மேற்படி கற்கண்டுப் பொடியையும் போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கற்கண்டு உருகின வுடன் முன் சூரணங்களைப்போட்டு நன்றாகக்கிளறி எல்லாம் கலந்த பின்பு கீழிறக்கி இளஞ் சூட்டுடன் ஒரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**உபயோகம் :—** இதனை உள்ளுக்குச் சாப்பிடுவதைப்பார்க்கிலும் இதன் ரசத்தைச் சிறுகச்சிறுக விழுங்கி வருவது உத்தமம்; இப் படிச்செய்வதால் தொடர்ச்சியான தடுமன் † தொடர்ச்சியா யிருந்து தொந்தரவு செய்யும் மார்சளி, கபக்கட்டு, கோழைக்கட்டு, குரற்கம்மல், கீச்சுக்குரல் முதலியவைகள் தீரும்.

## 1040. தீபாக்கினி ரசாயனம்

மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, சீரகம், கொத்துமல்லி விதை, சோம்பு, சிற்றரத்தை, கருஞ்சீரகம், வால்மிளகு இவற்றின் தனித்தனி தூள்கள் வகை 1-க்கு 1பலம் (35 கிராம்), வெடியுப்பு, கல்லுப்பு, கறியுப்பு, கெந்தவடியுப்பு, இந்துப்பு, சவுட்டுப்பு, லாகூருப்பு, வெண்காரம், அப்பளக்காரம், அன்னபேதி இவற்றின் சூரணம் வகை 1-க்கு 1 பலம் (35 கிராம்), பருமனான எலுமிச்சம் பழம் 200 (இதனைச் சாறுபிழிந்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.)

---

† தடுமன் = நீர்ப்பிடிப்பு, நீர்க்கோவை

செய்முறை :— மேற்கண்ட தூள்களையும் உப்புக்களையும் ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு ஒன்றாகக் கலந்து மேற்படி எலுமிச்சம்பழச்சாற்றை அதில்விட்டு அதில் தும்பு தூசி விழாதபடி மெல்லிய துணியால் அதன் வாய்க்கு வேடுகட்டி வெய்யிலில் வைத்துவரவேண்டியது. ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவைகள் தந்தக் குச்சியினால் அல்லது மரக்கொம்பினால் அல்லது பீங்கான் கரண்டியினால் துழாவிக்கொண்டும் வரவேண்டியது. சாறெல்லாம் சுண்டினபின்பு ஒரு பீங்கான் பாத்திரத்தில் எடுத்து வைத்துப் பத்திரப்படுத்தவேண்டியது.

அளவு :— ½ முதல் 1-வராகனெடை காலை மாலை இரண்டு வேளையும் அல்லது நாளுக்கு மூன்று வேளையும் உபயோகிக்கலாம்.

தீரும்நோய் :— முந்நூற்றறுபது அக்கினிமந்த நோய்களும் தீரும். எட்டு வகைக் குன்மநோய்களும் தீரும் ; வயிற்றுப்புசம், வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல், ஏப்பம் முதலிய இரைப்பை சம்பந்தமான அநேக நோய்கள் தீரும். இதன் சிறந்தகுணம் அநேகம். அவையெல்லாம் இங்கெழுதமுடியா ; அனுபவசாலிகள் இதனைச்செய்து உபயோகித்து இதனருமையான குணத்தைத் தெரிந்து கொள்வார்களாக.

## 1041. குன்மச் சூரணம்
(எண் ஒன்றும் இரண்டும்)

மேற்றோல்சீவின சுக்கு, மிளகு, சீரகம், வசம்பு, (இதனைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கிக் கொள்ளவேண்டும். மஞ்சட்கடுக் காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம் இவைகளின் சூரணம் வகை1-க்கு 1 பலம் (35 கிராம்), வெள்ளைப்பூண்டுத்திரி 1 பலம் (35 கிராம்), (இதனை வெண்ணெய் போலரைத்துக்கொள்க) கல்லுப்புத்தூள், இந்துப்புத் தூள், சீனக்காரத்தூள் இவை வகை 1க்கு 1 பலம் (35 கிராம்), துத்தம், துருசு, கெந்தகம் (இம் மூன்றையும் தூய்மைசெய்து வகைக்கு 1 பலம் (35 கிராம்), எடுத்துப் பொடித்துக்கொள்ளவும். தூய்மை செய்த அரப்பொடி 1 பலம் (35 கிராம்), ஆற்றுத் தும்மட்டிக்காய்ச்சாறு பலம் 10 (350 கிராம்), எலுமிச்சம்பழச் சாறு 10 பலம் (350 கிராம்).

செய்முறை :— மேற்படி தூள்களையும் மற்ற சரக்குகளையும் ஒன்றாகக் கலந்து கல்வத்தில் ஒருசாம நேரமரைத்து இரண்டு பாகமாக்கி வைத்துக்கொள்ளவும். பின்பு இவற்றில் ஒரு பாகத்தைச்

கல்வத்திலிட்டு மேற்படி ஆற்றுத் தும்மட்டிக்காய்ச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து, சாறெல்லாம் செலுத்துகிறவரையி லரைத்து வெய்யிலில் உலர்த்தி மறுபடியும் தூள்செய்து வைத்துக் கொள்ளவேண்டியது. இவ்விதமே மற்றொரு பாகத்தைக் கல்வத்தி லிட்டு எலுமிச்சம்பழச் சாற்றை, சிறுகச்சிறுக வார்த்துச் சாறெல் லாம் சென்றபின்பு வெய்யிலில் உலர்த்தி மறுபடியும் பொடித்து பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும். கும்மட்டிக்காய்ச் சாற்றில் அரைத்த சூரணத்திற்கு முதல் எண் சூரணமென்று பெயரெழுதிக்கொள்ளவும்; எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்த சூர ணத்திற்கு இரண்டாம் எண் சூரணமென்று பெயர் எழுதிக் கொள்ளவும்.

அளவு:— முதல் எண் சூரணம் வேளை 1-க்கு ½ முதல் 1½ வராகனெடை வரையும் இரண்டாம் எண் சூரணம் வேளை 1-க்கு 1 முதல் 3 வராகனெடை வரையும் மலபந்தமாயிருக்கிற நோய் களில் காலையில் ஒரு வேளை மாத்திரம் முதல் எண் சூரணத்தை உபயோகித்து மாலையில் இரண்டாம் எண் சூரணத்தை உபயோ கிக்கவேண்டும். கழிச்சலாகிக்கொண்டிருக்கிற நோய்களில் இரண் டாம் எண் சூரணத்தைக் காலை மாலை இரண்டு வேளையும் உபயோ கிக்கவேண்டியது. அந்தந்த உடல் தன்மைக்குத் தகுந்தபடியும் முதல் எண் சூரணத்தை மாத்திரம் அல்லது இரண்டாம் எண் சூரணத்தை மாத்திரம் முதல் எண் இரண்டாம் எண் ஆகிய இரண் டையும் மாற்றிமாற்றியாயினும் சமயோசிதம்போல் உபயோகிக்க வேண்டியது.

துணைமருந்து:— நீராகாரம், மோர், சோம்புத் தீநீர், காவுஜூபான் தீநீர், சுக்குக்குடிநீர், இஞ்சிக் குடிநீர், சர்க்கரை, தேன், நெய் முதலியவைகளாம். இன்னும் சமயோசிதம்போல் தகுந்த இளகங் களிலும், தீநீர்களிலும் உபயோகிக்கலாம். இதனை ஞாயிற்றுக் கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை சாப்பிட ஆரம்பிக்கவேண்டும். உடல்வலிமை, நோய்வலிமை ஆகியவைகளுக்குத்தகுந்தபடி பத்து நாள், பன்னிரண்டுநாள், பதினைந்துநாள்வரையில் பயன்படுத்த லாம்.

தீரும்நோய்:— எரிகுன்மம், வலிகுன்மம், வாயுகுன்மம் முதலிய எட்டுக் குன்மநோய்களும் தீரும். இன்னும் பீலிகை, மகோதரம், வெப்புப்பாவைநோய், பெருவயிறு முதலிய நோய்களும் தீரும். இது முக்கியமாய் இரைப்பையைப்பற்றின நோய், ஈரல், மண் ணீரல் ஆகியவைகளைப்பற்றின நோய் ஆகியவைகளைத்தீர்க்கும்.

மருத்துணவு :— மெல்லுணவு, சீக்கிரமாகச் சீரணிக்கத் தகுந்த உணவுகள், பழவகைகள் முதலியவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம். சமயோசிதம்போல் உப்பு, புளி முதலியவைகளைச்சேர்த்தும் சேர்க்காமலும் உபயோகிக்கவேண்டியது.

## 1042. சுவாச உருண்டை

மேற்படிலே சீவிய சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இலவங்கப் பட்டை, இலவங்கம், தாளிசபத்திரி, கொம்பரக்கு, சிற்றரத்தை, சுத்தி செய்த மனோசிலை (இதற்குப் பதிலாக நமது நவநீதத்தில் சொல்லியிருக்கிற மனோசிலைப் பதங்கத்தைச் சேர்த்துக் கொள்வது மிகவும் உத்தமம்) மேற்படி சரக்குகளைத் தனித்தனியே சூரணித்து வகை 1-க்கு 3 வராகனெடை (10½ கிராம்). பனை வெல்லம் 27 வராகனெடை (94½ கிராம்).

செய்முறை :— முன் தூள்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்துப் புட்டி வெல்லத்தையும் † சேர்த்துத் தண்ணீரைச் சிறுகச்சிறுகத் தெளித்து மைபோலாகிறவரையில் அரைத்துக் கால் வராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 மாத்திரை காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

துணைமருந்து :— சோம்புத்திராவகம், நண்டுச்சுப்பு, அறுகம் வேர்க் குடிநீர். அதிமதுரக் குடிநீர் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :— சுவாசம், காசம், ஈளை, இருமல், சுவாச காசம், கபநோய்கள் தொண்ணூற்றாறும் நீங்கும்; இன்னும் என்புசுரம், தொண்டைக்கம்மல், எழுவகைப்பீனிசம், கபம் விழுதல், அரோசகம் முதலியவைகளும் தீரும்.

## 1043. நாகரசிங்காதிச் சூரணம்

மேற்படிலே சீவியசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, சடாமாஞ்சில், சிறுதேக்கு, கற்கடக சிங்கி, கோட்டம், நெல்லிமுள்ளி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், இந்துப்பு, செங்கழுநீர்க்

---

† புட்டி வெல்லம் = பனைவெல்லம்

கிழங்கு (அது அகப்படாவிட்டால் தாமரைக் கிழங்கைச் சேர்த்துக் கொள்ளவும்.) கண்டங்கத்திரி வேர்ப்பட்டை, ஆதுளை வேர்ப்பட்டை, ஆடாதோடை வேர்ப்பட்டை, சிறுவழுதலை வேர்ப்பட்டை இவற்றின் தனித்தனிச் சூரணம் வகை-1 க்கு 1 பலம் (35 கிராம்),

செய்முறை :— மேற்படி சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு மணிநேரம் அரைத்து நன்றாகக் கலந்த பின்பு பத்திரப்படுத்தவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் 1 வராகனெடை.

துணைமருந்து :— தேன், நெய், வெண்ணெய், தக்க இலைக வகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :— உளைமாந்தை, இருமல், சுவாசகாசம், வாயு வகை முதலியவைகளெல்லாம் தீரும்.

## 1044. நாகராதி நெய்

(அ) மேற்றோல்சீவின சுக்கு 20 பலம் (700 கிராம்), ஆவிப் பட்டை 20 பலம் (700 கிராம்), பசுவின்நெய் $2\frac{1}{2}$ படி தயிர்த் தண்ணீர் 2படி.

(ஆ) மேற்றோல்சீவின சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், செவ்வியம், கொடிவேலி வேர்ப்பட்டை, அரிசித்திப்பிலி, கண்டந் திப்பிலி, யானைத்திப்பிலி இவற்றின் சூரணம் வகை 1க்கு $2\frac{1}{2}$ வராகனெடை ($8\frac{3}{4}$ கிராம்).

செய்முறை :— முன் இரண்டு சரக்கையும் நையச்சிதைத்துப் புதுப்பானையிற் போட்டு ஆறு படி தண்ணீர்விட்டு நாலிலொன்றாகக்காய்ச்சி வடித்த குடிநீருடன் நெய்யையும் கலந்து (ஆ) வில் சொல்லியிருக்கிற சரக்குகளை அம்மியில்வைத்துக்கொஞ்சம் நீரைத் தெளித்து வெண்ணெய்போலரைத்து முன்கலவையிற் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் இறக்கி வடி கட்டிப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 2 முதல் $3\frac{1}{2}$ வராகனெடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

தீரும் நோய்கள் :— நீண்டநாள் கழிச்சல், கிராணி, சோகை, பாண்டு, வயிற்றுவலி, வயிற்று முறுக்குவலி ஆகியவை தீரும்.

மருத்துணவு :— மோர், தயிர், பால், பருப்பு, கோழி, மீன் முதலியவை ஆகும்.

## 1045. நாகராதி நெய் (வேறு)

(அ) மேற்றேல்சீவின சுக்கு, ஆயில்பட்டை இவை வகைக்கு 20 பலம் (700 கிராம்), தயிர்த்தண்ணீர் 2 படி, பசுவின் நெய் $2\frac{1}{2}$ படி.

(ஆ) பெருங்காயம், மேற்றேல்சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, செவ்வியம், ஓமம், யானைத்திப்பிலி, கொடிவேலி வேர்ப் பட்டை, கண்டந்திப்பிலி, எவாட்சாரம் இவற்றின் சூரணம் வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை ($8\frac{3}{4}$ கிராம்), இவற்றுள் சரக்குகளை வெய்யிலில்வைத்து இடித்து துணியில் சலித்துக் கொள்ள வேண்டும். பெருங்காயத்தையும் எவாட்சாரத்தையும் தூள்செய்து மேற்படி சூரணத்துடன் கலந்து வைத்துக்கொள்க.

செய்முறை :— (அ) வில் முன்னுள்ள இரண்டு சரக்குகளையும் நையச்சிதைத்து 8 படி நீரில் போட்டு ஒரு பாண்டத்திலிட்டு அடுப் பேற்றிக் காய்ச்சி நான்கிலொன்றாகச் சுண்டவைத்து வடிகட்டின குடிநீருடன் இரண்டு திரவத்தையும் சேர்த்து (ஆ) விலுள்ள பொடி யையும் அதிற்போட்டு மூன்று நாள் வரையில் பிரதிதினமும் சற்று நேரம் சூடுகாண்பித்துவந்து நான்காம் நாள் காய்ச்சி வடிகட்டிப் பத்திரப் படுத்தவும். இதிலெடுத்த கடுகையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அளவு :— $3\frac{1}{4}$ முதல் $4\frac{1}{2}$ வராகனெடை. காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும். நோய் கடுமையாயிருந்தால் ஷை கடுகிற்குச் சமனெடை பனைவெல்லத்தைச்சேர்த்து இளகமாக வைத்துக்கொண்டு வேளை 1க்கு $1\frac{1}{2}$ விராகனெடை முதல் 3 விராக னெடை வரை இரண்டு வேளையும் கொடுத்து வரலாம்.

தீரும் நோய்கள் :— அதிசாரம், பாண்டு, சோகை, காமாலை, பித்தவெட்டை, மூலநோய், கிராணி, வயிற்றுப் பொருமல், வயிற்றுப்பிசம் முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :— கடுகு, எள்ளெண்ணெய், பூசணிக்காய், பறங் கிக்காய், பாகற்காய், அகத்திக்கீரை, மீன், கருவாடு, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவேண்டியது.

வெள்ளாட்டுவற்றல், பசுவின் பால், பசுவின் நெய், முருங்கைப்பிஞ்சு, கத்தரிப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, பச்சைப்பயற்றம் பருப்பு, துவரம் பருப்பு ஆகியவைகளாகும்.

நெய் அல்லது விளக்கெண்ணெய் தேய்த்து தலைமுழுகச் செய்ய வேண்டியது. தலைமுழுகிய நாள், முடி எடுத்துக்கொண்ட நாள் ஆகிய நாள்களில் காலையில்மட்டும் ஒருவேளை சாப்பிட்டு மாலையில் நிறுத்தி மறுநாள் ஆரம்பித்துச் சாப்பிட வேண்டியது.

## 1046. நாகராதி மதனகாமேசுர இளகம்

மேற்றோல்சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, நற்சீரகம், அதிமதுரம், வால்மிளகு, கொத்துமல்லி விதை, வெந்தயம், சோம்பு, தாளிசபத்திரி, சடாமாஞ்சில், கசகசா, ஏலரிசி, இலவங்கம், சாதிக்காய், சாதிபத்திரி, நீர்முள்ளிவிதை, நிலப்பனைக் கிழங்கு, பேரீச்சங்காய், திராட்சைப்பழம், வறுத்த கடலைப் பருப்பு, வறுத்த கோதுமை, வறுத்த உளுந்து இவை வகை-1க்கு ¼ பலம் (மேற்சொன்ன சரக்குகளில் சூரணிக்கக் கூடியவைகளைத் தனித்தனி தூள்செய்து நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். தூள்செய்யக் கூடாதவைகளைத் தனித்தனியாக நிறுத்தெடுத்துத் தனித்தனி குழி அம்மியில் அரைத்துக்கொள்ளவேண்டும்.) வாதுமைப்பருப்பு, 2½ பலம். (இதனை வெந்நீரில் போட்டுச் சற்றுநேரம் ஊறவைத்துப் பிறகு மேற்றோலை நீக்கிக் கசப்புப் பருப்புகளைச் சுவைத்துப்பார்த்து நீக்கிவிடவேண்டும்.) கஞ்சா 2 பலம் (70 கிராம்), (இதனை நீரில் மூன்று மணிநேரம் ஊறவைத்துக் கசக்கிக் கசக்கி ஏழுதடவைகள் கழுவி உலரவைத்து இடித்துத் தூள் செய்து கொள்ளவேண்டும்.) பசுவின் நெய் 5 பலம் (175 கிராம்), பசுவின் பால் ½ படி, பனைவெல்லம் 15 பலம் (525 கிராம்).

செய்முறை :— வெல்லத்தை நசுக்கி அதில் கொஞ்சம் நீரை விட்டுக் காய்ச்சி ஒரு கொதி வந்தபிறகு வடிகட்டித் திப்பி முதலியவைகளை நீக்கி பிறகு பாலிற் கலந்து காய்ச்சிப் பாகுபதத்தில் முன்சித்தப்படுத்தி வைத்திருப்பவைகளை ஒன்றாகக் கலந்து மேற்படி பாகில் சிறுகச் சிறுகத் தூவி நன்றாகக் கிளறி நெய்யைவிட்டுக் கீழிறக்கி மறுபடியும் நன்றாகச் சேர்த்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் 1¼ வராகனெடை.

**தீரும் நோய்கள்** :— பித்தவாயு, வாயுநோய்கள், கபநோய்கள், கிராணி, அதிசாரம், அக்கினிமந்தம் ஆகியவைகள் தீரும்.

உடல்வலிமை, தாதுவிருத்தி ஆகியவைகளுண்டாகும். விந்து ஒழுக்கு கட்டுப்படும். நீர்த்திருக்கிற விந்து கட்டுப்படும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி நீக்கவேண்டும்.

## 1047. நாகராதி மதனகாமேசுர இளகம் (வேறு)

(அ) மேற்றோல்சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலரிசி, இலவங்கம் இவற்றின் தூள் வகை 1க்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), குங்குமப்பூ $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்) இவை எல்லாவற்யையும் இடித்துச் சூரணித்து ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

(ஆ) வெட்டிவேர் 1 பலம் (35 கிராம்), அருகம்வேர் 5 பலம் (175 கிராம்), அதிமதுரம் 1 பலம் (35 கிராம்), வில்வவேர் 1 பலம் (35 கிராம்), விலாமிச்சம்வேர் 1 பலம் (35 கிராம்), சந்தனக் கட்டைத்தூள் 3 பலம் (105 கிராம்), விளாவேர்ப்பட்டை 5 பலம் (175 கிராம்), மகிழம்பட்டை 5 பலம் (175 கிராம்). இவை எல்லாவற்றையும் தனித்தனியிடித்து ஒரு பாண்டத்திற்போட்டு எட்டுப்படி நீர்விட்டு எட்டிலொருபாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

(இ) சமுத்திராப்பழத்தூள் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), விதைநீக்கின திராட்சைப் பழம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), விதை நீக்கின பேரிச்சம்பழம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கசகசா 1 பலம் (35 கிராம்), சாரப் பருப்பு 1 பலம் (35 கிராம்), சாரப்பருப்பு நல்லதாய்க் கிடைக்காவிட்டால் (வாதுமைப்பருப்பு அல்லது பிஸ்தாப் பருப்பைச் சேர்த்துக் கொள்ளவும்) வாய்விளங்கத் தூள் 3 விராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), கோட்டத்தூள் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), மராட்டி மொக்குத்தூள் 1 பலம் (35 கிராம்), சீரகத் தூள் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம் , வால்மிளகுத் தூள் 2 வராகனெடை (7 கிராம்) இவைகளை அம்மியில் வைத்து (ஆ) வில் சொல்லியிருக்கிற குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய்போல் அரைத்து மிகுதியிருக்கிற குடிநீரில் கரைத்துக் கொள்ளவும்.

(ஈ) மதன காமப்பூ 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) இதனைப் பாலிலரைத்து வெயிலில் உலர்த்தி இளவறுப்பாக வறுத்துப் பொடி செய்துகொள்ளவும். உழுந்து $\frac{1}{4}$ படி (இதனை மாவாக) அரைத்து

துணியில் சலித்து வைத்துக்கொள்ளவேண்டும்) பசுவின்பால் ¼ படி, பசுவின் நெய் ¼ படி, தேன் ¼ படி, நாட்டுச்சர்க்கரை 24 பலம் (840 கிராம்).

(உ) சடைக்கஞ்சா 1½ பலம் இதனை தண்ணீரில் மூன்றுமணி நேரம் ஊறவைத்துக் கசக்கி மூன்றுமுறை தண்ணீரில் அலம்பி விடவும். பிறகு அரைப்படி பசுவின்பாலில் ஆறுமணிநேரம் ஊற வைத்துப் பிழிந்து அரைப்படி காடி நீரிற் போட்டுக் காய்ச்சி இரண்டு மூன்று கொதிவந்தபின்பு இறக்கிப் பிழிந்தெடுத்து நீர் விட்டலம்பிக் காற்படி நெய்யிற்போட்டு அடுப்பேற்றிப் பொன் னிறமான பதத்தில் இறக்கிக் கம்பளியில் வடிகட்டி நெய்யை எடுத்துக்கொள்ளவும்.

செய்முறை:—(ஈ) யிலுள்ள சர்க்கரையையும் பாலையும் சேர்த்துக் கொஞ்சம் நீர் விட்டுக் காய்ச்சிப் பாகுசெய்து பாகு பதத்தில் (அ) விலுள்ள தூளையும் (இ) யிலுள்ள கலவையையும் (ஈ) யிலுள்ள மதனகாமப் பூப்பொடி, உளுந்துமாவு ஆகியவற்றையும் சேர்த்து நன்றாகக் கிண்டிக்கிளறி மெழுகுபதத்தில் (ஈ) யிலுள்ள தேனையும் நெய்யையும்விட்டு நன்றாகக் கலந்து கீழிறக்கி வைத்துக் கொள்ளவும்.

இந்த இளகத்தை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தில் (உ) விலுள்ள கஞ்சா நெய்யைச்சேர்த்து அதிக லாகிரி வேண்டியவர் களுக்கு இதனைப் பயன்படுத்த வேண்டியது. சுத்தமாய் லாகிரிப் பழக்கமில்லாதவர்களுக்கு கஞ்சா நெய் சேர்க்காமல் தனியே உப யோகிக்க வேண்டியது. விருப்பமானவர்கள் மேற்படி முழுப் பாகத்தில் கஞ்சா நெய்யைச்சேர்த்தும் செய்துகொள்ளலாம்.

அளவு :— 1 முதல் 1½ வராகன் எடை.

தீரும் நோய்கள் :— விந்து நீர்த்தல், விந்துக் கசிவு, விரைவில் விந்து வெளிப்படல் ஆகியவை தீரும்; நீர்த்துப் போயிருக்கிற விந்து கெட்டிப்படும். குறைந்துபோயிருக்கிற விந்து விருத்தி யாகும். வீரியவிருத்தி, உடல்வன்மை ஆகியவைகளுமுண்டாகும்; தளர்ந்துபோன நரம்புகள் உரத்து, பெருத்து, முறுக்கேறி சன னேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்பட்டு ஆண்மைத்தன்மை உண்டாகும். தம்பன சக்தியும் உடல்வலியும் அதிகப்படும். தேசு வசீரகம், முக வசீகரம் ஆகியவைகளும் உண்டாகும்.

## 1048. நாகரவிந்தாதி மகா காமேசுர இளகம்

(அ) மேற்றோல்சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, நற் சீரகம், சோம்பு, கொத்துமல்லி விதை, ஏலரிசி, இலவங்கம், அதி மதுரம், அக்கிராகாரம், சடாமாஞ்சில், கோட்டம், தாளிச பத்திரி, குரோசாணி ஓமம், சதகுப்பை, ஓமம், வாலுழுவையரிசி, வெட்பாலையரிசி, மூங்கில் அரிசி, வால்மிளகு, கத்தூரிமஞ்சள், சிறு நாகப்பூ, சன்னலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிபத்திரி, பேதாளுவிதை, சாலாமிசிரி, மைலாலக்கடி, மதன காமப்பூ, ரோசாப்பூ இவற்றின் சூரணம் வகை 1க்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

(ஆ) கசகசா, குங்குமப்பூ, கோரோசனை, ரூமிமஸ்தகி,† சாரப் பருப்பு, சாம்பிராணிப்பூ, வெள்ளைக்குங்கிலியம், குந்தி ரிக்கம், மிசிரி அபின் இவை வகை 1க்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). இவற்றுள் அரைக்கவேண்டியவைகளைத் தனித்தனி அரைத்தும் பொடிக்கவேண்டியவைகளை தனித்தனி பொடித்தும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டியது.

(இ) சமுத்திரப்பழம், விதைநீக்கின திராட்சைப்பழம், விதை நீக்கின பேரீச்சம்பழம், விதை நீக்கின விளாம்பழச்சதை, விதை நீக்கின வில்வப்பழச்சதை, எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம் பழச் சாறு, தமரத்தம் பழச்சாறு, மாதுளம் பழச்சாறு, சீமை அத்திப் பழச்சதை இவை வகை 1க்கு $\frac{1}{4}$ பலம்($8\frac{3}{4}$ கிராம்)இவற்றுள் அரைக்க வேண்டியவற்றை வெண்ணெய்போல் அரைத்து மற்றச் சாறுகளை யும் ஒன்றாகக் கலந்துவைத்துக்கொள்ளவும். விருப்பமானவர்கள் இதனுடன் சீத்தாப்பழச்சதை, சரக்கொன்றைப் புளிச்சதை ஆகிய வற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

(ஈ) மேற்றோல் நீக்கின வாதுமைப் பருப்பு, மேற்றோல் நீக்கின முந்திரிப்பருப்பு இவை வகைக்கு 1 பலம் இவ்விரண்டையும் அம்மி யில்வைத்து வெண்ணெய்போல் அரைத்து எடுத்துக்கொள்ளவும்.

(உ) பூனைக்காலி விதை, தேற்றான் விதை, உளுத்தம் பருப்பு, மேற்றோல்நீக்கின எள்ளு, வறுத்த கடலைப்பருப்பு, கோதுமை நொய், பச்சைப்பயற்றம் பருப்பு, முருங்கை விதை, நீர்முள்ளி விதை, தகரைவிதை, கஞ்சாவிதை, பருத்திக்கொட்டைப் பருப்பு, ஊமத்தம்விதை, துத்திவிதை, வில்வப்பழவிதை, கருவேலின்

---

† ரூமிமஸ்தகி = பூனைக்கண் குங்கிலியம்

விதை, விளாவிதை, வெள்ளரிவிதைப் பருப்பு, கக்கரிவிதைப் பருப்பு, நாயுருவி விதைப்பருப்பு, அத்தி விதை, ஆலம் விதை, அகத்தி விதை, அரசம் விதை, புத்திரசோகி விதை, எலுமிச்சம் விதை, நாரத்தம் விதை, கீழ்காய் நெல்லி விதை, வாகை விதை, சரக்கொன்றை விதை, நெல்லி விதைப்பருப்பு, கையாந்தகரை விதை, அல்லி விதை, தாமரை விதை, கோவை விதை, ஆவாரை விதை, பூசணி விதைப்பருப்பு, கிரந்திநாயகம் விதை, பொன் முசுட்டை விதை, அம்மான் பச்சரிசி விதை, வேப்பம் விதைப் பருப்பு, சமுத்திரசோகி விதை, திருநீற்றுப்பச்சையிலை விதை, வெங்காய விதை, பேரீச்சம் விதை, சுரை விதைப்பருப்பு, பறங்கி விதைப்பருப்பு, அவரை விதை, சீமை அத்திப்பழ விதை, கருவேலம்பூ, கருவேலம் பிசின், வில்வப்பிசின், வில்வப்பூ, ஆவாரம் பிசின், ஆவாரம்பூ, முருங்கை விதை, முருங்கைப்பிசின், முருங்கைப்பூ, முள்ளிலவம்பிசின், முள்ளிலவம்பூ, புங்கம்பிசின், புங்கம்பூ, அத்திப் பிசின், அத்திப்பிஞ்சு, விளாம் பிசின், எலுமிச் சம்பூ, நாரத்தம்பூ, மாதளம்பூ, எள்ளுப்பூ, மாம்பூ, மாம்பிசின், தென்னம்பூ, நந்தியாவட்டப்பூ, இலுப்பைப்பூ, தூதுவளம்பூ, கண்டங்கத்திரிப்பூ, வாழைப்பூ, பீளைப்பூ, பனம்பூ, பூமிசர்க்கரைக் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, நிலப்பனைக் கிழங்கு, அமுக் குராக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கோரைக்கிழங்கு, சீனக் கிழங்கு, நெய்தற் கிழங்கு, அல்லிக் கிழங்கு, தாமரைக் கிழங்கு, கொட்டிக் கிழங்கு, பனங் கிழங்கு, ஆம்பல் கிழங்கு, கோவைக் கிழங்கு, அப்பைக் கிழங்கு இவை வகை 1க்கு $\frac{1}{4}$ பலம் இவற்றுள் பூ வகைகளையும் கிழங்கு வகைகளையும் தனித்தனியாக உலர்த்தித் தனித்தனியாக இடித்து துணியில் வடித்து எடுத்துக் கொள்ள வேண்டும்; பிசின் வகைகளைத் தனியே அல்லது நெய்யில் வறுத்துத் தூள்செய்து கொள்ளவேண்டும்; பருப்பினங்களை வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவேண்டும்; பிறகு இவையெல்லாவற் றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும்.

(ஊ) வெட்டிவேர், விலாமிச்சம்வேர், நன்னாரிவேர், வில்வ வேர், அறுகம்வேர், மேற்றோல் நீக்கின சீந்தில், ஆவாரம்பட்டை, அவுரிவேர், நெருஞ்சிவேர், சந்தனத்தூள் இவை வகை 1 க்கு 10 பலம் (350 கிராம்) இவைகளை நன்றாகச் சிதைத்து 16 படி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டின குடிநீரை வைத்துக்கொள்ளவும்.

(எ) மேற்றோல் நீக்கின வாதுமைப்பருப்பு 10 பலம் (350 கிராம்), கல்லாய்ந்த கசகசா 10 பலம் (350 கிராம்), முந்திரிப் பருப்பு 10 பலம் (350 கிராம்), இம் மூன்றையும் தனித்தனி வெண்

ணெய்போல் அரைத்துச் சுமார் தனித்தனி பதினாறு பலம் நீரிற் கரைத்து வடிகட்டிப் பாலெடுத்துக்கொள்ளவும். பசுவின்பால், தேங்காய்ப்பால் இவை வகை 1க்கு 16 பலம் (560 கிராம்) சர்க்கரை 72 பலம் (2·520 கிராம்).

(ஐ) ஆண் அடைக்கலங்குருவி 40 (இவற்றை அறுத்து முடி, குடல், கால்கள், மூக்கு முதலியவைகளை நீக்கி நெய்யில் பொன்னிறமாக வறுத்துக் கல்லுரலில் இரும்பு உலக்கையால் வெண்ணெய்போல் இடித்து மறுபடியும் அம்மியில் வைத்துப் பசுவின்பாலைச் சிறுகச் சிறுகத் தெளித்து வெண்ணெய்போல் அரைத்து எடுத்துக்கொள்ளவும்.

(ஒ) மூந்தின பாகத்தில் சொல்லியிருக்கிறபடி சுத்திசெய்த கஞ்சா 2 பலம் (70 கிராம்), இதனை 10 பலம் (350 கிராம்), நெய்யில் போட்டுப் பொன்னிறமாக வறுத்துக் கம்பளியால் வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். இதற்கு கஞ்சா நெய் என்று பெயர்; இரண்டரைப் பலம் அவுரிவேரைத் தண்ணீர் விட்டரைத்துச் சிறுபில்லைகளாகச் செய்து 10 பலம் நெய்யிற்போட்டுக் காய்ச்சிப் பொன்னிறமான பதத்தில் இறக்கி வடித்துக் கொள்ளவேண்டும். இதுவே அவுரி நெய்யாம்.

செய்முறை :— (அ) விலுள்ள தூள்வகைகளையும் (ஆ) விலுள்ள வைகளையும், (இ) யிலுள்ளவைகளையும், (ஈ) யிலுள்ளவைகளையும், (உ) விலுள்ளவைகளையும், (ஒ) விலுள்ளதையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும்; (ஊ) விலுள்ள குடிநீரையும், (எ) யிலுள்ள பால் வகைகளையும் ஒன்றாகக் கலந்து அதில் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்து பாகுபதத்தில் முன்சித்தப்படுத்தி வைத்திருப்பதில் சிறுகச்சிறுகப்போட்டுச் சந்தனக்கட்டை மத்தினால் கடைந்து எல்லாம் நன்றாகக் கலந்து பின்பு, (ஒ) விலுள்ள கஞ்சா நெய், அவுரி நெய்யைவிட்டு நன்றாகக் கிளறி கீழிறக்கி பீங்கான் பாத்திரத்தில் வைத்து வாய்மூடி வாய்ப்பந்தனம்செய்து மூன்று நாளைக்குக் குறையாமல் தானிய புடம்வைத்துப் பின்னர் அவரவர்கள் சக்திக்குத் தகுந்ததுபோல் ஏழைகளுக்குச் சாப்பாடு கொடுத்து மருந்தை ஆரம்பிக்கவேண்டும்.

இதனுடன் சொர்ணலோக செந்தூரம்; தங்கசெந்தூரம் வெள்ளிபற்பம் முதலியவைகளையும் சேர்த்துப் பயன்படுத்தலாம்.

அளவு :— 1 முதல் 1½ வராகனெடை.

**தீரும்நோய்கள் :—** உடல் வன்மையாகி மாந்துளிர் வண்ண மாகும். இரத்தத்திலுள்ள குற்றங்களெல்லாம் நீங்கி இரத்த சுத்தியுண்டாகி இரத்த விருத்தியுண்டாகும். பசிதீபனம் அதிகரித்து உணவுவகைகள் கிரமப்படி செரித்து, உடம்பிலுள்ள உறுப்புகளுக்கு முழுவன்மையுண்டாக்கும். முகத்தில் முழுமதியைப் போன்ற களை யுண்டாகி முகவசீகரமுண்டாகும். நரை திரைமாறி முதுமைநிலை நீங்கி இளமை நிலையுண்டாகும். விந்தைச் சார்ந்த பலநோய்கள் நீங்கி விந்து விருத்தியுண்டாகும். விந்து நீர்த்திருத்தல், விந்து தெளிந்திருத்தல், விந்து உடைந்து போயிருத்தல் ஆகிய தீயகுணங் களெல்லாம் நீங்கி அது கெட்டிப்பட்டு விந்து விளைவு அதிகப்படும். விந்து வெளிப்பாடு, கனவு ஒழுக்கு, விந்திழப்பு ஆகிய இழிகுணங் கள் நீங்கி விந்தழுத்தம் உண்டாகும். இராச கருவிகளாகிய தலை, மூளை, இருதயம், இரைப்பை, விந்துநாளங்கள், பிறப்புறுப்பு கள் ஆகியவைகள் பலப்பட்டு உடம்பிலுள்ள நரம்புகள் முறுக்கேறித் தெம்பு, துணிவு, ஊக்கம் முதலியவைகளுண் டாகும். பிறப்புறுப்புகளில் முக்கியமான அவயவம் சுருங்கிப் போகுதல், அடி சிறுத்து நுனி பெருத்துப் போதல், ஒருபுறமாக வளைந்துபோதல் முதலிய இழிகுணங்களெல்லாம் தீர்ந்து சுபாவம் போலாகி விடும். சுருங்கச் சொல்லின் இது ஒருவகைக் காயகற்பம். இதனால் ஆயுள் விருத்தி, சந்தான விருத்தி முதலியவையுண் டாகும்.

**மருத்துணவு :—** நெய், ஊனுண்பவர்களானால் இறைச்சி, உடும் பிறைச்சி, ஊர்க்குருவியிறைச்சி, பசுவின்பால், கோதுமை சம்பந்த மான உணவுப்பண்டங்கள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளவும்.

## குறிப்பு

இது ஒரு நீண்ட முறை; இது பல தடவை அனுபவப்பட்ட தாகையால் விருப்பமுள்ளவர்கள் செய்துகொள்ளும்படி இங்கெழு தப்பட்டிருக்கிறது. மனமுண்டானால் வழியுமுண்டாகும்; சில சமயங்களில் சில ஊர்களில் இதில் கண்டிருக்கிற சரக்குகளெல்லாம் அகப்படுவது அருமையாயிருக்கும்; ஆகையால், அந்தந்த சமயங் களிலும் அந்தந்த ஊர்களிலும் கிடைக்கக் கூடியவைகளைச் சேர்த் துக்கொள்ள வேண்டியது. இவ்விடத்தில் சொல்லியிருக்கப்பட்ட வித்து வகைகளில் பெரும்பான்மையும் ஒன்றிற்கொன்று பிரதியாத லால் ஒருவகை கிடைக்காதபோது மற்றொரு வகையை அதற்குப் பிரதியாகச் சேர்த்துக் கொள்ளலாம். அவ்விதமே பூ வகைகளை யும் பிசின் வகைகளையும் ஒன்றிற்கொன்று பிரதியாகச் சேர்த்துச் செய்துகொள்ளவேண்டும். இந்த விஷயங்களெல்லாம் இதனைச்

செய்ய விரும்பும் பண்டிதர்களின் மதிநுட்பம், அனுபவ முதிர்ச்சி ஆகியவைகளைச் சேர்ந்தது. ஆகையால் அறிவாளிகள் உடல், காலம், நாடு, நோய்வலிமை முதலியவைகளை அனுசரித்துச் சமயோசிதம்போலச் செய்துகொள்வார்களாக.

## 1049. கறியாதி தீபனச்சூரணம்

மிளகு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), அரிசித் திப்பிலி 1 பலம் (35 கிராம்), இவ் இரண்டையும் ஒரு துணியில் தளர முடிந்து, அரைப்படி காடி நீரில் கிழிக்கட்டித் தொங்கவிட்டுக் காடி சுண்ட எரித்துச் சுண்டினபின் எடுத்து, நீரைவிட்டுக் கழுவி நிழலில் உலர்த்திக் கொள்ளவேண்டியது.

பெருங்காயம் 1 பலம் (35 கிராம்), ஐந்து தாமரை இலைகளை ஒன்றன்மேல் ஒன்றாகப் பொதிந்து, நடுவில் காயத்தை வைத்து மடக்கிக்கட்டி, முன்போல் காடி நீரை ஒரு பாத்திரத்தில் விட்டு அதில் முன் சித்தப்படுத்தினதைக் கிழிக்கட்டித் தொங்கவிட்டு, முன்போல் காடி சுண்ட எரித்து, எடுத்துக் கழுவி உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

தோலுரித்த வெள்ளைப்பூண்டு 2 பலம் (70 கிராம்), இதனைச் சட்டியிலிட்டுப் பொன்னிறமாக வறுத்துக்கொள்ளவும்.

கடுகு 1 பலம் (35 கிராம்), ஓமம் 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் இளவறுப்பாக வறுத்துக் கொள்ளவும்.

அப்பளாகாரம் 1 பலம் (35 கிராம்), இதனை ஒரு துணியில் சுருட்டிக் கொளுத்திவிட்டு எரிந்தாறினபின் எடுத்துக்கொள்ளவும்.

செய்முறை:— வெள்ளைப் பூண்டைத்தவிர மற்றெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் துணியில் சலித்து, வெள்ளைப் பூண்டுடன் சேர்த்து அம்மியில் வைத்து நுண்மையாக அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகனெடை.

துணைமருந்து :— வெந்நீர், சோம்புக்குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— அக்கினி மந்தம், வயிற்றுப் பொருமல், குடல் வாயு, மூலக்கிராணி, செரியாமைக் கழிச்சல் ஆகியவைகள் தீரும். பசித்தீபனம் அதிகப்படும்.

கிராணிக் கழிச்சலுக்கு காற்பலம் சவுட்டுமண்ணைக் கரைத்துத் தெளிவிறுத்து அந்தத் தெளிவில் மேற்படி தூளை அளவுப்படி கூட்டிக் கொடுக்க மேற்கண்ட கழிச்சல் தீரும்.

உத்தாமணிச்சாறு 1 வராகனெடை, இரசகர்ப்பூரத் தூள் 2 குன்றிமணியெடை. இவ் இரண்டையும் கலந்து மேற்கண்ட தூளை அளவுப்படி சேர்த்துக் கொடுக்கப் பக்கசூலை தீரும்.

வெந்நீரில் சேர்த்துக் கொடுக்க வயிற்றுப் பொருமல், அசீரணம், பேதி ஆகியவை தீரும்.

## குறிப்பு

மேற்கண்ட பாகத்திற் சொல்லியிருக்கிறபடி சரக்குகளைப் பக்குவப்படுத்திச் செய்வதுதான் மேன்மையாம்; அவசரக் காலங்களில் கூடியவரையில் பக்குவப்படுத்தியும் பக்குவப்படுத்தாமலும் பயன்படுத்தலாம்.

## 1050. மிளகு இளகம்

கல் முதலியவைகள் ஆய்ந்த மிளகு 4 பலம் (140 கிராம்), எருமைப்பால் $\frac{1}{4}$ படி. பாலைக்காய்ச்சி அதில் மேற்படி மிளகைப்போட்டு எலுமிச்சம் பழம் ஒன்றைப் பிழிந்து ஓரிரவு வைத்து அதில் பெருங்காயம் 4 வராகனெடை, இந்துப்பு 8 வராகனெடை இவ் இரண்டையும் பொடித்துச் சேர்த்து அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து எடுத்து ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் நெய்யைவிட்டு நெய் காய்ந்தவுடன் முன் சித்தப்படுத்தினதைப் போட்டு அடிபிடிக்காமல் கிளறிக்கொண்டேயிருக்க வேண்டியது. அடிக்கடி கொஞ்சம் நெய்யையும் விட்டுக்கொண்டு வரவேண்டியது. இளகபதமானவுடன் இறக்கி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— 1 முதல் $1\frac{1}{2}$ வராகனெடை.

தீரும்நோய்கள்:— உட்டினவாயு, அக்கினிமந்தம், சூதகவாயு, கிராணி, வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், உணவு செரியாமை, குழந்தைகள் மாந்தம், செரியாமைக் கழிச்சல் முதலியவைகள் தீரும்.

## 1051. கறியாதி மதனகாமேசுரம்

(அ) மிளகு, பறங்கிப்பட்டை, நற்சீரகம், இஸ்பகோல்விதை, வெள்ளைப்பூண்டிதழ், ரூமிமஸ்தகி, சாலாமிஸ்ரி இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவற்றுள் பூண்டைத் தவிர மற்றவைகளைத் தனித்தனியாக இடித்து துணியில் சலித்து நிறுத்தெடுத்துக் கொள்ளவும். பூண்டிதழை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும். சாலாமிசிரி தவிர மற்றவைகளை ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

(ஆ) மேற்றோல் சீவின சுக்கு, ஏலரிசி, இலவங்கம் இவற்றின் தூள் வகைக்கு ½ பலம் (17½ கிராம்).

(இ) சாதிக்காய்த் தூள், சாதிப்பத்திரித் தூள், தூய்மை செய்த கஞ்சாத் தூள் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), கசகசா 2 பலம் (70 கிராம்), மேற்றோல் சீவின இஞ்சி 2 பலம் (70 கிராம்), இதனைத் துண்டித்து நெய்யில் வறுத்துப் பொடித்துக் கொள்க; கசகசாவை அம்மியில் வைத்தரைத்துக் கொள்க. இவ்விரண்டையும் மேற்கண்ட தூள்களுடன் ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

(ஈ) சர்க்கரை 20 பலம் (700 கிராம்), பசுவின் பால் ½ படி, தேன் 4 பலம் (140 கிராம்), நெய் 8 பலம் (280 கிராம்).

**செய்முறை :—** பாலில் சர்க்கரையைச் சேர்த்துப் பாகுசெய்து பாகுபதத்தில் (அ),(ஆ),(இ) ஆகியவற்றிலுள்ளவைகளைச் சேர்த்து நன்றாகக் கடைந்து கலந்து திரள்பதத்தில் தேன், நெய் ஆகியவைகளைச் சேர்த்து இறக்கிக்கொள்ளவும். பிறகு கோரோசனை 1 வராகனெடை (3½ கிராம்), குங்குமப்பூ 1 வராகனெடை (3½ கிராம்), இவ்விரண்டையும் பொடித்துத் தூவி நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 வராகனெடை.

**தீரும்நோய்கள் :—** செரியாமை நோய்கள், மந்தாக்கினி நோய், புளியேப்பம், வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல், அசீரணபேதி, வயிற்றுக் கழிச்சல், வயிற்று நோய் முதலிய இரைப்பை சம்பந்தமான நோய்கள் தீர்ந்து இதன் தொடர்பான தாதுநட்டமும் தீரும். அநேகருக்கு இரைப்பையில் மாறுபாடு ஏற்பட்டு அதனால் உணவு சரிவர சீரணமாகாமல் நாளுக்கு நாள் உடல்இளைப்பு ஏற்பட்டுவரும்.

அதனால், போகசத்தி நாளடைவில் குறைந்துகொண்டே வரும். அல்லது அது முற்று இல்லாமலே போய்விடும். இன்னும் சிலருக்கு இரைப்பையில் கபம் உண்டாகிப் பசித்தீபனங் குறைந்துபோக சக்தி இல்லாமல் போய்விடுவதும் உண்டு. அத்தகையவர்களுக்கு ஆரம்பத்தில் சிவதை சம்பந்தமான பேதியைக் கொடுத்து இரைப் பையைச் தூய்மை செய்து மேற்படி இளகத்தை உபயோகித்து வந் தால் அதிசீக்கிரத்தில் அந்த நோயை நீக்கித் தாதுவிருத்தி, உடல் வலிமை முதலியவைகளை உண்டாக்கும்.

## 1052. திப்பிலி இளகம்

அரிசித்திப்பிலித் தூள் 1 பலம் (35 கிராம்), கண்டத்திப்பிலித் தூள் 1 பலம் (35 கிராம்), செவ்வியம், மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, சிறுதேக்கு, நற்சீரகம், தாளிசப்பத்திரி இவற்றின் தூள் வகைக்கு ½ பலம் (17½ கிராம்), இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி முள்ளி இவற்றின் தூள் வகைக்கு ½ பலம் (17½ கிராம்), சர்க்கரை 7½ பலம் (262½ கிராம்), தேன் 4 பலம் (140 கிராம்), நெய் 3 பலம் (105 கிராம்).

வில்வ வேர் 5 பலம் (175 கிராம்). இதனை நன்றாகச் சிதைத்து 8 படி நீரில் போட்டு ஒரு படியாகச் சுண்டவைத்து, இறக்கி வடி கட்டி வைத்துக்கொள்ளவேண்டியது.

**செய்முறை :—** மேற்படி குடிநீரில் மேற்படி சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில், மேற்படி தூள்களையெல்லாம் ஒன்றாக சேர்த்துச் சிறுகச் சிறுக தூவிச் செவ்வையாகக் கிண்டிக் கிளறித் தேனையும் நெய்யையும் விட்டு, மறுபடியும் நன்றாகக் கலந்து ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 1½ வராகனெடை. காலை, மாலை இரண்டு வேளையும் பயன்படுத்தவும்.

**தீரும்நோய்கள் :—** ஈளை, இருமல், கபநோய் ஆகியவைகள் தீரும்.

## 1053. திப்பிலியாதி நெய்

அரிசித் திப்பிலி, வெட்பாலை அரிசி, மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி முள்ளி, கடுகுரோகணி, நன்னாரி வேர், கீழ்காய்நெல்லி வேர், வில்வ வேர், வேப்பம்பட்டை,

சந்தனத் தூள், செண்பகமொட்டு, விலாமிச்சம் வேர், விதைநீக்கின திராட்சைப் பழம், (இதனை அம்மியில் அரைத்துக் கொள்ளவும்.) அதிவிடயம், ஆடாதோடை இலை இவற்றின் தூள் வகைக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) பசுவின் நெய் $\frac{1}{4}$ படி.

**செய்முறை :**—மேற்படி தூள்களையெல்லாம் அம்மியில் வைத்து நீரைத் தெளித்து வெண்ணெய்போல் அரைத்துக் காற்படி நீரில் கரைத்து, மேற்படி நெய்யிற் கலந்து அடுப்பேற்றித் தீபாக்கனியாக எரித்து நீர் சுண்டின பதத்தில், இறக்கி ஆறினபின் கண்ணாடிக் குடுவையில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 வராகனெடை.

**துணைமருந்து :**— மேற்படி நெய்யிற்குச் சமனெடை தேனில் கலந்து உட்கொள்ளவும்.

**தீரும்நோய்கள் :**— விடாச்சுரம், எலும்புசுரம், விக்கல், உழலை, சுவையின்மை, தலைவலி, பிரமியம் முதலிய எலும்பைப்பற்றின நோய்களெல்லாம் தீரும்.

**மருத்துணவு :**— இச்சாபத்தியம். ஆனால் நோய் அதிகநாட்பட்டதாயிருந்தால் நோய்வன்மை, உடல்வன்மை ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் புளி, புகை ஆகியவைகளை நீக்கி வைக்கவும்.

## 1054. யானைத்திப்பிலி நெய்

(அ) யானைத் திப்பிலி $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), (இதனைச்சிதைத்து இரண்டு படி நீரில் போட்டுக் காற்படி நீராகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்) பசுவின் நெய் $\frac{1}{4}$ படி, தயிர்த் தண்ணீர் $\frac{1}{4}$ படி.

(ஆ) கடுகு, குரோசாணி, ஓமம், வெட்பாலை அரிசி, கீழ்க்காய் நெல்லி வேர், வில்வவேர்ப் பட்டை, வேப்பம் பட்டை, தான்றிக் காய்த் தோல், சந்தனத் தூள், ஆடாதோடைவேர்ப் பட்டை, விலாமிச்சம் வேர், திராட்சைப் பழம், செண்பக மொட்டு, அதி விடயம், இவை வகைக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்). இவை எல்லாவற்றையும் அம்மியில் வைத்துத் தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய்போல் அரைத்துக்கொள்ளவும்.

**செய்முறை :—** (அ) விலுள்ள மூன்று திரவத்தையும் ஒன்ருகக் கலந்து (ஆ) விலுள்ளதை அதில் கரைத்துக் கலக்கி, அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து, வடிகட்டாமல் ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 2 முதல் 4 வராகனெடை. சமன் தேனுடன் கலந்து பருகச் செய்யவேண்டும்.

**தீரும்நோய்கள் ;—** நாட்பட்ட சுரம், என்பு சுரம், விடாசுரம் முதலிய பல பழைய சுரங்கள் தீரும். விக்கல், அழலே, சுவையின்மை தலைவலி, பிரமேகநோய் ஆகியவைகளும் தீரும்.

**மருத்துணவு :—** புளி, புகை, புணர்ச்சி நீக்குக.

## 1055. கடுக்காய் இளகம்

(அ) மஞ்சட்கடுக்காய்த் தோல் 10பலம் (350கிராம்), தூய்மை செய்த சிவதைவேர் 2 பலம் (70 கிராம்), கடுகுரோகணி, இலவங்கம், அரிசித் திப்பிலி, சிறுநாகப் பூ, வாலுழுவை அரிசி, கற்கடகசிங்கி, கருஞ்சீரகம், மிளகு, தான்றிக்காய்த் தோல், கொத்துமல்லி விதை, தாளிசப்பத்திரி இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). இவையெல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து இடித்து, தூள்செய்து துணியில் சலித்து வைத்துக்கொள்ளவும்.

(ஆ) கையாந்தகரை, வல்லாரை, புளியாரை, நிலாவாரை இவைகளைத் தனித்தனி நிழலில் உலர்த்தி இடித்து துணியில் சலித்துச் செய்த தூள் வகைக்கு 2 பலம் (70 கிராம்).

மேற்கண்ட இரண்டு வகைகளையும் ஒன்ருகச் சேர்த்துக் கண்ட எடைக்குச் சமனெடை சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளவும். உடல் 8 பலம் (280 கிராம்), நெய் 8 பலம் (280 கிராம்) பூநீற்றுத் தூள் $1\frac{1}{4}$ வராகனெடை.

**செய்முறை :—** சர்க்கரையில் கொஞ்சம் தண்ணீரைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகுசெய்து, முன் தூள்களையெல்லாம் ஒன்ருகக் கலந்து அதில் சிறுகச் சிறுகத் தூவி நன்ருகக் கிளறி நெய்யையும் தேனையும் விட்டுப் பூநீற்றுத் தூளையும் போட்டுச் செவ்வையாகக் கலந்து, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $1\frac{1}{2}$ முதல் 3 வராகனெடை. காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள் :—** மலக்கட்டு, சலக்கட்டு, கோழைக்கட்டு, உட்டினவாயு, மேககாந்தி, உள்ளங்கால் உள்ளங்கை ஆகியவை எரிதல், குலே எரிச்சல், வயிற்றெரிச்சல், குடல் புரட்டல், மூலாதாரச்சூடு, வயிற்றிலுள்ள அழலேகள், குடலில் உண்டாகியிருக்கும் அழலே, ஈளே, இருமல், புகைச்சல், வறட்சி, சோகை முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 1056. கடுக்காய் இளகம் (வேறு)

(அ) விதை நீக்கின சூரத்துக் கடுக்காய் 100 பலம், பனே வெல்லம் 10 பலம் (350 கிராம்), நல்லெண்ணெய் 5 பலம் (175 கிராம்).

(ஆ) ஓமம், மேற்றோல் சீவின சுக்கு, அரிசித் திப்பிலி, இலவங்கம் பெருங்காயம், கொத்துமல்லி விதை, சீரகம், வாய்விலங்கம், மஞ்சள், அதிவிடயம் இவற்றின் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்). இவை எல்லாவற்றையும் தனித்தனியாக இடித்துப் பிறகு ஒன்ருகக் கலந்துகொள்ளவும்.

**செய்முறை :—** ஒரு மண்பாண்டத்தில் 16 படி நீரைவிட்டுக் கடுக்காயை நைய நசுக்கிப்போட்டு எட்டிலொன்ருகக் காய்ச்சி வடிகட்டின துணமருந்தில் மேற்படி பானேவெல்லத்தைக் கரைத்து, வடிகட்டித் திப்பியை நீக்கிப் பிறகு நல்லெண்ணெயை விட்டு (ஆ)வி லுள்ள தூளேயும் போட்டுக் கரைத்துக் கலந்து, அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து லேகிய பதத்தில், இறக்கிச் சூடாறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 2 முதல் 4 வராகனெடை. காலே மாலே இரண்டு வேளே சாப்பிடலாம்.

**தீரும்நோய்கள் :—** எருவாய் நோய், வாயு, வாயுத் திரட்சி, மகோதரம், நீராம்பல், புளித்த ஏப்பம், செரியாமாந்தம், குன்ம நோய், சூலே, முடக்கு, தலேமயக்கம், பித்தளரிவு முதலியவை தீரும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி, கைப்பு ஆகியவைகள் ஆகா.

## 1057. கடுக்காய் முரப்பா

(அ) விதை முற்ருத கடுக்காய்ப் பிஞ்சு 32 பலம் (1120 கிராம்). (இவைகளே ஈச்சமுள்ளினுல் நன்ருய்க் குத்திப் புளித்த மோரில், ஒரு நாள் போட்டு ஊறவைத்துத் தண்ணீரில் நன்ருகக் கழுவி எடுத்துக் கொள்ளவும் சர்க்கரை 4 பலம் (140 கிராம்), (இதில் கொஞ்சம்

of 23—10—73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவற்றைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப் படி, தட்டெழுத்துப் படி முதலியவற்றை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒரு முறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக் குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும், 100 கையெழுத்துப் பிரதிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக் குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சி யற்றத் தக்க வகையில் செப்பம் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப் பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் அறங்காவலர்குழுத் தலைவர் உயர்திரு. பு. மலைகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு ஏற்படுத்தப் பட்டது. அக் குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் ''அனுபோக வைத்திய நவநீதம்'' பத்துப் பாகங்களும் திறவுகோலும் வெளியிடப் படுகின்றன. மேற்படி ''அனுபோக வைத்திய நவநீதம்'' என்னும் உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு ஆவார். இவர் சென்னை ஜார்ஜ் டவுனில் அப்பு மேஸ்திரி தெருவில் 12ஆம் எண்ணுள்ள வீட்டில் வாழ்ந்தார். இவர் தஞ்சை மன்னர் சரபோஜி தன்வந்திரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித்தோன்றல் ஆவார். இவர் பரம்பரை மருத்துவர். சித்த, யூனானி ஆகிய இரு முறைகளிலும் கைபாகம், செய்பாகம், நோய்த்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்க தேர்ச்சி பெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருத்துவமனையும், மருந்துசெய் சாலையும், அச்சகமும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர்நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். சர். உஸ்மான் சாயபு அவர்களின் நெருங்கிய உறவினராவார்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரை நடையில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரிசல், அகத்தியர் இலக்க சௌமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை பதிப்பித்து வெளியிடுவோரின்மை யால் அவை கிட்டுவது அரிதாயிற்று.

ஆகவே, இவரது அநுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் அவைகளின் திறவுகோலுடன், முன் பதிப்பிலிருந்த தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி, பழைய எழுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்து பிழைகளைத் திருத்தம் செய்து வெளியிடப்படுகிறது. இந்தப் பத்து நூல்களின் பெருமை அவைகளைக் கற்று மருந்துழைச் செல் வார்க்கு மிக நன்கு விளங்கும். அவ்வந்நூல்களின் பழைய முகவுரைகள் வாயிலாக அவற்றின் மேன்மை தெரியவரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்கு பெருந் தொகை தேவைப்படுவதால், இப்பெரும் பணியை விரைவில் செயல் படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறைஅமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச்செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக்கொண்டு காலஞ்சென்ற திரு. டி.வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதி களையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழு மனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

தண்ணீர் விட்டுக் கரைத்துக் காய்ச்சிப் பாகு பதமாக இறக்கிக் கொள்ளவும்) மேற்றோல் நீக்கின இஞ்சி 1 சேர். இதனை இடித்துச் சாறு பிழிந்து கொள்ளவும்.

(ஆ) மூங்கிலுப்பு 8 வராகனெடை (28 கிராம்), முந்திரியுப்பு 12 வராகனெடை (42 கிராம்).

**செய்முறை :—** மேற்படி பாகில் இஞ்சிச் சாற்றைக் கலந்து, முன் சித்தப்படுத்தின கடுக்காய்களையும் போட்டு, மெதுவாய் எரித்துப் பாகு சுண்டினபதத்தில், (ஆ) விலுள்ளவைகளைப் பொடித்துத் தூவி கண்ணுடியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— கடுக்காய் 1. காலையில் ஒரு தங்கரேக்கில் வைத்து மடித்து விழுங்கிவிடவேண்டும். மாலையில் வெள்ளி ரேக்குடன் உட்கொள்ளவேண்டியது. இவ்விதம் அரை மண்டலத்திற்குக் குறையாமல் சாப்பிடவேண்டியது.

**தீரும்நோய்கள் :—** வாதம், பித்தம், சிலேத்தும் ஆகிய முக்குற்ற சம்பந்தமான சுவாசம், இருமல், எழுவகைப் பீனிசம், மலக்கட்டு, கிருமிகள், குன்மநோய்கள், மூலவாயு, அறுவகைக் கடுப்பு, நவமூலங்கள், அக்கினி மந்தம், மூலச்சூடு, மேகச்சூடு, பித்தச்சூடு முதலிய அநேக நோய்கள் தீரும். மேற்படி வெள்ளி ரேக்கு, தங்க ரேக்கு இல்லாமலும் உபயோகிக்கலாம்.

## குறிப்பு

பச்சைக் கடுக்காய்ப்பிஞ்சு அகப்படாவிட்டால் உலர்ந்த கடுக்காய்ப் பிஞ்சை வாங்கிக் கழுநீரில் அல்லது தண்ணீரில் ஊற வைத்து, நைப்பாகும்படி செய்து, மேற்சொல்லியிருக்கிற முறைப்படி செய்துகொள்ளவேண்டியது. கடுக்காய்ப்பிஞ்சு அகப்படாமல் விதை முற்றின கடுக்காயாயிருந்தால் கழுநீரில் மூன்று நாள் ஊற வைத்து அதைப்பிளந்து அதிலுள்ள விதையை நீக்கிப் பிறகு மோரில் அவித்து முன் சொல்லியிருக்கிறபடி பக்குவம் செய்து கொள்ள வேண்டியது. பச்சைக் கடுக்காய் அகப்படாவிட்டால் கடையில் விற்கும் உலர்ந்த கடுக்காயை வாங்கிக் கழுநீரில் ஊற வைத்து நைப்பாக்கிக் கடுக்காயைப் பிளந்து விதையை நீக்கிப் பிறகு மேற் சொல்லியிருக்கிறபடி மோரில் வேகவைத்துப் பக்குவப் படுத்திக் கொள்ளவேண்டியது.

## 1058. கடுக்காய் நெய்

மஞ்சட் கடுக்காய்த் தோலை இடித்ததூள் ½ பலம்(17½ கிராம்), நெய் 1 பலம் (35 கிராம்) மேற்படி நெய்யில் மேற்படி கடுக்காய்த் தூளைப் போட்டு வாய்க்கு வேடுகட்டி வெயிலில் அல்லது உட்டிணமான இடத்தில் நாற்பது நாள் வைத்து வடிகட்டாமல் கடுக்காய்த் தூளுடனேயே பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்த வேண்டும்.

**அளவு :—** 2 முதல் 3 வராகனெடை

**தீரும்நோய்கள் :—** நுண்புழு நோய்கள் நீங்கும்; வயிற்றிலுள்ள எவ்வகைக் கிருமிகளும் நாசமாகிப்போகும்; மலக்கட்டு தீரும்; குன்மம், குட்டம், ஆகியவைகள் தீரும்; உடல் பலமும் உடல், வலிமையும் உண்டாகும்.

### குறிப்பு

கடுக்காயானது காயா கற்ப சரக்குகளில் ஒன்றென்பது அனுபசாலிகளுக்குத் தெரிந்த விஷயமே; கடுக்காய்த் தூளை இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ள வேண்டியது; நெய்யில் கடுக்காய் ஊறினல் ஒருவித விசேஷ குணமுண்டாய்விடுகிறது; ஆகையால் கடுக்காயை எத்தனை நாள் நெய்யில் ஊறவைத்த போதிலும் அத்தனைக் கத்தனை சிறந்த குணமுண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. ஆனல் சீக்கிரமாக வேண்டியதாயிருந்தால் நெய்யில் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டியும் உபயோகிக்கலாம்.

## 1059. கடுக்காய் நெய் (வேறு)

(அ) மஞ்சட் கடுக்காய்த் தோல் 20 பலம் (700 கிராம்) பசுவின் நெய் 1 படி.

(ஆ) சிவதை வேர்ப்பட்டை; மேற்றோல் நீக்கின இஞ்சி, மிளகு, ஓமம், மஞ்சட் கடுக்காய்த் தோல், அரிசித் திப்பிலி, சர்க்கரை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). (இந்தச் சரக்குகளில் சர்க்கரை இஞ்சி தவிர, மற்றவைகளைத் தனித்தனி இடித்துச் தூள்செய்து துணியில் வடிகட்டிப் பிறகு,எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய்போலரைத்து வைத்துத் கொள்ளவேண்டும்.)

**செய்முறை :—** மேற்படி கடுக்காய்த் தோலை ஒரு மண் பாண்டத்திற் போட்டு, 8 படி நீரைவிட்டுச் காய்ச்சி 1 படியாகச் சுண்டவைத்திறக்கி, வடிகட்டின துணைமருந்துடன் நெய்யை கலந்து

(ஆ) விலுள்ளதையும் அதில், கரைத்துக் கலக்கி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து இறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :— 2 முதல் 4 வராகனெடை. காலே மாலே இரண்டு வேளேயும் சாப்பிடவும்.

**தீரும்நோய்கள்** :— அக்கினி மந்தம், சூலே, மலசிறுநீர்க்கட்டு, மூலநோய், பல வகை வாயுவுகள் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணவு** :— புகை, புளி, புணர்ச்சி நீக்குக.

## *1060.* திரிபலாதிச் சூரணம்

மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய் தோல், நெல்லி முள்ளி, மேற்றேல் சீவிய சுக்கு, மிளகு, திப்பிலி, நற்சீரகம், பெருஞ்சீரகம், கடுகு, வெந்தயம், காயம், இலவங்கம், வசம்பு, (இதனேச் சுட்டெரித்துச் சாம்பலாக்கிக் கொள்ளவும்) இவற்றின் தூள்கள் வகைக்கு $7\frac{1}{2}$ வராகனெடை, ஊசிக் காந்தம், சீனக் காரம், அப்பளாகாரம், வெண்காரம் இவற்றின் தூள் வகை 1-க்கு $3\frac{3}{4}$ வராகனெடை, கோரோசனே $1\frac{1}{4}$ வராகனெடை, கஸ்தூரி $\frac{1}{4}$ வராகனெடை.

**செய்முறை** :— இவை எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து, கஸ்தூரி கோரோசனே ஆகியவற்றையும் பொடித்துச் சேர்த்து, இரண்டு மணி நேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் 1 வராகனெடை

**தீரும்நோய்கள்** :— மேகசுரம், எலும்பு சுரம், கணேச்சூடு, எலும்புச்சூடு முதலியவைகள் தீரும். அசீரண மேகம், இரைப்பை யைப் பற்றின நோய், இருதயத்தைப் பற்றின நோய், முதலிய எல்லாவகை நோய்களுக்கும் கொடுக்கலாம். நுரையீரல் நோய், கபநோய் ஆகியவற்றிற்கும் கொடுக்கலாம். இன்னும் எந்த நோய்க் கும் அனுபானமாகவும் உபயோகிக்கலாம்.

## *1061.* திரிபலாதி நெய்

(அ) மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, மஞ்சட்கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லி முள்ளி மாசிக்காய், கொடிவேலி வேர்ப்பட்டை, சிவதைவேர்,

சிற்றாமணக்கின் வேர்ப்பட்டை, மரமஞ்சள், சரக்கொன்றைப்புளி, அதிவிடயம், கடுகுரோகணி, வட்டத்திருப்பிவேர் இவற்றின் தூள்கள் வகைக்கு 3½ வராகனெடை. இவற்றை ஒன்றாகச் சேர்த் திடித்து துணியில் வடிகட்டி அம்மியில் வைத்து, நீர் வார்த்து வெண்ணெய்போலரைத்து வைத்துக்கொள்ளவும்.

(ஆ) பசுவின் நெய் 1 படி, கள்ளிப்பால் 1 ஆழாக்கு.

**செய்முறை** :—நெய்யையும் கள்ளிப்பாலையும் கலந்து, (ஆ) வில் சொல்லியிருக்கிறபடி சித்தப்படுத்தின மருந்தைக் கரைத்து, அடுப் பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி, வடி கட்டிப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

**அளவு** :— ½ முதல் 1 வராகனெடை. உடல் பலமறிந்து கொடுக்க வேண்டும்.

**துணைமருந்து** :— சர்க்கரை, தேன், கற்கண்டுத் தூள் ஆகிய வைகளாம்.

**தீரும்நோய்கள்** :— வெண்குட்டம், பாண்டு, நச்சுக்கடி, சூலை முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு** :— கடுகு, நல்லெண்ணெய், புளி, புகை, கசப்பு பண்டங்கள், வாயு பண்டங்கள், காப்பான் பண்டங்கள் ஆகியவை களைத் தள்ளவும், பசுவினெய், பசுவின் பால், வெள்ளாட்டிறச்சி ஆகியவைகளைச் சேர்க்கவும்.

## 1062. நெல்லி முள்ளி இளகம்

விதை நீக்கின நெல்லி முள்ளி 20 பலம் (700 கிராம்), தக்கோலம், இலவங்கப் பட்டை, பெருலவங்கப் பட்டை, சீரகம், கருஞ் சீரகம், அதிமதுரம், சதகுப்பை, ஓமம், கொத்துமல்லி விதை, மேல்தோல் சீவிய சுக்கு, சிறு நாகப்பூ, பறங்கிப்பட்டை மூங்கிலுப்பு, மஞ்சிஷ்டி, ஏலரிசி, அரிசித் திப்பிலி, இலவங்கம், மிளகு, வாலுழுவையரிசி, தாளிசப்பத்திரி, சாதிக்காய், சாதிப் பத்திரி, கண்டந்திப்பிலி இவற்றின் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), சர்க்கரை 50 பலம் (1750 கிராம்), தேன் 8 பலம் (280 கிராம்), நெய் 8 பலம் (280 கிராம்), குங்குமப் பூ, கஸ்தூரி இவை வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்).

**செய்முறை** :— மேற்படி நெல்லி முள்ளியை 8 படி நீரிலிட்டு, ஒன்றேகாற் படியாகச் சுண்டக் காய்ச்சி, வடிகட்டித் திப்பி நீக்கின,

குடிநீரில் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்து, பாகு பதத்தில் மேற்படி தூளை ஒன்ருகக் கலந்து சிறுகச் சிறுகத் தூவி நன்ருகக் கிளறி எல்லாம் கலந்தபின்பு, தேனையும் நெய்யையும் சேர்த்து மறுபடியும் நன்ருகக் கிளறிக் கீழிறக்கிக் கஸ்தூரியையும் குங்குமப் பூவையும் பன்னீர் வார்த்தரைத்து அதில் கலந்து, குளிர ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்,

அளவு :— 1 முதல் 2 வராகனெடை. காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

தீரும்நோய்கள் :— நாற்பது வகைப் பித்தம், பித்தவாயு, உட்டிணவாயு, அக்கினிமந்தம், வயிற்றுப்புசம், கிராணி, சுவை யின்மை, அதிசாரம், மூலவாயு, என்புசுரம், பல வகை வாயுகள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 1063. அநூஷ் தவா

பாலில் வேகவைத்து உலர்த்தின நெல்லி முள்ளித் தூள் 20 வராகனெடை (70 கிராம்), (இதிலுள்ள விதைகளை நீக்கி நிறுத் தெடுத்துக் கொள்ள வேண்டியது.) ரோஜாப்பூ மொட்டுத் தூள், கோரைக் கிழங்குத் தூள் இவை வகைக்கு 5 வராகனெடை (17½ கிராம்), ரூமிமஸ்தகித்தூள், நிலக்கடம்புத்தூள், இலவங்கத் தூள், சடா மாஞ்சில் தூள் இவை வகைக்கு 3 வராகனெடை (10½கிராம்), ஏலரிசித் தூள், பூலாங்கிழங்குத் தூள், தாளிசப்பத் திரித் தூள்,இலவங்கப் பத்திரித் தூள், சாதிக்காய்த் தூள், சாதிப் பத்திரித்தூள், கருவாப்பட்டைத் தூள், சன்ன லவங்கப் பட்டைத் தூள் இவை வகைக்கு 2 வராகனெடை (7 கிராம்), சீனுக் கற்கண்டு 12 பலம் (420 கிராம்), தேன் 6 பலம் (210 கிராம்).

செய்முறை :— கற்கண்டைப் பொடித்துக் கொஞ்சம் நீரில் சேர்த்துக் காய்ச்சிப்பாகுசெய்து பாகுபதத்தில், தேனையும்சேர்த்துக் காய்ச்சி ரூமிமஸ்தகி தவிர, மற்ற தூள்களை எல்லாம் ஒன்ருகக் கலந்து அதில் சிறுகச் சிறுகத் தூவி ஒன்ருகக் கலந்து, நன்ருகக் கிளறிக் கீழிறக்கிக் குளிர ஆறினபின்பு, ரூமிமஸ்தகித் தூளைச் சேர்த்து ஒன்ருகக் கலந்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1½ முதல் 2½ வராகனெடை.

தீரும்நோய்கள்:—அக்கினி மந்தம், செரியாமை, குடல் வாதம், வாயு, அசதி, சுவையின்மை, பித்தம், கக்கல், கிறுகிறுப்பு, தலை மயக்கம் ஆகியவைகள் தீரும். கண்ணொளி உண்டாகும்.

## 1064. ஆமலக இளகம்

முத்தின நெல்லிக்காய், இதில் நாரில்லாதவைகளும் பருமனை வைகளுமாகத் தேவையான அளவு எடுத்துப் பசும்பால் விட்டுப் பொய்யாவியாக அவித்துக் கொட்டையை நீக்கி, ஈரமில்லாமல் நன்ருகக் காயவைத்துச் சித்தப் படுத்திக்கொள்ள வேண்டியது. இவ்விதம் செய்யக்கூடாத பட்சத்தில், சீமை நெல்லி முள்ளியென நாட்டு மருந்துக் கடைகளில் விற்பதை உபயோகித்துக் கொள்ள லாம். மேற்படி இரு வகையில் ஒரு வகையைப் புது மண் பாத்திரத் திற் போட்டு, அது அமிழ்ந்து கிடக்கும்படியாகப் பச்சை நெல்லிக் காயை இடித்த சாற்றை விட்டு, ஓர் இரவு ஊறவைத்து, மறுநாட் காலையில் உலர்த்தவேண்டும். மறுபடியும் முன்போலவே நெல்லிக் காய்ச் சாற்றில் ஊறவைத்து, மறுபடியும் உலர்த்தவேண்டும். இவ் விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்து, சித்தப்படுத்திக் கொள்ளவும். இதற்குப் பாவனை நெல்லிவற்றல் என்று பெயர். இந்தப் பாவனை நெல்லிமுள்ளியை இடித்துத் துணியில் வடிகட்டிய தூள் *3* பலம் (*105* கிராம்), தேன் *1* பலம் (*35* கிராம்), சர்க்கரை *1* பலம் (*35* கிராம்), நெய் *1* பலம் (*35* கிராம்).

**செய்முறை:**—பின் மூன்றையும் பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சி குழம்பான பதத்தில், மேற்படி நெல்லி முள்ளித் தூளை சிறுகச் சிறுக தூவி, இளகம்போல் கிண்டிக் கிளறி இறக்கி, இளஞ் சூட்டுடனே இரண்டு வராகனெடையுள்ள உருண்டைகளாகச்செய்து, பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— *1* உருண்டை காலை மாலை இரண்டு வேளையும் உப யோகிக்கவும்.

**தீரும்நோய்கள் :**—பித்தத்தினுல் கை, கால் ஆகியவைகளிலுண் டாகும் எரிவந்தம் தீரும். வயிற்றெரிச்சல், குலை எரிச்சல் ஆகிய வைகளும் தீரும். கண் எரிச்சல் தீர்ந்து கண் குளிர்ந்து கண் பார்வை அதிகப்படும். கக்கல், சுவையின்மை, வாய் நீரூறல், மயக்கம், நீரெரிச்சல், பித்தவாயு முதலிய பித்த சம்பந்தமான அநேக நோய்கள் தீரும். இது கைவல்யமான ஒரு சிறந்த முறை.

### குறிப்பு

நினைத்தபோது இவ்வித பாவனை செய்துகொள்வது கடினம். ஆகையால் நெல்லிக்காய்க் காலங்களில் கூடுமானவரையில், மேற் கண்டபடி பாவனைசெய்து வைத்துக்கொள்வது உத்தமம். இவ்

விதம் பாவனை செய்ததை எட்டு நாள் அல்லது, பத்து நாளுக்கு ஒருதட்டவை வெய்யிலில் வைத்துக்கொண்டு வந்தால், கெட்டுப் போகாமல் ஆண்டுக்கணக்காயிருக்கும். சாப்பிடுவதற்கும் அதிக இன்பகரமாய் இருக்கும். பித்த வகைகளுக்கெல்லாம் இது சஞ்சீவிக்கொப்பானது.

## 1065. நெல்லிக்காய் இளகம்

(அ) விதை நீக்கின நெல்லி முள்ளி 100 பலம் (3 கிலோ 500 கிராம்); (இதனை ஒரு மண்பாண்டத்தில் போட்டு 16 படி நீரை விட்டு எட்டிலொரு பாகமாகக் காய்ச்சிச் சுண்டவைத்து மறு பாத்திரத்தில் வடிகட்டிக் கொள்ளவேண்டும்.) சர்க்கரை 20 பலம்(700 கிராம்) நெய் 5 பலம் (175 கிராம்).

(ஆ) அரிசித் திப்பிலி, மிளகு, மேற்றோல் சீவின சுக்கு, ஓமம், இலவங்கம், கார்போக அரிசி, ஏலரிசி, குக்கில், வாய் விளங்கம், நற்சீரகம், கொத்துமல்லி விதை, கூகை நீறு, அதிமதுரம் இவைகளை வெய்யிலில் உலர்த்தித் தனித்தனி இடித்த தூள் வகை 1க்குப் 1 பலம் (35 கிராம்), இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும்.

செய்முறை :— (அ) வில் சொல்லியிருக்கிற குடிநீரில் சர்க்கரையைச் சேர்த்துக் காய்ச்சிப் பாகு பதத்தில்; (ஆ) விலுள்ள தூள்களை சிறுகச் சிறுகத் தூவிக் கிண்டிக் கிளறி தூளெல்லாம் சென்றபின்பு, நெய்யைவிட்டுக் கீழ்மேலாக நன்றாகக் கிளறிக் கீழிறக்கி ஆறின பின்பு, பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $2\frac{1}{2}$ முதல் $3\frac{1}{4}$ வராகனெடை. ($8\frac{3}{4}$ முதல் $11\frac{1}{2}$கிராம்)

தீரும்நோய்கள் :— எலும்பு சுரம், உள் அழலை, உடற் காந்தல், வயிற்றுக் கழிச்சல், கிராணி, வாயு, பொருமல், கபங்கள், ஈளை, இருமல், காசம், வயிற்றுக் கடுப்பு, பித்தநோய், பித்தமயக்கம், தலை மயக்கம், கக்கல், கிறுகிறுப்பு ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு :— புகை, புளி, புணர்ச்சி நீக்கவும்.

## 1066. பாவன நெல்லிக்காய்

நாரில்லாதவைகளும் பருமனானவைகளுமான நெல்லிக்காய் 2 படி. இதனை ஈச்சமுள்ளுக் கத்தையினால் குத்திச் சுண்ணாம்புத் தெளிநீரில் மூன்று மணி நேரம் ஊறவைத்து அடுப்பேற்றி இளஞ்

சூடுண்டாகச் காய்ச்சி இறக்கி, ஆறவிட்டுக் குளிர்ந்த நீரினல் கழுவி மெல்லிய துணியினல் ஈரமில்லாமல் துடைத்து, ஒரு மண்பாத்திரத்தில் போடவும். தேன் 30 பலம் (1 கிலோ 50 கிராம்), சீரகம் 10 பலம் (350 கிராம்), சர்க்கரை 50 பலம் (1 கிலோ 750 கிராம்).

செய்முறை :— சீரகத்தைச் சிதைத்து மேற்படி நெல்லிக்காயிற் போடவேண்டியது. பிறகு தேனையும் சர்க்கரையையும் அதில் விட்டுப் பாத்திரத்தின் வாயை மூடிச் சீலைமண்செய்து, பூமியில் நாற்பது நாள் புதைத்து வைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

அளவு :— 4 முதல் 6 வராகனெடை. காலை மாலை இரண்டு வேளையும் உட்கொள்ளவும்.

**தீரும்நோய்கள் :—** பித்தச்சூடு, எலும்புச்சூடு, வெட்டைச் சூடு, கை கால் எரிச்சல், குலை எரிச்சல், உடல் எரிச்சல், கக்கல், பித்த மயக்கம், கிறு கிறுப்பு முதலிய ஈரல் சம்பந்தமான நோய்களெல்லாம் தீரும். மூளை பலப்பட்டுக் கண் குளிரும்.

## 1067. தான்றிக்காய் இளகம்

(அ) தான்றிக்காய்த் தோல் 100 பலம் (3500 கிராம்), சீனிச் சர்க்கரை 10 பலம்(350 கிராம்),பசுவின் நெய் 8பலம்(280 கிராம்).

(ஆ) அதிவிடத் தூள், சாதிக்காய்த் தூள், அபின், தூய்மை செய்த கஞ்சாத் தூள் இவை வகை 1க்கு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— தான்றிக்காய்த் தோலை இடித்துத் தூளாக்கி மண்பாத்திரத்திற் போட்டு, எட்டுப் படி தண்ணீரைவிட்டு ஒரு படி குடிநீராகக் காய்ச்சி சுண்டவைத்து, இறக்கி வடிகட்டி சர்க்கரையை சேர்த்துப் பாகு செய்து பாகு பதத்தில், (ஆ) வினுள்ள நான்கு சரக்குகளையும் அம்மியில் வைத்து தண்ணீர் வார்த்து வெண்ணெய் போல் அரைத்து அதிற்கலக்கி, அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி, ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ வராகனெடை.

தீரும்நோய்கள் ;— குருதிக் கழிச்சல், பெருங் கழிச்சல், சிரகணி, மூலநோய், அறுவகைக் கடுப்பு, பித்த நோய்,

வாயு நோய்கள், வயிற்றுப் பொருமல், வயிற்றுக் கடுப்பு முதலிய பல நோய்கள் தீரும்.

மருத்துணவு :— புகை, புளி, புணர்ச்சி நீக்கவும்.

## 1068. சீரகப் பாவனை

கல்லாய்ந்து தூய்மைசெய்த சீரகம் 8 பலம், (280 கிராம்). எலுமிச்சம்பழச் சாறு, முசுமுசுக்கைச் சாறு, கையாந்தகரைச் சாறு, இஞ்சிச் சாறு, வெள்ளாட்டுக் கோமயம் (இதைச் சேர்க்க விருப்பமில்லாதவர்கள் இதற்குப் பதில் காடியைச் சேர்த்துக்கொள்ளவும்).

செய்முறை :— சீரகத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு மேற்படி சாறுகளில் ஒன்றை அதில் விடவேண்டும்; சாற்றிற்குள் சீரகம் அமிழ்ந்திருக்க வேண்டும். மண், தூசி முதலியவைகள் விழாமல் விழிப்புடன் வெய்யிலில் வைத்து நான்கைந்து முறை கிளறியும் விடவேண்டும்; விட்டசாறு சுண்டின பின்பு மற்றொரு சாற்றை விடவேண்டும். இவ்விதம் சாறுகளெல்லாம் சுண்டின பின்பு மற்றொரு சாற்றை விடவேண்டும். இவ்விதம் சாறுகளெல்லாம் சுண்டின பின்பு எடுத்துத் தூள்செய்து வைத்துக்கொள்ளவும்.

அளவு:— $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்). காலை, மாலை இரண்டு வேளையும் சாப்பிடலாம்.

தீரும்நோய்கள்:— அக்கினி மந்தம், பித்த வாயு, செரியாமை, மந்தம், வயிற்றுப் பொருமல், வயிற்றுப்புசம் ஆகியவைகள் தீரும்.

## 1069. சீரகாதிச் சூரணம்

கல்லாய்ந்த சீரகம் 1 பலம் (35 கிராம்). இதனை மெல்லிய ஒரு துணியில் முடிந்து சுண்ணாம்புக் கல்லைக் கீழும் மேலும் இட்டுக் கொஞ்சம் தண்ணீரை விட்டு நீற்ற வேண்டும். சுண்ணாம்பு கொதித்து அடங்கின பின்பு எடுத்துக் கழுவி உலர்த்திக் கொள்ளவும்.

மேற்றோல் சீவின சுக்கு 1 பலம் (35 கிராம்). இதன் மீது சுண்ணாம்பைக் குழைத்துப் பூசி நெருப்பில் வாட்டிச் சுண்ணாம்பைத் தட்டி உதிர்த்துவிடவும். இவ்விதம் ஒன்பது முறை மடக்கி மடக்கி முடிவில் சுண்ணாம்புப் பற்றில்லாமல் சுறண்டி வைத்துக்

கொள்ளவும். இலவங்கம் 2 வராகனெடை (7 கிராம்), சாதிக் காய் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), சாதி பத்திரி 1 வராக னெடை ($3\frac{1}{2}$ கிராம்), இலவங்கம் 4 வராகனெடை (14 கிராம்). (இந்த நான்கையும் இளவறுப்பாக வறுத்து முன்னிரண்டு சரக்கு களையும் சேர்த்து இடித்து துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும்).

அளவு :— $1\frac{1}{2}$ முதல் 2 வராகனெடை.

துணைமருந்து ;— தேன், நெய்.

தீரும்நோய்கள் :— எந்த மருந்தாலும் தீராத உட்டின வாயு தீரும்; மந்தாக்கினி நோய் தீரும்; பசியுண்டாகும்; வயிற்றுக் கழிச்சல், சூட்டுக் கழிச்சல் ஆகியவைகள் தீரும். இன்னும் பழக் கத்தில் இதன் குணத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

## 1070. சீரகாதி இளகம்

(அ) கல்லாய்ந்து தூய்மைசெய்த சீரகம் 2 பலம் (70 கிராம்), சன்னலவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலரிசி, கடுகு, கொத்துமல்லி விதை, தாளிசப் பத்திரி, கோரைக் கிழங்கு, அதிமதுரம், நெல்லி முள்ளி, நன்னாரி வேர், தூதுவளை வேர், வில்வ வேர், முசுட்டை வேர், பருத்திக்கொட்டைப் பருப்பு, சிறு தேக்கு, சடாமாஞ்சில், இந்துப்பு, கற்கடக சிங்கி, கோட்டம், அமுக்குராக் கிழங்கு, பேரீச்சம் பழம், திராட்சைப் பழம், மூங்கி லுப்பு, நெற்பொரி இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம்($8\frac{3}{4}$ கிராம்). இவற்றுள் தூள்செய்ய வேண்டியவைகளைத் தூள்செய்தும், பொடிக்கவேண்டி யவைகளைப் பொடித்தும், அம்மியில் அரைக்கவேண்டியவைகளை அரைத்தும் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ள வேண்டியது.

(ஆ) பழுத்தவைகளும் பருமனானவைகளுமான வில்வப் பழம் 4, சர்க்கரை 8 பலம் (280 கிராம்), தேன் 8 பலம் (280 கிராம்), நெய் 8 பலம் (280 கிராம்).

செய்முறை :—வில்வப் பழங்களை உடைத்து அதன் சதையை எடுத்து ஒரு மண்பாண்டத்தில் போட்டு அதில் நான்கு படி தண்ணீரை விட்டுக் காய்ச்சி அரைப்படியாகச் சுண்டினவுடன் இறுத்து வடி கட்டிச் சர்க்கரையை அதில் கரைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் முன் (அ) வில் சித்தப்படுத்தியிருக்கிறதைப் போட்டுக் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மெழுகு பதத்தில் தேனையும்

நெய்யையும் விட்டு நன்ருகக் கலக்கச்செய்து கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் 2 வராகனெடை.

தீரும்நோய்கள் :— அக்கினி மந்தம், சுவையின்மை, பெருங் கழிச்சல், தொடர் கழிச்சல், பாண்டு, மஞ்சள் நோய், சோகை, சுரம், இருமல், மயக்கம், சயநோய், கருப்பை அனல், பித்தம், கை கால் காந்தல், கண் எரிவு, அஜனத்துறுப்பு எரிவு, தலைநோய், தாகம், எலும்பு சுரம், பித்த வாயு, செரியாமை வாயு, கக்கல், எரிகுன்மம், நெஞ்செரிவு, உடல் அனல், உணவேற்காமை, எலும் புருக்கி நோய், பீனிசகாசம், நீரெரிவு, நீர்க்கடுப்பு, எருவாய் எரிவு இவையெல்லாம் தீரும்.

## 1071. சீரகாதி இளகம் (வேறு)

கல்லாய்ந்து தூய்மைசெய்த சீரகம் 2 பலம் (70 கிராம்), மிளகு 2 பலம்(70 கிராம்), சோம்பு 2 பலம்(70 கிராம்), மேற்றோல் சீவின சுக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இலவங்கப் பட்டை $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), தாளீசம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இலவங்கம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), ஏலரிசி $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), மேற்றோல் சீவின இஞ்சி 16 பலம் (560 கிராம்), எலுமிச்சம் பழம் சற்று பருமனுனவை 20, சர்க்கரை 24 பலம் (840 கிராம்), தேன் 12 பலம் (420 கிராம்), நெய் 12 பலம் (420 கிராம்).

செய்முறை :— இஞ்சியைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து நெய்யை விட்டுப் பொன்வண்ணமாக வறுத்துக்கொள்ளவேண்டும். பிறகு எல்லாவற்றையும் சேர்த்து இடித்து துணியில் சலித்துக் கொள்ளவேண்டியது. இஞ்சியைத் தனியே இடித்துத் தெள்ளி எடுத்துக்கொள்ள வேண்டியது. மற்ற சரக்குகளை ஒன்ருகச் சேர்த்து இடித்து துணியில் சலித்து முன் இஞ்சித் தூளுடன் சேர்த்துக்கொள்வது உத்தமமான முறை. எலுமிச்சம் பழத்தைச் சாறுபிழிந்து வடிகட்டி அதில் சர்க்கரையைக் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தி இருக்கிற தூள்களைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவிச் சந்தனக்கட்டை மத்தால் கடைந்து தூள்களெல்லாம் சென்ற பின்பு தேனையும் நெய்யையும் விட்டு மறுபடியும் செம்மையாகக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கிச் சூடாறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ வராகனெடை. காலை மாலை இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள் :—** நாற்பது வகைப் பித்தங்கள், பித்த வாயு, அக்கினி மந்தம், தொடர் கழிச்சல் ஆகியவை தீரும். பசியுணர்ச்சி அதிகப்படும். உடலுக்கு பலமும் உண்டாகும்.

**மருத்துணவு ;** புகை, புளி, புணர்ச்சி நீக்குக.

## 1072. சீரகாதி நெய்

பசுவின் நெய் 40 பலம் (1400 கிராம்), சீனுக் கற்கண்டு 16 பலம் (560 கிராம்), குத்தி உமி போக்கின சீரகம் 12 பலம் (420 கிராம்). (மேலே சொல்லியிருக்கிறபடி பாவனை செய்த சீரகமானல் மிகவும் சிறப்பாகும்). ரஸ்தாளி வாழைப் பழம் 10.

**செய்முறை :—** சீரகத்தைத் தூள்செய்தும் கற்கண்டைத் தூள் செய்தும் மேற்படி நெய்யிற்போட்டு ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு மண், தூசி முதலியவைகள் விழாதபடி பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய துணியினுல் வேடுகட்டி நாலைந்து நாள் வெய்யிலில் வைக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று முறைகள் பீங்கான் கரண்டியால் அல்லது மரக் கரண்டியால் துழாவியும் வர வேண்டியது. பிறகு மேற்படி ரஸ்தாளிப் பழத்தைத் தோலை உரித்து நாற்பது துண்டுகளாகத் துண்டித்து மேற்படி நெய்யிற் போட்டு வைத்துக்கொள்ளவேண்டியது.

**அளவு:—** பிரதி தினம் காலையில் ஒரு துண்டு வாழைப் பழத்தை எடுத்துச் சாப்பிட்டு அதன்மேல் ஒரு கரண்டி நெய்யையும் உட்கொள்ளவேண்டும். இவ்விதம் நாற்பது நாள் சாப்பிடவேண்டும்.

**தீரும்நோய்கள் :—** எலும்பு சுரம், வெட்டைச் சூடு முதலிய எல்லாவகை உட்டினமும் தீரும். உடல் செழிப்புண்டாகும். இளைத்த உடல் பெருக்கும், கணைச் சூட்டினுல் இளைத்துப்போகிற குழந்தைகளுக்கும் இதனை உபயோகித்தால் அதிக குணம் உண்டாகும்.

## 1073. வெந்தய இளகம்

கல் முதலியவை ஆய்ந்து தூய்மைசெய்த வெந்தயம் 100 பலம் (3500 கிராம்), சர்க்கரை 16 பலம் (560 கிராம்), அதிமதுரம், கோஷ்டம், நற்சீரகம், சடாமாஞ்சில், அதிவிடயம், ஓமம், சாதிக்காய், இலவங்கம், மேற்றேல் சீவின சுக்கு இவற்றின் தூள்கள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த கஞ்சா 1 பலம் (35 கிராம்), நெய் 10 பலம் (350 கிராம்).

செய்முறை :— வெந்தயத்தை ஒரு பாண்டத்திற் போட்டு அதில் 16 படி தண்ணீரை விட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டின குடிநீரில் மேற்படி சர்க்கரையைப் பாகு செய்து பாகு பதத்தில் மேற்படி தூள்களையெல்லாம் ஒன்ருகக் கலந்து அதில் சிறுகச் சிறுகத் தூவிக் கிண்டிக்கிளறி வரவேண்டும். கஞ்சாவை நெய்யில் வறுத்து அரைத்த தூளையும் அதில் தூவ வேண்டும். எல்லாவற்றையும் நன்ருகக் கிண்டிக்கிளறி மெழுகு பதத்தில் நெய்யை விட்டுக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ வராகனெடை. சிறுவர்களுக்கு $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகனெடை.

தீரும்நோய்கள் :— வயிற்றுளைச்சல், வயிற்றுக் கடுப்பு, தொடர்க் கழிச்சல் ஆறும் தீரும், குழந்தைகளுக்குங் கொடுக்க, வயிற்றுக் கழிச்சல், மாந்தக் கழிச்சல் முதலிய குழந்தைகள் வியாதிகளும் தீரும்.

மருத்துணவு:— கடுகு, நல்லெண்ணெய், பறங்கிக்காய், பூசணிக்காய், பாகற்காய், அகத்திக்கீரை ஆகியவை ஆகா.

## 1074. மல்லியாதிச் சூரணம்

கொத்துமல்லி தேவையான அளவு (இதனை ஒரு மண்பாத்திரத்தில் போட்டு அது ஆழ்ந்திருக்கும்படி புளிச்ச காடியை விட்டு மூன்று நாள் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். இவ்விதமே எலுமிச்சம் பழச் சாற்றையும் விட்டு மூன்று நாள் ஊற வைத்து நான்காம் நாள் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். இவ்விதம் பாவனை செய்ததற்குப் பாவனைக் கொத்துமல்லி என்று பெயர்). இவ்விதம் பாவனை செய்த கொத்துமல்லி 6 பலம் (210 கிராம்), மேலே சொல்லியிருக்கிறபடி பாவனை செய்த சீரகம் 2 பலம் (70 கிராம்), அதிமதுரம் 2 பலம் (70 கிராம்), சோம்பு 2 பலம் (70 கிராம்), சர்க்கரை 12 பலம் (420 கிராம்). மேற்கண்டவற்றை எல்லாம் ஒன்ருகச் சேர்த்திடித்து துணியில் வடிகட்டி சர்க்கரையைச் சேர்த்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ வராகனெடை.

தீரும்நோய்கள் :— பித்தப்பிரமை, கக்கல், மயக்கம், சுவையின்மை, வெட்டைச் சூடு, மூலச்சூடு, புகைச்சல், கை, கால், கண்,

முதலியவை எரிதல், குலை எரிவு, குன்மம், அதிக தாகம், நாற்பது வகைப் பித்தங்கள் ஆகியவை தீரும்.

## 1075. ஏலாதிச் சூரணம்

ஏலம் 2 பலம் (70 கிராம்), பருத்திப் பருப்பு 2 பலம் (70 கிராம்), மயில் இறகு சுட்ட சாம்பல் 2 பலம் (70 கிராம்), சீரகம் 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— எல்லாவற்றையும் தனித் தனியாகத் தூள் செய்து ஒன்ருகக் கலந்து சமன் சர்க்கரை சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

அளவு :— 2 முதல் 4 வராகனெடை.

துணை மருந்து :— தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— கக்கல், விக்கல், சுவையின்மை, பித்தம் ஆகியவை தீரும்.

## 1076. ஏலாதி இளகம்

ஏலரிசி 8 வராகனெடை (28 கிராம்), இலந்தப் பழத்தை உலர்த்தி இடித்த தூள் 8 வராகனெடை (28 கிராம்), பருத்திப் பருப்பு, நெற் பொரி, அரிசித் திப்பிலி, சீரகம், அதிமதுரம், அக்கிரா காரம், தாளிசப்பத்திரி, சடாமாஞ்சில், நெல்லிமுள்ளி, வில்வ வேர் சுட்டகரி, விளாவோடு சுட்ட கரி, வசம்பு சுட்ட கரி, சிவப்புப் பட்டை சுட்ட சாம்பல், மயில் இறகுச் சாம்பல், இவை வகைக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தாய்ப்பால் 4 பலம் (140 கிராம்), சர்க்கரை 4 பலம் (140 கிராம்), பசுவின் வெண்ணெய் 2 பலம் (70 கிராம்), கோரோசனை 2 வராகனெடை (7 கிராம்).

செய்முறை :— சரக்குகளை எல்லாம் தனித்தனி பொடித்து நிறைப்படி நிறுத்தெடுத்து ஒன்ருகக் கலந்து வைத்துக்கொள்ளவும். கோரோசனையைப் பொடித்துத் தனியே வைத்துக்கொள்ளவும். தாய்ப்பாலில் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் மேற்படி தூள்களின் கலவையைச் சிறுகத் தூவிக்கிண்டிக் கிளறிப் பசு வெண்ணெயைப் போட்டு மறுபடியும் கிளறிக் கொடுத்துக் கீழிறக்கிக் கோரோசனைத் தூளைத் தூவி நன்ருகக் கலக்கச் செய்து ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ வராகனெடை.

**தீரும்நோய்கள் :—** விக்கல், கக்கல், வாய் நீரூறல், புகைச்சல், இருமல், நாற்பது வகைப் பித்தம், நான்கு வகை கக்கல் நோய்கள், வெள்ளோக்காளம், சுவையின்மை ஆகியவை தீரும்.

## 1077. ஏலாதிச் சூரணம்

ஏலம், மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, கொத்துமல்லி விதை, கோட்டம், இலவங்கப்பட்டை, இலவங்கப் பத்திரி, சிற்றரத்தை, கல்நார், செண்பகப்பூ, நெல்லிமுள்ளி, மஞ்சள் கடுக்காய்த் தோல், விலாமிச்சம் வேர், வெட்டி வேர், கிச்சிலிக் கிழங்கு, மாசிக்காய், சிறு நாகப்பூ இவற்றின் தூள்கள் வகைக்கு $7\frac{1}{2}$ வராகனெடை ($26\frac{1}{4}$ கிராம்). சடாமாஞ்சில், சாதிக் காய், சாதிப்பத்திரி, இலவங்கம், அதிமதுரம் இவற்றின் தூள்கள் வகைக்கு 5 வராகனெடை($17\frac{1}{2}$ கிராம்). சீரகம் 2 பலம்(70 கிராம்), சந்தனத் தூள் 2 பலம் (70 கிராம்), மூங்கிலுப்பு 2 பலம் (70 கிராம்), சர்க்கரை எல்லாத் தூள்களுக்கும் சமனெடை

**செய்முறை :—** எல்லாத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து சமன் சர்க்கரை சேர்த்து, நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ வராகனெடை.

**துணைமருந்து :—** நெய், தேன், வெண்ணெய் முதலியவை களாம். காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:—**வறட்சி, எலும்புருக்கி நோய்,வெப்பு,பெருங் கழிச்சல், பிரமேகம், வெள்ளையொழுக்கு, பித்த சுரம், மயக்கம், மஞ்சள்காமாலை, வாய்நீர் சுரத்தல், உள்சுரம், சத்தி குன்மம், இளைப்பு, இருமல், கெற்ப சுரம், எருவாய்க் கடுப்பு, கணைச்சூடு, வாய்ப் புண், வாய் நாற்றம், உள்ளி நோய், கை கால் காந்தல், அதிக தாகம், கிறுகிறுப்பு முதலிய நோய்கள் தீரும். உடம்பு பருக்கும், கெற்பந் தரிக்கும்.

## 1078. தாளிசச் சூரணம்

தாளிசப்பத்திரி 5 பலம் (175 கிராம்), மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, அக்கிராகாரம், கோட்டம்,

யானைத்திப்பிலி, சீரகம், கொத்துமல்லி, இலவங்கம், ஏலரிசி, வாய்விளங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சடாமாஞ்சில்,சோம்பு, வால்மிளகு, இலவங்கப்பட்டை வகைக்கு ½ பலம் (17½ கிராம்,) சர்க்கரை 5 பலம் (175 கிராம்).

செய்முறை :— மேற்கண்டவற்றை கலந்து இடித்து துணியில் சலித்த தூள்களுடன் சர்க்கரையைக் கலந்து, மறுபடியும் ஒரு மணி நேரம் அரைத்து எல்லாம் கலந்தான பின்பு பீங்கான் பாத்ரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1½ முதல் 2 வராகனெடை.

துணைமருந்து :— தேன், நெய், இளக வகைகள், பாலேடு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— இருமல், கபக் கட்டு, கோழைக் கட்டு, மார் சளி, சுவாசம், மூச்சு முதலிய கப நோய்களெல்லாம் தீரும். பழையசுரம், என்புசுரம், மந்தாக்கினி நோய் ஆகியவைகளும் தீரும்.

மருத்துணவு :— நோய்க்குத் தகுந்தபடி புளிப்புப் பண்டங்கள், சீதளப் பண்டங்கள் முதலியவற்றை நீக்கி வைக்கவும்.

## 1079. தாளிசப் பத்திரிச் சூரணம் (வேறு)

தாளீசப்பத்திரி 1 பலம் (35 கிராம்), ஏலரிசி, சிறுநாகப் பூ, மேற்றோல் சீவினசுக்கு, சிறுதேக்கு வாய்விளங்கம், சிற்றரத்தை, கற்கடசிங்கி, சடாமாஞ்சில், கருஞ்சீரகம், சோம்பு, கோட்டம், இலவங்கம், இலவங்கப் பட்டை, பெருலவங்கப் பட்டை, இவை வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்) மிளகு, நற்சீரகம், சன்ன லவங்கப் பட்டை, மகிழம்விதைப் பருப்பு, அதிமதுரம் இவை வகைக்கு 8 வராகனெடை (28 கிராம்), கொத்துமல்லி 40 வராகனெடை (140 கிராம்), சர்க்கரை 96 வராகனெடை (336 கிராம்).

செய்முறை :— சரக்குகளையெல்லாம் இடித்து துணியில் சலித்து சர்க்கரையைச் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1½ முதல் 2 வராகனெடை.

**துணைமருந்து** :— நெய், தேன், பாலேடு, இளக வகைகள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— நெஞ்செரிவு, வயிற்றெரிவு, சூலைப் பாரம், நாற்பதுவகைப் பித்த நோய்கள், கண்ணில் நீர்வடிதல், பித்தத் தியக்கம், வாய் குளறல், உறக்கமில்லாமை, மலட்டு வலி, தொண்டைப்புண், இருமல், காசம், சயம், என்புசுரம், நுண்புழு நோய் ஆகியவை தீரும். கருப்பையிலுள்ள புழு செத்துக் கர்ப்ப முண்டாகும்.

## 1080. தாளிச இளகம்

(அ) தாளிசப்பத்திரி 5 பலம் (175 கிராம்), மேற்றோல் சீவிய சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள்கடுக்காய்த் தோல், தான்றிக் காய்த்தோல், நெல்லிமுள்ளி, ஏலம், இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, செவ்வியம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், வாய் விளங்கம், ஓமம், குரோசானி ஓமம், சீரகம், சிற்றரத்தை, பேர ரத்தை, வால்மிளகு, அக்கிராகாரம், கோட்டம், தேசாவரம், மூங்கிலுப்பு, சிறுதேக்கு, திராட்சை, பேரீச்சம்பழம், நிலப்பனைக் கிழங்கு, அசுவகெந்திக் கிழங்கு, நன்னாரிவேர், கோரைக் கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சை வேர், தூதுவளை வேர், கண்டங்கத்திரி வேர், ஆடாதோடை வேர், நெய்தற் கிழங்கு, நெற்பொரி இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை.

(ஆ) ஆடாதோடைச்சாறு $\frac{1}{2}$படி, கண்டங்கத்திரிச்சாறு $\frac{1}{2}$படி.

(இ) முயல் 1, இஞ்சிச்சாறு 4 பலம் (140 கிராம்), மாதுளம் பழச்சாறு 4 பலம் (140 கிராம்), பசுவின் பால் 32 பலம் (1120 கிராம்), சர்க்கரை 10 பலம் (350 கிராம்), தேன் 10 பலம் (350 கிராம்), நெய் 10 பலம் (350 கிராம்), கோரோசனை 1 வராக னெடை ($3\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை** :— (அ) விலுள்ளவற்றை எல்லாம் இடித்து, துணியில் சலித்துக் கொள்ளவும். ஒரு மண்பாண்டத்தில் (ஆ) வி லுள்ள சாறுகளைக் கலந்துவிட்டுப் பாத்திரத்தின் வாய்க்கு வேடு கட்டி அதில் தூள்களை வைத்து மேற்சட்டி மூடிச் சீலைசெய்து மேற் படி சாறுகளை சுண்ட எரித்து எடுத்துக்கொள்ளவும். (இ) யிலுள்ள முயலை அறுத்துக் கால், தலை, குடல், ஈரல், தோல் ஆகியவைகளைப் போக்கிச் சிறு துண்டுகளாகத் துண்டித்து அதில் நாலுபடி தண் ணீரை விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டின குடிநீருடன்

(இ) யிலுள்ள மற்ற திரவங்களையும் சேர்த்து ஒன்றுகக் கலந்து சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து பாகு பதத்தில், முன் சித்தப்படுத்தின தூள்களைக் கொட்டிக் கிளறி தேன், நெய் ஆகியவைகளையும் விட்டு மறுபடியும் கலந்து கீழிறக்கிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 2 முதல் $3\frac{1}{2}$ வராகனெடை. காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்க வேண்டும். நோய் பலத்திற்குத் தகுந்த படி அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்க வேண்டும்.

தீரும்நோய்கள் :— இருமல், ஒன்பது வகை சயநோய்கள், எட்டு வகைக் காசங்கள், ஏழுவகைப் பீனிச நோய்கள், தொண்ணூற்றுறு வகைச் சிலேத்தும நோய்கள், வாயுப் பொருமல், மலக்கட்டு, அக்கினிமந்தம், நீர்கட்டு, எலும்பு சுரம் ஆகியவைகளும் தீரும். கப நோய்களுக்கெல்லாம் காளகண்டமேக நாராயண செந் தூரத்தைச் சேர்த்துக் கொடுக்கவும். வெள்ளி பற்பம், முத்துப் பற்பம், பவழ பற்பம், அரிதார பற்பம் ஆகியவைகளைச் சேர்த்துக் கொடுத்தால் சீக்கிரத்தில் நோய்கள் குணப்படும்.

மருத்துணவு :— வாயு பதார்த்தம், மீன், கருவாடு, புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவும்.

## 1081. துரித ஸ்கலித நிவாரணி

இலவங்கம், சன்னலவங்கப்பட்டை, குங்குமப்பூ, அக்கிரா காரம் இவை வகைக்கு $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), கஸ்தூரி 4 குன்றிமணி எடை

செய்முறை :— மேற்படி சரக்குகளை இடித்து துணியில் வடி கட்டிய தூளுடன் கஸ்தூரியைச் சேர்த்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு மணி நேரமரைத்துக் குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

அளவு :— 1 முதல் 3 மாத்திரை

தீரும்நோய்கள் — கடுவிந்தொழுக்கு, விந்துக் குறைவு, ஆகிய வைகள் தீரும். அவசியமான காலங்களில் வாயில் அடக்கிக் கொண்டு அதில் ஊறும் திரவத்தை விழுங்கிக் கொண்டிருக்க புணர்ச்சி ஊட்டமுண்டாகும்.

## 1082. மன்மதகாமினி

இலவங்கம், கோரைக்கிழங்கு, சாதிக்காய், ஏலம், குமிமஸ்தகி, இசபகோல் விதை, மூங்கிலுப்பு, பெருலவங்கப்பட்டை, வெண்

சந்தனம், இவற்றின் தூள்கள் வகைக்கு $6\frac{1}{4}$ வராகனெடை (21 கிராம்) குங்குமப்பூ $6\frac{1}{4}$ வராகனெடை, சீமைச்சாமந்திப்பூ $16\frac{1}{4}$ வராகனெடை ($56\frac{1}{2}$ கிராம்), உலர்த்தின கோழிக்கீரை விதை $3\frac{1}{4}$ வராகனெடை ($10\frac{3}{4}$ கிராம்), கஸ்தூரி $1\frac{3}{4}$ வராகனெடை, அம்பர் $1\frac{3}{4}$ வராகனெடை, தங்கரேக்கு $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), வெள்ளிரேக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), துளையிடாத நன்முத்து $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), நற்பவளம் $1\frac{1}{4}$ வராகனெடை (3·37 கிராம்), நெல்லிக்காய் முரப்பா 10 பலம் (350 கிராம்), சர்க்கரை 24 பலம் (840 கிராம்), பன்னீர் 6 பலம் (210 கிராம்).

செய்முறை :— சரக்குகளை எல்லாம் இடித்துத் தூள் செய்து கொள்ளவேண்டும். முத்து, பவளம் ஆகியவைகளைப் பன்னீர் ஊற்றி மூன்று நாளரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும். குங்குமப் பூவைப் பன்னீர் ஊற்றி வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவேண்டும். அம்பர் கஸ்தூரி ஆகியவைகளைக் கொஞ்சம் கற்கண்டைச் சேர்த்து அரைத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவேண்டும். நெல்லிக்காய் முரப் பாவிலுள்ள கொட்டை கோது முதலியவைகளை நீக்கி அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து வைத்துக் கொள்ளவேண்டும். சர்க்கரையில் பன்னீரையும் கொஞ்சம் தண்ணீரையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகு செய்து பாகு பதத்தில் குங்குமப் பூவைச் சேர்த்து பிறகு முன் சுத்தப்படுத்தி வைத்திருக்கும் நெல்லிக்காய் விழுதைப் போட்டுச் சந்தனமத்தாற் கடைந்த பிறகு தூள்களைத் தூவி நன்றாகக் கலந்து இறக்கி இளஞ் சூடாயிருக்கையில் கஸ்தூரி, அம்பர், முத்து, பவளம் முதலியவைகளின் தூளைத் தூவித் தங்கரேக்கு, வெள்ளிரேக்கு ஆகியவைகளையும் ஒவ்வொன்றாகப் போட்டு நன்றாகக் கலந்து குளிர ஆறின பின்பு பீங்கான் பாத்திரத் தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ வராகனெடை. காலை மாலை இரண்டு வேளையும். அரை முதல் ஒரு மண்டலம் உட்கொள்ளவும்.

தீரும்நோய் :— விந்துக் குறைவு தீர்ந்து அது கட்டுப்படும். ஆண் பிறப்பு உறுப்புகளில் முக்கிய அவயவம் சிறுத்திருத்தல், சோர்ந்திருத்தல், தளர்ந்திருத்தல் ஆகிய இழி குணங்கள் நீங்கி அது பெருக்கும். நரம்புகள் முறுக்கேறிப் முயங்கற் சத்துண்டாகும், நீர்த்துப் போயிருக்கிற விந்து கெட்டிப்படும். புணர்ச்சியில் ஊட்ட சக்தியுண்டாகும். மேகச் சூடு முதலிய எல்லா வகைச் சூடும் தணி யும். மது மேகம் இருபத்தொரு வகையும் தீரும். இன்னும் பல வகை நோய்கள் தீர்ந்து உடல் வச்சிரகாயமாகும், அழகும் ஆண்மையுமுண்டாகும். முதுமைத்தன்மை போய் இளமைத்

தன்மையுண்டாகும். இன்னும் அநேக வகை நன்மைகளுமுண்டாகும். இஃது ஒரு கற்பத்திற்குச் சமானமானது. மருத்துவ மறை பொருள் முறைகளில் இதுவும் ஒன்று. விருப்பமானவர்கள் இதனைச் செய்து இதன் சிறந்த குணத்தை அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

## 1083. இலவங்காதி இளகம்

இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, குரோசானிஓமம் இவை வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்), ஏலம், கசகசா, நிலப்பனைக் கிழங்கு, நீர்முள்ளி விதை, கிரந்திநாயகம் விதை, பூனைக்காலிவிதை, இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்). வாகை விதை 1 பலம் (3½ கிராம்), பேரீச்சங்காய் 1 பலம் (3½ கிராம்), (இதனை விதை நீக்கிப் பாலில் வேகவைத்து அரைத்துக் கொள்ளவும்). ரூமிமஸ்தகி 1 வராகனெடை (3½ கிராம்), அபின் 1 வராகனெடை (3½ கிராம்), பால் 1 ஆழாக்கு, தோல் போக்கின வாதுமைப் பருப்பு 4 பலம் (140 கிராம்), கற்கண்டு 12 சேர் (420 கிராம்), நெய் 2 பலம் (70 கிராம்).

செய்முறை :— தூள்களை இடித்து துணியில் சலித்துக் கொள்ள வேண்டும். ரூமிமஸ்தகித் தூளைத்தவிர மற்றவைகளையெல்லாம் ஒன்ருகக் கலந்துகொள்ள வேண்டும். வாதுமைப் பருப்பைப் பால் ஊற்றி வெண்ணெய்போலரைத்து வைத்துக்கொள்ளவேண்டும். கற்கண்டைப் பொடித்து அதனுடன் பாலையும் கொஞ்சம் தண்ணீரையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன் அரைத்துவைத்திருக்கிற வாதுமைப் பருப்பு விழுதை அதில் போட்டு நன்ருய் மத்தினுற் கடைந்து மற்ற தூள்களையும் சேர்த்து அபினில் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கரைத்து இளகம் நன்ருய்க் குளிர்ந்த பின்பு சேர்க்க வேண்டும். அவ்விதமே நன்ருய்க் குளிர்ந்த பின்பு ரூமிமஸ்தகியையும் சேர்க்கவேண்டும்.

அளவு:— 1½ முதல் 2 வராகனெடை. காலை மாலை இரண்டு வேளையும் அரை முதல் ஒரு மண்டலம் உட்கொள்ளவும்.

தீரும்நோய்கள் :— விந்து விருத்தியுண்டாகும். கடு விந்தொழுக்கு தீர்ந்து விந்து கட்டுப்படும். உடல் வலிமை, புணர்ச்சி ஊட்டம் உண்டாகும்.

மருத்துணவு :— இதனை உபயோகிக்கும்போது புணர்ச்சியில் ஈடுபடக் கூடாது.

## 1084. உள்ளி இளகம்

வெள்ளைப்பூண்டு 8 பலம் (280 கிராம்), இதனைத் தோலுரித்து அரைப்படி தண்ணீரில் போட்டு அதனுடன் முக்காலேயரைக்கால் வராகனெடை அபினையும் கரைத்து அடுப்பேற்றி, நன்றாய் வெந்த பின்பு மத்தால் கடைந்து கொள்ள வேண்டியது. சிறு நாகப் பூ 2 பலம் (70 கிராம்), (இதனை வறுத்துத் தூள் செய்து கொள்ள வேண்டியது). சர்க்கரை $10\frac{1}{2}$ பலம் ($367\frac{1}{2}$ கிராம்), நெய் $5\frac{1}{4}$பலம் ($83\frac{3}{4}$ கிராம்).

**செய்முறை** :— முன் சித்தப்படுத்தின பூண்டில், சிறு நாகப்பூ தூளைத் தூவி நன்றாகக் கிளறிச் சர்க்கரையைச் சேர்த்துக் கடைந்து கம்பிபோல் வரும் பதத்தில் நெய்யை விட்டுக் கடைந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**:— $1\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ வராகனெடை.

**தீரும்நோய்கள்** :— மூலவாயு, நிணக் கழிச்சல், குருதிக் கழிச்சல், அறுவகைக் கடுப்பு ஆகியவை தீரும்.

## 1085 உள்ளி இளகம் (வேறு)

தோலுரித்த பூண்டு 10 பலம் (350 கிராம்), பசுவின் பால் 20 பலம் (700 கிராம்), தோல் சீவின சுக்குத் தூள் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), மிளகுத் தூள் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), கண்டந் திப்பிலித் தூள் 2 வராகனெடை (7 கிராம்), இலவங்கத் தூள் 2 வராகனெடை (7 கிராம்), ஓமத் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), சதகுப்பைத் தூள் $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்), பனை வெல்லம் 15 பலம் (525 கிராம்), தேன் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), நெய் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை**:— பாலில் பூண்டின் இதழைச் சேர்த்து வேக வைத்து நன்றாக வெந்த பின்பு மேற்படி தூள்களைச் சேர்த்துக் கடைந்து, வெல்லத்தையும் பொடித்துப் போட்டுக் கடைந்து, முடிவில் தேனையும் நெய்யையும் விட்டு மறுபடியும் நன்றாகக் கடைந்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— $2\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ வராகனெடை.

**தீரும்நோய்கள்** :— கருப்பைவாயு, பித்தவாயு, மூலவாயு, இரைச்சல், பொருமல் ஆகியவை தீரும்.

## 1086. உள்ளி இளகம் (வேறு)

(அ) தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் 50 பலம் (1750 கிராம்), கழுவின எள்ளு 50 பலம் (1750 கிராம்), மோர் செல்லத்

தக்கஅளவு (ஆ) கற்கண்டு 5 பலம் (175 கிராம்), சீரகத் தூள் 4 பலம் (140 கிராம்), தோல் சீவின சுக்கு, 4 பலம் (140 கிராம்), கொத்துமல்லி விதை, கண்டந்திப்பிலி, மிளகு, யானைத்திப்பிலி, அதிமதுரம், ஏலம், சன்னவங்கப் பட்டை, பெருலவங்கப் பட்டை இவற்றின் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), பெருங்காயம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கல்லுப்பு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), பசுவின் நெய் 10 பலம் (350 கிராம்).

செய்முறை :— எள்ளை அம்மியில் வைத்து மைபோலரைத்துப் பிறகு உள்ளியைச் சேர்த்தரைத்து ஒரு மண் பாத்திரத்திலிட்டு மோர் மிதக்கவிட்டு வாய்க்கு வேடு கட்டி நிழலில் பதினைந்து நாள் வைக்கவும். பிறகு (ஆ) விலுள்ளவைகளையெல்லாம் அம்மியில் வைத்து நெய்யைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல் அரைத்து முன் சித்தப் படுத்தியிருக்கும் மருந்துடன் சேர்த்து ஒரு பெரிய கலயத்தில் விட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலை செய்து நெல்லுக்குள் பதினைந்து நாள் வைத்தெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் 1 பலம். காலையில் ஒரு வேளை மாத்திரம் உபயோகிக்கவேண்டியது. அரை முதல் ஒரு மண்டலம் நோய் வன்மைக்குத் தகுந்ததுபோல உட்கொள்ளவும்.

தீரும்நோய்கள் :— அறுபது வகை வாயுக்கள், பித்த குன்மம், ஐய குன்மம், சூலை நோய், எல்லாவகைக் கழிச்சல் நோய் முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 1087. உள்ளி இளகம் (வேறு)

(அ) தோலுரித்த பூண்டிதழ் 20 பலம் (700 கிராம்). (மேற்படி பூண்டை ஒரு துணியில் முடிந்து அதன் மீது ஈனுக்கிடாரியின் சாணியைப் பூசி நாலைந்து வறட்டியில் அவிபுடமாகப் புடமிட்டெடுத்து ஆறின பின்பு பிரித்துப் பூண்டை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும்). எருமை மோர் $1\frac{1}{2}$ படி, பசுவின் மோர் $1\frac{1}{2}$ படி, ஆட்டு மோர் 1 படி, பனைவெல்லம் 8 பலம் (280 கிராம்).

(ஆ) இலவங்கம், அதிவிடயம், சிறுநாகப்பூ, மஞ்சட்கடுக்காய்த் தோல், காட்டாத்திப் பூ, கடுக்காய்ப் பூ, அக்கிராகாரம், மிளகு, சீரகம், சுத்தித்த கஞ்சா, அபின் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). இவற்றுள் அபினைத் தவிர மற்றவைகளைத் தூள் செய்து ஒன்றுகக் கலந்து அபினைக் கொஞ்சம் தண்ணீரில் கரைத்து மேற்படி தூளுடன் கலந்துகொள்ளவும்.

செய்முறை :— முன்சொன்ன மூன்று வகை மோரையும் ஒன்றுகக் கலந்து பனைவெல்லத்தைக் கரைத்து ஒரு பாண்டத்தில் விட்டுப்

பாகு செய்து பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தின பூண்டை அம்மி யிலரைத்துப் பாகில் கலக்கி முன் சித்தப்படுத்தின தூள்களையும் அதிற்சேர்த்து நன்றாகக் கிளறிக் கீழிறக்கிப் பீங்கான் பாத்திரத் தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $2\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ வராகனெடை.

தீரும்நோய்கள் :— எல்லாவகை மூலவாயு, எல்லாவகை மூலக் கிராணி, எல்லாவகைப் பெருங்கழிச்சல், முதலிய மூலசம்பந்தமான நோய்களும், வாயு சம்பந்தமான நோய்களும் தீரும்.

## 1088. உள்ளி நெய்

(அ) உரித்த பூண்டிதழ் 10 பலம் (350 கிராம்).

(ஆ) பெருவாகை வேர்ப்பட்டை, பெருங்குமிழ் வேர்ப்பட்டை, வில்வ வேர்ப்பட்டை, பாதிரி வேர்ப்பட்டை, இவை வகைக்கு 7 பலம் (245 கிராம்).

(இ) காடி 2 படி, துருஞ்சிப்பழச் சாறு அல்லது எலுமிச்சம் பழச் சாறு 2 படி.

(ஈ) மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, பெருங்காயம், நற்சீரகம், செவ்வியம், இந்துப்பு, ஓமம், தேவதாரம், உலர்த்தின புளிநரளைக் கிழங்கு இவற்றின் தூள்கள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்). இவை எல்லாவற்றையும் வெள்ளாட்டுப் பாலைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்துவைத்துக் கொள்ளவும்.

(உ) பசுவின் நெய் 1 படி.

செய்முறை :— பூண்டைச் சிறுகச் சிறுக இடித்துப் பதினாறு படித் தண்ணீர் விட்டு, இரண்டு படி நீராகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும். (ஆ) விலுள்ளவைகளையெல்லாம் நன்றா கச் சிதைத்து இடித்துப் பதினாறு படி தண்ணீரில் போட்டு, எட்டி லொன்றாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவேண்டும். இந்த இரண் டையும் கலந்து, (இ) விலுள்ள இரண்டு திரவத்தையும் இதனுடன் கலந்து (ஈ) யிலுள்ளதை அதிற் கரைத்து நெய்யையும் சேர்த்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்து வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்வும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் 3 வராகனெடை.

தீரும்நோய்கள் :— அறுவகைக் குடல்வாதமும் தீரும்.

குறிப்பு ;— குடல்வாதத்திற்கு மருத்துவமில்லை. வில் போடுவதுதான் தீர்மானமாகிய மருத்துவமென நம்பப்படுகிறது.

நோய் ஆரம்பமாயிருந்த போதிலும் நோயாளி வாலிபனுயிருந்த போதிலும் மேற்கண்ட நெய்யினுல் அநேகருக்குக் குணமாகி வருகிறது. நோய் கடினமாயிருந்தால் வழக்கப்படி, வில்லைப்போட்டு இந்த மருந்தைத் தொடர்ச்சியாகச் சிலநாள் உபயோகித்து வந்தால் துவாரம் அடைபட்டுப் பூரண சௌக்கியமுண்டாகும். ஆனல், இந்த நெய்யுடன் கீழ்க்காணும் மருந்தையும் சித்தப்படுத்திக் கொடுத்துக் கொண்டு வந்தால் சிறப்பான குணமுண்டாகும். அது பின் வருகிற விதமாம்.

## 1089. இலிங்க செந்தூரம்

உலாந்தா லிங்கம் 1 பலம் (35 கிராம்). இதனைப் பொடித்து ஒரு சிறு பாத்திரத்தில் வைத்து, விளக்கெண்ணெய் விளக்கேற்றி வெள்ளைப்பூண்டுச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்குக் கொடுத்து இரும்புக் கம்பியால் துழாவிக் கொடுத்து வரவேண்டியது. சற்று நேரம் இப்படிச் செய்துகொண்டிருந்தால் பிசின் போல் வரும். அந்தப் பதத்தில் இறக்கி ஆறினபின்பு சுண்டைக்காய் அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். பிறகு கருநிறமான சேவலுக்கு மேற்படி உருண்டைகளை உட்செலுத்தி அதனை மேய விடாமல் ஒரு கூண்டிலடைத்து வைத்துப் பன்னிரண்டுமணி நேரம் சென்ற பின்பு அதனை அறுத்துத் தீனிப் பையில் இருக்கும் உருண்டைகளை எடுத்து வெயிலில் வைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணியெடை.

துணைமருந்து :— வெல்லம், சர்க்கரை முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— பலவகை வாயுவுகள், குடல் வாதம், அண்ட வாதம், முதலிய கீழ்ப் பாகத்திலுள்ள வாதநோய்கள் தீரும். இதனை உட்கொண்டபின் அபான வாயு அதிகமாய்ப் பிரிந்து அதன் மூலம் வாயு நோய்கள் தீரும்.

## 1090. வெள்ளுள்ளி நெய்

(அ) தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் $2\frac{1}{2}$ வீசை (3500 கிராம்).

(ஆ) பெருங்குரும்பை, வில்வ வேர், பாதிரி வேர், பெருங்குமிழ் வேர் இவை வகைக்கு 5 பலம் (175 கிராம்).

(இ) காடி 2 படி, துருஞ்சிப் பழச்சாறு அல்லது எலுமிச்சம் பழச்சாறு 2 படி.

(ஈ) மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, ஓமம், நற்சீரகம், கருஞ்சீரகம், இலவங்கம், செவ்வியம், தேவதாரம், புனி நரலைக் கிழங்கு இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), இவைகளை வெள்ளாட்டுப்பால் விட்டரைத்து வைத்துக் கொள்ளவும்.

(உ) பசுவின் நெய் **2** படி.

**செய்முறை :—** வெள்ளைப் பூண்டை ஒரு மண்பாண்டத்தி போட்டு இருபத்தெட்டு படி தண்ணீரை விட்டுக் காய்ச்சி, ஆறு பட யாகச் சுண்டவைத்து வடிகட்டிக் கொள்ளவும். (ஆ) விலுள்ளவை களை இடித்து எட்டு படி தண்ணீரை விட்டு, ஒரு படியாகக் காய்ச் வடிகட்டிக் கொள்ளவும். பிறகு (இ) யிலுள்ள திரவங்களையும் சே த்து, (ஈ) யில் சொன்னபடி தூய்மைப்படுத்தியதை அதில் கலக் (உ) விலுள்ள நெய்யையும் கலந்து பாகப்படி காய்ச்சிப் பதத்தி இறக்கி வடிகட்டிக்கொள்ளவும்.

அளவு :— 1½ முதல் 2½ வராகனெடை.

திரும்நோய்கள் :— ஆறு வகைக் குடல்வாதம், பக்கவாதம் கால் கைமுடக்கு, வெட்டை, தாபம், சோகம், சுரம், சூலை எலும்பு வெப்பு, பாண்டு, பீலிகை இவை தீரும்.

மருத்துணவு :— அரைப்புளி சேர்க்கவும். முருங்கைப் பிஞ்சு கத்திரிப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, புடலம் பிஞ்சு, அரைக்கீரை இள முளைக்கீரை, பச்சைப் பயறு, துவரம் பருப்பு, நெய், பால் வெள்ளாட்டு வற்றல் முதலியவை ஆகும். பாகற்காய், அகத்தி கீரை, முருங்கைக் கீரை, தேங்காய் ஆகியவைகள் ஆகா.

குறிப்பு :— இந்தப் பாகமும் 1087ஆம் பாகமும் சொற்ப விகற்பத்தோடு ஒன்றேயாம். ஆனால் ஒரு முறையில் மாதுளம்பழச் சாற்றைச் சேர்க்கும்படியாகச் சொல்லி இருக்கிறது. அனுபவத்தில் **மாதுளம்பழச் சாற்றைச் சேர்க்கிறதில்லை. ஆனால் துருஞ்சு நாரத்தம்பழச் சாற்றை அல்லது எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்ப்பது வழக்கம். விருப்பமானவர்கள் மாதுளம்பழச் சாற்றையும் சேர்த்துச் செய்து கொள்ளலாம்.**

## 1091. கண்டாதிச் சூரணம்

நிழலில் உலர்த்திய தோல் நீக்கின இஞ்சி 16 பலம் (560 கிராம்), பசுவின் நெய் 4 பலம் (140 கிராம்). (நெய்யைக் காய்ச்சி மேற்படி இஞ்சியைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து அதில் போட்டுப் பொன்னிறமாக வறுத்துப் பொடித்துக் கொள்ளவும்). மிளகு 1½ வராகனெடை (5¼ கிராம்), அரிசித் திப்பிலி 4 வராகனெடை (14 கிராம்), மூங்கிலுப்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி,

கொடிவேலி வேர்ப்பட்டை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), சன்னலவங்கப்பட்டை, பெருலவங்கப்பட்டை, சடாமாஞ்சில், இலவங்கம், கொத்துமல்லி, நற்சீரகம், கோரைக்கிழங்கு, தாளிசப் பத்திரி, அதிமதுரம், நெல்லிமுள்ளி இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), சர்க்கரை செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** எல்லாச் சரக்குகளையும் சேர்த்து இடித்து துணியில் சலித்தத் தூள்களுடன் இஞ்சியைத் தெள்ளி தூளையெடுத்துச் சேர்த்து இவ்விரண்டும் கண்ட எடைக்குச் சமனெடை சர்க்கரை கலந்து நன்றாகக் கலக்கும்படி ஒரு மணி நேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 2 வராகனெடை.

**தீரும்நோய்கள் :—** அனல் மந்தம், வயிற்றிரைச்சல், வயிற்றுப் புசம், வயிற்றுவலி, வயிற்றில் குத்துதல், பித்தவாயு, தொடர் கழிச்சல் ஆகியவைகள் தீரும்.

## 1092. இஞ்சி ரசாயனம்

தோல் நீக்கின இஞ்சி 15 பலம் (525 கிராம்). (இதனைச் சக்கரமாகத் துண்டித்து, 5 பலம் (175 கிராம்) நெய்யில் போட்டு வறுத்து தூள்செய்து கொள்ளவும்) மேற்றேல் சீவிய சுக்கு, அரிசித் திப்பிலி சீரகம், ஏலம், அதிமதுரம், சிறுநாகப் பூ, தாளிசப்பத்திரி, மூங்கிலுப்பு, இலவங்கப்பத்திரி, விதை நீக்கின திராட்சைப்பழம் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), மிளகு 1 பலம் (35 கிராம்), சர்க்கரை 20 பலம் (700 கிராம்), தேன் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை :—** எல்லாச் சரக்குகளையும் இடித்துத் தூள்செய்து இஞ்சித் தூளையும் கலந்து சர்க்கரையையும் தேனையும் அதில் சேர்த்துக் கல்லுரலில் இளகப் பதமாகிற வரையில் இடித்து, எடுத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்

**அளவு :—** 1½ முதல் 2½ வராகனெடை

**தீரும்நோய்கள் :—** பித்த நோய்கள், பித்த வாயு, உட்டின வாயு, சூதக வாயு, அனல் மந்தம், மேகச் சூடு ஆகியவை தீரும்.

**குறிப்பு :—** இதில் சர்க்கரையை அதிகக் குறைவாகச் சேர்த்துச் செய்வதுமுண்டு. ஆனல், அதிகக் காரமாயிருக்கிறது. இன்னும் சில உடலினற்கு, பித்தாதிக்கத்தையும் உண்டாக்குகிறது. சர்க்கரையை அதிகமாகச் சேர்த்துச் செய்வதினுல் அவ்விதம் காரமாயிருப்பதில்லை. மிகச்சூடும் செய்கிறதில்லை. எல்லா உடலினர்க்கும் பொருந்தினதாயும் காணப்படுகிறது.

## 1093. இஞ்சி இளகம்

தோல் சீவின இஞ்சி 10 பலம் (350 கிராம்), (இதனைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துப் புதுச் சட்டியில் போட்டு அது மூழ்கும் படியாய் இஞ்சிச் சாற்றை விட்டுச் சாறெல்லாம் சுண்டி, இஞ்சி உலரும்படியாக வறுத்துக் கொள்ளவேண்டியது. பிறகு நெய்யை விட்டுக் காய்ச்சி அதில் போட்டுப் பொன்னிறமாக வறுத்துத் தூள் செய்து வைத்துக் கொள்க.

சீரகம் 2½ பலம் (8¾ கிராம்), (இதனைக் கல்லாய்ந்து புதுச்சட்டியில் போட்டு அது நனையும்படியாகப் பழச்சாற்றைவிட்டு ஈரமில்லாமலிருக்கும்படி வறுத்துக் கொஞ்சம் நெய்யில் போட்டுப் பொன்னிறமாக வறுத்து அதனையும் பொடித்துக் கொள்க.

பிரண்டைக் கொடியிலுள்ள கணுவைத் துண்டித்து நீக்கிச் சிறு துண்டுகளாகத் துண்டித்து மோரில் உப்பைக் கரைத்து அதில் மூன்று நாள் ஊற வைத்து உலர்த்தி இடித்த தூள் 1 பலம் (35 கிராம்).

ஏலரிசி, வாலுழுவை அரிசி, கடுகு, கொடி வேலி வேர்ப் பட்டை, குரோசாணி ஓமம், கற்கடகசிங்கி, மிளகு, அரிசித் திப்பிலி, கோட்டம், இலவங்கம், தாளிசப்பத்திரி, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, வாய் விளங்கம், சடாமாஞ்சில், கொத்துமல்லி விதை, ஓமம், அதிமதுரம், கண்டத்திப்பிலி, கோரைக் கிழங்கு, மாதுளை வேர்ப் பட்டை இவை வகைக்கு ¼ பலம் (8¾ கிராம்), நெற்பொரி 1 பலம் (35 கிராம்), (இவை எல்லாவற்றையும் தனித்தனி தூள் செய்து கொள்க). விதை நீக்கின திராட்சை 1 பலம் (35 கிராம்), (இதனை வெண்ணெய் போலரைத்துக் கொள்க). கற்பூர சிலாசத்துத்தூள் அல்லது கற்பூர சிலாசத்து பற்பம் 1 பலம் (35 கிராம்), சர்க்கரை 20 பலம் (700 கிராம்), நெய் 5 பலம் (175 கிராம்), கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** எல்லாவற்றையும் அம்மியில் வைத்துக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து வெண்ணெய்போலான பின்பு பீங்கான் பாத்திரத்தில் வைத்து வெய்யிலில் உலர்த்தி நன்றாக உலர்ந்த பின்பு மறுபடியும் தூள்செய்து வைத்துக் கொள்ள வேண்டியது. சர்க்கரையைப் பாகு செய்து பாகு பதத்தில் முன் தூய்மைபடுத்தின தூளைத் தூவிக் கிண்டிக் கிளறி நெய்யை விட்டு நன்றாகக் கலந்து இறக்கி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1½ முதல் 2½ வராகன் எடை.

**தீரும்நோய்கள் :—** அனல் மந்தம், வயிற்றிரைச்சல், வயிற்றுப் பொருமல், புளித்தஏப்பம், குன்மம், தொடர்கழிச்சல் நோய், வயிற்றுநோய் முதலிய இறைப்பை சம்பந்தமான பல நோய்கள் தீரும்.

குறிப்பு :— இதில் பூவரசம்பட்டைச் சாற்றைச் சேர்த்து அரைப்பது உண்டு. ஆனால், சிலருக்கு சுவையின்மையை உண்டாக்கு கிறது. கையாந்தக்கரைச் சாற்றால் வெண்ணெய் போலாகிற வரையில் அரைத்துக் கொண்டால் போதுமானது. மூன்று நாள் அரைக்க வேண்டுமென அவசியமில்லை. இஞ்சித் தூளை நாரில்லா மல் தெள்ளி எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இதில் இஞ்சியை ஊற வைப்பதற்கு இஞ்சிச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும் அதை நீக்கி விட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்த்து அரைத்துக் கொண்டால் சிறந்த குணமுண்டாகும்.

## 1094. இஞ்சி இளகம்

தோல் நீக்கின இஞ்சி 8 பலம் (280 கிராம்). இதனைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துத் தேனில் பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவேண்டியது. தூய்மை செய்த லிங்கம் 10 வராகன் எடை (35 கிராம்), சர்க்கரை 10 பலம் (350 கிராம்), பசுவின் நெய் 2 பலம் (7 கிராம்), தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இஞ்சி, இலிங்கம், சர்க்கரை ஆகிய மூன்றையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துச் சட்டியிலிட்டு நெய்யை விட்டுக் கிண்டிப் பின்பு கொஞ்சம் தேனையும் விட்டுக் கீழிறக்கி அவசியமானால் மறுபடியும் தேனைவிட்டுப் பிசைந்து வைத்துக்கொள்ளவும்.

**அளவு :—** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய்கள் :—** பழைய சுரம், செரியாமை சுரம், அக்கினி மந்தம் ஆகியவைகள் தீரும். பசிவேட்கை உண்டாகும். பித்தம் தணியும்.

## 1095. கண்டங்கத்திரிப் பழச் சூரணம்

தாளிசப்பத்திரி $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), ஏலம் $\frac{1}{4}$ பலம்($8\frac{3}{4}$ கிராம்), இலவங்கம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சீரகம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). இவற்றைப் பொடித்துக் கண்டங்கத்திரிப் பழத்தில் நிரப்பி, எருக்கு இலைப் பழுப்பில் இரட்டைத் தொன்னை தைத்து அதில் பழங்களை நிரப்பி ஒரு சீலைமண் செய்து புடமிட்டு மேற் சீலையை நீக்கி மற்ற வைகளை எல்லாம் எடுத்துக் கொள்ளவும்.

மேற்சொல் சீவிய சுக்கு, மிளகு, சிற்றரத்தை இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). சிறுகாஞ்சொறி வேர்ப்பட்டை, பொன்னுங் காணி வேர், முசுமுசுக்கை சமூலம் இவை வகைக்கு 1 பலம். இவை களை உலர்த்தி முன் சரக்குகளையும் சேர்த்து முன் புடமிட்டெடுத்த தையும் சேர்த்து தூள்செய்து வைத்துக் கொள்ளவும்.

அளவு :— $1\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து :— தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— இரைப்பிருமல், மேல்மூச்சு. இருமல் ஆகி யவை தீரும்.

## 1096. கண்டங்கத்திரிப் பழ இளகம்

நன்றாக முத்திச் செடியில் பழுத்த கண்டங்கத்திரிப் பழம் தேவையான அளவு. தோல் வேறாகவும், விதை வேறாகவும் பிரித் துக்கொள்ள வேண்டியது. கொஞ்சம் நெய்யை விட்டு, விதையைப் பொன்னிறமாக வறுத்துக் கொள்ள வேண்டியது. இவ்விதமே அதன் தோலையும் நெய்யில் தனியே வறுத்துக் கொள்ள வேண்டி யது. பிறகு இரண்டையும் சேர்த்து அம்மியில் வைத்து வெண் ணெய் போலரைத்துக் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்து அரைத்து வழித்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை.

தீரும்நோய்கள் :— சுவாசம், மேல்மூச்சு, இரைப்பு, இருமல் ஆகியவை தீரும். நோய் வலிமையாக இருந்தால் புளியைத் தள்ளிப் பத்தியம் வைத்துக் கொள்ளுதல் உத்தமம்.

## 1097. தூதுவளைக் கற்பம்

தூதுவளைச் சமூலத்தை நிழலில் உலர்த்தி இடித்து துணியில் சலித்து பீங்கான் பாத்திரத்தில் அல்லது மரப் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :—1 முதல் 2 வராகன் எடை.

துணைமருந்தும், தீரும்நோயும் :— எருமை மோர் 5 பலம் (175 கிராம்). இதில் மேற்படி தூளை அளவுப்படி கலக்கிப் பருகச் செய்ய, கரப்பான் நோய் தீரும்.

சிறுநீரில் கலக்கிக் குடிப்பாட்டி மேலும் பூச, தேள் விஷந் தீரும்.

உப்பிலிச் சாற்றில் கலந்து உட்கொள்ள உடம்பெரிவு தீரும்.

பேயன் வாழைப் பழத்தில் கலந்துண்ண, சுக்கில ஒழுக்கு தீரும்.

வேப்பம்பூ சாற்றில் கலந்துண்ண, குன்ம நோய் தீரும்.

காசுக்கட்டித்தூள் சமனெடையில் கலந்துண்ண, சிலந்தி நோய் தீரும்.

பசுவின் நெய்யில் குழைத்துண்ண உடம்பு பருக்கும்.

தேனில் கலந்துண்ண உடம்பு சிறுக்கும்.

அரிசித் திப்பிலித் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்). மேற்படி தூதுவளைத்தூள் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து தேனில் குழைத்துண்ண, இருமல் தீரும்.

வெந்நீரில் கலந்துண்ண, பித்தம் தீரும்.

கோமியத்தில் கலந்துண்ண, பாண்டு நோய் தீரும்.

## 1098. இளைத்த உடல் பருக்க உசிதம்

நான்கு ஆண்டு சென்ற தூதுவளைச் சமூலத்தை உலர்த்தி இடித்த தூள் 8 பலம் (280 கிராம்), மிளகுத் தூள் 8 பலம் (280 கிராம்), வெள்ளைச் சர்க்கரை 16 பலம் (560 கிராம்), நெய் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை :—** சர்க்கரையில் கொஞ்சம் தண்ணீர் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் மேற்படி இரண்டு சூரணத்தையும் கலந்து தூவிக் கிண்டிக் கிளறி நெய்யை விட்டு நன்றாகக் கலந்த பின்பு இறக்கி ஆறவிட்டுப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 1½ வராகன் எடை.

**தீரும்நோய் :—** காலை, மாலை இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உபயோகித்தால் இளைத்த உடல் பருக்கும்.

## 1099. பருத்த உடல் இளைக்க உசிதம்

மேற்படி பாகத்தில் நெய்யிற்குப் பதிலாகத் தேனைச் சேர்த்துச் செய்து மேற்கண்டபடி நாற்பது நாள் உபயோகித்தால் பெருத்த உடல் இளைக்கும்.

## 1100. தேக சோஷணை

நீராகாரத்துடன் காற்பலம் தேனைச் சேர்த்துக் காலையில் பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் நாற்பது நாள் செய்யின் பருத்த உடல் இளைக்கும், ஆனால், உடல் வலிமையும், அழகும் குறையாது.

## 1101. தூதுவளை இளகம்

தூதுவளம் பழம் $\frac{1}{4}$ படி, பசுவின் நெய் 4 பலம் (*140* கிராம்). இந்த நெய்யில் மேற்படி பழத்தைப் பொன்னிறமாக வறுத்து இடித்துத் தெள்ளி தூளாக்கிக் கொள்ளவும். தாளிசப்பத்திரி, மிளகு, கோட்டம், சிற்றரத்தை, அரிசித்திப்பிலி, ஏலம், அக்கரா காரம், சடாமாஞ்சில் இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இலவங்கம் *3* வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), பேரரத்தை *2* பலம் (*70* கிராம்), தேன் *4* பலம் (*140* கிராம்).

**செய்முறை** :— சரக்குகளை யெல்லாம் தூள் செய்து முன் தூள்களையும் சேர்த்து அம்மியில் வைத்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து இளக பதமாக அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— $1\frac{1}{2}$ முதல் *2* வராகனெடை.

**தீரும்நோய்** :— சயம், இருமல், இரைப்பிருமல் ஆகியவை தீரும்.

## 1102. தூதுவளை நெய்

தூதுவளைச் சாறு $\frac{1}{4}$ படி, முசுமுசுக்கைச் சாறு $\frac{1}{4}$ படி, நெய் $\frac{1}{2}$ படி, சிற்றரத்தை, மஞ்சள், குந்திரிக்கம், கடுகு, யானைத் திப்பிலி, வெண்காரம், இலவங்கம், குரோசாணி ஓமம், சிவதை வேர், அதிமதுரம், சிறுநாகப்பூ, தேவதாரம், பச்சிலை, செஞ் சந்தனம், சாதிக்காய், சாதிப்பத்திரி, தேற்றான் கொட்டை இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை.

**செய்முறை** :—மூன் திரவத்தையும், நெய்யையும் கலந்து சரக்குகளை இடித்துத் தூள்செய்து அம்மியில் வைத்து நீர் வார்த்து வெண்ணெய்போல் அரைத்து மேற்படி கலவையில் கலக்கி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**அளவு** :— $1\frac{1}{4}$ முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து** :— சர்க்கரை, தேன்.

**தீரும்நோய்** :— காசம், இருமல், உளைமாந்தை, ஈளை முதலிய கபநோய்கள் தீரும்.

## 1103. தூதுவளை நெய் (வேறு)

தூதுவளம் பழச்சாறு $\frac{1}{4}$ படி, பசுவின் நெய் $\frac{1}{4}$ படி, தூதுவளை வேர்ப்பட்டை, ஆடாதோடை வேர்ப்பட்டை, நெருஞ்சி வேர்ப்பட்டை, கண்டங்கத்திரி வேர்ப்பட்டை இவைகளை அரைத்து

விழுது வகைக்கு $1\frac{1}{4}$ பலம், கருஞ்சீரகம், வெளிச்சிப் பிசின், கஸ்தூரி மஞ்சள், சிற்றரத்தை, வசம்பு, உள்ளித்திரி இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்). இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்தும், அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் வைத்துக் கொள்க.

**செய்முறை :—** நெய்யையும் சாற்றையும் கலந்து முன் சித்தப்படுத்தினவைகளையும் கரைத்துக் காய்ச்சிப் பதத்திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க. நெய்யைத் தனியாகவும், கடுகைத் தனியாகவும் வைத்துக் கொள்ள வேண்டியது.

**அளவு :—** நெய் $1\frac{1}{4}$ வராகன் எடை வீதம் உட்கொள்ள வேண்டும்; கடுகு 2 வராகன் எடை வீதம் உட்கொள்ள வேண்டும்.

**தீரும்நோய் :—** காசம், சுவாசம், இருமல் முதலிய கப நோய்களெல்லாம் தீரும்.

## 1104. தூதுவளை நெய் (வேறு)

தூதுவளை வேர், வேப்பம்பட்டை, சீந்தில் இலை கொடியுடன், பேய்ச்சுண்டைப்பழம், கண்டங்கத்திரி வேர்ப்பட்டை வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), பசுவின் நெய் $\frac{1}{4}$ படி.

**செய்முறை :—** மேற்படி வகைகளை நீர் விட்டு மைபோல் அரைத்து நெய்யிற் கலக்கிப் பதமாயெரித்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் $2\frac{1}{2}$ வராகனெடை. கடுகுடன் உட்கொள்ள வேண்டும்.

**தீரும்நோய் :—** கக்கல், விக்கல், இருமல், சுரத்திற்குப் பின் காணும் இருமல், இரைப்பிருமல், காசம், சயம் ஆகியவை தீரும்.

**மருத்துணவு :—** புகை, புளி, புணர்ச்சி நீக்குக.

## 1105. அயவத்திச் சூரணம்

தூதுவளைவேர், மிளகு, இந்துப்பு, தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, இலவங்கம், அதிமதுரம், நற்சீரகம், கருஞ்சீரகம், ஏலம், திப்பிலி, கண்டங்கத்திரிப்பழம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), மேற்றோல் சீவிய சுக்கு 4 பலம் (140 கிராம்), மஞ்சள் கடுக்காய்த் தோல் 13 பலம் (455 கிராம்), சிவதை வேர்த்தூள் 13 பலம் (455 கிராம்), நிலாவாரைத் தூள் 6 பலம் (210 கிராம்).

செய்முறை :— இடிக்க வேண்டியவைகளை இடித்தும் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து :— சர்க்கரை, அல்லது தேன்.

தீரும்நோய் :— எல்லா வகை வாயுக்கள், வாதம், பித்தம், கபம் ஆகியவை சம்பந்தமான நோய்கள் முதலிய பல நோய்கள் தீரும்.

## 1106. இன்பூரா இளகம்

(அ) இம்பூரல் சமூலம் 16 பலம் (560 கிராம்), பசுவின் பால் 8 பலம் (280 கிராம்).

(ஆ) மேற்றோல் சீவிய சுக்கு, சீரகம், தாளீசம், கசகசா, இலவங்கப்பத்திரி, ஏலரிசி, அதிமதுரம், பேரீச்சம்பழம், மிளகு இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), நாட்டுச் சர்க்கரை 10 பலம் (350 கிராம்).

செய்முறை :— இம்பூரல் சமூலத்தை நன்றாகச் சிதைத்து இரண்டு படி தண்ணீர் விட்டுக் கால்படியாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டின குடிநீருடன் பாலைக் கலந்து அதில் சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து பாகுபதத்தில் (ஆ) வில் சொல்லியிருக்கிற சரக்குகளை இடித்துத் துணியில் சலித்த தூள்களை அதில் கொட்டிக் கிளறி நன்றாகக் கலந்தபின்பு கீழிறக்கி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

தீரும்நோய் :—இருமல், கபம், சய நோய் ஆகியவை தீரும்.

## 1107. குக்கிலாதிச் சூரணம்

தூய்மை செய்த குக்கில் 32 வராகன் எடை (112 கிராம்). (இதற்கு மைசாட்சியென சென்னையில் யாவருமறிந்த பெயர் வழங்கப்படுகிறது). தூய்மைசெய்த பரங்கிப் பட்டை 16 வராகன் எடை (56 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 8 வராகன் எடை (28 கிராம்), அரிசித் திப்பிலி, கண்டத்திப்பிலி, வெட்பாலையரிசி, வாய்விளங்கம் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்).

செய்முறை :— இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து துணியில் சலித்துக் கொள்ளவும். நெல்லிக்காய்க் கெந்த

கத்தைத் தனியே தூள் செய்து துணியில் சலித்து ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.

அளவு :— 1 முதல் 1½ வராகன் எடை.

துணைமருந்து :— வெந்நீர், சர்க்கரை, நெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— பக்கசூலை, அல்குல்புற்று, விப்புருதி, பவுத்திரம், கண்டமாலை, மூலம், பிளவை, இருபத்தோரு வகை மேகங்கள், கபாலசூலை, புண், கிரந்தி, மேகசூலை, மேகரணம், நாபிப்புண், அரையாப்பு, மேகவாயு, திமிர்வாதம், நடுக்குவாதம் இவை தீரும்.

மருத்துணவு :— கீரை, சிறுபயறு, கத்தரிப்பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, பால், நெய் ஆகியவைகளாம். புளி, புகை, புணர்ச்சி, வாயு உணவுப் பண்டங்கள், மீன், கருவாடு, வாழைவாசனை, சாணி வாசனை இவை ஆகா. முக்கூட்டெண்ணெயில் தலை முழுக்கு செய்யவும்.

## 1108. குக்கில் வல்லாதி

(அ) தூய்மை செய்த குக்கில் 15 பலம் (525 கிராம்), தூய்மை செய்த சேராங்கொட்டை 7½ பலம் (262½ கிராம்), (ஆ) வட்டத் திருப்பி, பேய்ப்புடல், தேவதாரம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், செவியம், கொடிவேலி வேர்ப்பட்டை, கார்போகரிசி, கடுகு ரோகணி, வசம்பு, மரமஞ்சள், அதிவிடயம், சாதிப்பத்திரி, சிறு தேக்கு, நுனிமஞ்சள், மஞ்சிட்டி, அரிசித்திப்பிலி, ஓமம், கண்டத் திப்பிலி வகைக்கு 4 வராகன் எடை (14 கிராம்), (இ) எவட்சாரம், வெண்காரம், படிகாரம், நவாச்சாரம், கல்லுப்பு, கறியுப்பு, வெடியுப்பு இவை வகைக்கு 4 வராகன் எடை (14 கிராம்), (ஈ) தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— (அ)விலுள்ள சரக்குகளை இடித்துத் துணியிற் சலித்துக் கொள்ளவும். (இ)யிலுள்ள உப்புகளைத் தூள் செய்து மேற்படி தூள்களுடன் கலந்து வைத்துக் கொள்ளவும். சேராங் கொட்டையைக் கல்லுரலிலிட்டு மைபோல் இடித்துத் தனியே வைத்துக் கொள்ளவும். குக்கிலைத் தனியே இடித்து மைபோல் ஆனபின்பு மேற்படி சேராங்கொட்டையைச் சேர்த்து இடித்து நன்றாகக் கலந்த பின்பு மேற்படி தூள்களை சிறுகச் சிறுகத் தூவி எல்லாம் சென்ற பின்பு எடுத்து அம்மியில் வைத்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்துத் திப்பியில்லாமல் வெண்ணெய் போலாகிற வரையில் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

**குறிப்பு;** சேராங்கொட்டையைப் பாகங்களில் குழித் தைலமிறக்கிச் சேர்த்துக் கொள்வது உத்தமம். சேராங்கொட்டையைச் சேர்த்து எவ்வளவு இடித்தாலும் எவ்வளவு அரைத்தாலும் அதன் ஓடு மசிகிறதில்லை. அதனால் அதிகப் பயனேதுமில்லை. ஆகையால் சேர்க்கவேண்டிய சேராங்கொட்டையைக் குழித் தைலமிறக்கி எவ்வளவு தைலமிறங்குகிறதோ அவ்வளவையும் சேர்த்துக் கொள்ளலாம். அல்லது சேராங்கொட்டை ஒரு பலத்திற்கு அதன் தைலம் கால் பலம் சேர்த்துக் கொண்டால் சற்றேறக்குறையச் சரியாயிருக்கும். இதில் எள்ளும் தேங்காயும் சேர்க்கப்படவில்லை. மெலிந்த உடலினரானால் மூன்றரை பலம் எள்ளையும் மூன்றரை பலம் தேங்காயையும், சேர்த்து இடித்து அரைத்துக் கொள்ளவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் *1* வராகன் எடை. தைலம் சேர்த்துச் செய் திருந்தால் $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய்கள்:—** பதினெட்டு வகைக் குட்டங்கள், இருபத்தோரு வகைப் பிரமேகங்கள், எருவாய் நோய், நீர் வடிதல், எண்பது வகை வாதங்கள் ஆகியவை தீரும். இன்னும் எல்லா வகை மேக நோய்களும் தீரும்.

## *1109.* குக்கிலாதி உருண்டை

தூய்மை செய்த குக்கில், ஓமத் தூள், கருஞ் சீரகத்தூள், குறிஞ்சான் வேர்ப்பட்டைத் தூள், ஈசுரி வேர்ப்பட்டைத் தூள் இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), தூய்மை செய்த இரசம் 2 வராகன் எடை.

**செய்முறை:—** இரசத்தைக் கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாற்றை சிறுகச் சிறுக விட்டரைத்து இரசம் மடிந்த பின்பு முன் தூள்களை ஒன்றாகக் கலந்து சேர்த்து வெல்லத்தைக் கரைத்து தெளியவைத்து அந்தத் தெளிவைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்து முப்பத்திரண்டு மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்க.

**அளவு:—** காலையில் 3 மாத்திரையும் மாலையில் 2 மாத்திரையும் உட்கொள்ள வேண்டும். ஆனால் நோயாளி பலவானாக இருக்க வேண்டும். மெலிந்த உடலினனானால் காலையில் ஒரு மாத்திரை, மாலையில் ஒரு மாத்திரை போதும். சிலருக்கு மூன்று நாளைக்குள் வாய் பிடித்துப் போகும்; வாய்பிடித்தால் மருந்தை நிறுத்திவிடவும். வேளைக்கு மூன்று மாத்திரை கொடுக்க வேண்டுமென்பது அவசியமல்ல; சமயோசிதம்போல் நிதானித்து உபயோகிக்க வேண்டியது. ஐந்து நாள், ஏழு நாள், ஒன்பது நாள் வரையிலும் கொடுக்கலாம்.

**துணைமருந்து:—** தேன், சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— குழிப்புண். ஆறாத புண், வாத சூலை, வாயு நோய்கள், கை கால் முடக்கு, கை கால் கடுப்பு, சூலைக்கட்டு ஆகியவை தீரும்.

**மருத்துணவு** ;— பழையது, ஈரவெங்காயம் சாப்பிடவும். வெந்நீர் தலை முழுக்குச் செய்யவும், விளக்கெண்ணெய் தேய்த்துக் கொள்ளவும். முருங்கைக் கீரை, நெய், நெத்திலிக் கருவாடு ஆகியவை சேர்க்கவும்.

**குறிப்பு** :— இதனை உள்ளுக்கு உபயோகிப்பதைப் பார்க்கிலும் புகையாக உபயோகிக்கலாம். இப்படிச் செய்வதால் அதிக தொந்தரவில்லாமல் குணமுண்டாகும்.

## 1110. புடலாதி குக்கில் நெய்

(அ) பேய்ப்புடல் சமூலம், வேப்பம்பட்டை, அகில்பட்டை, நாவற்பட்டை, நன்னாரி வேர், அத்திமுகிழ், ஆலமுகிழ், அரசமுகிழ், இச்சிமுகிழ், கண்டத்திப்பிலி, இலந்தைப்பட்டை, அதிமதுரம், கரிபாலை வேர், வாழைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, தாமரைக் கிழங்கு, தாமரை வளையம், சிவதை வேர் இவை வகைக்கு 10 பலம் (350 கிராம்). இவற்றை நன்றாகச் சிதைத்து ஒரு பாண்டத்தில் போட்டுப் பதினாறு படி தண்ணீர் விட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

(ஆ) பசு நெய் $1\frac{1}{2}$ படி, பால் 2 படி.

(இ) அதிமதுரம், சந்தனம், இந்துப்பு, இலவங்கம், திராட்சை, வெள்ளிலோத்திரம், மஞ்சள், மரமஞ்சள், அரிசித்திப்பிலி, தேவதாரம், தாமரைவளையம், தாசரைத்தாது, ஆலமுகிழ், மூக்குரட்டை வேர், கடுகுரோகணி, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, மஞ்சிட்டி, விலாமிச்சம் வேர், செங்கழுநீர்க் கிழங்கு, பெருங்குரும்பை, அத்திமுகிழ், வேப்பனீர்க்கு இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்). (இவை எல்லாவற்றையும் இடித்துத் தூள் செய்து கொள்ளவும்). தூய்மை செய்த குக்கில் 30 வராகன் எடை (105 கிராம்). இவ்விரண்டையும் அம்மியில் வைத்துப் பசும்பாலை விட்டு வெண்ணெய் போல் அரைத்து வைத்துக் கொள்க.

செய்முறை :— (அ) விலுள்ள குடிநீரையும், (ஆ) விலுள்ள திரவங்களையும் சேர்த்து (இ) யில் சொன்னபடி சித்தஞ் செய்திருப்பதை அதில் கரைத்து அடுப்பேற்றி ஐந்து நாள் வரையில் மந்தாக்கினியாக எரித்து ஆறும் நாள் காய்ச்சிக் கடுகுதிரன் பதத்திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $1\frac{1}{4}$ முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை. காலையில் ஒரு வேளை மாத்திரம் உட்கொள்ளவும். மேலுக்கும் உபயோகிக்கவும்; நசியமும் செய்யவும்.

தீரும்நோய் :— எல்லாவகை வீக்கங்கள், எல்லாவகைப் புண்கள், கண்டமாலை, பவுத்திரம், நரம்பைத் தின்கிற குட்டம் குன்மம், பிரமேகம், வாதம், சோகை முதலியவை தீரும்; பலமான நோய்க்கு இதுவே சஞ்சீவி.

## 1111. குக்கில் நெய்

(அ) அரிசித்திப்பிலி, கண்டத்திப்பிலி, செவியம், சித்திரமூல வேர்ப்பட்டை, பொன் முசுட்டை, சீந்தில்கொடி, சுண்டைவேர், வில்வ வேர், ஆடாதோடை வேர், இஞ்சி, பேய்ப்புடல், கண்டங்கத்திரி, வேப்பம்பட்டை, கருவேலம்பட்டை, ஆயில்பட்டை, புங்கம்பட்டை, சரக்கொன்றைப்பட்டை, கோரைக்கிழங்கு, ஆடுதீண்டாப்பாளை வேர்ப்பட்டை, செங்கடுக்காய்த் தோல், கொத்துமல்லி விதை, தேவதாரம், வசம்பு, முக்காவேளை வேர் ஆகிய இவற்றை வெய்யிலில் காயவைத்து இடித்து வகைக்கு $7\frac{1}{2}$ பலம் ($262\frac{1}{2}$ கிராம்). இவற்றை ஒரு பாண்டத்திலிட்டுப் பதினாறு படி நீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

(ஆ) பசுவின் நெய் 1 படி, பால் $1\frac{1}{2}$ படி.

(இ) சீனக்காரம், சிறு நாகப்பூ, மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, தேவதாரம், மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, சவுக்காரம், சத்திச்சாரம், கோட்டம், வசம்பு, இலவங்கப்பத்திரி, கொடிவேலி வேர்ப்பட்டை, கண்டத்திப்பிலி, கையாந்தகரை, கடுகுரோகணி, சாரணைக்கிழங்கு, பூமிசர்க்கரைக் கிழங்கு, அதிவிடயம், பொன் முசுட்டை வேர், வெண்கடுகு, சடாமாஞ்சில், பெருங்குரும்பை, யானைத் திப்பிலி, பெருங்காயம், ஓமம், இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, பெருமரப் பட்டை இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). இவைகளை இடித்துத் தூள் செய்து துணியில் சலித்துக் கொள்ளவும்; தூய்மை செய்த குக்கில் 5 பலம் (175 கிராம்). இதனையும் இடித்துக் கொள்ளவும். பிறகு இரண்டையும் சேர்த்து அம்மியில் வைத்துப் பாலைச் சிறுகச் சிறுகத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

செய்முறை :—(அ) விலுள்ள குடி நீருடன் (ஆ) விலுள்ள நெய்யையும் பாலையும் கலந்து (இ) யில் சொன்னபடி சித்தப்படுத்தினதைக் கரைத்து அடுப்பேற்றி, ஐந்து நாள் வரையில் மந்தாக்கினி

யாக எரித்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி ஒரு பாத்திரத்தில் வைத்து வாய்பந்தனம் செய்து ஒரு வாரம் வரையில் தானிய புடம் வைத்துப் பிறகு உபயோகிக்கவும்.

அளவு:— 1 வராகன் எடை, காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

துணைமருந்து:— தேன், சர்க்கரை, பாலேடு, வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— பவுத்திரம், பிளவை, சூலை, எட்டு வகைக் குன்மம், விப்புருதி, நாவில் புண், கொங்கை குத்து, கண்டமாலை, இருபத்தோரு மேகம், கை கால் முடக்கு, உடலில் கறுப்பு ஆகியவை தீரும்.

மருத்துணவு :— புளி, புகை, கசப்பு, நல்லெண்ணெய், கடுகு, பழையது, பச்சை மீன், கடுவாடு, பாகக்காய், பறங்கிக்காய், பூசணிக் காய், அகத்திக் கீரை, தேங்காய், முருங்கைக் கீரை ஆகியவை ஆகா. இச்சாபத்தியம்.

குறிப்பு :— குக்கில் சம்பந்தமான எல்லா மருந்துகட்கும் மேற்கண்ட பத்தியமேயாம். ஆனால், வயது வலிமை, உடல் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம் போல் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாம்.

## 1112. குக்கில் நெய் (வேறு)

(அ) வேப்பம்பட்டை (ஐம்பது ஆண்டுகளுக்குக் குறையாததாக இருக்கவேண்டும்.) கண்டங்கத்திரி சமூலம், பேய்ப்புடல் சமூலம், ஆடாதோடை வேர்ப்பட்டை, மேல்தோல் நீக்கின சீந்திற்கொடி, சிறுவழுதலை வேர் வகைக்குப் 10 பலம் (350 கிராம்). (இவற்றை வெய்யிலில் உலர்த்தி இடித்துத் தூள் செய்து பதினறு படி தண்ணீரில் போட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி வடிகட்டி குடிநீரை வைத்துக் கொள்க.)

(ஆ) பசுவின் நெய் 1 படி, பசுவின் பால் $1\frac{1}{2}$ படி.

(இ) பொன் முசுட்டை வேர், வாய்விளங்கம், செவியம், தேவதாரம், திப்பிலி, எவச்சாரம், சத்திச்சாரம், ஏலம், மஞ்சள், விழுதி வேர்ப்பட்டை, வெட்பாலை, மிளகு, ஓமம், கொடிவேலி வேர்ப்பட்டை, கடுகுரோகணி, மஞ்சிட்டி, அதிவிடயம், வாய்விளங்கம், மஞ்சட் கடுக்காய்த் தோல், வசம்பு, சீரகம் இவை வகைக்கு 2 வராகன் எடை. இவற்றை இடித்துத் தூள் செய்து துணியில் சலித்துக் கொள்ளவும். தூய்மை செய்த குக்கில் 5 பலம் (175 கிராம்.) இதையும் இடித்துத் தூள்செய்து முன் தூள்களையும் கலந்து அம்மியில் வைத்துப் பாலைத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

**செய்முறை** :— (அ) வி லுள்ள குடி நீருடன் (ஆ) வி லுள்ள நெய்யையும் பாலையும் கலந்து (இ) யில் சொல்லியிருக்கிறபடி சித்தப் படுத்தின மருந்துகளைக் கரைத்து அடுப்பேற்றி ஐந்து நாள் வரையில் மந்தாக்கினியாக எரித்து ஆறும் நாள் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் பீங்கான் பாத்திரத்தில் விட்டு வாய் பந்தனம் செய்து ஒரு வாரம் தானியபுடம் வைத்து உபயோகிக்கவும்.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{4}$ வராகன் எடை.

**துணைமருந்து** :— சர்க்கரை, தேன் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— பவுத்திரம், பதினெட்டு வகைச் சூலைகள், மேகம், விப்புருதி, கண்டமாலை, கிராணி, மூலக் கழிச்சல், வாதம். பேய் போல் துடித்து விழுதல், பீனிசம், ஆறுத புண், கக்கல் ஆகியவை தீரும்.

**மருத்துணவு** :— மேற்கண்டவைகளேயாம்.

## 1113. சரீர போஷணம்

பச்சை அமுக்குராக் கிழங்கு தேவையான அளவு. இதனைத் தண்ணீரால் மண்ணில்லாமல் கழுவித் தூய்மை செய்து சக்கரமான வில்லைகளாகத் துண்டித்து ஒரு பாத்திரத்தில் போட்டு அவை அமிழ்ந்திருக்கும்படியாகப் பசுவின் பாலை விட்டு வேகவைத்துப் பால் சுண்டினபின்பு எடுத்து வெய்யிலில் உலர்த்தி இடித்துத் துணியில் சலித்த தூள் 8 பலம் (280 கிராம்), சிறு நாகப்பூ, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு 1 வராகன் எடை, மாசிக்காய்த் தோல் 1 பலம், (இவை எல்லாவற்றையும் இடித்துத் தூள் செய்து துணியில் சலித்து வடிகட்டிக் கொள்ளவும்). சர்க்கரை 10 பலம்.

**செய்முறை** :— மேற்படி இரண்டு வகைத் தூள்களையும் ஒன்றுகக் கலந்து சர்க்கரையையும் சேர்த்துக் கல்வத்தில் அல்லது அம்மியில் ஒரு மணி நேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து** :— தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம். காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொள்ளவும். இதனை உட்கொண்டவுடன் சீரண சக்திக்குத் தகுந்தபடி அரை, ஒன்று ஆழாக்கு காராம் பசுவின் பாலை அல்லது அது அகப்படாவிட்டால் பசுவின் பாலைக் கறந்தவுடன் பருகச் செய்ய வேண்டியது. பாலைக் காய்ச்சிக் கற்கண்டிட்டும் பருகச் செய்யலாம். இவ்விதம் ஒன்று முதல் இரண்டு மண்டலம் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்** :— மெலிந்த உடல் பருக்கும்; உடல் வலிமை உண்டாகும்; கணைச்சூடு சாந்தப்பட்டு உடல் குளிர்ச்சியுண்டாகும்; உடல் சூடு, உடல் வெட்டை, பித்தச் சூடு முதலிய பித்த சம்பந்தமான நோய்கள் தீரும்; பிரமியம், இருமல் ஆகியவைகளும் தீரும். சுரத்திற்குப் பின்னுண்டாகும் இருமல் ஆகியவை தீரும்.

**மருத்துணவு** :— பழையது, மீன், கருவாடு இவை ஆகா.

## 1114. அசுவ கெந்திச் சூரணம்

தூய்மை செய்த அசுவகெந்தித் தூள் 64 வராகன் எடை, மேல் தோல் சீவின சுக்குத் தூள் 32 வராகன் எடை, இலவங்கத் தூள் 1 வராகன் எடை, சிறு நாகப்பூத் தூள் 2 வராகன் எடை, ஏலரிசித் தூள் 3 வராகன் எடை, இலவங்கப்பட்டைத் தூள் 4 வராகன் எடை, இலவங்கப்பத்திரித் தூள் 5 வராகன் எடை, சீரகத் தூள் 6 வராகன் எடை, கொத்துமல்லி விதைத் தூள் 7 வராகன் எடை, மிளகுத் தூள் 8 வராகன் எடை, அரிசித்திப்பிலித் தூள் 16 வராகன் எடை, சர்க்கரை 15 பலம் (575 கிராம்).

**செய்முறை** :— முன் சித்தப்படுத்தின தூள்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து ஒரு பாண்டத்தில் அரைப்படி பசுவின் பாலையும், தண்ணீரையும் கலந்து விட்டுப் பாண்டத்தின் வாய்க்கு வேடு கட்டி அதன் மீது மேற்படி தூளை வைத்து மேலே ஒரு சட்டியைக் கவிழ்த்துப் பிட்டவியலாக அவித்தெடுத்து உலர்த்தி மறுபடியும் தூள் செய்து சர்க்கரையைச் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு**:— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து** :— நெய், தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— **வாயு வகைகள், சுரத்திற்குப் பின் காணும் அசதி, வலுக்குறைவு, பழைய சுரங்கள், அடுத்தடுத்து வரும் சுரங்கள் முதலியவை தீரும்.**

**மருத்துணவு** :— உடல் வலிமை, நோய் வலிமை, ஆகியவைகளுக்குத் தகுந்தபடி புளி, வாயு பண்டங்கள் ஆகியவைகளை நீக்கி வைக்கவும்.

**குறிப்பு** :— அமுக்குராக் கிழங்கைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துப் பசுவின் பாலில் போட்டுப் பால் சுண்டக் காய்ச்சி வெந்த பதத்திலெடுத்து உலர்த்தி இடித்துத் தூள் செய்துகொள்ள வேண்டியது. அல்லது அமுக்குராக் கிழங்கை இடித்துத் தூள்செய்து

மேலே சொல்லியிருக்கிறபடி பிட்டாக அவித்து எடுத்து உபயோகித்துக் கொள்ளவேண்டியது. இதுவே அமுக்குராக் கிழங்கின் தூய்மையாம்.

## 1115. அசுவகெந்திச் சூரணம் (வேறு)

தூய்மை செய்த அசுவகெந்தித் தூள் 2 பலம் (70 கிராம்), நன்னாரி வேர்த் தூள் 1 பலம் (35 கிராம்), தண்ணீர் விட்டான் கிழங்குத் தூள் 1 பலம் (35 கிராம்), நிலப்பனைக் கிழங்குத் தூள் 1 பலம் (35 கிராம்), விலாமிச்சம் வேர்த் தூள், மேற்றோல் சீவின சுக்குத் தூள், மிளகுத் தூள், அரிசித் திப்பிலித் தூள், வாய்விளங்கத் தூள், சீரகத் தூள், சோம்புத் தூள், ஏலரிசித் தூள், கண்டந்திப்பிலித் தூள், செவ்வியத் தூள், கொடி வேலி வேர்ப்பட்டைத் தூள், சிறு தேக்குத் தூள், மஞ்சள் கடுக்காய்த் தோல் தூள், தான்றிக்காய்த் தோல் தூள், நெல்லி முள்ளித் தூள், இலவங்கப் பட்டைத் தூள், இலவங்கப் பத்திரித் தூள், சிறுநாகப்பூத் தூள், இலவங்கத் தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), சர்க்கரை 15 பலம் (525 கிராம்).

செய்முறை :— எல்லாத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து மேற்படி சர்க்கரையையும் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்து எல்லாம் நன்றாகக் கலந்தான பின்பு பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்க.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து :— நெய், தேன், வெண்ணெய், சர்பத் வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— மேற்கூறிய நோய்களெல்லாம் தீரும்.

## 1116. சரீர போசணம் (வேறு)

பச்சை அமுக்குராக் கிழங்கை அரைத்த விழுது 1 பலம் (35 கிராம்), வெந்நீர், பசுவின் பால், நெய், நல்லெண்ணெய் ஆகியவைகளில் ஒன்று 1 பலம் (35 கிராம்). முன் அரைத்த விழுதை மேற்கூறியவைகளுள் ஒன்றில் கலந்து உட்கொள்ள வேண்டியது. இவ்விதம் காலையில் ஒருவேளை மாத்திரம் உபயோகிக்க வேண்டும். இதனை உபயோகித்தவுடன் பசுவின் பாலைக் காய்ச்சிக் சற்கண்டிலிட்டுப் பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் செய்துவரின் இளைத்த உடல் பருத்துத் தழைக்கும். உடல் வலிமை உண்டாகும். பலமும், அழகும், வீரியமும் உண்டாகும்.

**மருத்துணவு** :— புளிப்பு வகைகளை அதிகமாகச் சேர்க்கலாகாது. நல்ல சத்துள்ள ஆகாரங்களை உபயோகித்து வரவேண்டியது.

## 1117. அசுவகெந்தி ரசாயனம்

மேற்சொல்லியிருக்கிறபடி பசுவின் பாலில் வேக வைத்து உலர்த்தி இடித்த அசுவகெந்தித் தூள் $6\frac{1}{2}$ பலம் ($227\frac{1}{2}$ கிராம்), மேற்றோல் சீவிய சுக்கு, மிளகு, திப்பிலி, செவ்வியம், வால்மிளகு, கண்டந்திப்பிலி, தாளிசப்பத்திரி, இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, இலவங்கம், சோம்பு, சிறுநாகப்பூ, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, நிலப்பனைக்கிழங்கு இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கசகசா இவை வகைக்கு 1 வராகனெடை இந்நான்கையும் தனித்தனியே அரைத்து ஒன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும். சர்க்கரை 16 பலம் (560 கிராம்), நெய் 16 பலம் (560 கிராம்), தேன் 4 பலம் (140 கிராம்).

**செய்முறை**:— மேற்படி தூள்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து சர்க்கரை, நெய், தேன் ஆகியவைகளையும் அதிற் சேர்த்துஅம்மியில் அல்லது கல்வத்தில் நன்றாக அரைத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

**அளவு**:—$1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய்கள்**:— என்புசுரம், மேகசுரம், கபதாகம், கைகால் அசதி, எரிச்சல், அனல்மந்தம், பித்தவாயு, பழையசுரம், அடுத்தடுத்து வரும் சுரம், எலும்புருக்கிநோய், என்புவெட்டை முதலிய அநேக நோய்கள் தீரும்.

## 1118. அசுவகெந்தி நெய்

(அ) பச்சை அசுவகெந்தி இடித்த சாறு 1 படி, வல்லாரைச் சாறு 1 படி, பசுவின் பால் 1 படி, பசுவின் நெய் 1 படி.

(ஆ) பச்சைக்கடலை 1 படி. இதனை ஒருநாள் தண்ணீரில் ஊற வைத்து இடித்து 2 படி வெள்ளாட்டுப்பாலை விட்டுப் பிசைந்து வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

(இ) நன்னாரிவேர், நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், பெருஞ்சீரகம், கொத்துமல்லிவிதை, இலவங்கம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, மேற்றோல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, ஏலம், சாதிக்காய் இவை வகைக்கு 1 வராகன் எடை. இவற்றைத் தனித்தனி இடித்து துணியில் சலித்துக்கொள்ளவும்.

**செய்முறை:**— (அ) விலுள்ளவைகளையும், (ஆ) விலுள்ளதையும் ஒன்றாகக்கலந்து (இ) யிலுள்ள தூள்களைப் பால் விட்டு வெண்ணெய் போலரைத்து அதிற்கலக்கி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மெழுகு பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

**அளவு:**—$1\frac{1}{2}$ முதல் $3\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய்கள்:**— என்புவெட்டை, சுரம், மேக ரணம், வெட்டை, சயம், இருமல், புகைச்சல், கை கால் அசதி ஆகியவை தீரும். இளைத்த உடல் பருக்கும். தாது வளமை, இரத்த விருத்தி முதலியவையுண்டாகும்.

**மருத்துணவு :**— இச்சாபத்தியம், புணர்ச்சி நீக்குக.

## 1119. அசுவகெந்தி நெய் (வேறு)

பச்சை அசுவகெந்திக்கிழங்கை இடித்த சாறு 8 பலம் (280 கிராம்), பூசணிக்காய்ச் சதைச்சாறு 8 பலம் (280 கிராம்), பசுவின் நெய் 8 பலம் (280 கிராம்), தாளிசப்பத்திரித்தூள், மேற்றோல் சீவினசுக்குத்தூள், சிற்றாமணக்குப் பருப்பின் மீதிருக்கும் வெள்ளைச் சருகு அதைப் பிளந்தால் உள்ளிருக்கும் முளையிலை ஆகியவைகளை நீக்கின பருப்பு 2 வராகன் எடை (இதற்காக இந்தப் பருப்பைச் வெந்நீரில் போட்டுச் சற்றுநேரம் தாமதித்து எடுத்தால் மேலிருக்கிற சருகையும், அதைப் பிளந்து உள்ளிருக்கிற முளையிலையையும் இலகுவாய் வெளிப்படுத்திவிடலாம்.) கற்கண்டுத்தூள் 2 பலம் (70 கிராம்), சாதிக்காய்த் தூள் $\frac{1}{2}$ வராகன் எடை, பசுவின் பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**— சாறுவகைகளையும் நெய்யையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். மற்றவைகளை அம்மியில் வைத்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து முன் நெய்யில் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கிக் கற்கண்டுத் தூளையும் தூவித் துழாவிப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு:**—2 முதல் 3 வராகன் எடை. காலை மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம். சிறு பிள்ளைகளானால் ரஸ்தாளி வாழைப்பழத்தை அல்லது பேயன் வாழைப்பழத்தைச் சிறு துண்டாகத் துண்டித்து எண்ணெயிற் போட்டுத் தேவையான அளவு கற்கண்டுத் தூளையும் சேர்த்து வேளையொன்றுக்கு ஒவ்வொரு துண்டாகச் சாப்பிடக் கொடுக்கலாம்.

**தீரும்நோய்கள் :**— வெட்டைச்சூடு, என்புசுரம், மூலச்சூடு, கணைச்சூடு, பெரும்பாடு ஆகியவை தீரும். இளைத்த உடல் பருத்து வளமையாகும்.

**குறிப்பு:—** சிற்றாமணக்கின் பருப்பிற்குப் பதிலாக மேற்றோல் நீக்கின வாதுமைப்பருப்பைச் சேர்த்துக் கொண்டால் மிகவும் நன்மையாயிருக்கும்.

**மருத்துணவு:—** இச்சாபத்தியம்.

## 1120. அசுவகெந்தி நெய்

(அ) அமுக்குராக்கிழங்கு 100 பலம் (3500 கிராம்), குப்பைமேனி சமூலம், வெள்ளைச்சாரணை சமூலம், பிரண்டை சமூலம், சிவதை சமூலம், சங்கிலை, மிளகுசாட்டரணை சமூலம் இவை வகைக்கு 10 பலம் (350 கிராம்), பெருங்குமிழ்வேர் பெருவாகைவேர் முன்னைவேர், வில்வவேர்ப்பட்டை, பாதிரிவேர், சிற்றாமல்லிவேர், பேராமல்லிவேர், நெல்லிமரப்பட்டை, கண்டங்கத்திரி சமூலம், சிறு வழுதலை சமூலம் இவை வகைக்கு 3 பலம்(105 கிராம்)

(ஆ) அதிமதுரம், மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள்கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தேவதாரம், சிற்றரத்தை, மஞ்சள், மரமஞ்சள், கண்டந்திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை, வாதமடக்கிப்பட்டை, தகரை விதை, விழலரிசி, கடுகுரோகணி, வால்மிளகு, சந்தனம், எவட்சாரம், சத்திச்சாரம், பெருங்காயம், கறியுப்பு இவை வகைக்கு 4 வராகன் எடை (14 கிராம்). இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்துத் தூள் செய்தும் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்தும் ஒன்றாகக்கலந்து வைத்துக் கொள்க.

(இ) பசுவின் நெய் 1 படி, பசுவின் பால் செல்லத் தக்க அளவு.

**செய்முறை :—** (அ) விலுள்ளவைகளில் துண்டிக்க வேண்டியவைகளைத் துண்டித்தும், வேர், பட்டை ஆகியவைகளை நன்றாகச் சிதைத்தும் ஒரு மண்பாண்டத்தில் போட்டுப் பதினறு படி தண்ணீர் வார்த்து எட்டில் ஒருபாகமாகச் சுண்டக் காய்ச்சி இளஞ் சூட்டுடன் பிழிந்து வடிகட்டி வைத்துக் கொள்க. (ஆ) விலுள்ள தூளை அம்மியில்வைத்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுகத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற குடிநீரில் கரைத்து அதில் நெய்யையும் விட்டு அடுப்பேற்றி நான்கு நாள் வரையில் காலையிலும், மாலையிலும் இளஞ் சூடுகாட்டி வர வேண்டும். ஐந்தாம் நாள் அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டிச் சூடாறினபின் பீங்கான் பாத்திரத்தில் விட்டு வாய்பந்தனஞ் செய்து ஒரு மாதம் வரையில் தனியப் புடம் வைத்து எடுத்து வைத்துக் கொண்டு உபயோகிக்கவும்.

**அளவு :—** $1\frac{1}{2}$ முதல் 3 வராகன் எடை.

**துணைமருந்து** :— திப்பிலித் தூள் ½ வராகன் எடை. காந்தச் செந்தூரம் அல்லது தாம்பிரச்செந்தூரம் ½ குன்றி எடை. இவற்றைக் கலந்து மேற்படி நெய்யை அளவுப்படி விட்டுக் குழைத்து உட்கொள்ள வேண்டும். நோய் இலகுவாயிருந்தால் மேற்படி நெய்யை மாத்திரம் தனியாக உபயோகிக்கலாம். அல்லது அரிசித் திப்பிலித் தூளையும் சேர்த்து உபயோகிக்கலாம். இன்னும் பவழ பற்பம், சிலாசத்து பற்பம், முத்து பற்பம், கஹருபா பற்பம் முதலியவைகளையும் சமயோசிதம் போல் மேற்படி நெய்யில் கலந்து உபயோகிக்கலாம். இவை எல்லாம் மருத்துவர்களின் மதி நுட்பத்தையும் சமயோசித சாமர்த்தியத்தையும் சேர்ந்தது. இன்னும் கீழ்க்காணும் அட்ட சூரணத்துடனும் இதைக் கொடுக்கலாம்.

**தீரும்நோய்கள்** :— சயநோய், இரைப்பிருமல், மந்தாரகாசம், பீலிகை, சுவையின்மை, விடாச் சுரம், என்பு சுரம், உட்காய்ச்சல், குன்மம், சூலை, இரத்த பித்தம், எலும்புருக்கி, வெப்பு, பிளவை முதலிய அநேக நோய்கள் தீரும்.

## அட்ட சூரணம்

அகில் கட்டை, மலாக்காய்ச் சந்தனம், இலவங்கப் பட்டை, கோட்டம், கஸ்தூரி மஞ்சள் ஆகிய இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), குங்குமப் பூ 1 வராகன் எடை (3½ கிராம்), பச்சைக்கற்பூரம் 1 வராகன் எடை (3½ கிராம்), சமுத்திராப்பச்சை 1 வராகன் எடை (3½ கிராம்).

**செய்முறை** :— குங்குமப் பூவைக் கல்வத்திலிட்டு மைபோல் அரைத்துச் சமுத்திரப் பச்சை, பச்சைக் கற்பூரம் ஆகியவைகளையும் தனித்தனியே சேர்த்துப் பொடித்து மற்ற தூள்களையும் ஒன்றுகக் கலந்து ஒரு மணி நேரம் அரைத்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 6 முதல் 8 குன்றி எடை.

**தீரும்நோய்கள்** :— மேற்கண்ட நோய்கள் தீரும். ஆனால் மேற்கண்ட அசுவகெந்தி நெய்யுடன் அல்லது வேறு வகை அசுவகெந்தி நெய்யுடன் கலந்து உபயோகித்தால் சிறப்பான குணமுண்டாகும். இதைப் பற்றி மருத்துவ வல்லுநர்க்கு நாம் அதிகம் எழுதத் தேவையில்லை.

## 1121. அட்டாதிச் சூரணம்

வறுத்திடித்த அரிசித் திப்பிலித் தூள் 8 பங்கு, மேல் தோல் சீவின சுக்குத் தூள் 7 பங்கு, கருஞ் சீரகத் தூள் 6 பங்கு, நற்சீரகத்

தூள் 5 பங்கு, மிளகுத் தூள் 4 பங்கு, இந்துப்புத் தூள் 3 பங்கு, வறுத்துத் தூள்செய்த பெருங்காயத் தூள் 2 பங்கு, ஓமத் தூள் 1 பங்கு, சர்க்கரை 36 பங்கு.

**செய்முறை** :— எல்லாத் தூள்களேயும் ஒன்ருகக் கலந்து சர்க்கரையையும் சேர்த்து ஒரு மணி நேரம் கல்வத்தில் அல்லது அம்மியில் வைத்து அரைத்து எல்லாம் ஒன்ருகக் கலந்த பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 1முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து** :—தேன், நெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— அனல் மந்தம், கழிச்சல், வாயு, குன்மம், பித்த வாயு, மூல வாயு, சூதக சம்பந்தமான வாயுக்கள் ஆகியவை தீரும்.

**மருத்துணவு** :— சமயோசிதம் போல் பத்தியமேற்படுத்தவும்.

## 1122. இங்குஷ்டாதி உருண்டை

மேல் தோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, கருஞ்சீரகம், நற்சீரகம், இந்துப்பு, கருவேப்பிலே, சுத்தி செய்த வெண்ணுபி, பொரித்த வெண்காரம், பொரித்த பெருங்காயம், புளியம் புறணிச் சாம்பல் இவற்றின் தூள் வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இஞ்சிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து அம்மியில் வைத்து ஆரம்பத்தில் இஞ்சிச் சாற்றை சிறுகச் சிறுக வார்த்து நாலுமணி நேரம் அரைத்துப் பிறகு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு மணி நேரம் அரைத்து, தேற்ருன் கொட்டைப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு** :— $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து** :— தேன், நெய், குடிநீர் வகைகள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— அனல் மந்தம், பித்த வாயு, பலவகை செரியாமை நோய், வயிற்றுப் பொருமல், வயிற்றுப்புசம், வயிற்றிரைச்சல், சூதக வாயு, அது சம்பந்தமான வலிகள் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணவு** :— உடல் வலிமை, நோய் வலிமை, உடலியல்பு, முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்திய மேற்படுத்தவும்.

குறிப்பு :— இந்த மாத்திரைகள் சீக்கிரம் கெட்டுப் போவதினு லும் சில உடலினர்க்கு அதிக சூட்டைக் கொடுப்பதினுலும் கொஞ் சம் நெய்யை ஒரு பாத்திரத்தில் வார்த்து அடுப்பேற்றி நெய் கொதிக்கும் பக்குவத்தில் மேற்படி மாத்திரைகளைப் போட்டு நன்ருக ச் சூடுகாண்கிற வரையில் வறுத்து ஆறவிட்டு எடுத்துக் குப்பியில் பத்திரப் படுத்தவும். இப்படிச் செய்வதால் மேற்கண்ட தீக்குணங் கள் இராது. இது பழக்கத்தினுல் தெரியவந்தது.

## 1123. பெருங்காய இளகம்

மேற்ருேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இலவங்கம், ஓமம், நற்சீரகம், கொத்துமல்லிவிதை, வாய்விளங்கம், குரோசாணி ஓமம், கண்டத்திப்பிலி, யானைத்திப்பிலி, கருவேப்பிலை இவற்றின் தனித்தனித்தூள் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), நவச்சாரம், அன்னபேதி, இந்துப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, கெந்த வடியுப்பு இவற்றின் தனித்தனித்தூள் வகைக்கு 1 வராகன் எடை 3½ கிராம்), பருமனுன ஐந்து எலுச்சம் பழச்சாறு.

செய்முறை:— சரக்குகளின் தூள்களையும் உப்புகளின் தூள் களையும் ஒன்ருகக் கலந்து பீங்கான் பாத்திரத்திற் போட்டு மேற்படி எலுமிச்சம் பழச்சாற்றை விட்டு இரவில் வைத்து தினம் இரண்டு மூன்று தடவை கிளறிக்கொண்டு வரவும். இளகியபதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்பத்தவும்.

அளவு:— ½ முதல் 1 வாரகன் எடை.

துணை மருந்து:— நெய், தேன் முதலியவைகளாம்.

தீரும்நோய் :— அனல்மந்தம், தொடர்கழிச்சல், வயிற்றி ரைச்சல் சோறு செரியாமை, செரியாமை வயிற்றுவலி முதலிய இரப்பை சம்பந்தமான நோய்கள் தீரும்.

மருத்துணவு :— சமயோசிதம்போல் பத்தியமேற்படுத்தவும்.

குறிப்பு:— இம் முறையில் ஐந்து எலுமிச்சம்பழச்சாறென எழுதி யிருக்கிறது. ஆனுல், தூள்களுக்குப் பிடிக்கிறவரையில் எலுமிச்சம் பழச்சாற்றைவிட்டு இளஞ்சூட்டில் வைத்துச் சுண்டவைத்துக் கொள்வதினுல் அதிககுணமுண்டாகிறது. இதனுடன் தேவையான தேனையும் சேர்த்து வைத்துக்கொண்டு உபயோகிப்பதனுலும் அதிக குணமே.

## 1124. பச்சைக் கற்பூராதிச் சூரணம்

உயர்ந்த மலாக்காப் பச்சைக்கற்பூரம் 1 பங்கு, கிளியூறம் பட்டைத்தூள் 2 பங்கு, தக்கோலத்தூள் 5 பங்கு, சாதிக்காய்த்தூள்

2 பங்கு, இலவங்கப்பத்திரித் தூள் 5 பங்கு, இலவங்கப்பட்டைத் தூள் 8 பங்கு, சிறுநாகப்பூத்தூள் 7 பங்கு, மிளகுத்தூள் 8 பங்கு, செவ்வியத் தூள் 9 பங்கு, சர்க்கரை 45 பங்கு.

**செய்முறை** :— பச்சைக்கற்பூரத்தைப் பொடித்துத் தனியே வைத்துக் கொள்ளவும். மற்றத் தூள்களையும் சர்க்கரையையும் ஒன்றாகக் கலந்து பச்சைக்கற்பூரப் பொடியைத் தூவி நன்றாகக் கல்வத்தில் ஒரு மணி நேரம் அரைத்துக் கார்க்குள்ள குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** : — 1 முதல் $1\frac{1}{4}$ வராகன் எடை.

**துணைமருந்து** :— தேன், நெய் முதலிவைகளாகும்.

**தீரும்நோய்கள்** :— சயம், சுவாசம், இரைப்பிருமல், சுரம், குன்மம், மூலம், மார்வலி, கழுத்திசிவு, அனல் மந்தம் ஆகியவை தீரும்.

**மருத்துணவு** :— உடல் வலிமை, நோய்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம் போல் பத்தியமேற்படுத்தவும்.

## 1125. கற்பூராதி இளகம்

(அ) துளசி இலைச்சாறு, தூதுவளை இலைச்சாறு, கண்டங்கத்திரி இலைச்சாறு, சிறுவழுதலை இலைச்சாறு, வெண்ணொச்சி இலைச்சாறு, ஆடாதோடை இலைச்சாறு, இவை வகைக்கு $\frac{1}{4}$ படி. இந்தச் சாறுகளை ஒரு புதுச்சட்டியில் விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் காய்ச்சினால் மேலே ஆடைகட்டி வரும். இவ்விதமே எரித்துக் கொண்டிருந்தால் அந்த ஆடையானது திரண்டு வரும். அந்தச் சமயத்தில் அதை இறக்கி ஒரு துணியில் வடிகட்டித் திப்பியை நீக்கி விட்டு அந்தத் தெளிநீரை மட்டும் தனியே வைத்துக் கொள்ளவும்.

(ஆ) தூதுவளை வேர்த்தூள் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), மஞ்சள்கடுக்காய்த்தோல் தூள் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), மேற்றோல் சீவிய சுக்குத்தூள், இலவங்கப்பட்டைத்தூள், பச்சைக் கற்பூரத்தூள், அரிசித்திப்பிலித்தூள், ஏலரிசித்தூள், இலவங்கத் தூள், இலவங்கப்பத்திரித்தூள், கஸ்தூரி மஞ்சள் தூள், சதகுப்பைத்தூள், கச்சோலத்தூள், சிறுநாகப்பூத்தூள், தக்கோலத் தூள், சடாமாஞ்சித் தூள், நற்சீரகத் தூள், அதிமதுரத் தூள், சாதிக்காய்த் தூள், சாதிப்பத்திரித் தூள், ஓமத் தூள், கற்கடக சிங்கித் தூள், சிறுதேக்குத் தூள், திராட்சைப்பழம், பேரீச்சம் பழம், தேற்றான்கொட்டை இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்).

(இ) கற்கண்டு, சீனி, தேன், நெய் இவை வகைக்குப் 10 பலம் (350 கிராம்).

செய்முறை:— தேற்றான் கொட்டையைச் சிறு துண்டுகளாக வெட்டி தண்ணீரில் ஊறவைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவேண்டும். திராட்சைப்பழத்தையும் பேரீச்சம்பழத்தையும் தனித்தனி அரைத்துக்கொள்ள வேண்டும். பிறகு இம் மூன்றையும் கலந்து பச்சைக்கற்பூரம் தவிர மற்ற தூள்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து அதிற் சேர்த்து கலந்து வைத்துக் கொள்ளவும். (அ)விலுள்ள தெளிநீரில் சர்க்கரையையும் கற்கண்டையும் கரைத்துப் பாகு செய்து பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தியிருக்கும் தூள்களைச் சிறுகச் சிறுகத் தூவி மந்தாறக் கடைந்து தேனை விட்டுக் கிளறி முடிவில் நெய்யை விட்டு நன்றாகக் கிளறிச்சூடாறின பின்பு பச்சைக்கற்பூரத்தைப் பொடித்துத் தூவிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு:— 1 முதல் 1½ வராகன் எடை.

தீரும்நோய்:— ஈளை, இருமல், காசம், சயம், கபசத்தி, கபசுரம் ஐயநோய் தொண்ணூற்றாறும், சர்வபித்தநோய்கள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— நோய் வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தாற்போல் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

## 1126. பறங்கிப் பட்டை இளகம்

(அ) பறங்கிப்பட்டை 10 பலம் (350 கிராம்). மேல் தோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, கண்டத் திப்பிலி, சித்திர மூல வேர்ப்பட்டை, செவ்வியம், சிறு தேக்கு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, கோட்டம், அதிமதுரம், கருஞ்சீரகம், ஓமம், கற்கடக சிங்கி, அமுக்குராக் கிழங்கு, உலர்த்தின வெள்ளறுகு, சிவனார் வேம்பு, பிரப்பங் கிழங்கு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), ஏலரிசி, இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), சங்கங்குப்பிச்சாறு செலுத்தக்க அளவு, திருகுக்கள்ளி ½ வீசை (700 கிராம்) முதல் 1 வீசை (1400 கிராம்).

(ஆ) நாட்டுச் சர்க்கரை 15 பலம் (525 கிராம்), தேன் 20 பலம் (700 கிராம்), நெய் 20 பலம் (700 கிராம்).

செய்முறை :— (அ) விலுள்ள சரக்குகளை எல்லாம் இடித்து துணியில் சலித்து சங்கங்குப்பிச் சாற்றை விட்டுப் பிட்டைப் போலப் பிசைந்து வைத்துக் கொள்ளவும். இருபத்தைந்து படி கொள்ளும்படியான ஒரு பாண்டத்தில் பத்து படி வெந்நீரை விட்டு அதில் மேற்படி திருகுக் கள்ளியைத் துண்டுகளாகத் துண்

டித்துப் போட்டு பானை வாய்க்கு மெல்லிய துணியால் வேடுகட்டி அதன்மேல் முன் சித்தப்படுத்தியிருக்கிற தூள்களை வைத்துப் பரப்பி மேல் சட்டி மூடி, சந்தில்லாமல் சீலை மண் செய்து அடுப் பேற்றிச் சிறு தீயாக எரித்துச் சுமார் அரைபங்கு நீர் சுண்டின சமயத்தில் எரிப்பை நிறுத்திக் குளிர ஆறின பின்பு கவசத்தைப் பிரித்துத் தூள்களை எடுத்து நிழலில் உலர்த்தி, அம்மியில் வைத்துக் கட்டிகளில்லாமல் அரைத்துச், சர்க்கரையை வெந்நீரில் கரைத்துப் பாகு செய்து பாகு பதத்தில் தேனை விட்டுக் கலந்து தூள்களைச் சிறுகச் சிறுகக் கொட்டி மத்தால் கடைந்து, நெய்யையும் விட்டு நன்ருகக் கிளறி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும். இருபது நாள், நாற்பது நாள் நோய் வலிமைக்குத் தகுந்தபடி உபயோகிக்க வேண்டும்.

தீரும்நோய்கள் :— மேக சூலை, வாத சூலை, கிரந்தி சூலை, இருபத்தோரு வகைப் பிரமேகங்கள், எட்டு வகைச் சூலை, மேகப் பிடிப்பு, வாயு, மேக ரணம், கிரந்தி ரணம், மேக ஊறல், மேகக் கட்டிகள், மேகத் தடிப்பு, மேகப் புடைப்பு ஆகியவை தீரும்.

மருத்துணவு :— உப்பு, துவரை, உள்ளி, மிளகு, முருங்கைப் பிஞ்சு, வெந்நீர் ஆகியவைகள் ஆகும். மற்ற காரங்கள், புளிப்பு, புகை, புணர்ச்சி ஆகியவைகள் ஆகா. இவைகளை அறவே நீக்க வேண்டியது. மறு பத்தியத்தில் பசுவின் பால், பசுவின் நெய், பத்தியக் கருவாடு ஆகியவைகளை நாற்பது நாள் வரை கூட்டவும். ஆட்டிறைச்சி, மீன் முதலியவை ஆகா. மறு பத்தியம் நாற்பது நாள் சென்ற பிறகுதான் மற்ற உணவுப் பண்டங்களைச் சேர்க்கவேண்டும். பத்திய முறைகளில் விழிப்பாக இருக்க வேண்டியது. கொடிய நோய்களால் ஆயுள் முழுவதும் துன்பப்பட்டு இழப்பு அடைவதைப் பார்க்கிலும், இரண்டு மூன்று மாதம் கொஞ்சம் துன்பத்தைப் பொறுத்து, நோயை நீக்கிச் சுகத்தை அனுபவிப்பதே சிறப்பென புத்திமான்கள் தெரிந்து கொள்வார்களாக.

## 1127. பட்டைச் சூரணம்

சிவனார் வேம்புச மூலம், சிறுகாஞ்சோரி வேர்ப்பட்டை, தலைசுருளி வேர்ப்பட்டை, சங்கங்குப்பி இலை, வெள்ளருகு சமூலம், கையாந்தகரைச் சமூலம், செங்கத்தாரிப் பட்டை, சங்கம் வேர்ப் பட்டை இவைகளைத் தனித்தனி உலர்த்தி இடித்த தூள்கள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த பரங்கிப்பட்டைத் தூள் 8 பலம் (280 கிராம்).

**செய்முறை** :— தூள்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து நன்றாகக் கலக்கும்படி இரண்டொரு மணி நேரம் அரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து** :— சர்க்கரை, நெய், தேன், சிவனார் வேம்புக் குழித் தைலம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— மேகப் புண், மேகக் குடாரம், சூலைக்கட்டு, மேக வெள்ளை, கருமேகம், கருப்புச் சிட்டை ஆகியவை தீரும்.

**மருத்துணவு** :— இச்சாபத்தியம், நெய், பால், இறைச்சி, மோர் ஆகியவை அதிகமாய்க் கூட்டவும்.

## 1128. பறங்கிப் பட்டைப் பதங்கம்

பறங்கிப்பட்டை 8 பலம் (280 கிராம்). இதனைப் பாக்கைப் போலச் சன்னமாகச் சீவி ஒரு மண் பாத்திரத்தில் போட்டு முசுமுசுக்கைச் சாற்றை அது மூழ்கி இருக்கும்படியாக விட்டு முப்பது நாழிகை ஊற வைத்துப் பிறகு அதை வெய்யிலில் உலர்த்தி மறுபடியும் முன்போல் மண் பாத்திரத்தில் போட்டுப் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றை விட்டு முன்போல் ஊறவைத்து முன்போல் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். பிறகு ஒரு வாய் குவிந்த கலசத்திற்கு அடியில் இருபது துவாரங்களிட்டு முன் சித்தப்படுத்தின பட்டைச் சீவலைப் போட்டுக் கலசத்தின் வாய்க்குச் சில்லிட்டு சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ளவும். பின் ஒரு பலம் தூய்மை செய்த கெந்தகம், ஒரு பலம் தூய்மை செய்த லிங்கம், அரைப்பலம் மருத்து வெள்ளை, அரைப்பலம் சந்தனத் தூள், அரைப்பலம் அகிற்கட்டைத் தூள், ஒரு வராகன் எடை கோரோசனை இவைகளைப் பொடித்து ஒரு குண்டு சட்டியில்போட்டு அதன் மீதுமுன் சித்தப்படுத்தின கலசத்தை வைத்துச் சந்தில்லாமல் சீலை மண் செய்து உலர்த்தி வட்டடுப்பில் வைத்துச் சந்தில்லாமல் மண் பூசி நான்கு நாழிகை நேரம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின் கலசத்தைப் பிரித்துக் கலசத்திலுள்ளதை எடுத்துப் பொடித்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ வராகனெடை.

**துணைமருந்து** :— தேன், நெய், சர்க்கரை முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— மேக சூலை, வெடி சூலை, வாத சூலை, இரச சூலை, இன்னும் பலவகைச் சூலைகள், சூலையினால் வந்த கை கால் முடக்கம், பிடரி இசிவு, நரம்பு முடக்கம், கிரந்தி, ஆறாத புண்கள், அரையாப்பு முதலியவை தீரும்.

**மருத்துணவு** :— கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, துவரை, முளைக்கீரை, அரைக்கீரை, குறவைமீன், வரால் மீன், கருவாடு, வெள்ளாட்டு வற்றல் ஆகியவை ஆகும். கைப்பு, புளிப்பு, வாழைக் காய், வாழையிலை, வாழை நிழல், கோழிப்பீ ஆகியவை ஆகா. எட்டு நாளைக்கொருமுறை உசிலம்பொடி அல்லது சிகைக்காய் தேய்த்து ஒரே வெந்நீரால் தலைமுழுக்குச் செய்யவும்.

## 1129. பறங்கிப்பட்டைப் பதங்கம் (வேறு)

பறங்கிப்பட்டை 10 பலம் (350 கிராம்), இதனைப் பாக்கைப் போலச் சீவி ஒரு மண்பாத்திரத்தில் போட்டு அது அமிழ்ந்து கிடக்கும்படியாகச் சங்கங்குப்பிச் சாற்றைவிட்டு மூன்று நாள் ஊறவைத்து நான்காம்நாள் வெய்யிலில் உலர்த்தி ஈரமில்லாமல் உலர்ந்தபின்பு இடித்துத் தூள் செய்து வைத்துக்கொள்க.

இலிங்கம், மனோசிலை, நெல்லிக்காய்க் கெந்தகம், இரசகற் பூரம், கார்போகரிசி, வன்னிவேர்ப்பட்டை, கோட்டம், செண்பக மொக்கு, துத்தம், இரசம். இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). வங்காளப்பச்சை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), துருசு $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), இந்தப் பன்னிரண்டு வகைகளையும் இடித்துத் தூள்செய்ய வேண்டியவைகளைத் தூள்செய்து மற்றச் சரக்குகளை யும் தனித்தனி தூள்செய்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு நல்லெண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு மணி நேரம் அரைத்து ஒரு வில்லையாகச் செய்துகொள்ளவும்.

இந்த வில்லையை ஒரு பானையின் நடுவில் வைத்து அந்தப் பானை வாய்க்கு மெல்லிய துணியால் வேடுகட்டி முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற பட்டைத்தூள்களை அதன்மேல் வைத்து மறுசட்டி மூடிச் சந்தில்லாமல் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி வட்டடுப்பில் வைத்துச் சந்தில்லாமல் மண்தடவிக் கமலாக்கினியாக இரண்டு சாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு கவசத்தைப் பிரித்துத் தூள்களை எடுத்து மறுபடியும் கல்வத்தில் பொடித்துப் பளிங்கு மூடியுள்ள குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் 1 வராகன் எடை. காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

துணைமருந்து :— தேன், நெய் முதலியவைகளாகும்.

நோய் வலிமைக்குத் தகுந்தபடி அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கவும்.

தீரும்நோய் :— மேகரணம், கிரந்தி, மேகவாயு, சூலை ஆகியவை தீரும்.

**மருத்துணவு** :— இச்சாபத்தியம்.

## 1130. பறங்கிப்பட்டைப் பதங்கம் (வேறு)

பசுவின் பாலில் தூய்மை செய்த பறங்கிப் பட்டை 10 பலம் (350 கிராம்). இதனை இடித்து ஒரு கலயத்தில்போட்டு வைத்துக் கொள்ளவும். தூய்மை செய்த $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்) நெல்லிக் காய்க் கெந்தகத்தை வேறொரு கலயத்தில் போட்டு அதனடியில் மூன்று துவாரஞ் செய்து வைத்துக்கொள்ளவும். கார்த்திகைக் கிழங்கு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), வசம்பு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), ஓமம் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்). இம் மூன்றையும் சற்றுச் சிதைத்து வேறொரு கலயத்தில் போட்டு அடியில் மூன்று துவாரஞ் செய்து இந்தக் கலயத்தின் வாய்க்கு அகலிட்டுச் சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ளவும். பட்டையுள்ள கலயத்தின் மீது கெந்தகக் கலயத்தை வைத்துச் சந்தில்லாமல் சீலைமண் செய்யவும். கெந்தகக் கலயத்தின் மீது கார்த்திகைக் கிழங்கு முதலியவைகளுள்ள கலயத்தை வைத்துச் சந்தில்லாமல் சீலைசெய்து உலர்த்திக் கொள்ளவும். ஒரு முழக் குழிதோண்டி அதன் நடுவில் பட்டை இருக்கிற கலயம் மறைந்து போகும்படியான ஒரு குழிதோண்டி அதில் இந்தக் கலயத்தைப் புதைத்து வாய் மட்டம் மண் தள்ளவும். இந்தக் கலயங்களைச் சுற்றிலும் ஆறு அங்குலம் அகலமிருக்க வேண்டியது. மேலிருக்கிற இரண்டு கலயங்களைச் சுற்றிலும் வறட்டியை அடுக்கி நெருப்பிட்டு ஆறின பின்பு எடுத்தால் கார்த்திகைக் கிழங்கு முதலிவைகளின் தைலம் கெந்தகத்திலிறங்கி அந்தக் கெந்தகம் உருகிப் பட்டையில் இறங்கி இருக்கும். இதனை எடுத்துப் பொடித்துத் துணியில் சலித்து ஒரு தாழிச் சட்டியில் போட்டுச் சட்டி வாய்க்கு வேடு கட்டி அதன் விலாவில் துவாரஞ் செய்து இரண்டரைப்பலம் சாம்பிராணியைத் தூள் செய்துவைத்துக் கொண்டு புளியம் புறணி நெருப்பில் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு எழும்பும் புகையை அந்தப் பானையைச் சாய்த்துப் பிடித்துப் பக்கத்திலுள்ள துவாரத்தின் மூலம் சட்டிக்குள் செல்லும்படிச் செய்யவேண்டியது. இவ்விதம் செய்வதால் மேற்படி மருந்தில் புகை படுவதுடன் கொஞ்சம் பதங்கமும் ஏறி இருக்கும். குளிர ஆறின பின் இந்த மருந்தை எடுத்துப் பளிங்கு மூடியுள்ள குப்பியில் பத்திரப்படுத்தவும்.

குறிப்பு:— சாம்பிராணிப் புகையைக் காண்பித்துக் காண்பித்துத் தொல்லைப் படுவதைக் காட்டிலும் கடையில் விற்கும் சாம்பிராணிப்பதங்கத்தில் $2\frac{1}{2}$ வராகன் எடை சேர்த்து அரைத்து உபயோகித்தால் சிறப்பான குணத்தைத் தரும்.

அளவு:— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து:**—தேன், நெய், இளக வகைகள் முதலானவைகளாம்.

**தீரும் நோய்கள்:**— மேகரணம், கிரந்தி, மேகவாயு, சூலை ஆகியவை தீரும்.

**மருத்துணவு:**— இச்சாபத்தியம்.

## 1131. கற்பூரவள்ளி நெய்

கற்பூரவள்ளியிலை, தூதுவளையிலை, செம்முள்ளியிலை, மணித்தக்காளியிலை, குப்பைமேனியிலை, சங்கிலை, கலியாணமுருக்கிலை, இண்டிலை, ஆடாதோடையிலை இவற்றின் தனித்தனிச் சாறு வகைக்கு 4 பலம் (140 கிராம்), பசுவின் நெய் 8 பலம் (280 கிராம்).

வெட்பாலை அரிசி, அரிசித்திப்பிலி, சிற்றரத்தை, சதகுப்பை, மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், கடுகு, கருஞ்சீரகம், தாளிசப்பத்திரி இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இலவங்கம் 2 வராகன் எடை (7 கிராம்).

**செய்முறை:**— கடைச் சரக்குகளையெல்லாம் தூள் செய்து சாறுவகைகளையும் நெய்யையும் ஒன்றாகக்கலந்து காய்ச்சிப் பதத்தில் மேற்படி தூள்களைத் தூவி இறக்கிப் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— $\frac{1}{2}$ முதல் 1 தேக்கரண்டி.

**தீரும்நோய:**— இருமல், காசம், சுவாசம், வாயு ஆகியவை தீரும்.

**மருத்துணவு :**— இச்சாபத்தியம்.

## 1132. கற்பூரவள்ளி சர்பத்து

கற்பூரவள்ளிக்காடி 16 பலம் (560 கிராம்), சர்க்கரை 12 பலம் (420 கிராம்), இவ்விரண்டையும் கலந்து வடிகட்டி ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு ஏலப்பொடி 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம், போட்டு 10 நாள்வரை நாளும் வெய்யிலில் வைத்து எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 2 முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை

**தீரும்நோய்:**— இருமல், சுவாசம், இரைப்பிருமல், இரைப்பு முதலியவை தீரும். கபநோய்களெல்லாம் குணமாகும்.

## 1133. போடுதலைச் சூரணம்

பொடுதலைக்காயை உலர்த்தி வறுத்திடித்ததூள் 1 பலம் (35 கிராம்), மிளகு, மேற்றோல் சீவின சுக்கு, அரிசித்திப்பிலி, நற்சீரகம் மஞ்சள்கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி,

கறிவேப்பிலை உலர்த்தினது, குரோசானியோமம் இவற்றின் தனித் தனித் தூள் வகைக்கு ½ பலம் (17½ கிராம்), இலவங்கம், சாதிக் காய், சாதிப்பத்திரி இவற்றின் தனித்தனித்தூள் வகைக்கு 3 வரா கன் எடை (10½ கிராம்).

**செய்முறை:**— அனைத்துத்தூள்களையும் ஒன்றாகக் கலந்து ஒரு மணி நேரமரைத்து குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் 2 வராகன் எடை.

**துணைமருந்து:**— நல்லெண்ணெய், நெய் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்:**— பித்தவாயு, தொடர்கழிச்சல், அனல்மந்தம், வயிற்றுப்பொருமல், வயிற்றிரைச்சல், மந்தக்கழிச்சல் ஆகியவை தீரும்.

## 1134. திராட்சைச் சூரணம்

விதை நீக்கின திரட்சைப்பழம், விதை நீக்கின பேரீச்சம்பழம் இவ்விரண்டும் வகைக்கு 1¼ பலம் (43¾ கிராம்), (இவ்விரண்டை யும் தனித்தனி அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும்)அதிமதுரம், கொத்துமல்லிவிதை, ஏலரிசி, இலவங்கம், வெட்டிவேர், நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், இலவங்கப்பத்திரி, நேற்பொரி, பருத்திவிதைப்பருப்பு, யானைத்திப்பிலி, சந்தனத்தூள், மூங்கிலுப்பு, தக்கோலம், இலவங்கப்பட்டை, விழலரிசி இவை வகைக்கு ¼ பலம் (8¾ கிராம்), மேற்றோல் சீவின சுக்கு ¾ பலம் (26¼ கிராம்), கண்டந்திப்பிலி ½ பலம் (17½ கிராம்), செவ்வியம் ½ பலம் (17½ கிராம்), பறங்கிப்பட்டை ¾ பலம் (26¼ கிராம்), (இவைகளைத் தனித்தனியே இளவறுப்பாக வறுத்துஒன்றாகக்கலந்து இடித்து துணியில் சலித்துக் கொள்ளவும்).

**செய்முறை:**— திரட்சைப்பழம் முதலிய எல்லாவற்றையும் ஒன் றாகக் கலந்து சமனெடை சர்க்கரையைக் கலந்து பீங்கான் பாத் திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் 2 வராகன் எடை.

**துணைமருந்தும் தீரும்நோயும்:**— தேனில் கலந்துண்ண, கக்கல், பித்த பிரமை, வாய் நீருறல், விக்கல் ஆகியவை தீரும்.

வெந்நீரில் கலந்து உட்கொள்ள மலம் இளகும். பசித் தீபன முண்டாகும்.

நெய்யில் கலந்து உட்கொள்ள வறட்சயம், தாகம், பித்த பாண்டு, சுவையின்மை ஆகியவை தீரும்.

மாத்துணவு :— உடல் இயல்பு, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

## 1135. மதனகாமேசுரச் சூரணம்

விதை நீக்கின திராட்சைப்பழம் 3 பலம் (105 கிராம்), அபின், முருங்கை விதை, வெள்ளைச்சாரணை வேர்ப்பட்டை, அமுக்குராக் கிழங்கு, நெரிஞ்சிமுள், குங்குமப்பூ, பூனைக்காலி விதை, ஏலரிசி, சன்னலவங்கப்பட்டை, பெருலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப் பூ இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சர்க்கரை 40 பலம் (1400 கிராம்).

செய்முறை :— அபினைக் கொஞ்சம் நீர் விட்டு அரைத்து வைத்துக் கொள்ளவும். குங்குமப் பூவையும் நீர் விட்டுத் தனியே அரைத்து வைத்துக் கொள்ளவும். திராட்சைப் பழத்தை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும். மற்றச் சரக்குகளையும் இடித்துத் தூள்செய்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து சர்க்கரையையும் கூடச் சேர்த்து நன்றாகக் கலந்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 வராகன் எடை.

தீரும்நோய் :— உடல் வளமை உண்டாகும். தாது விருத்தி, விந்து விருத்தி, அழுத்தம் ஆகியவைகளும் உண்டாகும். விந்து வெளிப்பாடும் தீர்ந்து புணர்ச்சி சத்து உண்டாகும்.

## 1136. திராட்சை நெய்

(அ) விதை நீக்கின திராட்சைப் பழம் 15 வராகன் எடை ($52\frac{1}{2}$ கிராம்), (இதனை வெண்ணெய் போலரைத்து தண்ணீரில் கலக்கி மெல்லிய துணியில் வடிகட்டிக்கொள்ள வேண்டியது). அரிசித்திப்பிலி, அதிவிடயம், கடுகுரோகணி, சந்தனம், சிற்றாமல்லி, பேராமல்லி, நெல்லிமுள்ளி, உலர்த்தின முருங்கைப்பூ, கருவேப்பிலைக்கு, நன்னாரி வேர், வில்வ வேர், கீழ்க்காய் நெல்லி வேர், விலாமிச்சம் வேர், இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை. பசுவின் பால் $\frac{1}{2}$ படி, பசுவின் நெய் $\frac{1}{2}$ படி.

(ஆ) குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், கற்கண்டு வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை.

செய்முறை :— (அ)விலுள்ள சரக்குகளை இடித்துத் தூள் செய்து துணியில் சலித்துப் பசுவின் பாலைத் தெளித்து வெண்ணெய் போலரைத்து மிகுதியான பாலில் கரைத்து முன் சித்தப்படுத்தி இருக்கிற திராட்சை ரசத்தில் கலந்து, நெய்யையும் சேர்த்து மெது வாயெரித்துக் கடுகுதிரள் பதத்தில் (ஆ) விலுள்ளதில் குங்குமப்

பூவில் கொஞ்சம் பாலைவிட்டு அதை வெண்ணெய்போல் அரைத்தும் மற்ற இரண்டையும் தூள் செய்தும் மேற்படி நெய்யில் கலந்து குளிர ஆறின பின்பு வடிகட்டாமல் கடுகுடன் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவேண்டியது.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை. கடுகுடன் உட்கொள்ள வேண்டியது.

தீரும்நோய் :— இரைப்பிருமல், இருமல், சயம், பித்த நோய், காசம் ஆகியவை தீரும். இளைத்த உடல் வளமையாகும்.

குறிப்பு:— இதனுடன் பவழ பற்பம், முத்து பற்பம், சிலாசத்து பற்பம் ஆகியவைகளைச் சேர்த்து உபயோகித்தால் சிறப்பான குணம் உண்டாகும்.

## 1137. திராட்சாதி மாத்திரை

(அ) விதை நீக்கின திராட்சைப் பழம் 2 பலம் (70 கிராம்), மேற்றோல் சீவின சுக்கு, சிற்றரத்தை, தேசாவரம், சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், வால் மிளகு, இலவங்கப் பட்டை, அதிமதுரம், ஏலரிசி, இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). திராட்சைப் பழம் தவிர மற்றவைகளை இடித்துத் தூள் செய்து துணியில் சலித்துக்கொள்ளவும்.

(ஆ) குங்குமப் பூ 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கற்கண்டு 2 பலம் (70 கிராம்).

செய்முறை :— (ஆ)விலுள்ள குங்குமப் பூவைக் கல்வத்திலிட்டு மைபோல் அரைத்துக் கற்கண்டைச் சேர்த்து மைபோல் அரைத்துப் பின்பு (அ)விலுள்ள திராட்சைப்பழத்தைச் சேர்த்து அரைத்து வெண்ணெய்போலானபின்பு மேற்படி தூள்களைச் சிறுகச் சிறுகத் தூவிக்கொண்டே அரைத்து எல்லாத் தூள்களும் சென்ற பின்பு ஒரு மணி நேரமரைத்துச் சுண்டைக்காய் அளவுள்ள மாத்திரைகள் செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் $1\frac{1}{2}$ மாத்திரை.

தீரும்நோய் :— எல்லாவித வாயுக்கள், திரிதோடவிகற்பங்கள், இரைப்பிருமல், இருமல், கபநோய் முதலியவை தீரும்.

மருத்துணவு :— நோய் வலிமைக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 1138. திராட்சாதி மதூரகம்

(அ) விதையுள்ள திராட்சைப் பழம் 40 பலம் (1400 கிராம்), (இதனை விதை நீக்கிக் கொதிக்கிற வெந்நீரில் போட்டு இரண்டு மூன்று நிமிடம் தாமதித்து நன்ருக அலம்பி அதன் மீதுள்ள தேன் பசையை நீக்கி, அம்மியில் மைபோல அரைத்துப் பிறகு சிறுகச் சிறுக கல்வத்தில் போட்டு தண்ணீரைச் சிறுகச் சிறுகத் தெளித்து அரைத்து உரத்த துணியில் வைத்துப் பிழியவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி அரைத்துச் சத்து புறப்படுகிறவரையில் பிழிந் தெடுத்துத் தனியே வைத்துக்கொள்ளவும்.

(ஆ) காவுஜுபான் 12 வராகன் எடை (42 கிராம்), பனப்ஷா 12 வராகன் எடை (42 கிராம்), ரோஜா மொக்கு 20 வராகன் எடை (70 கிராம்), சீமை நறுவிலிப் பழம் 50. இந்த நான்கையும் சிதைத்து முக்கால்படி தண்ணீரில் போட்டு அடுப்பேற்றிக் காய்ச் சிக் கால்படி தண்ணீராகச் சுண்ட வைத்து இறக்கி இளஞ்சூட் டுடன் பிசைந்து வடிகட்டிக் கொள்ளவும்.

(இ) குல்கந்து 48 வராகன் எடை (168 கிராம்). இதனை வெண்ணெய்போல் அரைத்துக் கொள்ளவும்.

(ஈ) சீனிச் சர்க்கரை 50 பலம் (1750 கிராம்).

**செய்முறை**:— மேற்கூறிய அ, ஆ, இ, ஈ - யிலுள்ளவைகளை எல்லாம் ஒன்ருகக் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாகு பதத்தில் இறக்கி ஆறினபின்பு பளிங்குக்குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**குறிப்பு** :— நற்பவளம், முத்து, கஹறுபா இவைகளில் இயன்ற அளவு ஒரு வராகன் எடை முதல் மூன்று வராகன் எடை வரையில் சேர்த்து உபயோகிக்க வேண்டியது அசல் முறை.

**அளவு** :— 3 முதல் 15 வராகன் எடை.

**தீரும்நோய்** :— பலவித வாயுநோய்கள், கபநோய்கள், மல பந்தம், மலச்சிக்கல் முதலிய அநேக நோய்கள் தீர்ந்து குருதி தூய்மை, குருதி விருத்தி, உடல்வளமை, உடல்நலம், உடல்சுகம், உடல்வலிமை முதலியவைகள் உண்டாகும்.

## 1139. முசுமுசுக்கை இளகம்

முசுமுசுக்கைச் சாறு $\frac{1}{2}$ படி, வெல்லம் 3 பலம் (105 கிராம்), மேற்ரேல் சீவிய சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, ஏலரிசி, நற்சீரகம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). இந்த ஐந்து சரக்கையும் இடித்துத் தூள்செய்து துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும்.

**செய்முறை** :— முசு முசுக்கைச் சாற்றில் வெல்லத்தைக் கரைத்துப் பாகு செய்து பாகு பதத்தில் மேற்படி தூள்களைக் கொட்டிக் கிளறி இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் வைத்து எட்டு நாள் தானியப்புடம் வைத்து எடுத்துப் பத்திரப் படுத்தவும்.

**அளவு** :— $1\frac{1}{4}$ முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து** — தேன், நெய் ஆகியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— வாயுத்திரட்சி, வாயுக்கட்டி, குன்மக்கட்டி, குன்மநோய், வயிற்றிலுள்ள வாயுவுகள், பைத்தியம், எரிகுன்மம், பித்த நோய் முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு** :— உடல்வலிமை, நோய்வலிமை ஆகியவை களுக்குத் தகுந்தபடி எளிதில் செரிக்கும் உணவு, சீக்கிரம் செரிக் கத்தக்க பண்டங்கள், பழவகைகள் ஆகியவைகளை உபயோகிக்க வேண்டியது.

## 1140. சந்தனாதிச் சூரணம்

பன்னீர் விட்டிழைத்து உலர்த்தின சந்தனம் 5 பலம் (175 கிராம்), கோட்டம், நன்னாரி வேர், வால் மிளகு, சீந்திற் சருக் கரை, மஞ்சள், இலுப்பைப் பூ, அதிமதுரம், கிச்சிலிக் கிழங்கு, ஏலரிசி, தாமரை வளையம், நெய்தற் கிழங்கு, மரமஞ்சள், விலா மிச்சம் வேர், நெல்லிமுள்ளி இவற்றைத் தனித்தனியே இடித்த தூள்கள் வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), திராட்சைப் பழம், கசகசா இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). இவ்விரண்டையும் தனித் தனியே கொஞ்சம் தண்ணீர் விட்டரைத்து எடுத்துக்கொள்ளவும். பச்சைக் கற்பூரம் $1\frac{1}{4}$ வராகன் எடை. இதனைப் பொடித்துக் கொள்ளவும்.

**செய்முறை**: — இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு மணிநேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு பீங்கான் பாத்திரத் தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**: — $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை.

**துணைமருந்து** :— நெய், வெண்ணெய், தேன், பசுவின் பால், இளநீர், வெள்ளரிப் பிஞ்சுச்சாறு, வெள்ளரிவிதையை அரைத்துப் பிழிந்த பால், பசுவின் மோர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— எல்லாவகைப் பிரமேகங்கள், சீழ்மேகம், இரத்தமேகம், தந்திமேகம் முதலிய இருபத்தொருவகை மேகங்

களும், இரத்தகாசம், இரத்தங்கக்கல், இரத்த வாந்தி, பித்தநோய்கள், பித்த வாந்தி ஆகியவைகளும் தீர்வதோடு நீரருகல், நீரெரிச்சல், நீர்க்கடுப்பு, நீர்ப்பை அழலை முதலிய நீர்ப்பை, நீர்த்தாரை நோய்களும் தீரும். இன்னும் சமயோசிதம்போல் அநேக நோய்களுக்கு உபயோகிக்கலாம். நாற்பத்தெட்டுமணி நேரத்துக்குள் குணப்படுத்தும் சந்தனமண்டியென்னும் மருந்தைப் பார்க்கிலும் இது எத்தனையோ பங்கு மேலான குணத்தைத் தரும். இதன் சிறந்த குணத்தை இதனைச் செய்து உபயோகப்படுத்துபவர்கள் நன்கு உணருவார்கள்.

மருத்துணவு :— நோய்வலிமைக்குத் தகுந்தபடி உப்பு, புளிப்பு, புகை முதலியவைகளை நீக்கிவைப்பது உத்தமம்.

## 1141. சந்தன நெய்

பசுவின் பால் 2 படி, கடையில் விற்கும் சந்தன அத்தர் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), வெடியுப்பு 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), படிக்காரம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்),

செய்முறை :— பாலில் மேற்படி சந்தன அத்தரைச் சேர்த்துக் காய்ச்சிப் பிரைக் குற்றிக் கடைந்து வெண்ணெயெடுத்துக் காய்ச்சி நெய்யாக்கி மேற்படி இரண்டு சரக்குகளையும் பொடித்து அதிற் கலந்து பளிங்குக்குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு :— 1 முதல் 2 வராகன் எடை.

தீரும்நோய் :— பிரமேகம், பிரமேக ஒழுக்கு, நீரருகல், நீரெரிச்சல் முதலிய நீர்த்தாரை நோய்கள் தீரும்.

குறிப்பு :— இந்த நெய்யை இசுபகோல் கோழையுடன் கலந்து நீர்த்தாரையில் நாளுக்கு இரண்டு தடவை பீச்சிட்டு வந்தால் மேற்கண்ட நோய்கள் சீக்கிரம் தீரும்.

## 1142. சிறுவில்வாதி இளகம்

(அ) வில்வவேர்ப்பட்டை 20 பலம் (700 கிராம்). இதனைத் தரித்திடித்து, ஒரு பாண்டத்திலிட்டு நாலுபடி தண்ணீர்விட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிவைத்துக் கொள்ளவும், வெல்லம் 20 பலம் (700 கிராம்), துருஞ்சிப் பழச் சாறு அல்லது எலுமிச்சம் பழச்சாறு 10 பலம் (350 கிராம்), இஞ்சிச்சாறு 10 பலம் (350 கிராம்),

(ஆ) ஏலரிசி, இலவங்கம், மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இலவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, கொத்துமல்லி விதை, சாதிக்காய், நெல்லிமுள்ளி, பருத்திவிதைப் பருப்பு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், நெற்பொரி இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இந்தச் சரக்குகளை இடித்து துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும். தேன் 8 பலம் (280 கிராம்.)

**செய்முறை** :— (அ)விலுள்ள திரவங்களையெல்லாம் ஒன்றுகக் கலந்து அதில் வெல்லத்தைக் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாகுபதத்தில் (ஆ)விலுள்ள தூளைக் கொஞ்சம் கொஞ்ச மாகத் தூவிக் கிண்டிக் கிளறி எல்லாம் நன்ருகக் கலந்த பின்பு கீழிறக்கித் தேனை விட்டு நன்ருகக் கலந்ததும் குளிர ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை.

**தீரும்நோய்** :— நாற்பதுவகைப் பித்த நோய்கள், கக்கல், சுவையின்மை, அனல் மந்தம், வயிற்றுப் பொருமல், வயிற்றிரைச் சல், பாண்டு, மஞ்சள் நோய் முதலிய நோய்கள் தீரும்.

**மருத்துணவு** :— நோய் வலிமை, உடல் வலிமை ஆகியவை களுக்குத் தகுந்ததுபோல் இலகு ஆகாரம், சத்துள்ள ஆகாரம் ஆகியவைகளை உபயோகிக்கவேண்டியது.

## 1143. மகாவில்வாதி இளகம்

(அ) வில்வ வேர்ப்பட்டை 10 பலம் (350 கிராம்), வில்வப் பழம் நடுத்தரமானவை எண் 10, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், குட்டிவிளா வேர்ப்பட்டை, பெருவிளா வேர்ப்பட்டை, வாகை வேர்ப்பட்டை, நிலவாகை வேர்ப்பட்டை, சிறுகாஞ்சோரி வேர்ப் பட்டை, பெருகாஞ்சோரி வேர்ப்பட்டை, பாதிரி வேர்ப்பட்டை, இலந்தைவேர்ப் பட்டை, முன்னை வேர்ப்பட்டை, நன்னரி வேர், தூதுவளைச் சமூலம், கண்டங்கத்திரி சமூலம், முசுமுசுக்கைச் சமூ லம், தேற்றுன் கொட்டை, நெல்லிமுள்ளி இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்). சீயக்காயிலை ஈர்க்கு, நாரத்தையிலை ஈர்க்கு, எலுமிச்சையிலை ஈர்க்கு, கருவேப்பிலை ஈர்க்கு, நெல்லி ஈர்க்கு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

(ஆ) வல்லாரை சமூலச்சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, கற்பூரவள்ளி இலைச்சாறு, கருப்பஞ் சாறு, இஞ்சிச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவை வகைக்கு 16 பலம் (560 கிராம்),

வில்வப்பழச்சதை, விளாம்பழச்சதை வகைக்கு 2 பலம் (70 கிராம்).

(இ) புளியாரைச் சாறு, மாதுளம்பழச் சாறு, பம்பிளிமாஸ் சாறு, துருஞ்சி நாரத்தம்பழச் சாறு, தமரத்தம்பழச் சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பருத்திவிதைப் பால் இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்), பழைய வெல்லம் 30 பலம் (1050 கிராம்).

(ஈ) மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி, கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, கண்டந் திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை, செவ்வியம், நற்சீரகம், பெருஞ்சீரகம், சிற்றரத்தை, பேரரத்தை, ஓமம், குரோசானி ஓமம், ஏலரிசி, இலவங்கம், இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, யானைத் திப்பிலி, கொத்துமல்லி, அதிமதுரம், கேக்கு விதை, கோட்டம், வால்மிளகு, மூங்கிலுப்பு, தக்கோலம், பொரித்த வெண்காரம், இந்துப்பு, செஞ்சந்தனம், சிறு தேக்கு, சிறுநாகப் பூ, பெருலவங்கப் பட்டை, தேவதாரம், இலுப்பைப் பூ, தாளிசப்பத்திரி, சடாமாஞ்சில், அதிவிடயம், அக்கிராகாரம், அமுக்குராக் கிழங்கு, பறங்கிச் சக்கை, வெட்பாலை அரிசி, வாலுமுளையரிசி, விழலரிசி, திராட்சைப்பழம், பேரீச்சம் பழம், கண்டந் திப்பிலி, நற்சந்தனம் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்). இவை எல்லாவற்றையும் இடித்துத் தூள் செய்து துணியில் சலித்து வைத்துக்கொள்ளவும். நெய் 16 பலம் (560 கிராம்), தேன் 16 பலம் (560 கிராம்), கற்கண்டுத் தூள் 10 பலம் (350 கிராம்).

செய்முறை :— (அ) விலுள்ளவைகளை நன்றாயிடித்துச் சிதைத்து ஒரு மண்பாண்டத்திற் போட்டுப் பதினாறுபடி தண்ணீர்விட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டக் காய்ச்சி இளஞ் சூட்டுடன் பிசைந்து இறுத்து வடிகட்டின குடிநீரில் (ஆ) விலுள்ளவைகளைச் சேர்த்துக் கரைத்து வடிகட்டிக் காய்ச்சிக் குழம்புப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும். (இ) யிலுள்ள திரவங்களில் வெல்லத்தைக் கரைத்து வடிகட்டிக் காய்ச்சிப் பாகுபதத்தில் முன் சித்தப்படுத்தின குழம்பையும் சேர்த்து (ஈ) யிலுள்ள தூள்களை சிறுகச் சிறுகத் தூவி நன்றாகக் கிளறி நெய்யையும் தேனையும் விட்டு எல்லாம் கலக்கச் செய்து, கீழிறக்கிக் கற்கண்டுத் தூளையும் தூவிக் குளிர ஆறின பின்பு பீங்கான் சாடியில் வைத்து வாய் பந்தனம் செய்து ஒரு மாதம் வரையில் தானியப் புடம் வைத்துப் பின்பு எடுத்து உபயோகிக்க வேண்டியது. இதனுடன் அயச்செந்தூரம், காந்தச் செந்தூரம், சொர்ணலோகச் செந்தூரம் ஆகியவைகளில் ஒன்றை நோய் வலிமைக்குத் தகுந்தபடி வராகன் எடை ஒன்று.

இரண்டு, மூன்று வரையில் சேர்த்து உபயோகித்தால் சிறப்பான குணத்தைத் தரும்.

**அளவு :—** *1 முதல் 2 வராகன் எடை.*

**தீரும்நோய் :—** நாற்பது வகைப் பித்த நோய்கள், காமாலை நோய்கள், பித்த பாண்டு முதலிய பாண்டு நோய்கள், பித்த சோகை முதலிய சோகை நோய்கள், பித்த குன்மம், வாந்தி குன்மம், கக்கல், பிரமை, வறட்சி, அட்ட குன்மம், சயம், சுரம், உட்காய்ச்சல், வாயு, அனல் மந்தம், என்பு சுரம், வாந்தி, மிகு தாகம், சோபம், இளைப்பு, விக்கல், உணவேலாமை, சுவை யின்மை, வாய் நீரூறல், நெஞ்செரிவு, கை கால் எரிவு, இருமல், வெட்டைச் சூட்டினுல் உண்டாகும் புகைச்சல், கபம் விழுதல், அறுவகைத் தொடர் கழிச்சல், பெரும்பாடு ஆகியவை தீரும். உடல் வளமை, குருதி விருத்தி, தாது விருத்தி உண்டாகும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம்.

**குறிப்பு :—** இது பார்வைக்குக் கடினமாகத் தெரிந்தாலும் கொஞ்சம் பிரயாசைப்பட்டுச் செய்தால் அநேகம் சுகுணங்களுண் டாகும். இது பல தடவைகள் செய்து அனுபவப்பட்டிருக்கிறது.

## வல்லாதகித் தூய்மை

தேவையான சேராங் கொட்டையை வாங்கி மூக்கு வெட்டா மல் சாணியைக் கரைத்து வடிகட்டி அதில் போட்டு ஒரு சாம நேரம் அடுப்பின்மீது வைத்து எரித்து தண்ணீர் விட்டுக் கழுவி வெய்யிலில் உலர்த்தி முன் போலவே சாணிப் பாலில் போட்டுக் காய்ச்சி உலர்த்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவை செய்து கொள்வது ஒரு வகைத் தூய்மையாம். இவ்விதம் செய்து புளியிலைச் சாறு, பசுவின் பால், சோற்றுக் கற்றாழைச் சாறு, இளநீர் ஆகிய ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நாள் ஊற வைத்து ஒவ்வொரு தடவையும் அவித்துக்கொண்டால் இன்னும் சிறப்பாக இருக்கும். இந்தக் கொட்டைகளை அரைத்து மருந்து களுடன் சேர்ப்பதினுல் இவற்றின் மேற்றோல்களும் உட்பருப்பு களும் சேர ஏதுவாகிறது. இவற்றால் பல நோய்கள் தீருமென்பது நிச்சயமே. ஆனுல், அவ்வாறு அரைப்பதில் எத்தனைநாள் இடித் தாலும் அரைத்தாலும் அவற்றின் ஓடுகள் அறவே அரைபடுகிற தில்லை. இந்த ஓட்டினுல் அதிகச் சூடு அடைவதற்கு ஏதுவாகிறது. ஆகையால் பின்காணும் முறைப்படி எண்ணெயெடுத்து உபயோ கிப்பது சிறப்பானதாகும்.

## வல்லாதகித் தூய்மை (வேறு)

சேராங்கொட்டை தேவையான அளவு. இதற்கு மூன்று பங்கு புளியிலை. இவ்விரண்டையும் சேர்த்து மண்பாண்டத்திற் போட்டு எட்டுப் பங்கு தண்ணீர் விட்டு அடுப்பேற்றி எட்டில் ஒரு பாகம் நீர் சுண்டின பின் எடுத்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்யின் நல்ல தூய்மையாகும்.

## வல்லாதகித் தைலம்

மேற்கண்டவைகளில் ஒரு வகையாகத் தூய்மை செய்த சேராங்கொட்டையை பாகத்திற் சொல்லியிருக்கிற அளவு நிறுத்தெடுத்து அதனை இரண்டாக வெட்டிப் பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி அதிலுள்ள எண்ணெய் எல்லாம் புறப்பட்ட பின்பு கொட்டைகளை எடுத்து தண்ணீரில் போட்டுக் காய்ச்சி கொட்டையின் சிறிதும் எண்ணெயில்லாமல் புறப்பட்ட பின்பு கொட்டைகளை நீக்கி விட்டு அந்தத் தண்ணீரையும் பாலையும் சேர்த்து அதில் சர்க்கரை முதலியவைகளைச் சேர்த்து இளகம் முதலியவைகளாகச் செய்து உபயோகிக்கலாம்.

## மேற்படி (வேறு)

மேற்கண்ட தூய்மைகளில் ஒருவகையாகத் தூய்மை செய்த சேராங்கொட்டையை முறைப்படி குழித்தைலமிறக்கி அந்தத் தைலத்தை மற்ற சரக்குகளுடன் சேர்த்து இளக முதலியவைகள் செய்துகொள்ளலாம். சுமார் ஒரு பலம் கொட்டைக்குக் காற் பலம் தைலம் போதுமானது. இந்தக் கணக்கின்படி முறையில் சொல்லியிருக்கிற சேராங்கொட்டைக்குத் தகுந்தபடி தைலத்தைக் கணக்கு செய்து கொள்ள வேண்டியது.

## 1144. வல்லாதகி இளகம்

தூய்மைசெய்த சேராங்கொட்டை 12 பலம் (420 கிராம்), தேன் 12 பலம் (420 கிராம்), பழைய நாட்டுச்சர்க்கரை 12 பலம், பசுவின் பால் 1 படி, இலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், நெல்லிமுள்ளி, குரோசானி ஓமம் இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), யானைத்திப்பிலி $1\frac{3}{4}$ வராகன் எடை, மேற்றோல் சீவின சுக்கு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), சாதிப்பத்திரி $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), இலவங்கம், சாதிக்காய், மாசிக்காய், ரூமிமஸ்தகி, நீர்முள்ளி விதை, மஞ்சள் கடுக்காய்த் தோல் இவை வகைக்கு $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்).

**செய்முறை** :— சேராங் கொட்டையை அம்மியில் வைத்து மெதுவாகப் பொடித்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுகத் தெளித்து வெண்ணெய் போலரைத்து மிகுந்த பாலில் இதனைக் கரைத்துத் தேனையும், சர்க்கரையையும் சேர்த்து அடுப்பேற்றி மூன்று விறகால் தீபம் போல் எரித்துப் பாகு போல் வரும் பதத்தில் முன் சொல்லியிருக்கிற சரக்குகளைத் தனித் தனியே இடித்துத் துணியில் சலித்து ஒன்றாகக் கலந்து தூவிக் கிண்டி இளகிய பதம் வந்த பிறகு தீயை எடுத்து விட்டு ஆவி போகாமல் மூடி வைத்துத் தானே குளிர ஆறின பின்பு எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{4}$ வராகன் எடை.

**தீரும்நோய்** :— மேக வகைகள், பவுத்திரம், கண்டமாலை, சூலை, புண், பறங்கிப் புண், சொறி, குட்டம், யானைச் சொறி, தவளைச் சொறி, பேய்ச் சொறி, இலிங்கப் புற்று, அல்குல் புற்று, அல்குல் சூலை, கை கால் முடக்கு, சூலை, கருங்குட்டம், கால் வடிப்பு ஆகியவை தீரும். ஆயிரம் நோய்களுக்கு இதைக் கொடுக் கலாம்.

**மருத்துணவு** :— சேவல் இறைச்சி, செம்மறியாட்டிறைச்சி, அகத்திக் கீரை, பறங்கிக் காய், பூசனிக்காய், தேங்காய் ஆகிய இவைகளை நீக்கவும்.

கத்தரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, முளைக் கீரை, அரைக் கீரை, துவரம் பருப்பு, பச்சைப் பருப்பு, புடலங் காய், பீர்க்கங்காய், நெய், பால், வெள்ளாட்டு வற்றல் ஆகிய இவைகள் ஆகும்.

நோய் பலத்திற்குத் தக்கபடி நாற்பது நாட்கள் சாப்பிட வேண்டும். நோய் அதிக பலமாயிருந்தால் இடையில் ஒரு மாதம் விட்டு மறுமுறை சாப்பிடவும். இவ்விதம் மூன்று முறை சாப்பிட் டால் ஐந்தவித்தான் அருளால் எத்தனை நாட்பட்ட நோயாயிருந் தாலும் தீரும்.

குறிப்பு :— மேற்கண்ட பாகத்தைக் கீழ்க்காணும் இரண்டு வகையாகச் செய்து உபயோகிக்கலாம். மேலே சொல்லியிருக் கிறபடி சேராங் கொட்டையை எவ்வளவு அரைத்த போதிலும் அது அரைபட்டு மசிகிறதுமில்லை. அப்படி மசிந்த போதிலும் அதற்கு இயல்பாக இருக்கிற மிகு வறட்சி குணம் நீங்குகிறது மில்லை. இந்த இரண்டு குணங்களை நீக்கவும் அதிக ருசிகரமாக இருப்பதற்காகவும் குணத்திலும் அதிகச் சிறப்பாக இருப்பதற்காக வும் கீழ்க்காணும் முறைகளே உத்தமமானவை. அவையாவன :

முதலாவது :— மேற்கண்டபடி புளியிலையில் தூய்மை செய்த சேராங் கொட்டையை விழிப்புடன் நான்காகத் துண்டித்து இரண்டுபடி பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி எண்ணெயெல்லாம் கக்கிக் கொட்டைகள் மிதந்தவுடன் அவைகளை எடுத்து ஒரு படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி அறவே தைலமெல்லாம் கக்கின பின்பு அவற்றை நீக்கிவிட்டு அந்தப் பாலுடன் தண்ணீரைக் கலந்து சர்க்கரையையும் தேனையும் சேர்த்துக் கைவிடாமல் துழாவி வந்து பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தின தூள்களைச் சிறுகத் தூவிக் கிண்டிக் கிளறி மேலே சொல்லிய பாகப்படி சித்தப் படுத்திக் கொள்வதேயாம். இன்னும் நோயாளி உடல்வலிமை உள்ளவனுயிருந்தால் பன்னிரண்டு பலம் சேராங் கொட்டைக்குப் பதிலாகப் பதினெட்டு அல்லது இருபத்து நான்கு பலம் சேராங் கொட்டையைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனல் இது உடல் வலிவுள்ளவர்களுக்கே ஆகும். சாதாரணமானவர்களுக்கு மேற்சொன்ன அளவே போதுமானது. இதனை அதிகப் படுத்துவதும் குறைப்பதும் மருத்துவர்களின் புத்தி நுட்பத்தையும் அனுபவத்தையும் சார்ந்ததாம்.

இரண்டாவது :— முறைப்படி இறக்கின சேராங்கொட்டைக் குழித் தைலம் 3 பலம். இதனை இரண்டு படி பசுவின் பாலில் விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சித் துழாவிக் கொண்டேயிருந்து அரைப் பாகம் சுண்டினவுடன் சர்க்கரையையும், தேனையும் சேர்த்துக் கை விடாமல் துழாவிக்கொண்டே காய்ச்ச வேண்டும். துழாவாவிட்டால் திரண்டு கட்டியாகிவிடும். காய்ச்சிப் பாகு பதத்தில் மேற்படி தூள்களைச் சிறுகத் தூவிக் கிண்டிக் கிளறி முன் பாகப்படி செய்து கொள்வதேயாம்.

## 1145. நரசிம்ம இளகம் (வேறு)

(அ) தூய்மைசெய்த சேராங்கொட்டை 40 பலம் (1400 கிராம்), பசுவின் நெய் 117½ பலம் (4112½ கிராம்), தேன் 35பலம் (1225 கிராம்), சர்க்கரை 70 பலம் (2450 கிராம்), பசுவின் பால் 2 படி.

(ஆ) சீமைச் சதாவரிக் கிழங்கு, கழுவி உலர்த்தின எள்ளு, நெருஞ்சி முள்ளு இவை வகைக்கு 40 பலம் (1400 கிராம்), நிலப் பனைக் கிழங்கு, சீந்திற் சர்க்கரை வகைக்கு 20 பலம் (700 கிராம்), உலர்த்தி இடித்த பாலமுதுக்கன் கிழங்குத் தூள், ஊமத்தம் விதை, கொடிவேலி வேர்ப் பட்டை வகைக்கு 10 பலம் (350 கிராம்), மேற்றோல் சீவிய சுக்கு, மிளகு, அரிசித் திப்பிலி வகைக்கு 8 பலம்

(280 கிராம்), சாதிக்காய், சாதிப் பத்திரி, கிராம்பு, அதிமதுரம், பீதரோகணி வகைக்கு 4 பலம் (140 கிராம்).

**செய்முறை :—** (அ)விலுள்ள சேராங்கொட்டையை நாலாக நறுக்கி நெய்யில் போட்டுக் காய்ச்சி, எண்ணெய் கக்கினவுடன் நெய்யைத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். இந்தக் கொட்டைகளைப் பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சினால் இன்னும் அவற்றிலுள்ள தைலம் புறப்படும். பின்னும் அந்தக் கொட்டைகளை எடுத்துத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி அறவே தைலம் புறப்பட்டபின் அந்தக் கொட்டைகளை நீக்கி விட்டு அந்தத் தண்ணீரையும் பாலையும் கலந்து அதில் சர்க்கரையையும் தேனையும் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் காய்ச்ச வேண்டியது. (ஆ)வில் சொல்லியிருக்கிற சரக்குகளில் எள்ளைத் தவிர மற்றச் சரக்குகளை எல்லாம் இடித்துத் தூள் செய்து ஒன்றாகக் கலந்து சாத்தம்மியில் சிறுகச் சிறுக வைத்து (அ)விலுள்ள பாலைத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவேண்டும். எள்ளை இளவறுப்பாக வறுத்துச் சிறுகச் சிறுக அம்மியில் வைத்து மேற்படி பாலைத் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து முன் சித்தப்படுத்தினதுடன் கலந்து வைத்துக் கொள்ளவேண்டும். முன் அடுப்பிலேற்றி இருக்கும் பாகில், அரைத்த மருந்தைச் சிறுகச் சிறுகப் போட்டு மத்தால் கடைந்து வரவேண்டும். தீயானது சுடரெரிப்பாக (தீபாக்கினியாக) இருக்கவேண்டும். தீ, அதிகமானால் அவுடதம் முறிந்து குணத்தில் விகற்பப்படும். அரைத்த மருந்தெல்லாம் சென்ற பின்பு முன் நெய்யையும் விட்டுச் செம்மையாகக் கிளறி அடுப்பிலுள்ள தீயை நீக்கி விட்டு ஆவி போகாமல் மூடி அடுப்புடன் விட்டுக் குளிர ஆறின பின்பு பீங்கான் சாடியில் போட்டு வாய்ப்பந்தனம் செய்து ஒரு மாதம் வரையில் தானியபுடம் வைத்துப் பிறகு உபயோகிக்கவேண்டும்.

**அளவு :—** 1 முதல் 2 வராகன் எடை.

**துணைமருந்து :—** வங்க பற்பம், தங்க பற்பம், லோக பற்பம், காந்த பற்பம், கெந்தக பற்பம், இரச பற்பம் முதலிய பற்பங்களில் ஒன்றை மேற்படி இளகத்துடன் சேர்த்துச் சாப்பிட வேண்டியது.

**தீரும்நோய் :—** கெர்ப்பமேக நோய், கரப்பான், குட்டம், கிரந்தி, குலைப்புண், பறங்கிப் புண், முடக்கு வாதங்கள், பட்ச வாதம், பாரிசவாயு, கபாலசூலை, மதுமேகம், சலவெட்டை, இரத்த வெட்டை, மஞ்சள் வெட்டை, பித்த வெட்டை, தந்து மேகம், இலிங்கப் புற்று, அல்குல் புற்று, இலிங்க சூலை, அல்குல்

சூலை, கை கால் பிடிப்பு, வெடிசூலை, வெண்குட்டம், கொடிப் பவுத்திரம், பவுத்திரம் முதலிய அநேக நோய்கள் தீரும். இது ஆயிரம் ஆண்டுகளிலிருந்தாலும் கெட்டுப் போகாது. இதனைக் கற்பமாகவும் சாப்பிடலாம். இதனைத் தங்க பற்பத்துடன் சேர்த்து ஆறுமாதம் சாப்பிட்டால் உடல் இறுகி வச்சிர உடலாகி நரை திரை மாறும். இதனைத் தெரிந்தவர் மூலம் கைபாகமாகச் செய்து கொள்ளவேண்டியது. இதன் சிறப்பான குணத்தை இதனைச் செய்து அனுபவிப்பவர்கள் தாம் தாமே தெரிந்து கொள்வார்கள். நாம் அதிகமாக எழுதத் தேவையில்லை.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

## 1146. வல்லாதகி இளகம் (வேறு)

(அ) மேற்சொல்லியபடி சாணிப் பால், புளியிலை, பசுவின் பால், சோற்றுக்கற்றாழைச் சாறு, இளநீர் முதலியவைகளில் தூய்மை செய்த சேராங்கொட்டை 21 பலம் (735 கிராம்), நெய் 40 பலம் (1400 கிராம்), பசுவின் பால் 1 படி, தண்ணீர் 1 படி, நாட்டுச் சர்க்கரை 30 பலம் (1050 கிராம்).

(ஆ) நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த் தோல், பறங்கிப் பட்டை இவை வகைக்கு 10 பலம் (350 கிராம்), (பறங்கிப்பட்டையைத் தூள் செய்து ஒரு பாண்டத்தில் ஒரு படி பசுவின் பாலை விட்டுப் பாண்டத்தின் வாய்க்கு வேடுகட்டி அதன்மீது வைத்து மேற்சட்டி மூடிப் பால் சுண்டும்படி எரித்தெடுத்து நிழலிலுலர்த்தி மறுபடியும்தூள் செய்து சேர்த்துக் கொள்ளவும்.) மேற்றோல் சீவினசுக்கு, சிற்றரத்தை, சடா மாஞ்சில், இலவங்கப் பட்டை வகைக்கு $7\frac{1}{2}$ பலம் ($262\frac{1}{2}$ கிராம்), நிலப்பனைக் கிழங்கு, கடுகு ரோகணி, வெட்பாலையரிசி, சிவனார் வேம்பு வகைக்கு 2 பலம் (70 கிராம்), சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், மிளகு, ஏலரிசி, ஓமம், அரிசித்திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்வியம், கார்போகரிசி, கொத்துமல்லி விதை, வாய்விளங்கம், கருஞ்சீரகம், சித்திர மூலவேர்ப்பட்டை, வாலுழுவையரிசி, அமுக்குராக் கிழங்கு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). (இவற்றைத் தனித் தனியே இடித்துத் தூள் செய்து நிறுத்தெடுத்துக் கொள்ளவும்.)

(இ) குங்குமப் பூ 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), கோரோசனை 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்). (இவற்றைத் தனித் தனியே அரைத்துத் தூள் செய்து வைத்துக் கொள்ளவும்.) தேன் 10 பலம் (350 கிராம்).

**செய்முறை** :— (அ) விலுள்ள நெய்யில் சேராங் கொட்டையை நான்காக வெட்டிப் போட்டு ஒரு மணிநேரம் காய்ச்சி ஆறவிட்டு இளஞ்சூட்டுடன் நெய்யை இறுத்துத் தனியே வைத்துக் கொள்க. இந்தக் கொட்டைகளில் மேற்படி பசுவின் பாலைவிட்டு ஒரு மணி நேரம் காய்ச்சி இறக்கி இளஞ் சூட்டுடன் அந்தப் பாலை இறுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு இந்தக் கொட்டைகளில் ஒரு படி தண்ணீரை விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொட்டைகளிலுள்ள நெய்ப் பசையெல்லாம் வெளிப்பட்ட பிறகு அவைகளை எடுத்து நீக்கிவிட வேண்டியது. இந்தத் தண்ணீருடன் முன் சித்தப்படுத்தின பாலையும் சேர்த்து அதில் சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து பாகு பதத்தில் (ஆ)விலுள்ள தூள்களை ஒன்றாகக் கலந்து அதில் சிறுகச் சிறுகத் தூவி மத்தால் கடைந்து வரவேண்டியது. தூள்களெல்லாம் சென்ற பின்பு நன்றாகக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி (இ)யிலுள்ள தேனை விட்டு நன்றாகக் கிளறிப் பிறகு குங்குமப் பூ, கோரோசனை ஆகியவைகளின் தூள்களைத் தூவி நன்றாகக் கலந்து குளிர ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**துணைமருந்து** :— இதனுடன் இரச பற்பம், கெந்தக வடகம் இவைகளை அனுபானித்துச் சாப்பிட்டால் சிறந்த குணமுண்டாகும்.

**தீரும்நோய்** :— பவுத்திரம், பிளவை, சூலை, குட்டம், கிரந்தி, அரையாப்பு, வாதம், மேகச் சொறி, கண்டமாலை, படர்தாமரை, பறங்கிப் புண், உருத்திரவாயு, குலைமுட்டி, முடக்குவாதம், பிரமிய நோய்கள், பிரமேகங்கள், மேகவூறல் முதலிய மேக சம்பந்தமான அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு** :— இச்சாபத்தியம்.

## 1147. மேக வல்லாதி

(அ) முன் சொல்லியிருக்கிறபடி தூய்மைசெய்த சேராங் கொட்டை 4 பலம் (140 கிராம்), (இதனைக் குழித் தைலமாக இறக்கிக் கொள்வது உத்தமம்.) அல்லது முன்கண்டபடி தூய்மை செய்து இறக்கின சேராங்கொட்டைக் குழித் தைலம் $1\frac{1}{2}$ முதல் 2 பலம். முன் பாகத்திற் சொல்லியிருக்கிறபடி தூய்மைசெய்த பறங்கிப் பட்டை 4 பலம் (140 கிராம்), தான்றிக்காய்த் தோல் சூரணம் 2 பலம் (70 கிராம்), மேற்றோல் சீவினசுக்கு, ஓமம், மிளகு, சீரகம், வாய்விளங்கம், மஞ்சள் கடுக்காய்த் தோல் இவற்

றின் தூள்கள் வகைக்கு 1½ பலம் (52½ கிராம்), தூய்மை செய்த மைசாட்சி 1 பலம் (35 கிராம்). (இதனைக் கல்வத்தில் வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவேண்டியது.) பனைவெல்லம் 16 பலம் (560 கிராம்), முற்றின தேங்காய் 1. (இதனை உடைத்துத் துருவிக் கொள்ளவேண்டும்.)

(ஆ) தூய்மைசெய்த இரசம் 1½ வராகன் எடை, தூய்மை செய்த இலிங்கம் 1½ வராகன் எடை, தூய்மைசெய்த நெல்லிக் காய்க் கெந்தகம் 3 வராகன் எடை (10½ கிராம்), நீரடிமுத்துப் பருப்பு 3 வராகன் எடை (10½ கிராம்). இதன் மீதுள்ள மேற் சருகையும், பிளந்து நடுவிலிருக்கிற முளையிலையையும் நீக்கிவிட வேண்டியது.

செய்முறை:— இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்ருய்க் கறுத்த தூளானவுடன் இறுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு இலிங்கத்தைச் சேர்த்தரைத்துப் பிறகு நீரடிமுத்தையும் சேர்த்தரைத்து வெண்ணெய் போலானவுடன் எடுத்துவைத்துக் கொள்ளவும். தேங்காய்த் துருவலைக் கல்லுரலில் போட்டு மர உலக்கையால் மசிய இடித்து மேற்படி தூள்களையும் அதில்சேர்த்து (ஆ)விலுள்ள மருந்தையும் அதில் சேர்த்து இடிக்கவேண்டியது, பனைவெல்லத்தைக் கொஞ்சம் தண்ணீரில் கரைத்துக் கொஞ்சம் காய்ச்சி வடிகட்டி அதிலுள்ள திப்பி முதலியவைகளையெல்லாம் நீக்கிக் கெட்டிப் பதமான பாகாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு முன் மருந்தில் சிறுகச் சிறுகத் தெளித்து இடித்து வரவேண்டியது. நாம் எவ்வளவு நேரம் இடிக்கின்ருேமோ அவ்வளவுக்கவ்வளவு நன்மையாகும். ஆறு மணி நேரத்துக்குக் குறையாமலாகிலும் இடித்து எல்லாம் நன்ருக மசிந்து மைபோலான பின்பு எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவேண்டும்.

அளவு :— ½ முதல் 1 வராகன் எடை.

தீரும்நோய் :— மேக நோய்கள், மேகவூறல், கிரந்தி, குட்டம், கிரந்திப் புண், பறங்கிப் புண் முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :— கடுகு, நல்லெண்ணெய் தள்ளவேண்டியது. இதனுல் பசிதீபனம் அதிகப்படுமாகையால் பசுவின் பால், நெய் முதலிய சத்துள்ள உணவுகளை சீரண சக்திக்குத் தகுந்தபடி சாப்பிட்டு வரவேண்டியது.

## 1148. பால் வல்லாதி

(அ) முன் சொல்லியிருக்கிறபடி தூய்மைசெய்த சேராங் கொட்டை எண். 50, பசுவின் பால் 1 படி, தண்ணீர் அரைப்படி, பனைவெல்லம் 1 பலம் (35 கிராம்).

(ஆ) தூய்மை செய்த இரசம், இரசகற்பூரம், நெல்லிக்காய்க் கெந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், மிருதாரசிங்கி இவை வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), வீரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்).

(இ) மஞ்சள் கடுக்காய்த் தோல் தூள் 12 வராகன் எடை (42 கிராம்).

**செய்முறை :—** (அ) விலுள்ள பாலையும் தண்ணீரையும் கலந்து அதில் சேராங்கொட்டைகளை நான்காக நறுக்கிப் போட்டு எண்ணெய் கக்கிக் கொட்டைகள் மிதந்தவுடன் அவைகளை எடுத்து வேறு கொஞ்சம் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எண்ணெய்ப்பசை நீங்கினவுடன் இந்த நீரையும் மேற்படி பாலில் சேர்த்துக் காய்ச்சிக் கைவிடாமல் துழாவிக்கொண்டேயிருந்து எல்லாம் அல்வாவான வுடன் எடுத்து வைத்துக்கொள்ளவும். (ஆ) விலுள்ளவைகளில் இரசத்தையும், கெந்தகத்தையும், வீரத்தையும் சேர்த்தரைத்து நன்றாக மசிந்தபின் இலிங்கத்தையும் பூரத்தையும் சேர்த்து அரைக்க வேண்டியது. தாளகத்தைத் தனியே மைபோலப் பொடித்து இதனுடன் சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டியது. இவ்விதமே மிருதார் சிங்கியையும் தனியே பொடித்துச் சேர்த்துக் கொள்ள வேண்டியது. பிறகு வெல்லத்தை சேர்த்தரைத்துப் பிறகு (ஆ) விலுள்ள கடுக்காய்த் தூளைச் சேர்த்து இரண்டொரு மணி நேரம் அரைத்து எல்லாம் ஒன்றாக மசிந்த பின்பு முன் சித்தப் படுத்தியிருக்கும் பால் அல்வாவைச் சிறுகச் சிறுகச் சேர்த்து மை போலாகிறவரையில் அரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்த வேண்டியது.

**அளவு :—** 2 முதல் 4 குன்றியெடை.

**துணைமருந்து :—** சர்க்கரை, வெல்லம், பாலேடு, இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய் :—** மேக நோய்கள், வாயு நோய்கள், அரையாப்பு, கிரந்தி, கட்டிகள், சூலை, வெட்டை, பவுத்திரம், கண்டமாலை, வெடிசூலை, நரம்புசூலை, இலிங்கப்புற்று முதலிய கொடிய நோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** கடுகு, நல்லெண்ணெய், புளி, புளிப்புப் பண்டங்கள், புகை, புணர்ச்சி ஆகியவைகள் ஆகாது. நோய் வலுவிற்குத் தக்கபடி கடின பத்தியமாகவும், இலேசான பத்திய மாகவும், சமயோசிதம் போலவும், உடல் பலத்திற்குத் தகுந்த படியும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது. ஆட்டிறைச்சி, கோழி

மாமிசம், மீன் முதலியவைகளை மருந்து சாப்பிடுகிறவரையில் உபயோகிக்காமல் நிறுத்தி வைப்பது உத்தமம். எவ்வளக் கெவ்வளவு நாம் பத்தியமாயிக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிர மாக நோய்கள் குணமாகும்.

## 1149. இடிவல்லாதி

(அ) முன் கண்டபடி தூய்மைசெய்த சேராங்கொட்டைக் குழித் தைலம் 2 பலம் (70 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 8 பலம் (280 கிராம்), மைசாட்சி 8 பலம், (இதனை அம்மியில் மை போலரைத்துக்கொள்ளவும்), இரசம், சீந்திற் சர்க்கரை, கழுவித் தோல் போக்கின எள்ளு, (இதனையும் மைபோல அரைத்துக் கொள்ளவும்.) அமுக்குராக் கிழங்குத் தூள், பறங்கிப் பட்டைத் தூள் ஆகிய இவை வகைக்கு 4 பலம் (140 கிராம்), கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் 2 பலம்.

(ஆ) வாலுழுவையரிசி, கோட்டம், வால்மிளகு, விதை நீக்கின பேரீச்சங்காய் (இதனை தண்ணீரில் ஊறவைத்துத் தனியே அரைத்துக் கொள்ளவும்). சடாமாஞ்சில், சிவனார் வேம்பு, வெட்டி வேர், சங்கங்குப்பி வேர்ப்பட்டை, மேற்றோல்சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள்கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, சிறுநாகப் பூ, தக்கோலம், சீரகம், உலர்த்தின வெள்ளறுகு, தாளிசப்பத்திரி, நன்னாரி வேர், நெருஞ்சி வேர், நிலப்பனைக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, கொத்துமல்லி விதை, கல்மதம், (இதனைக் கல்வத்தில் தனியே பொடித்துக் கொள்ளவும்.) கல்நார், (இதனையும் தனியே பொடித்துக் கொள்ளவும்.) ஏலரிசி, இலவங்கப் பட்டை, கார்போகரிசி, சிற்றரத்தை இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). இவற்றுள் பேரீச்சங்காய், கல்மதம், கல்நார் ஆகியவைகளைத் தவிர மற்றவைகளை தனித்தனி இளவறுப்பாக வறுத்துத் தூள் செய்து துணியில் வடிகட்டிக் கொள்ளவும். பனைவெல்லம் 50 பலம் (1750 கிராம்).

செய்முறை :— (அ) விலுள்ள கெந்தகத்தையும், இரசத்தையும் சேர்த்து நன்றாகக் கறுக்கிற வரையிலரைத்துப் பனைவெல்லத்தைத் தவிர மற்றெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். பனை வெல்லத்தைக் கொஞ்சம் தண்ணீரில் கரைத்து அடுப்பேற்றி ஒரு கொதி வந்தவுடன் வடிகட்டித், திப்பி முதலியவைகளை நீக்கி விட்டு மறுபடியும் காய்ச்சிக் கெட்டிப் பதமான பக்குவத்தில் இறக்கி வைத்துக்கொள்ளவும். முன் சித்தப்படுத்தின தூள்களைக் கல்லுரலில் போட்டு மேற்படி பாகைச் சிறுகச் சிறுக விட்டு மரவுலக் கையால் இடிக்கவேண்டியது. ஆறு மணி நேரத்துக்குக் குறையாமல்

இடித்து எல்லாம் மசிந்து ஒன்றானபின் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை.

**தீரும்நோய் :—** கரப்பான், குட்டம், மேகம், பெருவியாதி, கருமேகம், சூலை, இலிங்கப்புற்று, அல்குல்புற்று, கிரந்தி, வெடிசூலை, கண்டமாலை, வாயு, மேகசுரம், அரையாப்பு, நீர்நோய் ஆகியவை தீரும்.

**மருத்துணவு:—** கடுகு, நல்லெண்ணெய், பறங்கிக்காய், பூசணிக்காய், பாகற்காய், அகத்திக் கீரை, தேங்காய், மாங்காய் இவை ஆகா.

## 1150. நீரடிமுத்து வல்லாதி

(அ) சாணிப்பாலில் ஏழு தடவையும், புளியிலைச்சாறு, பசுவின் பால், இளநீர் முதலியவைகளில் ஒவ்வொரு தடவையும் அவித்துலர்த்திச் சுத்திசெய்த சேராங்கொட்டை 100 பலம் (3500 கிராம்). (இதனைத் தூய்மைசெய்வது முன் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறைப்படியும் செய்துகொள்ளவும்.) இவ்விதம் தூய்மை செய்த சேராங்கொட்டையைக் குழித்தைலமிறக்கிக் கொள்ளவும்.

நீரடிமுத்து 10 பலம் (350 கிராம்), இதனைச் சாணிப் பாலில் வேகவைத்து உலர்த்தி மறுபடியும் சாணிப் பாலில் வேகவைக்க வேண்டியது. (இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து தடவைகள் செய்து நன்றாயுலர்த்தி உடைத்துப் பருப்பெடுத்து அதன் மீதுள்ள சருகையும் அதைப் பிளந்து நடுவிலிருக்கிற பருப்பிலையையும் நீக்கித் தூய்மை செய்துகொள்ளவும்.)

பறங்கிப்பட்டை 10 பலம் (350 கிராம்). (இதனை இடித்துத் தூள்செய்து ஒரு மண்பாண்டத்தில் ஒரு படி பசுவின் பாலை விட்டுப் பாண்டத்தின் வாய்க்கு வேடுகட்டி அதன்மீது மேற்படி தூளை வைத்து மேற்சட்டி மூடி அடுப்பின்மீதேற்றி மெதுவாயெரித்துப் பால் சுண்டின பதத்தில் எடுத்து நிழலில் உலர்த்தி மறுபடியும் இடித்துத் தூள் செய்துகொள்ளவும்.)

(ஆ) பிரப்பங்கிழங்கு, கருஞ்சீரகம், சீரகம், வசம்புசுட்ட கரி, வாதகரப்பான் பட்டை, சிவனார்வேம்பு, சங்கம் வேர்ப்பட்டை, கொல்லன்கோவைக் கிழங்கு, அமுக்குராக் கிழங்கு, உலர்த்தின வெள்ளறுகு, எருக்கம்வேர்ப்பட்டை, அத்திப் பட்டை, குமிழம் வேர்ப்பட்டை, சத்திச்சாரணைக் கிழங்கு, மிளகரணைக் கிழங்கு,

செங்கத்தாரிப் பட்டை, செந்தொட்டி வேர், வேப்பம்கொட்டைப் பருப்பு, வெட்பாலரிசி இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்). இவைகளுள் உலர்த்தவேண்டியவைகளை உலர்த்தியும் அரைக்க வேண்டியவைகளை அரைத்தும் இடிக்கவேண்டியவைகளை இடித்தும் தூள்செய்து ஒன்ருகச் சேர்த்துக்கொள்ளவும்.

(இ) துருசு, பால்துத்தம், தூய்மைசெய்த கெந்தகம், சுத்தி செய்த இரசம் வகைக்கு 5 வராகன் எடை (17½ கிராம்). இவற்றுள் இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்ருகக் கறுத்து தூளானபின்பு மற்றவைகளையும் சேர்த்தரைத்துத் தூள் செய்து கொள்ளவேண்டியது.

(ஈ) கழுவி மேற்ருேல் போக்கின எள் 8 பலம் (280 கிராம்), பனைவெல்லம் 40 பலம் (1400 கிராம்), இந்த வெல்லத்தை நீரில் கரைத்துக் கொதிக்கவைத்து, ஒரு கொதி வந்தவுடன் வடிகட்டித் திப்பியை நீக்கி மறுபடியும் காய்ச்சிக் கெட்டிப் பதமான பதத்தில் இறக்கிவைத்துக் கொள்ளவும்.

செய்முறை :— (ஈ) யிலுள்ள எள்ளை அம்மியில் வைத்து மை போலரைத்துக் கொள்ளவும். (அ) விலுள்ள நீரடிமுத்துப் பருப்பை அம்மியில் வைத்து மைபோலரைத்துக் கொள்ளவும். இந்த இரண்டையும் (அ) விலுள்ளவைகளையும் (ஆ) விலுள்ளவைகளையும் (இ) யிலுள்ளவைகளையும் ஒன்ருகச் செம்மையாகச் சேர்த்துக் கல்லுரலில் போட்டு மேற்படி வெல்லப்பாகைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுக் கைவிடாமல் நான்கு சாமம் இடித்து மைபோலான பின்பு பீங்கான் சாடியில்வைத்து மூடிக் காற்றுப் போகாமல் பத்திரப்படுத்த வேண்டியது. இது வேகமான மருந்தாகையால் இதனை இடிக்கிறவர்கள் முகத்திலும் தலையிலும் மூக்கிலும் ஊற்றின விளக்கெண்ணெயைத் தாராளமாகப் பூசிக்கொண்டு இடிக்கவேண்டியது. இப்படிச் செய்யாவிட்டால் சில உடலினர்க்குச் சில நேரங்களில் வீக்கங்காணும். அதனுல் பாதகமொன்றுமில்லை. அப்படி வீக்கங்கண்டால் விளக்கெண்ணெயை மேலே பூசினுலும் அதைத் தேய்த்து குளிக்கச் செய்தாலும் வீக்கம் வடிந்துவிடும். ஆனுல், ஏதேனும் கொடிய நோயாக இருந்தாலும் அது நீங்கிவிடும்.

அளவு :— 1 முதல் 2 வராகன் எடை.

துணைமருந்து :— சிறுவர்களுக்கு சமன் விளக்கெண்ணெயுடன் அல்லது நெய்யுடன் சேர்த்துக் கொடுத்தால் தீயகுணங்கள் ஒன்றுமிரா.

**தீரும்நோய் :—** பதினெட்டு வகைச் சூலைகள், பதினெட்டு வகைக் கிரந்திகள், சொறி கிரந்தி, அரி கிரந்தி, அத்திக்காய்க் கிரந்தி, கள்ளிப்பூக் கிரந்தி, பறங்கிப் புண், அல்குல் புற்று, அல்குல் சூலை, கபால சூலை, அரையாப்பு, மதுமேகம், தந்திமேகம், நீர் மேகம், வெட்டை, மஞ்சள் பிரமேகம், நீர்ப் பிரமேகம், இரத்தப் பிரமேகம் முதலிய பிரமேகங்கள், முடக்குவாதம், கைகால் பிடிப்பு வாதம், முகவாதம், வாய்க்கோணு வாதம், நாக்குப் புரட்டல் முதலிய நாக்கு வாதங்கள், தனுர் வாதம், இளம்பிள்ளை வாதம், துடிவாதம், செங்குட்டம், கருங்குட்டம், வெண்குட்டம், கை, உதடு, கால் இவற்றிலுள்ள வெண்குட்டங்கள், வெடிசூலை, கண்ட மாலை, கால் வெடிப்பு, திமிர், படர்தாமரை, இலிங்கப்புற்று, குத்து, தரிப்பு, விரிகுட்டம், குறைநோவு, தோலுரி, சொறி, சிரங்கு, ஆனைச் சொறி, குதிரைச் சொறி, தவளைச் சொறி, பழு வெட்டு, வண்டுகடி, செய்யான்கடி, செவ்வட்டைக்கடி, எலிக்கடி முதலான அநேக கொடிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :— பாசிப்பயறு, துவரம்பருப்பு, மிளகு, கத்திரிப் பிஞ்சு, முருங்கைப் பிஞ்சு, அறைக் கீரை, முளைக் கீரை, பசும் பால், பசுவின் நெய், பசு மோர், வெள்ளாட்டு நெய், வெள்ளாட்டு வற்றல், வரால் கருவாடு, வெந்நீர் இவை ஆகும். மருந்து சாப் பிட்டுவிட்ட பிறகு ஒரு மாதம் வரையில் கோழி, வாயு உணவுப் பண்டங்கள் ஆகியவைகள் ஆகாது.

குறிப்பு :— இந்த மருந்தைச் சாப்பிடும்போது சில உடலி னர்க்கு முகம் அல்லது உடலெங்கும் வீக்கம் காண்பது உண்டு. அதற்காகப் பயப்படவேண்டிய அவசியமில்லை. இந்த மருந்திற்கு மாற்று விளக்கெண்ணெயாகையால் அதனைத் தேய்த்து நீராடச் செய்விக்கலாம். அல்லது மருந்தை நிறுத்தி மறுநாள் உள்ளுக்கு எண்ணெய் சாப்பிட வேண்டியது. எந்த உடலினராலும் இந்த மருந்தை உபயோகிக்கும்போது இரண்டு வேளையும் பசுவின்பாலைக் குடித்து வந்தால் எவ்வித தீய குணமும் காணாது. அல்லது நான்கு நாளைக்கு ஒரு தடவை அல்லது, எட்டு நாளைக்கு ஒரு தடவை கழிச் சலாகும்படி விளக்கெண்ணெயைச் சாப்பிட்டுவந்தால் நாலைந்து தடவை கழிச்சலாகி உள்ளிருக்கிற துர்நீர்கள் நீங்கி இன்னும் சிறப் புடைய குணமுண்டாக ஏதுவாகும். இது ஒருவகைச் சிறந்த மருந்தாகையால் பயப்படாமல் சமயோசிதம்போல தக்க துணை மருந்துகளுடன் உபயோகித்து வந்தால் மனிதர்களை வாழ்நாள் முழுவதும் துன்பப்படுத்தும் கொடிய நோய்களையும் அறவே நீக்கி வெற்றிக் கொடிகட்டி முழக்கலாம். சிறந்த வைத்தியர்களிடத்தில் இவ்வித மருந்தொன்று அவசியமிருக்க வேண்டியது.

## 1151. இலகு வல்லாதி

முன்கண்டபடி தூய்மை செய்த சேராங்கொட்டை $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்). (இதனை முறைப்படி குழித்தைலமிறக்கிக் கொள்ளவும்.)

தூய்மைசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த இரசம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த இரசகற்பூரம் $\frac{1}{2}$ பலம், தூய்மை செய்த இரசச் செந்தூரம் $\frac{1}{2}$ பலம் தெருக்கஞ் செவிச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைத்து நன்றாகக் கறுத்தபின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து முன் சித்தப்படுத்தியிருக்கிற கொட்டைத் தைலத்தை விட்டு ஒரு மணி நேரமரைத்துப் பிறகு முத்தெருக்கஞ் செவியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்து மைபோலான பின்பு பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 2 முதல் 4 குன்றியெடை வரை. உடல் வலிவு, நோய்வலிவிற்குத் தகுந்தபடி உபயோகிக்கவேண்டியது.

**தீரும்நோய் :—** புண், கிரந்தி, பதினெட்டுவகைச் சூலைகள், அரையாப்பு, மேக நோய்கள், மேக வாயு ஆகியவைகள் தீரும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம்.

## 1152. கலிவல்லாதி

(அ) முன்கண்டபடி தூய்மைசெய்த சேராங்கொட்டை 8 பலம் (280 கிராம்), (இதனைக் குழித்தைலம் இறக்கிக் கொள்ளவும்.) பாலில் தூய்மைசெய்த பறங்கிப் பட்டைத் தூள் 8 பலம் 280 கிராம்), தேற்றான்கொட்டை 6 பலம் (210 கிராம்), (இதனை மெல்லியதாக சீவிப் பாலில் வேகவைத்து அம்மியில் வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும்.) கொடிவேலி வேர்ப் பட்டை, அமுக்குராக்கிழங்கு இவற்றின் தூள் வகைக்கு 4 பலம்(140 கிராம்) சங்கின் வேர்ப்பட்டைத் தூள் 2 பலம் (70 கிராம்), மேற்றோல் சீவிய சுக்கு, குரோசானி ஓமம், கோட்டம், அக்கிராகாரம், தாளிசப் பத்திரி, அரிசித்திப்பிலி, மஞ்சள்கடுக்காய்த்தோல், மிளகு, கருங்கொள், இவற்றின் தூள்கள் வகைக்கு 1 பலம் (35 கிராம்).

(ஆ) நாவல்பட்டைச் சாற்றில் அவித்துத் தூய்மை செய்த எட்டிக் கொட்டைத் தூள் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), தூய்மை செய்த மிருதார்சிங்கி $\frac{1}{2}$ பலம், தூய்மை செய்த மனோசிலை $\frac{1}{2}$ பலம்,

தூய்மை செய்த இலிங்கம் 1 பலம், (35 கிராம்) தூய்மை செய்த இரச கற்பூரம் $\frac{1}{2}$ பலம், தூய்மை செய்த வீரம் $\frac{1}{2}$ ($1\frac{3}{4}$ கிராம்) வராகன் எடை, தூய்மை செய்த காந்தம் 1 பலம். இவற்றைத் தனித்தனியே பொடித்து ஒன்ருகக் கலந்துகொள்ளவும்.

(இ) கழுவின எள்ளு 2 பலம், (70 கிராம்) தேன் 2 பலம், மேற்ருேல் நீக்கி மெல்லியதாகச் சீவின அல்லது கடைசலில் பிடித்த கொப்பரைத் தேங்காய்த் தூள் 5 பலம் (175 கிராம்), பனைவெல்லம் 8 பலம் (280 கிராம்). (வெல்லத்தை முன்சொல்லி யிருக்கிறபடி பாகுசெய்துகொள்ளவும்.) கோழிமுட்டை 4.

**செய்முறை :—** எள்ளை அம்மியில் அரைத்துக் கொள்ளவும். கொப்பரைத் தேங்காயையும் தனியே அரைத்துக்கொள்ளவும். பிறகு (அ) விலுள்ள தூள்கள், (ஆ) விலுள்ள தூள்கள் ஆகியவை களை ஒன்ருகக் கலந்து அரைத்த எள்ளையும், தேங்காயையும் அதில் சேர்த்துக் கல்லுரலில் போட்டு வெல்லப் பாகைச் சிறுகச் சிறுகச் சேர்த்து ஒரு சாம நேரமிடித்து மேற்கண்ட நான்கு கோழிமுட்டை களின் வெள்ளைக் கருவையும் விட்டு மூன்று சாம நேரம் இடித்து மைபோலானபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 வராகன் எடை.

**தீரும்நோய் :—** பவுத்திரம், கண்டமாலை, சூலை, கை கால் குடைச்சல், மார் நோவு, இரணம், வாத குன்மம் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணவு :—** புளி, புகை, புணர்ச்சி தள்ளவும்.

**குறிப்பு :—** இதனை ஆறுநாள் சாப்பிட்டுப் புளியில்லாப் பத்திய மிருந்து மறுபடி இருபத்தொருநாள் பத்தியமில்லாமல் சாப் பிடவும்.

## 1153. இராமபாண வல்லாதி

தூய்மைசெய்து குழித்தைலமிறக்கின சேராங்கொட்டைத் தைலம் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), தூய்மை செய்த வீரம், தூய்மை செய்த இரசம், இரசகற்பூரம், தூய்மை செய்த வெள் ளைப் பாடாணம், தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், காந் தம், துருசு (இதனை வறுத்துக் கொள்ளவும்). சீனக்காரம், வெடி யுப்பு, தூய்மை செய்த அய அரப்பொடி, வளையலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, தூய்மைசெய்த எட்டிக் கொட்டை, தான்றிக்காய்த் தோல், கொடிவேலி வேர்ப்பட்டை, பறங்கிச் சக்கை, மாசிக் காய், மஞ்சள் கடுக்காய்த்தோல், சந்தனத் தூள், இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை. இவற்றுள் தூள் செய்யவேண்டியவைகளைத் தூள் செய்தும், பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும் தனித்தனி

மூர்க்க நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டியது. அமுக்குராக்கிழங்கு தூள் $27\frac{1}{2}$ வராகன் எடை ($96\frac{1}{4}$ கிராம்). முட்டை வெள்ளையம்புலி செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்கண்டவைகளை எல்லாம் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு வெள்ளையம்புலியைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 3 முதல் 6 குன்றியெடை.

துணைமருந்து :— சர்க்கரை, தகுந்த இளகங்கள் ஆகியவைகளாகும். இதனை ஒன்பது வேளை கொடுக்கவும்.

தீரும்நோய் :— மேகசூலை, வாதப் பிடிப்பு, பக்கவாதம், குமரகண்டன்வலி, காக்கைவலி, தமரகவலி, அண்டவாயு ஆகியவை தீரும். இதில் கொஞ்சம் எடுத்து அதற்குச் சமன் தூய்மைசெய்த நேர்வாளத்தைச் சேர்த்துக் கொடுக்க கழிச்சலாகி உடலிலுள்ள தீயமலங்கள், நஞ்சான நீர்கள் ஆகியவை வெளிப்பட்டு உடல் நலமுண்டாகும்.

இதில் கொஞ்சமெடுத்து வறுத்தத் துருசைச்சேர்த்து அரைத்து ஆக்கிராணம் செய்யக் கபால வாயு, கபால சன்னி ஆகியவை தீரும்.

கற்பூரவெற்றிலை ரசத்தில் இதனை அனுபானித்துக் கொடுக்க கபம், கோழை ஆகியவைகளை அறுத்து வெளிப்படுத்திவிடும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

## 1154. இராசவல்லாதி

(அ) முன் சொல்லியிருக்கிறபடி தூய்மைசெய்த சேராங்கொட்டை 5 பலம் (175 கிராம்), பசுவின் நெய் 30 பலம் (1050 கிராம்), பசுவின் பால் 1 படி, சர்க்கரை 30 பலம், தேன் 10 பலம் (350 கிராம்).

(ஆ) மேற்றேல் சீவினசுக்கு, சிற்றரத்தை, சடாமாஞ்சில், இலவங்கப்பட்டை, அதிமதுரம் இவை வகைக்கு 2 பலம் (70 கிராம்), நிலப்பனைக் கிழங்கு, கடுகுரோகணி, வெட்பாலை அரிசி, சிவனார் வேம்பு, இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், மிளகு, ஏலரிசி, ஓமம், அரிசித்திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்வியம், கார்போகரிசி, கொத்துமல்லி விதை, வாய்விளங்கம், கருஞ்சீரகம், சித்திரமூல வேர்ப்பட்டை,

வாலுழுவையரிசி, அமுக்குராக் கிழங்கு இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), பாலில் தூய்மைசெய்த பறங்கிப் பட்டை $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்), நெல்லிமுள்ளி $2\frac{1}{2}$ பலம், தான்றிக்காய்த் தோல் 2 பலம் (70 கிராம்) குங்குமப் பூ $\frac{1}{4}$ பலம், கோரோசனை $\frac{1}{4}$ பலம்.

**செய்முறை** :— (ஆ) விலுள்ளவைகளில் மெல்லிய சாமான்களை இளவறுப்பாக வறுத்தும், மற்ற சரக்குகளை நன்ருக வறுத்தும், இடித்துத் தூள்செய்து துணியில் சலித்துக்கொள்ளவும். குங்குமப் பூவையும் கோரோசனையையும் தனித்தனியாக வறுக்காமல் பொடித்து முன் தூள்களுடன் கலந்துகொள்ளவும். (அ) விலுள்ள சேராங்கொட்டையை நான்காக நறுக்கி நெய்யில்போட்டுக் காய்சிக் கொட்டை மிதந்தவுடன் நெய்யை இறுத்துத் தனியேவைத்துக் கொள்ளவும். இந்தக் கொட்டையில் மேற்படி பாலை விட்டுக் காய்ச்சிப் பால் மஞ்சள் வண்ணமானவுடன் அந்தப் பாலையும் இறுத்து வைத்துக்கொள்ளவும். அந்தக் கொட்டையில் அரைப்படி தண்ணீரை விட்டுக் காய்ச்சிக் கொட்டையில் எண்ணெய்ப் பசை யில்லாமல் ஆனவுடன் கொட்டையை எடுத்து நீக்கிவிட்டு அதில் முன் சித்தப்படுத்தின பாலைக் கலந்து சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தின தூள்களைச் சிறுகச் சிறுகத் தூவி மத்தால் கடைந்து தூள்களெல்லாம் சென்ற பின்பு அடுப்பிலிருக்கும்போதே நெய்யைவிட்டு நன்ருய்க் கொதிக்கிற வரையில் கிண்டிக் கிளறிக் கீழிறக்கித் தேனையும்விட்டு நன்ருகக் கலந்து சூடாறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய்**: — பக்கவாதம், நீரிழிவு, மேக நோய்கள், கிரந்தி நோய்கள், புண்கள், புரையோடும் நோய்கள், அண்டவாதம், குன்ம நோய், குடல் வாதம், கை கால் முடக்கு, எலும்புக்குள்ளிருக்கும் நோவு, வெண் குட்டம், பெருநோய், விரைவாதம், நரம்பு வாதம் முதலிய எல்லா நோய்களுக்கும் கொடுக்கலாம்.

**மருத்துணவு** :— மீன், கருவாடு, அகத்திக் கீரை, பாகற்காய், கடுகு, நல்லெண்ணெய், எருமைப் பால் இவை ஆகாது. பசுவின் பால் ஆகும்.

இந்த மருந்தை உபயோகிக்கும்போது பசுவின் பாலை அதிகமாகப் பருகச் செய்யவேண்டும். காலை மாலை இரண்டு வேளையும் தனியே பாலை உபயோகித்து வந்தால் உத்தமம். வாரத்துக்கு ஒரு முறை சிற்ருமணக்கெண்ணெயையும் பாலையும் கலந்து பேதிக்குச்

சாப்பிடவேண்டும். உடலிலுள்ள நஞ்சான நீர்களெல்லாம் வெளிப்படும். உடல் நலமுண்டாகும். நோய்வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கவேண்டியது. ஆனல் இந்த இளகத்துடன் கீழ்க்காணும் இராசபதங்கத்தைச் சேர்த்துச் சாப்பிட்டால் அதிக குணமுண்டாகும். அது பின்வருகிற விதமாகும்.

## இராசப் பதங்கம்

சாதிலிங்கம், மனேசிலை, காந்தம், தாளகம், நெல்லிக்காய்க் கெந்தகம், இரசம், இரசகற்பூரம், வெள்ளைப் பாடாணம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), குப்பைமேனிச் சாறு, நாகமல்லிச் சாறு, பருத்தியிலைச் சாறு, வெள்ளறுகுச் சாறு, துளசிச் சாறு, வழுதலைச் சாறு, வெற்றிலைச் சாறு, பொடுதலைச் சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— இரசத்தையும் கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித் தனியே பொடித்துச் சேர்த்துக் குப்பைமேனிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைக்க வேண்டும். பிறகு வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்தபின்பு நாகமல்லிச் சாற்றை விட்டு முன் போல் நான்குசாமம் அரைக்கவேண்டியது. இவ்விதம் ஒவ்வொரு சாற்றையும் விட்டு நவ்வாலுசாமம் அரைக்க வேண்டியது. ஒன்றன் பின் ஒன்று எண்ணும் முறைக் கிரமம் அவசியமில்லை. எந்தெந்த மூலிகை கிடைக்கிறதோ அந்தந்த மூலிகையின் சாற்றை விட்டு அரைத்துக் கொள்ளலாம். ஆனல் நவ்வாலுசாமம் அரைக்க வேண்டியது அவசியம். பிறகு ஒரே வில்லைசெய்து வெய்யிலில் உலர்த்திக்கொள்க. கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்ருயுலர்ந்து போகவேண்டியது. பிறகு அடிகனத்த சட்டியில் செங்கல்லையும் உப்பையும் சமமாகச் சேர்த்திடித்துச் சட்டியில் அரைவாசி போட்டமுத்தி அதன்மீது கொஞ்சம் போடுதலையைப் பரப்பி வில்லையை வைத்து மேற்சட்டி மூடி ஒரு சீலைமண் செய்யவேண்டியது. அது காய்ந்த பின்பு மறுசீலை செய்யவேண்டியது. இவ்விதம் ஒரு சீலை காய்ந்த பின்பு மறுசீலைசெய்து காயவைக்கவேண்டியது. இவ்விதம் ஏழு சீலைமண் செய்து நன்ருயுலர்ந்த பின்பு, அடுப்பின் மீதேற்றி 6 சாமம் சுடரெரிப்பு (தீபாக்கினி), தாமரை எரிப்பு (கமலாக்கினி), காட்டெரிப்பு (காடாக்கினி) யாக எரித்து அடுப்பின் மீதே விட்டு வைத்துக் குளிர ஆறினபின் சீலையை மெதுவாகப் பிரித்துப் பார்க்கச் சித்தன் அருளால் மேற்சட்டியிலும் கீழ்ச்சட்டியிலும் பதங்கம் ஏறி நிற்கும். இதனை மெதுவாகச் சுறண்டி எடுத்து எல்லாவற்றை

யும் ஒன்றாகச் சேர்த்தரைத்துக் குப்பியில் பத்திரப்படுத்த வேண்டியது.

**அளவு** :— நாற்பது நாளைக்கு மேற்கண்ட இளகத்தில் 2 குன்றி மணியெடை சேர்த்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் வேறு இளகங்களிலும் இதனைச் சேர்த்து உபயோகிக்கலாம். இதனைத் தேவையான அளவு நெய்யில் கலந்தும் உபயோகிக்கலாம். வேளை யொன்று அரையரிசி எடை முதல் ஒரு அரிசி எடை வரையில் உடல் வலிமைக்குத் தகுந்தபடி உபயோகிக்கலாம். ஆனால் சமயோசிதம்போல் மூன்றுநாள் ஐந்துநாள் உபயோகித்து நிறுத்தி இடையில் ஒரு வாரம் பத்துநாள் விட்டு மறுமுறை உபயோகிக்க வேண்டியது. இது ஒரு நல்ல முறை. இதை புத்திசாலித்தன மாய் உபயோகித்தால் அநேக தீயநோய்கள் நீங்கும். சில மருத்து வர்கள் மேற்கண்ட இராச வல்லாதியையும் இராசபதங்கத்தையும் வைத்துக்கொண்டு அநேக தீய நோய்களை நீக்கி வெற்றி அடைந்து வருகின்றார்கள். இதனை இரண்டொரு தடவை உபயோகித்தால் அனுபவத்தில் இதன் சிறந்த குணம் தெரிந்துவிடும்.

**தீரும்நோய்** :— மேற்கண்ட நோய்கள் தீரும்.

## 1155. வல்லாதகிப் பருப்பு இளகம்

முந்திரிக்கொட்டை, வாதுமைக்கொட்டை, பிஸ்தா முதலிய வற்றின் பருப்பை எடுத்துத் தனித்தனியே விற்பதுபோல ஹைதரா பாத் முதலிய வடதேசங்களில் சேராங்கொட்டையின் பருப்பையும் எடுத்து விற்கிறார்கள். உடல்வலிமையை விருத்தி செய்வதிலும் தலை, மூளை முதலிய இராச கருவிகளைப் பலப்படுத்துவதிலும் அதிகம் சிறந்தவைகளுள் இதுவும் ஒன்று. அவசியமானால் அதிக விழிப்புடன் இக் கொட்டைகளைப் பிளந்து பருப்பை எடுத்து உபயோகித்துக் கொள்ளலாம். இதனை நறுக்கும்போது கையில் துணியைச் சுற்றிக் கொண்டு அல்லது தோல் கையுறையைப் போட்டுக்கொண்டு முகம், உடல் ஆகிய உறுப்புகளில் எண்ணெய் தெறிக்காமல் விழிப் புடன் எடுத்துக்கொள்ள வேண்டியது. இது சாதாரணமாய் ஹைதராபாத் மருந்துக் கடைகளில் விற்கப்படுகிறபடியால் கூடு மானவர்கள் அங்கிருந்து வரவழைத்துக் கொள்ளலாம். இந்த இளகமானது நமது அனுபவத்தில் சிறந்த குணம் கொடுத்திருப்ப தால் இதனை நமது நண்பர்களுக்காக இங்கெழுதுவோம். அது பின் வருகிற விதமாம்.

சேராங்கொட்டைப் பருப்பு 10 பலம் (350 கிராம்). இதனை வெந்நீரில் போட்டுச் சற்றுத் தாமதித்து இதன் மீதுள்ள தோலை

நீக்கி ஈரமில்லாமல் வெய்யிலில் உலர்த்திக்கொள்ள வேண்டியது. மேற்றோல் நீக்கின வாதுமைப் பருப்பு, மேற்றோல்நீக்கின முந்திரிப் பருப்பு, மேற்றோல் நீக்கின பிஸ்தா பருப்பு, மேற்றோல் நீக்கின அக்ரோட் பருப்பு, மேல்தோல் நீக்கின ஜில்கூஜாப் பருப்பு அல்லது சாரப்பருப்பு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

பஹமனேசுபேத், பஹமனே சுருக், தூதரிசுபேத், தூதரிசுருக், சீமைநீர்முள்ளி விதை இவற்றின் தனித்தனித் தூள்கள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), மேற்றோல் சீவின சுக்கு, பறங்கிச்சக்கை, சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு, பூமிசர்க்கரைக் கிழங்கு, நிலப் பனைக் கிழங்கு, வாலுழுவையரிசி, வெட்பாலையரிசி, மிளகு, திப்பிலி, பெருஞ்சீரகம் இவற்றின் தனித்தனித் தூள்கள் வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சர்க்கரை 20 பலம் (700 கிராம்), தேன் 10 பலம், கற்கண்டு 5 பலம் (175 கிராம்), பசுவின்நெய் செல்லத்தக்க அளவு, குங்குமப் பூ 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்.)

**செய்முறை** :— முன்சொல்லியிருக்கிற பருப்பினங்களைத் தனித் தனியே நெய்யில் வறுத்து அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவேண்டும். குங்குமப் பூவைத் தனியே அரைத்து வைத்துக் கொள்க. தூள்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து முன்சித்தப்படுத்தின பருப்பினங்களையும் குங்குமப்பூவை யும் அதனுடன் கலந்து வைத்துக்கொள்க. சர்க்கரையைப் பாகு செய்து பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தியிருப்பவைகளைச் சிறுகச் சிறுகப் போட்டு மத்தால் கடைந்து எல்லாம் சென்றபின்பு கீழிறக் கித் தேனை விட்டு நன்றாகக் கலந்துக் கற்கண்டைத் தூள்செய்து போட்டு மறுமுறையும் நன்றாகக் கிளறிக் கொடுத்து ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 2 முதல் 3 வராகன் எடை.

**தீரும்நோய்** :— தலை, மூளையைப் பலப்படுத்தி நரம்புகளை முறுக் காக்கும். சோர்ந்து போயிருக்கிற ஆண் குறி பலப்பட்டு அதன் இயல்பு வலிமை நலம் உண்டாகும். உடற்சத்து, புணர்ச்சிசத்து விருத்தியாகும். குருதியிலுள்ள மாசுகள் நீங்கி அதனால் நேரிட்டிருக் கிற தீயநோய்கள் நீங்கும். இன்னும் இதனுடன் தங்க பற்பம், தங்க செந்தூரம், வெள்ளி பற்பம், வெள்ளி செந்தூரம், முத்து, பவளம், கஸ்தூரி, தங்க ரேக்கு, வெள்ளி ரேக்கு முதலியவைகளை யும் அவரவர்கள் சக்திக்கு ஏற்றதுபோல் சேர்த்து உபயோகிக்க லாம். அதற்குத் தகுந்த குணமுண்டாகுமென்பது நாமெடுத்துச் சொல்லாமலே தானே விளங்கும்.

**மருத்துணவு** :— புளி, புளிப்புப் பண்டங்கள், புகை முதலியவைகளை நீக்க வேண்டியது. முக்கியமாகச் சுருக்கிச் சொல்லில் சேராங்கொட்டைக்குச் சொல்லியிருக்கிற பத்தியத்தைப்போலவே அதன் பருப்பு சேர்ந்த முறைக்கும் பத்தியம் காப்பதினுல் சிறந்த குணம் உண்டாகுமென்பது திண்ணம்.

## 1156. சுக்கு இளகம்

மேற்றேல் நீக்கின மாச்சுக்கு 100 பலம் (3500 கிராம்), இதனை இடித்து ஒரு மண்பாண்டத்தில் போட்டுப் பதினுறு படி தண்ணீர் விட்டு எட்டொன்றுகக் காய்ச்சிச் சுண்டவைத்து இறக்கி இளஞ்சூட்டில் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கிக் குடிநீரை வைத்துக்கொள்க. ஓமத் தூள் 20 பலம் (700 கிராம்), கருவேப்பிலைத் தூள் 20 பலம், சர்க்கரை 20 பலம், நெய் 10 பலம் (350 கிராம்).

**செய்முறை** :— முன் சித்தப்படுத்தின குடிநீரில் மேற்கண்ட சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து பாகு பதத்தில் முன் தூள்களைச் சிறுகச் சிறுகத்தூவிக் கிண்டிக் கிளறித் தூள்களெல்லாம் சென்ற பின்பு நெய்யையும் விட்டு நன்றுகக் கலந்துக் கீழிறக்கி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 3 முதல் 5 வராகன் எடை.

**தீரும்நோய்** :— நீடித்த மூலம், பத்து வாயுக்கள், பெருங் கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, வயிற்றுக் கழிச்சல், இரத்தம் விழுதல், பாரிசவாயு, செரியா மந்தம், செரியாமை நோய், புளித்தேப்பம், செரியாமைக் கழிச்சல் முதலிய இரைப்பை சார்பான நோய்களெல்லாம் தீரும்.

**மருத்துணவு** :— இச்சாபத்தியம்.

**குறிப்பு** :— இது சூட்டுடலினர்க்குக் கொஞ்சம் சூட்டை அதிகப்படுத்துமாகையால் சிறுவர்களுக்குப் பொருந்தும்படியாகவும் சமயோசிதம் போலச் சர்க்கரையையும், சீனியையும் அதிகப் படுத்தி உபயோகித்துக் கொள்ளலாம்.

## 1157. பெருங்காய இளகம்

உயர்ந்த பெருங்காயம் 25 பலம் (875 கிராம்). இதனை நன்றுகச் சிதைத்து ஒரு மண் பாத்திரத்தில் போட்டுப் பதினுறுபடி தண்ணீரை விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி எட்டில் ஒரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி இளஞ்சூட்டில் பிசைந்து வடிகட்டித் திப்பி

நீக்கிக் குடிநீரை எடுத்துக் கொள்க. சர்க்கரை 10 பலம் (350 கிராம்).

தோலுரித்த வெள்ளைப்பூண்டிதழ், கடுகு, மேற்றோல் சீவின சுக்குத் தூள், மிளகுத் தூள், அரிசித்திப்பிலித் தூள், ஓமத் தூள், நற்சீரகத் தூள், அதிமதுரத் தூள், கோட்டத் தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), நெய் 5பலம் (175 கிராம்). முன்னிரண்டுச் சரக்குகளையும் தனித்தனியே அம்மியில் வைத்து அரைத்து மற்றத் தூள்களையும் கலந்துவைத்துக் கொள்க.

**செய்முறை** :— முன் சித்தப்படுத்தின குடிநீரில் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தினவைகளைச் சிறுகச் சிறுகப் போட்டு மத்தால் கடைந்து எல்லாம் சென்ற பின்பு நெய்யைவிட்டுச் செம்மையாகக் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி ஆறவைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 2 முதல் 3 வராகன் எடை.

**தீரும்நோய்** :— சூதக வாயு, சூதகம் கட்டுப்பட்டுத் தேகம் பருத்திருத்தல், அக்கிரம சூதகம், சூதகத்திலும் இதற்கு முன்னும் காணும் வயிற்றுநோய், இடுப்புநோய் முதலிய சூதக சம்பந்தமான எல்லா நோய்களும், எல்லா வகை வாயுகளும், எல்லா வகை வாதங்கள், குன்மநோய்கள், செரியாமை நோய்கள், வயிற்றுவலி, மந்தாக்கினி நோய் முதலிய இரைப்பை சார்பான நோய்களும், மார்புவலி, பித்தவாயு, வயிற்றுப்பிசம், நெஞ்செரிவு ஆகியவைகளும் தீரும். நோய் பலத்திற்குத் தகுந்தபடி அரை முதல் ஒரு மண்டலம் வரை உபயோகிக்கவும்.

**மருத்துணவு** :— இச்சாபத்தியம்.

**குறிப்பு** :— உடல் இயல்பிற்குத் தகுந்தபடி இந்த இளகத்தில் நெய், சர்க்கரை ஆகியவைகளைச் சமயோசிதம்போல் அதிகப்படுத்தி உபயோகித்துக் கொள்ளலாம்.

## 1158. பறங்கிப்பட்டை இளகம்

தூய்மைசெய்த பறங்கிப் பட்டைத் தூள் 4 பலம் (140 கிராம்), கசகசா $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). (இதனை அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும்.) சிறுநாகப் பூ, சாதிப்பத்திரி, வாலுளுவையரிசி இவற்றின் தனித்தனித் தூள்கள் வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கல்மதத்தூள் 4 வராகன் எடை (14 கிராம்), சீனக்கற்கண்டு 10 பலம்(350 கிராம்), நெய் 4 பலம், (140 கிராம்) தேன் 1 பலம் (35 கிராம்). பால் $1\frac{1}{2}$ படி.

**செய்முறை** — மேற்படி பாலில் சீனுக்கற்கண்டைத் தூள் செய்து போட்டுக் காய்ச்சிப் பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தின வைகளை எல்லாம், ஒன்ருகக் கலந்து சிறுகச் சிறுகப் போட்டு மத்தால் கடைந்து முடிவில் நெய்யையும் தேனையும் விட்டு மறுபடியும் நன்ருகக் கலந்து இறக்கி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 2 முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய்** :— மேக நோய்கள், கருமேகம், குட்டம், சூலை, பறங்கிப் புண், கிரந்தி, அரையாப்பு, பவுத்திரம், மேகரணம், கண்டமாலை, சோகை ஆகியவை தீரும்.

**மருத்துணவு** :— புளி, புகை, புணர்ச்சி, கரப்பான் உணவு பண்டங்கள், நல்லெண்ணெய், எள் சேர்ந்த உணவுப் பண்டங்கள் ஆகாது. பால், நெய், பச்சைப்பயறு, துவரம் பருப்பு, முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, விளக்கெண்ணெய் ஆகியவை ஆகும். மருந்துவிட்டு ஒரு மாதம் வரையிலும் மகளிர் சேர்க்கை ஆகாது.

## 1159. திராட்சாதி நெய் (வேறு)

விதை நீக்கின திராட்சைப் பழம் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்). (இதனை அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும்.) வெட்பாலையரிசி, அரிசித்திப்பிலி, சந்தனத் தூள், அதிவிடயம், நெல்லிவேர்ப் பட்டை, நிலவேம்பு, விலாமிச்சம் வேர், வில்வ வேர் இவற்றின் தூள்கள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை, நெய் $\frac{1}{4}$ படி.

**செய்முறை** :— மேற்படி தூள்களை எல்லாம் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து மூன்று ஆழாக்கு தண்ணீரில் கரைத்து மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்து வடிகட்டித் திப்பி நீக்கின குடிநீருடன் மேற்படி நெய்யைச் சேர்த்துக் காய்ச்சிக் கடுகு திரள் பதத்தில் இறக்கி வடிகட்டி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 4 முதல் 5 வராகன் எடை.

**துணைமருந்து**:— சர்க்கரை, தேன், பித்த சாந்தமான சர்பத்துகள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்** :— சுரம், காந்தல், வயிற்றெரிச்சல், இருமல், சொறிசிரங்கு, பேய்ச்சொறி, பித்தம், உணவேலாமை முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு** :— இச்சாபத்தியம்.

## 1160. சந்தனாதி நெய்

சந்தனம் $\frac{1}{2}$ பலம் (17$\frac{1}{2}$ கிராம்), வெள்ளிலோத்திரம், அதி மதுரம், விதைநீக்கின திராட்சைப்பழம் இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் (8$\frac{3}{4}$ கிராம்), நெய் $\frac{1}{4}$ படி, பசுவின் பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இவை எல்லாவற்றையும் அம்மியில் வைத்துப் பசுவின் பாலைவிட்டு வெண்ணெய் போலரைத்து பசுவின் நெய்யிற் கரைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**தீரும்நோய் :—** இதனைத் தலைக்குத் தேய்த்து வருவதால் மேகசுரம், மாறல்சுரம், பூதசுரம் ஆகிய பல சுர நோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம்.

## 1161. எலுமிச்சம்பழ இளகம்

எலுமிச்சம் பழச்சாறு 10 பலம் (350 கிராம்), சர்க்கரை 12 பலம் (420 கிராம்), நற்சீரகம், மிளகு, கசகசா (இதனை அம்மி யில் வைத்துத் தனித்தனியே அரைத்துக் கொள்ளவும்) வகைக்கு 2 பலம் (70 கிராம்), அரிசித்திப்பிலி, மேற்றோல் சீவிய சுக்கு, தாளிசப்பத்திரி, கோட்டம், சாதிக்காய் இவற்றை இளவறுப்பாக வறுத்திடித்த தனித் தனித்தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), நெய் 5 பலம் (175 கிராம்), தேன் 5 பலம்.

**செய்முறை :—** மேற்படி எலுமிச்சம் பழச்சாற்றில் சர்க்கரை யைக் கரைத்துப் பாகுசெய்து பாகுபதத்தில் தூள்களை ஒன்றாகக் கலந்து சிறுகச் சிறுகத்தூவி மத்தாற் கடைந்து நெய்யையும் தேனை யும் விட்டுக்கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 1$\frac{1}{2}$ முதல் 2$\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய் :—** பித்தவாயு, நெஞ்செரிவு, தலைமயக்கம், தலை வலி, வயிற்றுப்புரட்டல், செரியாமந்தம், மயக்கம், கைகால் எரிச்சல், குன்மம், அசதி ஆகியவை தீரும். உடம்பிற்கு வலுவை உண்டாக்கும். பசிதீபனமுண்டாகும். செரியமைக்கழிச்சல் தீரும். இன்னும் இதனை அயவீரச் செந்தூரத்தில் சேர்த்துச் சாப்பிட்டால் நாட்பட்ட குன்மம், வயிற்றுவலி, எரிகுன்மம், கக்கற் குன்மம் ஆகியவை தீரும்.

**மருத்துணவு —:** இச்சாபத்தியம்.

## 1162. சதாபல இளகம்

மேற்றேல் சீவின சுக்கு, மிளகு, நற்சீரகம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), இந்துப்பு 1 பலம், நவச்சாரம் 1 பலம், பருமனை 25 எலுமிச்சம்பழம்.

செய்முறை :— மேற்கூறிய சுக்கு, மிளகு, நற்சீரகம் ஆகிய மூன்றையும் தனித்தனி தூள் செய்து ஒன்ருகக் கலந்து ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு மேற்படி எலுமிச்சம்பழங்களைச் சாறு பிழிந்து அதில் விட்டு வெய்யிலில் வைத்துச் சாறெல்லாம் சுண்டி ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு அதனுடன் மேற்படி இரண்டு உப்புகளையும் சேர்த்து அரைக்க மெழுகு போலாகும். அதனைப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ¼ முதல் 1 வராகன் எடை.

தீரும்நோய் :— பித்தநோய்கள், சுக்கல், செரியாமை நோய், மந்தாக்கினிநோய், மயக்கம், கிறுகிறுப்பு, தலைசுழற்றல் முதலிய ஈரலைப் பற்றின நோய்கள், இரைப்பையைப் பற்றின நோய்கள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :— இச்சாபத்தியம்.

குறிப்பு :— எலுமிச்சம்பழச் சாற்றை ஏககாலத்தில் பிழிந்து உலர்த்துவதைக் காட்டிலும் ஐந்து பழத்தைப் பிழிந்துவிட்டு அது உலர்ந்தபின்பு மறுபடி ஐந்து பழத்தைப் பிழிந்து உலர்த்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்தைந்து பழமாகப் பிழிந்து உலர்த்திக் கொள்வது சிரேஷ்டம்.

## 1163. விளாம்பழ வில்வாதி இளகம்

(அ) பருமனைப் பழுத்த 10 விளாம்பழம் அல்லது நன்ருகப் பழுத்த விளாம்பழச்சதை 40 பலம் (1400 கிராம்), வில்வவேர்ப் பட்டை 10 பலம் (350 கிராம்), மேற்றேல் நீக்கின இஞ்சி 4 பலம் (140 கிராம்), சர்க்கரை 20 பலம் (700 கிராம்), நெய் 10 பலம் (350 கிராம்), தேன் 10 பலம்.

(ஆ) ஏலரிசி, இலவங்கம், நற்சீரகம், இலவங்கப் பட்டை, வால்மிளகு, ஓமம், கசகசா இவற்றின் தூள்கள் வகைக்கு 1¼ பலம், (43¾ கிராம்).

செய்முறை :— வில்வவேர்ப்பட்டையை நையச்சிதைத்து ஒரு மண்பாண்டத்திற்போட்டு நான்குபடி தண்ணீரை விட்டு ஒருபடியாகச் சுண்டவைத்து இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டித்

---

சதாபலம் = எலுமிச்சம் பழம்

திப்பியை நீக்கின குடிநீரில் விளாம்பழச்சதையை போட்டுக் கரைத்துக் கோது, விதை முதலியவைகளை நீக்கி அதில் சர்க்கரையையும் தேனையும் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்ச வேண்டியது. இஞ்சியைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து ஒரு பாண்டத்தில் கொஞ்சம் நெய்யைவிட்டுச் சூடுகண்டவுடன் அதிற் போட்டுச் சிவக்கும்படியாக வறுத்துத்தூள் செய்துகொள்ளவேண்டும். கசகசாவை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு இஞ்சித்தூள், தூள்கள், அரைத்த கசகசா ஆகியவைகளையெல்லாம் ஒன்ருகக் கலந்து முன் சித்தப்படுத்தியிருக்கிற பாகில் சிறுகச் சிறுகப்போட்டு மத்தாற் கடைந்து நெய்யைவிட்டு மறுபடியும் நன்ருகக் கலந்து கீழிறக்கிக்குளிர ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 2 முதல் 3 வராகன் எடை.

**தீரும்நோய் :—** நாற்பதுவகைப் பித்தங்கள், தொடர்கழிச்சல் வகைகள், சுவையின்மை, உணவேலாமை, மேகச்சூடு, மூலச்சூடு ஆகியவை தீரும். பசிதீபனமுண்டாகும்; தாது வளமை உண்டாகும்; உடல்நலமுண்டாகும்; மேகசாந்தியாகும்.

**குறிப்பு :—** விதையிலும் கோதிலும் தேவையான வெந்நீரை விட்டுச் சத்துபாக்கி இல்லாமல் அலம்பி விதை முதலியவைகளை நீக்கிவிட்டு முன்குடிநீருடன் சேர்த்துக்கொள்வது உத்தமம்.

## 1164. விளாம்பழப் பானம்

கொம்பில் பழுத்த விளாம்பழச்சதை 80 பலம் (280 கிராம்), நாட்டுச் சர்க்கரை 80 பலம், தண்ணீர் 5 படி.

**செய்முறை :—** மேற்படி இரண்டு பண்டங்களையும் ஒரு மண் பாண்டத்திற் போட்டு மூன்றுபடி தண்ணீரை விட்டு நன்ருகக் கரைத்து வடிகட்டிக் கொள்ளவும். அந்தத் திப்பியில் ஒரு படி தண்ணீரைவிட்டு மறுபடியும் வடிகட்டிக் கொள்ளவேண்டியது. மூன்ருந் தடவையும் அந்தத் திப்பியில் ஒரு படி தண்ணீரை விட்டுக் கரைத்து வடிகட்டிக் கொள்ளவேண்டியது. இவ்விதம் செய்வதால் சதைகோதிலுள்ள சத்தெல்லாம் வெளிப்பட்டுப் போகும். பிறகு கனத்த குப்பிகளில் வாய்மட்டம் நிரைத்து மூடியிட்டுக் கடு வெய்யிலில் மூன்றுநாள் வைத்துப் பிறகு எடுத்துப் பத்திரப் படுத்தவும். இதனை வெய்யிலில் வைத்திருக்கும்போது இது பொங்கி குப்பிவெடித்துப் போவதுமுண்டு. ஆகையால் கல்காரக் குள்ள பெரிய சாடியிற் போட்டுக் காரக்கிட்டு ஒருவாரம் அல்லது இரண்டுவாரம் கடுவெய்யிலில் வைத்துப் பிறகு குப்பிகளில்

அடைந்துக் கொள்வது உத்தமமான செயலாகும். இப்படிச் செய்வதினல் அபாயத்திற்கு ஏதுவிராது. இப்படிச் செய்யக் கூடாதவர்கள் அதிக விழிப்புடன் மேற்கண்ட வகையாகச் செய்து கொள்ளவும்.

**அளவு :**— 2 முதல் 2½ பலம்.

**தீரும்நோய் :**— பித்த நோய்கள், பித்தச்சூடு, மலப்போக்கு ஆகியவை தீரும். மதுமேக தாகம், மிகுதாகநோய் ஆகியவைகளும் தீரும். தாதுவிருத்தி, குருதிவளமை உண்டாகும்.

இதில் புளிப்பேறப் போதையும் அதிகரித்துக் கொண்டுவரும். ஆகையால் போதைப் பழக்கமில்லாதவர்கள் மிகக் கவனத்துடன் உபயோகிக்கவும்.

## 1165. விளாம்பழத் திராவகம்

கொம்பில் பழுத்த விளாம்பழச்சதை 40 பலம் (1400 கிராம்), கருவேலம்பட்டை 40 பலம் (இதனை உரலில் நையச் சிதைத்துக் கொள்ள வேண்டியது), பனைவெல்லம் 40 பலம் (இதனைக் கட்டி இல்லாமல் இடித்துக் கொள்ள வேண்டியது) தண்ணீர் 8 படி.

**செய்முறை :**— முன் மூன்றையும் பதினைந்து படி பிடிக்கும் ஒரு மண்பாத்திரத்திற் போட்டு மேற்படி தண்ணீரைவிட்டு நன்ருகக் கலக்கிப் பாண்டத்தின் வாயை மூடாமல் மெல்லிய துணியால் வேடுகட்டி வெய்யிலில் வைத்துவர வேண்டியது. கடுவெய்யிலாக இருந்தால் ஐந்து நாள் போதுமானது. வெய்யில் மத்திமமாயிருந்தால் வெய்யிலுக்குத் தகுந்ததுபோல் ஒரு வாரம் அல்லது பத்து நாள் வைக்க வேண்டியது. ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவைகள் கலக்கிக் கொண்டும் வரவேண்டியது. பிறகு வாலையிலிட்டு முறைப்படி திராவகமிறக்கிப் பளிங்குக் குப்பியில் அடைத்துக் காரக்கிட்டுப் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 2½ முதல் 3½ பலம்.

**தீரும்நோய் :**— மதுமேகம், மதுமேகத்திற் காணும் தாகம், மிகுதாக நோய், பித்த நோய், கக்கல், செரியாமை, தொடர்க் கழிச்சல், கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, குருதிக் கழிச்சல், வாயிலிருந்து இரத்தம் விழுதல் முதலியவைகள் தீரும். மேகச் சூடு, பித்தச் சூடு, வெட்டைச் சூடு, முதலிய அனல் நோய்கள் (உட்டின நோய்கள்), நலமாகும். உடல் நலமும் உண்டாகும். இளைத்த உடல் பருக்கும். தாது விருத்தியுண்டாகும். இதில் சிறு போதையும் உண்டு.

## 1166. விளாம்பழ சர்பத்து

மேற்கண்டபடி இறக்கின திராவகம் 40 பலம் (1400 கிராம்), சர்க்கரை 40 பலம்.

**செய்முறை :—** இரண்டையும் கலந்துக் காய்ச்சிப் பாகுப்படி மணப்பாகு (சர்பத்து) செய்துகொள்ளவும்.

**அளவு :—** 2 முதல் 3 பலம்.

**தீரும்நோய் :—** மது மேகம், அதனுலுண்டாகும் தாகம் ஆகிய இவை தீர்வதுந் தவிர மேற்கண்ட மற்ற எல்லா நோய்களுக்கும் கொடுக்கலாம்.

## 1167. விளாம்பழ சர்பத்து (வேறு)

கொம்பிற் பழுத்த விளாம்பழச்சதை 40 பலம் (1400 கிராம்), தண்ணீர் 4 படி, மேற்றோல் சீவின இஞ்சிச் சாறு 2 பலம் (70 கிராம்), சர்க்கரை 16 பலம் (560 கிராம்).

**செய்முறை :—** பழச்சதையையும், தண்ணீரையும் ஒரு பாண்டத்தில் விட்டு நன்றாகக் கலக்கி வாலேயிலிட்டுத் திராவகமிறக்கி அதில் சர்க்கரையையும் இஞ்சிச் சாற்றையும் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் இறக்கிக் குளிர ஆறினபின்பு பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $1\frac{1}{2}$ முதல் 2 பலம்.

**தீரும்நோய் :—** பித்த நோய், சுவையின்மை, வயிற்றுளேச்சல், பித்தச் சூடு, பித்த மயக்கம் ஆகியவை தீரும். குடல் வலிமை பெறும். வயிற்றுப் பொருமல், பெருங் கழிச்சல், மலப்போக்கு ஆகியவைகளும் தீரும்.

## 1168. சதாபல † சர்பத்து

எலுமிச்சம்பழச் சாறு 40 பலம், (1400 கிராம்), தண்ணீர் 2 படி, சர்க்கரை 120 பலம், பொதினு இலேச் சாறு 2 பலம் (70 கிராம்), இஞ்சிச் சாறு 2 பலம்.

**செய்முறை :—** எல்லாவற்றையும் கலந்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் பாகு பதத்திலிறக்கிப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** $1\frac{1}{2}$ முதல் 2 பலம்.

**தீரும்நோய் :—** ஆகாரத்தைச் செரிக்கச் செய்யும். தாகத்தைத் தணிக்கும். கூடுதலாயுள்ள சூட்டைச் சாந்தப்படுத்தும். இரைப்பையைப் வலுப்படுத்தும்.

---

† சர்பத்து = ஷர்பத் (திசைச்சொல்) = மணப்பாகு

## 1169. துருஞ்சி நாரத்தம்பழ சர்பத்து

துருஞ்சி நாரத்தம்பழத் தோலைச் சிறு துண்டுகளாகச் செய்து அதன் புளிப்புப் போகிற வரையில் பன்னீரில் தேய்த்துக் கழுவி அதனை இடித்துப் பிழிந்த சாறு 1 பங்கு, சர்க்கரை 2 பங்கு.

**செய்முறை:**— இரண்டையும் கலந்து காய்ச்சி, சர்பத்து பதத்தி லிறக்கிப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் 1½ பலம்.

**தீரும்நோய் :**— சூட்டுச் சம்பந்தமான இருதய அதிர்ச்சி, சூட்டுச் சம்பந்தமான நோய்கள், பித்தச் சூடு ஆகியவை தீரும். இருதயத்தைப் பலப்படுத்தும். ஈரலைப் பலப்படுத்தி அதிலுள்ள நோய்களைத் தீர்க்கும்.

**குறிப்பு :**— முன்கழுவின பன்னீர் ஒரு பங்கு, சர்க்கரை இரண்டு பங்கு. இவ்விரண்டையும் கலந்து காய்ச்சி சர்பத்து பதத்திலிறக்கிக் குளிர ஆறின பின்பு பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**— 1 முதல் 1½ பலம்.

**தீரும்நோய் :**— பித்தநோய்கள், கக்கல், மயக்கம், கிறுகிறுப்பு, சுவையின்மை, வயிற்றுப்போக்கு முதலிய பித்த சம்பந்தமான நோய்கள் தீரும்.

## 1170. துருஞ்சி சர்பத்து

துருஞ்சிப் பழரசம் 8 பலம் (280 கிராம்), சுத்தத் தண்ணீர் 4 பலம் (140 கிராம்), சர்க்கரை 4 பலம்.

**செய்முறை :**— எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து காய்ச்சிப் பாகு பதத்திலிறக்கிக் குளிர ஆறினபின் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:** — 2 முதல் 5 வராகன் எடை.

**தீரும்நோய் :**— பசிதீபனமுண்டாகும். சூட்டினாலுண்டான தலைநோய், பிரமியரம், வெட்டைச்சூடு முதலியவை தீரும்.

## 1171. பொதினா சர்பத்து

பொதினா இலைச் சாறு 20 வராகன் எடை (70 கிராம்), சிவப்புக் கடுகு 20 வராகன் எடை, படிக்காரத் தூள் 91 வராகன் எடை (318½ கிராம்), கமீர்மாயா (அதாவது அதிக நாள்கள் சென்ற காடி) 1200 வராகன் எடை (4200 கிராம்), தேன் 600 வராகன் எடை (2100 கிராம்), தண்ணீர் தேவையான அளவு.

செய்முறை :— எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து தேவை யான அளவு தண்ணீரையும் விட்டுக் காய்ச்சி, அரைப் பாகம் சுண்டினபின் வடிகட்டிப் பிறகு தேனையும் சேர்த்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் இறக்கி பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் 1½ வராகன் எடை.

தீரும்நோய் :— அடங்காப் பசியை உண்டாக்கும். இரைப்பை யின் அசுத்த மாசுகள் நீங்கும். கபத்தைப் போக்கும். விந்து விருத்தி, தாது வளமை முதலியவை உண்டாகும்.

குறிப்பு :— நாட்பட்டகாடி அகப்படாவிட்டால் ரொட்டி மாவிற்குப் புளிப்பேற்றுவதற்காக உபயோகப்படுத்தும் கமீர் மாயா என்னும் புளிப்பை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இன்னும் இதற்குப் பதிலாக கடையில் விற்கும் சோடாமாவையும் உபயோகித்துக் கொள்ளலாம்.

## 1172. திராட்சை சர்பத்து

பச்சை திராட்சைப்பழச் சாறு 26 பலம் (910 கிராம்), இலவங் கம் 1 பலம் (35 கிராம்), சர்க்கரை 13 பலம் (455 கிராம்).

செய்முறை :— திராட்சைப்பழச் சாற்றை ஒரு பாண்டத்தி லிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் காய்ச்சி அரைவாசி சுண்டினவுடன் இறக்கித் தூசு முதலியவைகள் விழாமல் பாண்டத் தின் வாய்க்கு மெல்லிய துணியில் வேடுகட்டி ஒருநாள் வைத்து மறுநாள் அடுப்பேற்றி இலவங்கத்தைச் சிதைத்து அதில் போட்டுச் சிறு தீயாக எரித்து இரண்டு மூன்று கொதி வந்த பிறகு அந்த ரசத் தைக் கொஞ்சமெடுத்து மோந்து பார்த்தால் புளிப்பு வாசனை நீங்கியிருக்கும். அதுதான் பக்குவமென அறிந்து கீழிறக்கி வடி கட்டித் திப்பியை நீக்கிவிட்டு அதில் சர்க்கரையைக் காய்ச்சிப் பாகு பதத்திலிறக்கிக் குளிர ஆறின பின்பு புட்டியில் விட்டுக் கார்க் கிட்டுப் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ¼ முதல் ½ பலம்.

தீரும்நோய் :—பித்தச் சூடு, இரத்தச்சூடு, மேகச்சூடு ஆகிய வைகளைத் தணிக்கும். உஷ்ண நோய்களையும் போக்கும். தாக நோயையும் போக்கும். இரத்தத்தூய்மை உண்டாகும். இரைப் பை, சிறுகுடல், ஈரல் முதலிய உறுப்புகளைப் பலப்படுத்தும். இதனைப் போர்ட் ஒயின் என்னும் பானத்திற்குப் பதிலாக உபயோ கிக்கலாம்.

## 1173. கொத்துமல்லி சர்பத்து

கொத்துமல்லி விதை 24 பலம் (840 கிராம்), நற்சீரகம் 1 பலம் (35 கிராம்), ஆட்டிறைச்சி 3 பலம் (105 கிராம்), தண்ணீர் 2 படி சர்க்கரை அல்லது கற்கண்டு 24 பலம் (840 கிராம்).

**செய்முறை :—** மேற்கண்ட முன் மூன்று சரக்குகளையும் உரலில் நையச் சிதைத்து ஒரு மண்பாண்டத்தில் போட்டு மேற்படி தண்ணீரை விட்டு நான்கிலொரு பாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடிகட்டி அதில் கற்கண்டை அல்லது சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகு பதத்திலிறக்கிக் குளிர ஆறினபின் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 3 முதல் 5 வராகன் எடை.

**தீரும்நோய் :—** இருமல், சயநோய், சூட்டினுலுண்டாம் ஒரு பக்கத்தலைநோய் ஆகியவை தீரும். இருதயம் பலப்படும்.

## 1174. இஞ்சி பானம்

மேற்றேல் சீவின இஞ்சி 120 பலம் (4200 கிராம்), வெல்லம் 140 பலம் (4900 கிராம்), தண்ணீர் 6 படி இலவங்கத்தூள் 6 வராகன் எடை, சாதிக்காய் 1 வராகன் எடை.

**செய்முறை :—** இஞ்சியைப் பஞ்சுபோல் நையநறுக்கி மேற்படி நீரில்போட்டு அதில் வெல்லத்தையும் கரைத்துப் பாண்டத்தின் வாயை மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி மேடான பூமியில் புதைத்து வைக்க வேண்டியது. ஈரமான பூமி, சதுப்புள்ள பூமி முதலியவைகள் ஆகா. ஒரு வாரம் சென்று எடுத்து மேற்கண்ட இரண்டு தூள்களையும் அதில் தூவி இரண்டு மூன்று மணி நேரம் கையால் சேர்த்துப் பிசைந்து முடிவில் பிழிந்து சக்கையை நீக்கி வடிகட்டி புட்டியில் அடைத்து வைத்துக் கொள்ளவேண்டும். கூடுமானல் பெரிய சாடிகளில் சக்கையை நீக்காமல் வைத்துக் கொண்டு மேலுக்கு மேலாக மொண்டு உபயோகித்துக் கொள்ளலாம்.

**அளவு :—** ½ முதல் 1 பலம்,

**தீரும்நோய் :—** இருமல், இடுப்புநோய், முதலியவை தீரும். வயிற்றுப்பொருமல், வயிற்றுப்புசம், மந்தாக்கினி நோய், வயிற்று வலி, கழிச்சல் ஆகியவை தீரும். பசிதீபனம் அதிகப்படும். ஆகாரத்தை செரிக்கச்செய்யும், தாதுவிருத்தியுண்டாகும்.

## 1175. கற்பூரவள்ளி பானம்

கற்பூர வள்ளிச்சாறு 8 பலம், (280 கிராம்), சர்க்கரை 1 பலம் (35 கிராம்), ஏலரிசித்தூள் 1½ வராகன் எடை (5¼ கிராம்).

**செய்முறை** :— இவைகளையெல்லாம் ஒன்ருகக் கலந்து ஒரு புட்டியில் கல் காரக்கிட்டு ஒரு வாரம் வரையில் வெய்யிலில் வைத்துப் பிறகு பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 2 முதல் 3 வராகன் எடை.

**தீரும்நோய்** :— இரைப்பு, சுவாசம், கபக்கட்டு, கோழைக்கட்டு, கபத்திஞலுண்டான மந்தாக்கினிநோய், கபசுரம் முதலியவைகள் தீரும்.

## 1176. ரோஜாப்பூ சர்பத்து

ரோசாப்பூவிதழ்களை இடித்துப் பிழிந்தசாறு 16 பலம் (560 கிராம்), சர்க்கரை 16 பலம் (560 கிராம்), பன்னீரில் இழைத் துலர்த்தின சந்தனம் 2 வராகன் எடை (7 கிராம்).

**செய்முறை** :— சாற்றையும் சர்க்கரையையும் கலந்து அடுப் பேற்றிச் சிறு தீயாக எரித்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் இறக்கி மேற்படி சந்தனத்தைப் பொடித்துத் தூவி நன்ருகக் கலந்து புட்டி யில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 5 முதல் 6 வராகன் எடை.

**தீரும்நோய்**:— அளவில் அதிகமாகச் சாப்பிட்டுவந்தால் மலபந் தத்தை நீக்கும், மயக்கம் முதலியவைகளையும் நீக்கும். பித்தச் சூடு, ஆகியவைகளைத் தணிக்கும். இரைப்பை, இருதயம் ஆகிய வைகளைப் பலப்படுத்தும். பசிதீபனத்தை அதிகப்படுத்தும்.

## 1177. வாழைப்பழ சர்பத்து

ரஸ்தாளி வாழைப் பழம் 100. இவை காயாயில்லாமலும் அதிகம் நைந்து போனவைகளாய் இல்லாமலும் செம்பழங்களாக இருக்கவேண்டும். இவைகளைத் தோலுரித்து நீக்கி ஒரு பாத்திரத் தில் வைத்து இரண்டு பலம் கருவேலம்பட்டையை இடித்துத்தூள் செய்து முன் பழங்களிற் சிறுகச் சிறுகத் தூவி நன்ருகப் பிசைந்து பன்னிரண்டுமணி நேரம் மூடிவைத்துப் பிறகு சிறுகச்சிறுக எடுத்துப் பிழிந்துச் சாற்றை எடுத்துக் கொள்ளவேண்டும். உரத்த துணியில் வைத்தும் பிழிந்து கொள்ளலாம். இவ்விதம் பிழிந்தெடுத்த பழச் சாற்றை மெல்லிய சேலைத்துண்டில் வடிகட்டிப் படி ஒன்றுக்குச் சர்க்கரை பத்துப் பலம் விகிதம் சேர்த்து அடுப்பேற்றி இரண் டொரு கொதி வந்தவுடன் மறுபடியும் சேலைத்துண்டில் வடிகட்டித் திப்பி முதலியவைகளை நீக்கிவிட்டு மறுபடியும் காய்ச்சிப் பாகு பதத்தில் கீழேயிறக்கி வைத்துக்கொள்ளவும். பிறகு வேறு பாத் திரத்தில் ஒரு பலம் நெய்யை விட்டு நெய் சூடுகண்டவுடன் இலவங்

கம், இலவங்கப்பட்டை, ஏலக்காய் இவை வகைக்கு ஒவ்வொரு வராகன் எடையாக அதிற் போட்டுக் கொஞ்சம் வறுத்து முன்னே கீழே இறக்கி வைத்திருக்கிற பாகை அதில் விட்டுத் தாளித்துக் கீழேயிறக்கி மறுபடியும் வடிகட்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 5 முதல் 8 வராகன் எடை.

**தீரும்நோய் :—** குருதிக்கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, நிணக் கழிச்சல், கடுப்பு முதலியவை தீரும். மேகச்சூடு, குருதி விழுதல், மூலச்சூடு முதலியவைகளும் தீரும். தாதுவிருத்தி உண்டாகும்.

## 1178. வெந்தயச் சூரணம்

வெந்தயம், நற்சீரகம், கருவேலம்பிசின் வகைக்கு 1 பலம் (35 கிராம்), கற்கண்டுத்தூள் 6 பலம் (210 கிராம்), பசுவின் நெய் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை :—** கருவேலம் பிசினைக் கொஞ்சம் நெய்யிற் பொரித்துப் பொடித்துக் கொள்ளவேண்டியது. வெந்தயத்தையும் நற்சீரகத்தையும் தனித்தனி இளவறுப்பாக வறுத்து இடித்துத் தூள்செய்து துணியில் சலித்துக் கொள்ள வேண்டியது. இந்தத் தூள்களையும் கற்கண்டையும் ஒன்றாகக் கலந்து ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு முன்நெய்யை உருக்கிச் சீலைவடிகட்டி அதில் விட்டு நன்றாகக் கலந்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவேண்டியது.

**அளவு :—** $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய் :—** மார்புவலி, மயக்கம், வெட்டைச்சூடு, நீரெரிவு, மூலச்சூடு, கைகால் அசதி ஆகியவை தீர்ந்து தாது விருத்தி உண்டாகும்.

## 1179. நீரடிமுத்துப் பிரயோகம்

நீரடிமுத்துப்பருப்பு 1 பலம் (35 கிராம்), ஏலரிசி 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), ரசகற்பூரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), மிருதார்சிங்கி 1 வராகன் எடை, கம்பிவெடியுப்பு 3 வராகன் எடை, காசுக்கட்டி $1\frac{1}{2}$ வராகன் எடை, படிக்காரப்பொரி $\frac{3}{4}$ வராகன் எடை, துருசு $\frac{3}{4}$ வராகன் எடை, ரசம் $\frac{3}{4}$ வராகன் எடை, வெற்றிலைச்சாறு 2 பலம் (70 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு 2 பலம், குளிர்ந்த தண்ணீரால் கழுவின வெண்ணெய் 2 பலம்.

**செய்முறை :—** துருசையும் இரசத்தையும் சேர்த்துப் பொடித்து வெற்றிலைச் சாற்றில் கொஞ்சம் விட்டு அரைக்க ரசம் மடிந்து போகும். பிறகு மற்றச் சரக்குகளையும் தனித்தனிப் பொடித்துப் போட்டு அரைத்து நீரடிமுத்தைச் சிறுகச் சிறுகச் சேர்த்தரைத்து

அது மைபோலானவுடன் வெற்றிலைச் சாற்றையும் எலுமிச்சம்பழச் சாற்றையும் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு மணிநேரம் அரைத்து முடிவாக வெண்ணெயையும் சேர்த்து ஒரு மணி நேரமரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய் :—** இதில் சுமார் மூன்று நான்கு வராகன் எடை எடுத்து இரவில் சொறி சிரங்கின் மீது பூசி மறுநாட் காலையில் குளிர்ந்த நீரால் தலைமுழுக்குச் செய்யவேண்டும். இவ்விதம் தொடர்ச்சியாக ஒரு வாரம் செய்ய எவ்விதமான சொறிசிரங்கும் தீரும். சிலருக்கு மாதந்தோறும் தொடர்ந்து வருத்தப் படுத்துவது முண்டு. அவ்வித சொறிசிரங்கும் தீரும். பேய்ச்சொறி, நாய்ச் சொறி, கழுதைச்சொறி முதலிய சொறிநோய்களும் தீரும். பல் வீத்தேமல், சொறித்தேமல், தவளைச்சொறி முதலியவைகளும் தீரும்.

**மருந்துணவு:—** இறைச்சி சூப்பு, புழுங்கலரிசிச் சாதம் சாப்பிட லாம். அசைவ உணவுப் பழக்கமில்லாதார் துவரம்பருப்பு, பச்சைப் பயறு முதலியவைகளைச் சேர்த்துக்கொள்ளவும். மீன், கருவாடு, வாயு உணவுப் பண்டங்கள், கரப்பான் உணவுப் பண்டங்கள் ஆகிய வற்றை நீக்கவும்.

## 1180. அசுவகெந்திப் பற்று

அமுக்குராக்கிழங்கு, பெருங்காயம் இவை சமன். இவற்றில் கோழிமுட்டை வெண்கருவை விட்டுச் சந்தனக்கல்லில் இழைத்து தினம் இரண்டு அல்லது மூன்று தடவை மேல் பற்றிட்டுவரக் கண்டமாலை, பவுத்திரங்கள், விப்புருதிவீக்கம், துடைவாழ, சூலைப்பிளவை, வீக்கம், அரையாப்பு, மூன்று வகைப்புண்கள் ஆகி யவைகளெல்லாம் வருத்தமில்லாமல் உடைந்தும் ஆறியும் குண மாகும்.

## 1181. மைசாட்சி வில்லை

மைசாட்சி, இராகுக்கல், நாட்டு வெண்காரம், சீனக் காரம், சவுக்காரம், மூசாம்பரம், அபினி, கஸ்தூரிமஞ்சள், மைதாலக்கடி, பெருங்காயம் இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்). இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்தும் தூள் செய்ய வேண்டியவை களைத் தூள்செய்தும் ஒன்றாகக் கலந்து அரைமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு பழுத்த பெரும் கத்தரிப்பழத்திற்குள் அல்லது முற்றின கத்தரிக்காய்க்குள் குடைந்து வைத்து மூன்று சீலைமண் செய்து உமிக்காந்தலில் வைத்துக் கத்தரிக்காய் வெந்த பதத்திலெடுத்துக் கவசத்தை நீக்கிவிட்டு மற்றெல்லாவற்றையும் அம்மியில் வைத்து வெண்ணெய்போல் அரைத்துக் கொள்ளவும்.

கட்டிக்குத் தகுந்ததுபோல் கால் அங்குல கனமுள்ள வில்லைகளாகச் செய்து கொள்ள வேண்டியது. ஒரு தடவை செய்த வில்லை பல தடவை உபயோகிக்கலாம். ஒரு கத்தரிக்காய் கொள்ளாவிட்டால் இரண்டு மூன்று கத்தரிக்காய்க்குள் வைத்துச் சீலைமண் செய்து சித்தப்படுத்திக் கொள்ளலாம். இந்த வில்லையைக் கட்டிகளின்மீது வைத்து இருபத்துநான்கு மணி நேரம் சென்றபின் அதை நீக்கிவிட்டு மறு வில்லையை வைத்துக் கட்டவேண்டியது. இவ்விதம் இரண்டு மூன்று வில்லைகள் வைத்துக் கட்டுவது போதுமானது. அவசியமானால் நோய் குணப்படுகிறவரையில் வைத்துக் கட்டலாம்

**தீரும்நோய் :—** அரையாப்புக்கட்டி, கரளை, நரளை, ரசூலி, வீக்கம், விசூபி முதலிய பலவகைக் கட்டிகள் கரைந்துபோகும்.

## 1182. கருவேப்பிலைச் சூரணம்

சுண்டைவற்றல், கருவேப்பிலை, மாங்கொட்டைப் பருப்பு ஓமம், நெல்லிமுள்ளி, மாதுளை ஓடு, வெந்தயம் இவை வகைக்கு சமனெடை.

**செய்முறை :—** இவற்றைத் தனித்தனி இளவறுப்பாக வறுத்துத் தூள் செய்த பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை,

**துணைமருந்து :—** தயிர்ச்சக்கை, தயிர், தேன், காட்டத்திப்பூக் குடிநீர், வெந்தயக்குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய் :—** கழிச்சல்வகைகள், வயிற்றுப்போக்கு, வயிற்றுப் பொருமல், கழிச்சல், செரியாமை முதலிய அநேக நோய்கள் தீரும்.

**குறிப்பு :—** இதனைத் தயிரில் சேர்த்து வெய்யிலில் உலர்த்த வேண்டியது. மறுபடியும் தயிரில் பிசைந்து உலர்த்த வேண்டியது. இவ்விதம் மடக்கி மடக்கி மூன்று தடவைகள் தயிரில் பக்குவப் படுத்தி உலர்த்திப் பொடித்து முன்போல் உபயோகிப்பதினால் அதிக குணம் செய்கிறது. அனல் கழிச்சல் முதலியவைகளையும் கட்டுகிறது. இது என் அனுபவ முறை.

## 1183. கருவேப்பிலைக் கருக்குக் குடிநீர்

கருவேப்பிலை 5 பலம் (175 கிராம்). இதனை ஒரு புது மண் சட்டியிற் போட்டு வறுத்து எல்லாம் கருகின பக்குவத்தில் மூன்று ஆழாக்குத் தண்ணீரைவிட்டு ஒரு ஆழாக்காகச் சுண்டவைத்து வடிகட்டின குடிநீரில் வறுத்திடித்த மிளகுத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) போட்டு இரண்டு வராகன் எடை தேனையும் கலந்து பருகச் செய்யவேண்டியது. இவ்விதம் காலை மாலை இரண்டு வேளை

யும் மூன்றுநாள், நான்கு நாள் செய்துவந்தால் வயிற்றுப்பொருமல் வயிற்றுப்புசம், வயிற்றிரைச்சல், இரைப்பையிலுள்ள வாயுக்க்ள், செரியாக் கழிச்சல், தொடர்க் கழிச்சல் முதலியவைகள் தீரும்.

குறிப்பு :— இதனுடன் அரைப் பலம் மிளகையும் சேர்த்து வறுத்துச் சாம்பலாக்கி மேற்கண்டபடி குடிநீர் செய்து நச்சுக் கழிச்சல் முதலியவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

## 1184. தேங்காய் மதனகாமேசுரம்

நீர்முள்ளிவிதை 2 பலம்(70 கிராம்), பூனைக்காலிவிதை 3 பலம் (105 கிராம்), பொன்ஊமத்தை விதை 4 பலம் (140 கிராம்), இலவங்கம், அதிமதுரம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப் பத்திரி, குரோசாணி ஓமம். இவை வகைக்கு 12 வராகன் எடை (42 கிராம்). இவை எல்லாவற்றையும் தூள் செய்துகொள்ளவும். 1 தேங்காய்

செய்முறை :— மேற்படி தேங்காயைக் கண்திறந்து அதற்குள் ளிருக்கும் நீரை ஊற்றிவிட்டு மேற்படி சூரணங்களையெல்லாம் அதற்குட் செலுத்தி அதன் குடுமியால் அடைத்து ஒருபடி பசுவின் பாலையும் ஒரு படி தண்ணீரையும் கலந்து ஒரு தோண்டியில் விட்டு மேற்படி தேங்காயைக் கிழிக்கட்டி அதில் தொங்கவிடவேண்டும். தேங்காயானது தண்ணீருக்குள் ஆழ்ந்திருப்பதுடன் அடியிற்படா மல் இரண்டு மூன்று அங்குலத்துக்கு மேலாக இருக்கும்படித் தொங்க விடவேண்டும். பாலெல்லாம் சுண்டின பின்பு எடுத்து ஆறவிட்டு அதனை உடைத்து உள்ளேயிருக்கிற சூரணத்தை அம்மியில் வைத்து வெண்ணெய்போலரைத்து அரை வராகன் எடையுள்ள மாத்திரை களாகச் செய்து நிழலிலலுர்த்தி வைத்துக்கொள்ளவும். மேற்படி தேங்காயைக் காற் பலமுள்ள துண்டுகளாகத் துண்டித்து அதன் மீதுள்ள புறணியை நீக்கி வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு :— 1 முதல் 1½ மாத்திரை.

துணைமருந்து :— முன் சித்தப்படுத்தியிருக்கிற தேங்காய்த் துண்டு ஒன்று, கற்கண்டு ½ பலம் (17½ கிராம்). இவைகளைச் சேர்த்து மாத்திரையை மென்று சாப்பிடவேண்டியது. மேற்கண்டபடி பக்கு வப்படுத்தின தேங்காய் செலவாகிவிட்டால் வேறு புதிய தேங் காய்த் துண்டையும் மேற்கண்டபடி சேர்த்து மென்று சாப்பிட லாம்.

தீரும்நோய் :— விந்தொழுக்கு, விந்து நீர்த்திருத்தல், விந்து வெளிப்பாடு முதலிய நோய்கள் தீரும். தம்பனமுண்டாகும்.

மருத்துணவு:—நோய் பலமாயிருந்தால் புளிப்புப் பொருள்களை, நீக்கவேண்டியது. இந்த மாத்திரையை உட்கொண்டவுடன் காய்ச்சிக் கற்கண்டிட்ட பாலைச் செரித்தல் திறனுக்குத் தக்கபடி பருகச் செய்யவேண்டியது.

## 1185. தேங்காய்ப்பால் இளகம்

(அ) தேங்காய்ப்பால் 5 பலம் (175 கிராம்). கோதுமையை ஊறவைத்து அரைத்துப் பிழிந்த பால், உளுந்தை ஊறவைத்து அரைத்துப் பிழிந்த பால், பருத்திவிதையை ஊறவைத்து இடித்துப் பிழிந்த பால், பசுவின்பால், கசகசாவை அரைத்துப் பிழிந்த பால் இவை வகைக்கு $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்).

(ஆ) பேதானுவிதை, சீமை நீர்முள்ளிவிதை, நாட்டு நீர்முள்ளி விதை, துத்திவிதை, வெந்தயம் (இதனை வறுத்துக் கொள்ளவும்). சாதிக்காய், சாதிப்பத்திரி, நிலப்பனைக்கிழங்கு, பூனைக்காலிவிதை சீமைத்தண்ணீர் விட்டான் கிழங்கு, கருவாப்பட்டை இவற்றின் தூள் வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்).

(இ) மேற்றோல் நீக்கின வாதுமைப்பருப்பு, வெள்ளரிவிதைப் பருப்பு, பூசணிவிதைப்பருப்பு, சுரைவிதைப்பருப்பு, சாரப்பருப்பு, கசகசா இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை :—** (அ) விலுள்ள பால்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அதில் கற்கண்டைத் தூள்செய்து போட்டும், தேனை விட்டும் பாகு செய்து கொள்ளவும். (இ) யிலுள்ள பருப்பினங்களையும் கசகசாவையும் அம்மியில் வைத்து வெண்ணெய்போல் அரைத்து மேற்படி பாகிற் போட்டு மத்தாற் கடைந்து பாகுபதத்தில் (ஆ) விலுள்ள தூள்களை ஒன்றாகக் கலந்து சிறுகச் சிறுகத்தூவி நன்றாகக் கடைந்து கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $1\frac{1}{2}$ முதல் 2 வராகன் எடை. காலை மாலை இரண்டு வேளையும் இருபது நாளைக்குக் குறையாமல் உபயோகிக்கவும்.

**தீரும்நோய் :—** எல்லாவகை மேகநோய்களும் தீரும். மேக வெட்டை, உடல் இளைப்பு, அனல் நோய், பித்தச்சூடு முதலியவைகளும் தீரும். இளைத்த உடல் பருக்கும். அனல் நோய்களுக்கும் உபயோகப்படும்; தாதுவலிவு உண்டாகும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம்.

## 1186. தேங்காய்ப்பால் நெய்

தேங்காய்த் தனிப்பால் 1 படி, புளியங்கொட்டை மேற்றோல் தூள் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை :**— இரண்டையும் கலந்து அடுப்பேற்றி எண்ணெயாகிறவரையில் காய்ச்சி வடிகட்டி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும். இது தேங்காயெண்ணெயைப் போலிராமல் நெய்யைப் போலிருக்குமாகையால் இதற்குத் தேங்காய்ப்பால் நெய்யென்று பெயர்.

**அளவு:** — 1 முதல் 3 வராகன் எடை,

**தீரும்நோய் :**— நீரெரிச்சல், வெட்டைச்சூடு, கணைச்சூடு, மூலச்சூடு முதலிய அனல் சம்பந்தமான நோய்களெல்லாம் தீரும்.

**குறிப்பு :**— பிரான்சு தேசத்தார் இவ்விதமாகவோ அல்லது வேறு விதமாகவோ செய்யப்பட்ட நம் தேசத்துத்தேங்காய் நெய்க்குச் சிறந்த பல பெயர்களிட்டு உயர்ந்த விலைக்கு விற்கின்றனர்கள். இந்த நெய்யானது உண்மையில் உடலைக் காப்பதிலும் குழந்தைகளுக்குக் காணும் கணைநோயை நீக்குவதிலும் அதிகம் சிறந்தது. நமது கொல்லையில் உள்ள மூலிகை சஞ்சீவியாய் இருந்தாலும் அதனைச் சிறப்புடையதாகக் கொள்ளாது கைவிடுவது நமது தன்மையாகும்.

## 1187. தேங்காய் இளகம்

(அ) தூய்மைசெய்த சாதிலிங்கம், இரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், காந்தம், சீனக்காரம், வெங்காரம் இவை வகைக்கு 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்).

(ஆ) இந்துப்பு, வெடியுப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, கருப்புப்பு, சவுக்காரம், நவச்சாரம் இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்).

(இ) கருஞ்சீரகம், கடுகுரோகணி, தேசாவரம், ஓமம், கொத்துமல்லிவிதை, வெள்ளைப்பூண்டிதழ், அரிசித்திப்பிலி இவற்றின் தூள் வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்).

(ஈ) பொரித்த பெருங்காயம், தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு இவை வகைக்கு 1 வராகன் எடை பருமனான தேங்காய் 1, உத்தாமணிச் சாறு செல்லத்தக்க அளவு, சிற்றாமணக்கெண்ணெய் 5 பலம் (175 கிராம்).

செய்முறை :— (அ) விலுள்ளவைகளில் கெந்தகத்தையும் இரசத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக் கருத்த பின்பு மற்றவைகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து ஒன்றாகக் கலந்து அரைத்து எடுத்துக் கொள்ளவும். (ஆ) விலுள்ளவைகளையும் பொடித்து வைத்துக்கொள்ளவும். (இ) யிலுள்ள எல்லாத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து கொள்ளவும். (ஈ) யிலுள்ள வாளத்தைக் கல்வத்

திற்போட்டு உத்தாமணிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு பெருங்காயத்தைத் தூள் செய்து அதிற் சேர்த்து மறுபடியும் கொஞ்ச நேரமரைத்துப் பிறகு அ, ஆ, இ ஆகியவைகளிலுள்ளவைகளையும் அதிற் சேர்த்து மேற்படி சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து மூன்று அல்லது நான்கு மணி நேரமரைத்து வெண்ணெய்போலான பின்பு தேங்காயைக் கண்திறந்து அதிலுள்ள நீரை நீக்கிவிட்டு முன் அரைத்த மருந்தை அதிற்போட்டு வேப்பங்குச்சி முளைசீவி அதில் துணியைச்சுற்றி முன் திறந்த துவாரத்தில் வைத்து அடித்து வைக்கோல் முதலியவை இல்லாத சுத்தமான சாணியை அல்லது குழைத்தமண்ணை அரை அங்குலமிருக்கும்படியாகக் கவசம் செய்து கவசத்தின் பத்துப் பங்கெடை வறட்டியில் புடமிட்டுப் புடம் எரியும்போது விழிப்புடன் கவனித்துக் கொண்டிருந்து தேங்காய் வெடித்துச் சுருசுரு என்னும் ஒருவித ஒளி உண்டானவுடனே நெருப்பைத் தள்ளித் தேங்காயை எடுத்து ஆறவிட்டு ஆறின் பின்பு உடைத்துக் கொட்டாங்கச்சியை நீக்கி விட்டுத் தேங்காய்க்குள் இருக்கும் மருந்தைத் தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும். தேங்காயைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து அம்மியில் வைத்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு முன் மருந்தையும் சேர்த்து அரைத்து ஒரு இருப்புச் சட்டியை அடுப்பில் வைத்து அதில் முன் சிற்றாமணக்கெண்ணெயைவிட்டு முன் சித்தப்படுத்தின மருந்தையும் போட்டுத் தீய்ந்து போகாமல் இரும்புக் குச்சியால் கிளறிக் கொண்டிருந்து மெழுகு பதத்தில் எடுத்து ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 4 முதல் 6 குன்றி எடை. இது கழிச்சல் குணமுடையதாகையால் ஆரம்பத்தில் உடல்நிலையை நிதானித்துக் குறைந்த அளவாக உபயோகித்துப் பிறகு சமயோசிதம்போல் அதிகப்படுத்திக்கொள்ளலாம்.

தீரும்நோய் :— வாயுக்கட்டி, மகோதரம், நீராம்பல், ஓயா வயிற்றுவலி, உப்புசம், பலவகைக் கிருமிகள், கெண்டை, வயிற்றளைச்சல், எட்டுவகைக் குன்மங்கள், கருப்பை நுண்புழுக்கள், எட்டு வகைக் கருப்பை விப்புருதி, சூதகவாயு, பதினெட்டுவகைச் சூலைகள் ஆகியவை தீரும்.

கருப்பமில்லாதிருந்தாலும், தீட்டுக்காலத்தில் வயிற்றுவலி இருந்தாலும், சூதகத்தில் வாயு தங்கியிருந்தாலும் தீட்டுக்கண்டிருக்கும்போது முதல்நாள் மேற்படி மருந்தை மேற்படி அளவுப்படி காலையில் ஒருவேளை மாத்திரம் கொடுக்கவும். முதல்நாள் கழிச்சல் அதிகமாகும். பின்பு அடுத்த இரண்டுநாளும் அவ்விதமே கொடுக்

கவும். இந்த இரண்டுநாளும் கழிச்சல் அதிகமாகாது. இவ்விதம் செய்யின் மேற்கண்ட தீயகுணங்கள் நீங்கிக் கருப்பமுண்டாகும்.

மருத்துணவு :— மிளகு சீரகம் சேர்த்துப் புளி சேர்க்காமல் ரசம் வைத்து இந்த ரசத்துடன் பகலில் சாப்பாடு கொடுத்து, இரவில் புளி சேர்த்துக்கொள்ளவும். நோய் கடுமையாயிருந்தால் புளி சேர்க்கக் கூடாது. மோர் சேர்த்துக் கொள்ளலாம்.

## 1188. இளநீர் நெய்

(அ) இளநீர், (செவ்விள நீரானல் மேலானது.) பூசணிக் காய்ச்சாறு, வாழைக்கிழங்குச் சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, பசுவின் பால், மேல் விடத்தை நீக்கிச் சிதைத்துச் செய்த சீந்திற் குடிநீர் இவை வகைக்கு 2 படி. கருப்பஞ்சாறு, பொன்னாங் காணிச்சாறு, நீர்முள்ளிச் சாறு இவை வகைச்கு 1 படி, நெருஞ்சிச் சாறு, ஓரிலைத் தாமரைச்சாறு, இவை வகைக்கு ½ படி. நெய் 1 படி, சர்க்கரை 20 பலம் (700 கிராம்), தேன் 10 பலம் (350 கிராம்).

(ஆ) சிலாசத்து, கல்நார், கல்மதம், சிறுபீளை வேர்ப்பட்டை, நாயுருவி வேர்ப்பட்டை, யானைத்திப்பிலி, பொன்னாங்காணிவேர், கூகைநீறு, சிறுநீர் முள்ளிவிதை, தேற்றான்விதை (இதனை மெல்லிய தாகச் சீவிப் பாலில் ஊறவைத்து அரைத்துக் கொள்ளவும்.) பொன்னூமத்தை விதை இவற்றுள் இடிக்க வேண்டியவைகளை இடித்தும் தூள் செய்ய வேண்டியவைகளைத் தூள் செய்தும் எடுத் தத் தூள் தனித் தனியே 3 வராகன் எடை (10½ கிராம்). இவை எல்லாவற்றையும் அம்மியில் வைத்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போல் அரைத்துக்கொள்ளவும்.

செய்முறை :— (அ) விலுள்ளவைகளில் தேன் சர்க்கரை ஆகி யவை தவிர மற்றவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து ஒரு பாத் திரத்தில் விட்டு அதில் முன் (ஆ) வில் சொல்லியிருக்கிறபடி சித்தப் படுத்தினதை கரைத்துச் சிறு தீயாக எரித்து நீரெல்லாம் சுண்டிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டின நெய்யில் தேனையும், சர்க் கரையையும் சேர்த்து மறுபடியும் இளஞ் சூடுகாட்டி இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 5 முதல் 6 வராகன் எடை.

தீரும்நோய் :— கிரிச்சிர நோய், சுக்கில மேகம், நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், கால் கையெரிச்சல், தாகம், அனல் நோய்கள், பித்த வாயு, வெள்ளை விழுதல், வெட்டை, மஞ்சள் வெட்டை, இரத்த-

வெட்டை, நீர்வெட்டை, உள் அழலை, வாய்நாற்றம் ஆகிய பல அனல் நோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம்.

## 1189. தேங்காய் நெய்

(அ) பருமனுன தேங்காய் 10. (இவைகளைஉடைத்துத் தண்ணீரைத் தனியே வைத்துக்கொண்டு துருவிப் பாலைப் பிழிந்துகொள்ளவும்.) கெந்தகம், துருசு இவை வகைக்குப் ½ பலம் (17½ கிராம்), தூய்மைசெய்த இரசம் 2½ வராகன் எடை (8¾ கிராம்).

(ஆ) கருஞ்சீரகம், நீரடிமுத்து இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), கடுகுரோகணி, தூய்மைசெய்த வாளப் பருப்பு வகைக்கு ½ பலம். மேற்கண்டவைகளுள் இடிக்கவேண்டியவைகளை இடித்தும் தூள்செய்ய வேண்டியவைகளைத் தூள்செய்தும் தனித்தனியே நிறுத்தெடுத்துக் கொள்ளவும். கொடிக்கள்ளிப்பால் ½ பலம் (17½ கிராம்), பிராயம்பட்டைச் சாறு 2½ பலம் (87½ கிராம்).

**செய்முறை :—** (அ) விலுள்ள இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்ருகக் கருத்த பின்பு துருசையும் சேர்த்து நன்ருக அரைத்துக்கொள்ள வேண்டியது. இவற்றுடன் (ஆ) வில் சொல்லியிருக்கிற சரக்குகள் எல்லாவற்றையும் கலந்து அம்மியில் வைத்து முன் இளநீரைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய்போல் அரைத்து முன் தேங்காய்ப்பாலில் கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சி நெய்யான பதத்தில் வடிகட்டி ஆறினபின் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 2 வராகன் எடை உட்கொள்ளவேண்டியது.

**துணைமருந்து :—** சர்க்கரை, இளநீர், வெந்நீர் முதலியவைகளாகும்.

**தீரும்நோய் :—** திமிர்வாயு, மேகப் புண்கள், வெட்டை, பிரமியம், கிரந்தி, அரையாப்பு, சூலைப்புண், பறங்கிப்புண் ஆகியவை தீரும்.

**மருத்துணவு :—** கழிச்சல் அதிகமாஞல் குளிர்ந்த நீரில் தலைமுழுகச் செய்தாலும், மோர்சாதம் சாப்பிட்டாலும் அது நின்றுவிடும். அதிலும் கழிச்சல் நிற்காவிட்டால் வசம்பைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் சேர்த்து உட்கொள்ளக் கழிச்சல் உடனே கட்டும். கழிச்சலாகாவிட்டால் வெந்நீரை அல்லது மிளகு நீரைப் பருகச் செய்தால் கழிச்சலாகும். மூன்று நாள்வரை இந்த நெய்

யைத் தொடர்ச்சியாகக் கொடுக்கலாம். உடல் பலவீனமாயிருந்தால் ஒன்றை விட்டு ஒரு நாள் கொடுக்கவும். நாலாம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்துத் துவரம்பருப்பை அரைத்துத் தேய்த்துத் தலைமுழுகச் செய்விக்கவும்.

## 1190. பூநாக மெழுகு

பூநாகம் தேவையான அளவு. (இது செம்மண் பூமியிலுள்ளதானால் அதிக சிறப்புடையதாகும்.) இதனை இரண்டு நாள் தண்ணீரில் ஊறவைத்தால் மண்ணெல்லாம் கக்கிவிடும். பிறகு இதனை நன்றாகக் கழுவி எடுத்துக் கொள்ளவேண்டியது. அல்லது பூநாகத்தை மோரில் ஒரு நாள் ஊறவைத்தாலும் மண்ணெல்லாம் கக்கி விடும். நீரில் செம்மையாகக் கழுவியெடுத்துக் கொள்ள வேண்டியது. இதுவே பூநாகத் தூய்மையாகும்.

தூய்மைசெய்த பூநாகத்தைப் பசுவின் நெய்யில் பொன்னிறமாக வறுத்தெடுத்தது 4 வராகன் எடை (14 கிராம்). சாதிக்காய், சாதிப்பத்திரி, அக்கிராகாரம், முள்ளங்கி விதை இவற்றின் தூள் வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). தேன் செல்லத் தக்க அளவு.

செய்முறை :— எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலாகிறவரையில் அரைத்துப் பீங்கான் சிமிழில்வைத்துக்கொள்ளவும்.

அளவு —: 2 முதல் 4 குன்றி எடை.

துணைமருந்து :— சர்க்கரை, வாழைப்பழம் முதலியவைகளாம்.

தீரும்நோய் :— விந்து வெளிப்பாடு, தாதுக் குறைவு, புணர்ச்சி சக்திக்குறைவு முதலியவைகள் தீரும். நரம்புகள் பலப்படும். ஆண் குறி வலுத்துப்பெருக்கும்.

குறிப்பு :— இதனை உட்கொண்டு பசுவின்பாலைக் காய்ச்சிக் கற்கண்டிட்டுப் பருகச் செய்யவேண்டும். புளி, புளிப்புப் பொருள்கள் முதலியவைகளை நீக்கவேண்டியது.

## 1191. பூநாக பற்பம்

மேற்கண்டபடி தூய்மைசெய்து உலர்த்தின பூநாகம் தேவையான அளவு. இதனை ஒரு கலயத்தில் போட்டு மேலகல் மூடிச் சீலை மண் செய்துலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க பற்பமாகி இருக்கும். இதனை எடுத்

துப் பொடித்துத் துணியில் வடிகட்டிப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :— *2* முதல் *4* குன்றி எடை.**

**துணைமருந்து :— தேன், நெய், வெண்ணெய், சர்க்கரை முதலியவைகளாகும்.**

தீரும்நோய் :— தளர்ந்த நரம்புகள் முறுக்கேறிப் பலப்படும். விந்து வெளிப்பாடு, தாதுக் குறைவு ஆகியவைகள் நீங்கும். உடல் வலிமை, வளமை முதலியவைகள் உண்டாகும்.

குறிப்பு :— இந்த பற்பத்தை தாம்பிரபற்பம் உபயோகப்படுத்தும் நோய்களுக்கும் உபயோகப்படுத்தலாம். அனுபவத்தில் அவரவர்கள் தெரிந்து கொள்ளக்கூடும். பூநாகத்தைக் கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்றாயுலர்த்திக் கொள்ள வேண்டியது. ஈரமாக இருந்தால் பற்பம் கறுப்பாயிருக்கும். இன்னும் பூநாகத்தைச் சிறு கலயத்திற்போட்டு அழுத்தி அழுத்தி வாய்மட்டம் வரையில் சந்தில்லாமலிருக்க வேண்டியது. அப்படிச் செய்யாவிட்டாலும் பற்பம் கறுத்திருக்கும். கைபாகப்படி செய்தால் பற்பம் வெண்மையாக இருப்பதுடன் குணத்திலும் சிறப்பாக இருக்கும். கைபாகம் தவறினல் பற்பம் கருப்பாகவேயிருக்கும். ஆயினும் சற்றேறக் குறையக் குணமும் செய்யும்.

## *1192.* பூநாகப் பிரயோகம்

மேற்கண்டபடி தூய்மைசெய்த செம்மண் பூநாகத்தை நெய்யில் பொன்னிறமாக வறுத்துத் தூள்செய்து 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்) முதல் 10 வரையில், அரையாழாக்குக் கோதுமை மாவுடன் கலந்து ரொட்டியாகச் சுட்டுச் சர்க்கரையுடன் சாப்பிட வேண்டியது. அல்லது, அந்த ரொட்டியை நெய்யில் பொரித்தும் உபயோகிக்கலாம். இவ்விதம் தினந்தோறும் காலையில் ஒரு வேளை நாற்பதுநாள் செய்துவரின் பிறவித் தாதுக்குறைவு தவிர மற்றெல்லாவகைத் தாதுக் குறைவும் தீரும். நரம்புகள் பலப்பட்டுச் சிறுத்தவைகள் பருக்கும். சோர்ந்த நரம்புகள் கெட்டிப்படும்.

இன்னும் மேற்படி பொடியைக் கோதுமை மாவிற் சேர்த்துச் சர்க்கரையும் சேர்த்து நெய்யிற் பொரித்து வைத்துக்கொண்டும் உபயோகிக்கலாம்.

பூநாகத்தை நெய்யில் வறுத்துப் பொடிக்காமல் பச்சையாகவே தூள்செய்து மேற்கண்டபடி மாவிற் கலந்து ரொட்டியாகவும்

9

பணிகாரமாகவும் விருப்பப்படி வேறுவிதமான பலகாரமாகவும் செய்து உபயோகிக்கலாம்.

குறிப்பு :— மேற்கண்ட சரக்கானது நரம்புகளைப் பலப்படுத்துவதில் முக்கிய மானதாயினும் முகமதியர்களுக்கு ஆகாத ஒன்ரும். அதிக மதப் பற்றுள்ளவர்கள் இதனை உபயோகிக்கமாட்டார்கள்.

## 1193. இலவங்கப்பட்டைச் சூரணம்

இலவங்கப்பட்டைத்தூள் 1 பலம் (35 கிராம்), விராலியிலையை உலர்த்தி இடித்து வடிகட்டினத்தூள் 1 பலம் (35 கிராம்) இவ்விரண்டையும் கலந்து ஏழு பங்கு செய்து அவற்றுள் ஒரு பங்கை செரிக்கும்திறனுக்குத் தகுந்ததுபோல் அரை அல்லது ஒன்று,அல்லது ஒன்றரை ஆழாக்குப் பச்சைப் பசுவின் பாலில் கலந்து கலக்கிச் சாப்பிடவேண்டும். மாலையில் செரிக்கும் தன்மைக்குத் தகுந்தபடி காய்ச்சிக் கற்கண்டிட்டு அரை அல்லது ஒன்று, அல்லது ஒன்றரை ஆழாக்குப் பாலைப் பருகச் செய்யவேண்டும். இவ்விதம் ஏழு நாட்கள் வரை ஏழு பங்கையும் சாப்பிடவேண்டும்.

மருந்து உட்கொண்டவுடனே ஒரு ஆண் அடைக்கலங் குருவியை மசாலை தடவி நெய்யில் பொரித்துத் தின்னவேண்டும். நெய், கறி, பால் அதிகமாகக் கூட்டவும். புளி நீக்கவும்.

**தீரும்நோய் :**— தாது வலிமை உண்டாகும். விந்து ஒழுக்குத் தீரும்.

குறிப்பு :— இந்த மருந்துடன் மேற்கண்ட பூநாகப் பிரயோகங்களில் ஒன்றை உபயோகித்தால் மிகவும் சிறப்புடைய குணமுண்டாகும்.

## 1194. ஊர்க்குருவி உருண்டை

ஆண் அடைக்கலங் குருவி 40. (இவைகளை அறுத்து மேல் முடி, வயிற்றிலுள்ள குடல், மூக்கு நுனி, கால் முதலியவைகளை நீக்கித் தூய்மைசெய்து வைத்துக்கொள்ளவும்.) பசுவின் நெய் 15 பலம் (525 கிராம்), அவுரி வேர் 10 பலம் (350 கிராம்), இந்த வேரைச் சிதைத்து நெய்யில் போட்டுச் சிவந்த நிறமாகிறவரையில் காய்ச்சி வடிகட்டி நெய்யை மாத்திரம் வைத்துக் கொள்ளவும். இந்தத் திப்பியை நீக்கி விடவும்.

அபின் 4 வராகன் எடை (14 கிராம்), வெள்ளைக் குங்கிலியம், சாம்பிராணிப் பூ, அக்கிராகாரம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவற்றின் தூள்கள் வகைக்கு 1 பலம் (35 கிராம்).

**செய்முறை :—** அபினையும், மற்றத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்துப் பால் வார்த்து வெண்ணெய்போல் அரைத்துக் குருவிகளின் வயிற்றுக்குள் தடவி வயிறு, எருவாய் கழுத்து முதலியவைகளைச் சந்தில்லாமல் தைத்து முன் சித்தப் படுத்தியிருக்கிற நெய்யில் போட்டுப் பொன்னிறமாகப் பொரித் துக் கீழிறக்கி ஆறின பின்பு ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டுக் குருவிகளின் மேல் ஒரு அங்குலம் இருக்கும்படியாகத் தேனை விட்டு வாய்ப்பந்தனம் செய்து வாய்க்குச் சீலைமண்ணும் செய்து உலர்த்தி அரைச்சதுரக் குழி தோண்டி அரைவாசி குதிரை லத்தி போட்டு நடுவில் பீங்கான் பாத்திரத்தை வைத்து மேலும் குதிரை லத்தி போட்டு மேலே நாலங்குலம் மணலைக் கொட்டிப் பரப்பி நாற்பது நாள் வைத்துப் பிறகெடுத்து பீங்கான் பாத்திரத்திலுள்ளவைகளை அம்மியில் சிறுகச் சிறுக வைத்து வெண்ணெய்போல் அரைத்து எண்பது உருண்டைகளாகச் செய்து, தேன் மிஞ்சியிருந்தால் அதில் போட்டு வைத்துக்கொள்ள வேண்டியது. மிஞ்சின தேனைத் தனியே வைத்துக்கொண்டும் இந்த உருண்டைகளுடன் பருகச் செய்தும் வரலாம்.

**தீரும்நோய் :—** விந்து ஒழுக்கு நோய், விந்து வெளிப்பாடு, உடற் சோர்வு, உள்ளச் சோர்வு ஆகியவை நீங்கித் தெம்பும் துணி வும் உண்டாகும். தளர்ந்த நரம்புகள் பலப்பட்டு ஆண் குறி பருத் துப் பலப்படும். அதிக பசிதீபனமுண்டாகும். தாது வளமை, உடல் வளமை, வீரிய விருத்தி ஆகியவை உண்டாகும். உடல் வலுவுண்டாகும்.

**மருத்துணவு :—** புளி, புளிப்புப்பண்டங்கள், வாயு பண்டங்கள், புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவேண்டியது.

## 1195. ஊர்க்குருவி உருண்டை (வேறு)

ஆண் அடைக்கலங்குருவி 6. (இதனை அறுத்து உரோமம், மூக்கு, குடல், கால் ஆகியவைகளை நீக்கித் தூய்மைசெய்து செம்மண் பூநாகத்தை மேற்கண்டிருக்கிறபடி மண் முதலியவை களில்லாமல் தூய்மைசெய்து மேற்படி குருவிகளின் வயிறு நிறைய அடைத்துத் தைத்து ஒரு பானையில் இரண்டு புட்டி பட்டைச் சாரா யத்தையும் இரண்டு புட்டி தண்ணீரையும் கலந்துவிட்டு மேற்படி குருவிகளை அதில் அமிழ்ந்திருக்கும்படியாகக் கிழிகட்டித் தொங்க விடவேண்டும். குருவிகள் பானையின் அடியில் படாமல் சற்று உயரமாகவேயிருக்க வேண்டும். சாராயமெல்லாம் சுண்டின பிறகு இறக்கி ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு மேற்படி குருவிகளை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து வைத்துக்கொள்ள வேண்டியது.

ரூமிமஸ்தகி, சாலாமிசிரி, சீமைத்தண்ணீர்விட்டான் கிழங்கு, திலப்பனைக் கிழங்கு, சிறுநாகப்பூ, நீர்முள்ளிவிதை இவற்றின் தூள்கள் வகைக்கு $1\frac{1}{2}$ வராகன் எடை, பொன்னூமத்தை விதைத் தூள் $\frac{1}{2}$ வராகன் எடை, நெய் செல்லத்தக்க அளவு, தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை: — எல்லாத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் குருவிகளுடன் சேர்த்து மறுபடியும் அரைத்து வெண்ணெய்போலான பின்பு நாற்பது உருண்டைகளாகச்செய்து பசுவின் நெய்யில் பொன்னிறமாக வறுத்துத் தேனைச் சாடியிலிட்டு அதில்போட்டு ஒரு சாடியிலிட்டு வாய் பந்தனம் செய்து மேற்சொல்லியிருக்கிறபடி இருபதுநாள் பூமிபுடம் வைத்துப் பிறகு எடுத்து வேளை யொன்றுக்கு ஒவ்வொரு உருண்டையாக உட்கொண்டு மேலே கொஞ்சம் தேனையும் பருகச் செய்யவேண்டும்.

தீரும்நோய் :— மேற்கண்ட குணங்களுண்டாகும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி முதலியவை ஆகாது. செரி திறனுக்குத் தகுந்ததுபோல் நல்ல ஆகாரங்களை உபயோகித்து வரவேண்டியது.

## 1196. ஊர்க்குருவி உருண்டை (வேறு)

ஆண்டைக்கலங்குருவி 1 (இதனை அறுத்து மூக்கு, குடல், கால் ஆகியவைகளைத் தூய்மைசெய்து கொள்ளவும்.) கஸ்தூரி 1 வராகன் எடை($3\frac{1}{2}$ கிராம்). (இதனைத் தண்ணீர்விட்டரைத்துக் குருவி வயிறு முழுவதும் பூசிவிடவும்). பருமஞன சாதிக்காய் 1. இதனைக்குடைந்து $1\frac{1}{4}$ வராகன் எடை அபினியை வைத்து எடுத்தத் தூளால் அடைத்துக் குருவி வயிற்றுக்குள் வைத்துச் சந்தில்லாமல் வயிறு முதலியவைகளைத் தைத்து அரை வராகன் எடை இலவங்கத்தை அரைத்துக் குருவிமேலெங்கும் தடவி, நெய்யில் வறுத்துப் பொன்னிறமான சமயத்தில் எடுத்து அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ள வேண்டியது). ரூமிமஸ்தகித்தூள் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), சாதிப்பத்திரித்துள் $\frac{3}{4}$ வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து முன் சித்தப்படுத்தி இருக்கும் கூட்டுடன் சேர்த்து மறுபடியும் அரைத்து ஏழு உருண்டையாகச் செய்து தேனிற் போட்டு வைத்துக் கொண்டு காலையில் ஒவ்வொரு வேளை மாத்திரம் ஒவ்வொரு உருண்டையாக ஏழுநாள் உட்கொள்ளவும்.

தீரும்நோய் :— விந்து ஒழுக்கு, நரம்புத்தளர்ச்சி, நரம்பு வலுக் குறைவு ஆகியவைகள் நீங்கித் தாது வளமை, உடற்சத்து, உடல் வலிமை முதலியவைகளுண்டாகும்.

மருத்துணவு :— புளி, புகை, புணர்ச்சி ஆகியவை ஆகாது.

## 1197. ஊர்க்குருவி இளகம்

**ஆண் அடைக்கலங் குருவி 5. (இவைகளின் மூக்கு, ரோமம் கால், குடல் ஆகியவைகளை நீக்கித் தூய்மைசெய்து வெய்யிலில் காயவைத்துலர்த்தி நெய்யில் வறுத்துக் கல்லுரலில் இடித்துத் தூள் செய்து தெள்ளி எடுத்து வைத்துக் கொள்ளவேண்டியது.)**

சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், சிற்றரத்தை, சிறு தேக்கு, பளிங்குச்சாம்பிராணி, கருங்குங்கிலியம், கருவாப்பட்டை வெட்பாலரிசி, இந்துப்பு, செங்கத்தாரிப்பட்டை, தேவதாரிக் கட்டை, மரமஞ்சள் இவற்றின் தூள்கள் வகைக்கு ½ பலம், (17½ கிராம்), தேன் 25 பலம் (875 கிராம்).

**செய்முறை** :— மேற்படி தூள்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து அம்மியில் வைத்து ஒருமணி நேரமரைத்துத் தேனைக்காய்ச்சி நுரை நீக்கி அதில்மேற்படி தூள்களைச் சிறுகச் சிறுகத் தூவி மத்தால் கடைந்து தூள்களெல்லாம் ஆனபின் கீழிறக்கி ஆறவைத்துப் பீங் கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் 1½ வராகன் எடை. நோய் வலிமைக்குத் தகுந்தபடி இருபத்தோருநாள், நாற்பத்தோருநாள் சமயோசிதம் போல் உபயோகிக்க வேண்டியது.

**தீரும்நோய்** :— சூலைக்கட்டு, திமிர்வாதம், கிரந்திசேட்டை, கரட்டுச்சூலை, முடக்குவாதம், சிறுநஞ்சு, மேகவாயு ஆகியவைகள் தீர்ந்து தாது வளமையுண்டாகும்.

**மருத்துணவு** :— கசப்பு, புளிப்பு, அகத்திக் கீரை, தயிர் ஆகியவை தள்ளவும். உப்பு வறுத்துக் கூட்டிக்கொள்ளவும்.

## 1198. பேரீச்சங்காய் இளகம்

பேரீச்சங்காயை வெய்யிலில் உலர்த்தி இடித்த தூள் 5 பலம் (175 கிராம்). இப்படிச் செய்யக் கூடாத சமயத்தில் ஏழரைப் பலம் பேரீச்சங்காயை நிறுத்தெடுத்துப் பிளந்து விதையை நீக்கி விட்டுப் பசுவின் பாலில் வேக வைத்து அம்மியில் வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவேண்டியது.

இலவங்கத் தூள், சாதிப்பத்திரித் தூள், மதுரகாமாச்சிப்பூத் தூள், அபின், தூய்மைசெய்த கஞ்சாத் தூள் இவை வகைக்கு 5 வராகன் எடை (17½ கிராம்), நீர்முள்ளிவிதை, பூனைக்காலிவிதை நத்தைச்சூரிவிதை, நிலப்பனைக்கிழங்கு, முள்ளிலவம்பிசின் ஆகிய இவற்றின் தூள்கள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), சர்க்கரை 25 பலம் (875 கிராம்), நெய் 8 பலம் (280 கிராம்), தேன் 8 பலம்.

செய்முறை :— முன்கண்டவைகளையெல்லாம் ஒன்ருகக் கலந்து அம்மியில் அல்லது கல்வத்தில் வைத்தரைத்து கலந்து கொள்ள வேண்டியது. சர்க்கரையைப் பாகு செய்து பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தினதைச் சிறுகச் சிறுகப் போட்டு மத்தாற் கடைந்து நன்ருகக் கிளறி நெய்யையும் தேனையும் விட்டு மறுபடியும் கிண்டிக் கிளறிக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 வராகன் எடை உபயோகிக்கலாம்.

தீரும்நோய் :— அக்கினிமந்தம் தீரும். பசிதீபனம் அதிகப்படும். வாயுநோய்கள், கை, கால், இடுப்பு முதலியவைகளிலுள்ள வலிகள் தீரும். விந்து இழப்பு, தாது இழப்பு, ஆண்மைக் குறைவு முதலியவைகள் தீர்ந்து உடல் சத்து, உடல் வலிமை ஆகியவைகளுண்டாகும். மெலிந்து போயிருக்கும் நரம்புகள் பலப்பட்டுக் கெட்டிப்படும்.

மருத்துணவு :— இதனை உபயோகிக்கும்போது பால், நெய், மிட்டாய் வகைகள், தித்திப்பு அல்வாக்கள், வாதுமை அல்வா, கோதுமைப்பால் அல்வா முதலியவைகளை செரிதிறனுக்குத் தகுந்தது போல் உபயோகித்து வரவேண்டியது.

## 1199. பேரீச்சங்காய்ப் பூரி

பேரீச்சங்காய் தேவையான அளவு. இவைகளைப் பிளந்து கொட்டைகளை நீக்கி வைத்துக் கொள்ளவும். கஸ்தூரி $\frac{1}{4}$ வராகன் எடை, பறங்கிப்பட்டை, ரேவல் சர்க்கரை, கருவாப்பட்டை, சிறுநாகப்பூ, குரோசாணிஓமம், சொறிஓமம், பூலாங்கிழங்கு, தாளிசம், தக்கோலம், வேளைவிரை இவைகளின் தனித்தனித் தூள்கள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை, மைசாட்சி 14 வராகன் எடை, கோதுமைமாவு செல்லத்தக்க அளவு, நெய், தேன் இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்கண்ட சரக்குகளையெல்லாம் ஒன்ருகக் கலந்து அம்மியில் வைத்துப் பாலைச் சிறுகச் சிறுகத் தெளித்து வெண்ணெய் போலரைத்து ஒவ்வொரு பேரீச்சங்காய் கொள்ளுமளவும் வைத்து, இரண்டு துண்டையும் பொருத்திக் கோதுமை மாவில் தண்ணீரைவிட்டுக் குழைத்துச் சிறு அப்பளம்போல் செய்து அதில் முன்சித்தப்படுத்தின பேரீச்சங்காயொன்றை வைத்து அந்த அப்பளத்தை மடித்து ஓரத்தைப் பொருத்தி அழுத்தி விடவேண்டியது. இவ்விதமே ஒவ்வொரு காயையும் தனித்தனி வைத்துப் பூரி போல் செய்து நெய்யைக் காயவைத்து அதில் மூன்று நான்கு பூரிகளை விட்டுப் பொன்னிறமாகச் சிவந்தவுடன் எடுத்துத் தேனில்

விடவேண்டியது. பூரியை விடுவதற்குமுன் தேனைக் காய்ச்சி நுரை நீக்கித் தூய்மை செய்து கொள்ளவேண்டியது. சித்தப்படுத்தின பூரியெல்லாம் நெய்யில் சுட்டுத் தேனில்விட்டான பின் ஒரு பீங்கான் பாத்திரத்தில் எல்லாவற்றையும் போட்டு வாய்ப் பந்தனம் செய்து ஒரு வாரம் வைத்தெடுத்துப் பிறகு உபயோகிக்க வேண்டியது.

**அளவு :—** வலுவான உடலாயிருந்தால் ஒரு பூரியை மென்று உட்கொண்டு அதன்மேல் கொஞ்சம் தேனைப் பருகச் செய்யவும். அப்படியில்லாதவர்களுக்கு அரைப் பூரி போதுமானது.

**தீரும்நோய்:—** சூலை, முடக்குவாதம், கைகால் முடக்கு, கிரந்தி நோய், மேகப்புண் முதலியவைகள் தீர்ந்து தாது வளமை உண்டாகும். நரம்புகள் பலப்படும். சோர்ந்த நரம்புகள் பலப்பட்டு முறுக்கேறும் ; சோர்ந்துபோன அவயவங்கள், தளர்ந்து போன அவயவங்கள் இறுகிக் கெட்டிப்படும். விந்து வெளிப்பாடு, விந்து ஒழுக்கு முதலியநோய்களும் தீரும்.

**மருத்துணவு :—** புளி, புகை, புணர்ச்சி முதலியவைகளை நீக்க வேண்டியது. நோய் கடினமாயிராவிட்டால் பத்தியமில்லாமலே உபயோகிக்கலாம்.

## 1200. பேரீச்சங்காய் அல்வா

பேரீச்சங்காய் 24 பலம் (875 கிராம்). (இவற்றைப் பிளந்து இவற்றிலுள்ள விதைகளை நீக்கி விடவேண்டியது). பசுவின் பால் 2 படி, சர்க்கரை 10 பலம் (350 கிராம்), சாலாமிசிரித்தூள் 1 பலம் (35 கிராம்), ரூமிமஸ்தகித்தூள் ½ பலம் (17½ கிராம்).

**செய்முறை :—** பேரீச்சங்காயை ஒரு பாத்திரத்திலிட்டு அதில் கொஞ்சம் பாலைவிட்டு நன்றாக வேகவைத்து வெந்தபின்பு அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துச் சாலாமிசிரித்தூளை மாத்திரம் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டியது. பாலில் சர்க்கரையைக் கரைத்து அடுப்பேற்றிக் கைவிடாமல் துழாவிக் கொண்டேயிருந்து பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தியிருக்கும் பேரீச்சங்காய் விழுதைச் சிறுகச் சிறுகப்போட்டு மத்தாற் கடைந்து எல்லாம் சென்றபின்பு மறுபடியும் கிண்டிக் கீழிறக்கிக் குளிர ஆறினபின்பு ரூமிமஸ்தகித் தூளைச் சேர்க்க வேண்டியது. இந்தத் தூள்களைச் சூட்டுடன் கலந்தால் எல்லாம் கசந்து சாப்பிடக் கூடாமற்போகும். இதனைச் சேர்க்கும் விதம் தெரியாமல் அநேகர் அருமையான பாகங்களைச் செய்து சாப்பிடக்கூடாமல் எடுத்தெறியும்படி நேரிட்டிருப்பது நமக்குத் தெரிந்த ஒன்றாகும்.

**அளவு :—** 5 முதல் 7 வராகன் எடை சாப்பிடலாம். இதனைச் சாப்பிட்டவுடன் காய்ச்சிக் கற்கண்டிட்ட பாலை மேலே பருகச் செய்வது உத்தமம்.

**தீரும்நோய் :—** பசிதீபனமுண்டாகும், நரம்புகள் பலப்படும், சோர்ந்து மெலிந்து போயிருக்கும் அவயவங்கள் பலப்பட்டுக் கெட்டிப்படும். ஆண்மலடு தீர்ந்து பிள்ளைப்பேறு உண்டாவதற்கேதுவாகும். உடற்சத்து, உடல் வலிமை முதலியவைகளும் உண்டாகும்.

**மருத்துணவு :—** புளி, புகை, புணர்ச்சி முதலியவைகளை நிலைமைக்கேற்றவாறு நீக்கவேண்டியது.

## 1201. பேரீச்சம்பழ இளகம்

கொட்டை, குமிழ் முதலியவைகளை நீக்கித் தூய்மை செய்த பேரீச்சம்பழம் 10 பலம் (350 கிராம்), நெய் செல்லத்தக்க அளவு, பூமிசர்க்கரைக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, பஹமனேசுபேத், பஹமனேசுருஹ், சாலாமிசிரி இவைகளின் தனித்தனித் தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), சர்க்கரை 30 பலம் (1050 கிராம்).

**செய்முறை :—** மேற்படி பேரீச்சம்பழத்தை நெய்யில் கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டுக் கருகிப் போகாமல் பொன்னிறமாக வறுத்துப் பொடித்து மற்றத் தூள்களையும் ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டியது. சர்க்கரையைக் காய்ச்சிப் பாகுசெய்து பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தினவைகளைச் சிறுகச் சிறுகப் போட்டு மத்தால் கடைந்து எல்லாம் சென்றபின் கீழிறக்கி ஆற வைத்துக் குளிர ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 4 முதல் 6 வராகன் எடை. இது அதிக ருசிகரமான தாகவும், ஆரோக்கியமானதாகவும் இருக்கும்.

**தீரும்நோய் :—** செரி திறனுண்டாகும் ; இரைப்பையிலுள்ள வாயுகளையும், கபக்கட்டுகளையும் போக்கும். நரம்புகள் பலப்பட்டுத் தாதுவிருத்தியுண்டாகும்; விந்து ஒழுக்கு, விந்து வெளிப்பாடு முதலிய நோய் தீரும். முகக் களை உண்டாகும்.

## 1202. சாலாமிசிறி இளகம்

சாலாமிசிறித் தூள் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), ரூமிமஸ்தகி, துத்திவிதை, நீர்முள்ளிவிதை, ஆனைநெருஞ்சிமுள், இலவங்கம், ஏலரிசி, கருவாப்பட்டை, சாஜீரா இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு $2\frac{1}{4}$ பலம் ($78\frac{3}{4}$ கிராம்). பூஞ்சாந்துப்பட்டை, சாதிப்பத்,

திரி இவற்றின் தனித்தனித்தூள் வகைக்கு 1½ பலம் (52½ கிராம்), மேற்றோல் நீக்கின வாதுமைப்பருப்பு 1½ பலம் (52½ கிராம்), சர்க்கரை 25 பலம், நெய் 10 பலம் (350 கிராம்).

**செய்முறை :—** வாதுமைப் பருப்பை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும். மற்றத் தூள்களையும் ஒன்ருகக் கலந்து அதில் கலந்துகொள்ளவும். சர்க்கரையைப் பாகு செய்து பாகு பதத்தில் மேற்படி தூள்களைச் சிறுகச் சிறுகத்தூவி மத்தால் கடைந்து எல்லாத் தூள்களும் சென்ற பின்பு கீழிறக்கி நெய்யைவிட்டு மறுபடியும் கிளறி ஆறவிட்டுப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1½ முதல் 2 வராகன் எடை.

**தீரும்நோய் :—** தாது வளமை உண்டாகும்; விந்து ஒழுக்கு நோய், விந்து வெளிப்பாடு ஆகியவை தீரும். உடல வலிமை, ஆண்மை முதலியவைகளும் உண்டாகும்.

**மருத்துணவு :—** புளி, புகை, புணர்ச்சி நீக்குக.

## 1203. தேற்ருன்கொட்டை இளகம்

தேற்ருன்கொட்டை 2 பலம் (70 கிராம்), இதனை மெல்லிதாகச் சீவி இளநீரில் ஊற வைத்து அம்மியில் வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும். சீரகம், சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்கு இவற்றின் தூள்கள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), விதை நீக்கின பேரீச்சங்காய், விதை நீக்கின திராட்சைப்பழம், சாரப் பருப்பு, கசகசா, சொறிஓமத்தூள் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), சாதிக்காய், சாதிப்பத்திரி, மிளகு, இசுபகோல்விதை, சப்சா விதை, சாலாமிசிரி, ரூமிமஸ்தகி, பேதாணுவிதை, சீமை நீர் முள்ளிவிதை இவற்றின் தூள்கள் வகைக்கு 1¼ பலம் (43¾ கிராம்), மேற்றோல் நீக்கின வாதுமைப் பருப்பு 1 பலம் (35 கிராம்), மிசிரி அபின் 1¼ வராகன் எடை, கருவாப்பட்டை, வால்மிளகு இவற்றின் தூள்கள் வகைக்கு 1¼ வராகன் எடை, பசுவின் பால் அரைப் படி. சர்க்கரை 10 பலம் (350 கிராம்), கற்கண்டு 4 பலம் (140 கிராம்), நெய் 4 பலம் (140 கிராம்).

**செய்முறை :—** பருப்பினங்களையும், பேரீச்சங்காய், திராட்சை ஆகியவைகளையும் தனித்தனி அரைத்து வெண்ணெய் போலான தபத்தில் ஒன்ருகக் கலந்து இவற்றுடன் முன் சித்தப்படுத்தின தேற்ருன் கொட்டை விழுதையும் கலந்து மற்ற தூள்களையும் ஒன்ருகக் கலந்து கொள்ளவும். சீனியைப் பாகு செய்து பாகு பதத்தில் முன்சித்தப்படுத்தியிருப்பதைச் சிறுகச் சிறுகப் போட்டு

மத்தால் கடைந்து தூள் சென்றபின்பு நெய்யை விட்டு மறுபடி யும் கலந்து கீழிறக்கி ஆறின பின்பு அபினியிற் கொஞ்சம் தண் ணீரை விட்டரைத்து அதிற் கலந்து கற்கண்டைப் பொடித்துத் தூவி மறுபடியும் நன்றாகக் கலந்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

**அளவு** :— 1½ முதல் 2 வராகன் எடை.

**தீரும்நோய்** :— பிரமியம், வெட்டை, மூலச்சூடு, இருமல், புகைச்சல், நீரெரிச்சல், விந்து ஒழுக்கு, தாது இழப்பு, சூட்டுநோய் ஆகியவை தீரும். தாது வளமையுண்டாகும்.

**மருத்துணவு** :— மகளிர்சேர்க்கை ஆகாது. கறி, நெய், பால், அதிகமாகக் கூட்டவும்.

## 1204. மகிழம்பட்டைச் சூரணம்

முற்றினமகிழம் பட்டையை நிழலில் உலர்த்தியிடித்து துணி யில் சலித்த தூள் 1 பலம் (35 கிராம்), புரசம்பிசின் தூள் 1 பலம், சீமை நீர்முள்ளி விதைத் தூள் 1 பலம்.

**செய்முறை** :— இம் மூன்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு மணி நேர மரைத்து நன்றாகக் கலந்து வைத்துக்கொள்ளவும்.

**அளவு** :— 2 வராகன் எடை. காலை, மாலை இரண்டு வேளையும் ஏழு நாட்கள் உபயோகிக்கவும்.

**துணைமருந்து** :— குளிர்ந்த தண்ணீர், தேன், நெய் முதலிய வைகளாம்.

**தீரும்நோய்** :— விந்துவெளிப்பாடு, விந்துஒழுக்கு, விந்து நீர்த் திருத்தல் ஆகியவைகள் நீங்கும். புணர்ச்சி வேட்கையுண்டாகும். விந்தொழுக்கினால் உண்டான வலுக்குறைவு, உடல் வலிமைக் குறைவு ஆகியவைகள் நீங்கி உடல் வளமை, விந்து வளமை ஆகிய வைகளுண்டாகும்.

**மருத்துணவு** :— ஆட்டுக்கறி, நெய், சிறுபயறு சேர்த்துக் கிச்சடி செய்து சாப்பிடவும். ஏழு நாள்கள்வரை மகளிர்சேர்க்கை ஆகாது.

## 1205. பூரணாதி இளகம்

மேற்றோல் சீவினசுக்கு, சோம்பு, அதிமதுரம், அக்கிராகாரம், இலவங்கம், மிளகு, வால்மிளகு, அரிசித்திப்பிலி, யானைத்திப்பிலி, சிறுநாகப்பூ, மஞ்சள்கடுக்காய்த்தோல், ஏலரிசி, சாதிக்காய், சாதிப்

பத்திரி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி. கோட்டம், மல்லி, தாளிசப்பத்திரி, நெல்லிமுள்ளி, நற்சீரகம், அமுக்குராக்கிழங்கு, செண்பகப்பூ, கஸ்தூரிமஞ்சள், தக்கோலம், தான்றிக்காய்த்தோல், கசகசா, கருஞ்சீரகம், நீர்முள்ளிவிதை, உழுந்துமா, முள்ளிலவம் பிசின், நிலப்பனைக்கிழங்கு இவற்றின் தனித்தனித்தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்). விதைநீக்கின திராட்சைப்பழம் 1 பலம். தூய்மை செய்த கஞ்சா 10 பலம், நெய் 1 வீசை, நாட்டுச்சர்க்கரை 50 பலம், தேன் 10 பலம்.

**செய்முறை** :— கஞ்சாவை ஒரு பாத்திரத்தில் போட்டு நான்கு படித் தண்ணீரை விட்டு நான்கிலொரு பாகமாகச் சுண்டக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டின குடிநீருடன் நெய்யை சேர்த்துக் காய்ச்சி நீர் சுண்டின பதத்தில் வடித்து வைத்துக்கொள்ள வேண்டியது. இந்தக் குடிநீருடன் ஒரு படி இளநீர், ஒரு படி பசுவின் பால், ஒரு படி பனம்பதநீர், ஒருபடி கரும்புத் தண்ணீர் ஆகியவைகளையும் சேர்த்து நெய்யுடன் கலந்து காய்ச்சி நெய்யாக எடுத்துக்கொண்டால் அதில் உயர்வானதாக இருக்கும். கசகசாவையும், திராட்சைப்பழத்தையும் தனித்தனியே அரைத்தும் முன் தூள்களையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும். சர்க்கரையைப் பாகு பதத்தில் முன் சித்தப்படுத்தியிருக்கும் தூள்களை சிறுகச் சிறுகத் தூவி மத்தால் கடைந்து தேனையும், நெய்யையும் விட்டு நன்றாகக் கலந்து இறக்கி ஆற விட்டுக் குளிர ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகன் எடை. காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம். ஆனால் ஆகாரத்துக்குப்பின் உட்கொள்ளுவது உத்தமம்.

**தீரும்நோய்** :— பாண்டு, தேகவௌமை, பித்தபாண்டு, கிராணி, சோகை, பவுத்திரம், மூலச்சூடு, உப்புசம், இரத்தச்சிக்கல் முதலியவை தீரும்.

## 1206. ஊர்க்குருவி இளகம்

ஆண் அடைக்கலங்குருவி 100, (இவைகளை அறுத்துக் குடல், கால், மூக்கு, மயிர், முதலியவைகளை நீக்கித் தூய்மை செய்து கல்லுலிரற் போட்டுச் சிதைத்து ஒரு பாண்டத்திற் போட்டுப் பதினாறு படி தண்ணீர் விட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்ட வைத்து இளஞ் சூட்டுடன் பிசைந்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும்.

பசுவின்பால் 2 படி, தேங்காய்ப்பால் 2 படி, வெள்ளாட்டுப் பால் 2 படி, பருத்திவிரைப்பால் 2 படி, கசகசாப்பால் 1 படி, தென்

ணம்பூச்சாறு 1 படி, முருங்கைப்பூச்சாறு 1 படி, தாழைவிழுதுச்சாறு ¼ படி, செவ்விளநீர் ¼ படி, கையாந்தகரைச்சாறு ¼ படி, நெல்லிக் காய்ச்சாறு ¼ படி, ஆலம் விழுதுச்சாறு ¼ படி, புளியாரைச்சாறு, கீழ்காய்நெல்லிச்சாறு, வல்லாரைச்சாறு, நிலப்பனை சமூலமிடித்த சாறு வகைக்கு ¼ படி. இவைகளை ஒன்றாகக் கலந்து முன் சித் தப்படுத்தியிருக்கும் குருவிக் குடிநீருடன் சேர்த்து அதில் இருபது பலம் சீனியைக் கரைத்து இரண்டு வீசை தேனுங்கலந்து அடுப் பேற்றிக் காய்ச்சிப் பாகு செய்யவும்.

அதிவிடயம், மாசிக்காய்த்தோல், மஞ்சள்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், சாதிக்காய், இலவங்கம், கோட்டம், அதி மதுரம், சாதிப்பத்திரி, குரோசாணி ஓமம், இலவங்கப்பட்டை, ஏலரிசி, கொத்துமல்லிவிதை, மேற்றோல் சீவியசுக்கு, வால்மிளகு, ஓமம், வாலுழுவையரிசி, நெருஞ்சிமுள்ளு, மாதுளைவிதை, முருங்கை வித்து, ஊசித்தகரைவிதை, ஆலம்வித்து, அரசம்வித்து, ஆவிரை வித்து, உலர்த்தின ஆவாரம்பூ, நாயுருவிவித்து, நீர்முள்ளி வித்து, உலர்த்தின அத்திப்பிஞ்சு ஆகிய இவைகளை இளவறுப்பாக வறுத்துத் தனித்தனி இடித்து வடித்த தூள்கள் வகைக்குப் 1 பலம் (35 கிராம்).

விளாம்பிசின், வில்வப்பழச்சதை, ஆவாரைப்பிசின், கருவேலம் பிசின் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்). இவைகளைத் தனித் தனி நெய்யில் வறுத்துப் பொடித்துக் கொள்ளவும்.

விதைநீக்கின திராட்சைப்பழம், விதைநீக்கின பேரீச்சங்காய் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). இவ்விரண்டையும் பசும் பாலில் வேக வைத்து அம்மியில் வெண்ணெய் போலரைத்துத் கொள்ளவும்.

நெய் 1 வீசை.

அபின், தூய்மைசெய்த கஞ்சா, (இவற்றை நெய்யில் வறுத்துப் பொடித்துக்கொள்ளவும்.) கோரோசனை, குங்குமப்பூ இவை வகைக்கு ¼ பலம். இவற்றையும் தனித்தனிப் பொடித்து முன் தூள் களுடன் கலந்துகொள்ளவும்.

செய்முறை :— முன் தூள்களையும், அரைத்து வைத்திருக்கும் மருந்துகளையும் ஒன்றாகக் கலந்துமுன்சித்தப்படுத்தியிருக்கும் பாகில் சிறுகச் சிறுகப் போட்டு மத்தாற் கடைந்து எல்லாம் சென்றபின்பு நெய்யையும் விட்டு நன்றாகக் கலந்து கீழிறக்கி ஆறினபின்பு வேண்டியது. கோரோசனையையும் குங்குமப்பூவையும் பொடித்துத் தூவ குளிர ஆறினபின்பு அபினியில் கொஞ்சம் தண்ணீரைவிட்டு அரைத்து முன்லேகியத்தில் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும். அதிகச் சூட்டுடன் கோரோசனையையும் அபினையும் சேர்த்தால்

அதிகமாகக் கசந்துபோகும். ஆகையால் குளிர்ந்தபின் சேர்த்தால் அவ்வளவு கசப்பாயிராது. குளிர ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** ¼ முதல் 1 வராகன் எடை. இது லாகிரியுள்ளதாகையால் லாகிரிப் பழக்கமுள்ளவர்கள் கொஞ்சம் அதிகமாக உபயோகித்துக் கொள்ளலாம். மற்றவர்கள் குறைந்த அளவாகவே உபயோகிக்கவேண்டியது.

**தீரும்நோய் :—** பிரமேக நோய், விந்து ஒழுக்குநோய், நரம்புகளின் வலுக்குறைவு, உறுப்புகளின் சோர்வு ஆகியவை தீரும். நரம்புகள் பலப்பட்டு உடல் வலிமை ஆண்மை முதலியவைகளுண்டாகும். வெட்டைச்சூடு, பித்தம், பித்தச்சூடு, மேகச்சூடு முதலியவைகளும் தீரும். பலவகை வாயுவுகள், கிரகணி முதலியவைகளும் தீரும். வாய்க்கசப்பு,வாய்நீரூறல், நீர்க்கடுப்பு, இருமல், இளைப்பு, நீரிழிவு, நச்சுநீர் ஆகியவைகளும் தீரும். உடல்வலிமை உடல்வளமை உண்டாகும்.

**மருத்துணவு :—** பால், நெய், அசைவ உணவினர்களானால் இறைச்சி முதலியவைகளைப் பசி தீபனத்திற்குத் தகுந்தபடி சேர்த்துக் கொள்ள வேண்டியது, இனிப்புப் பண்டங்கள், மிட்டாய் வகைகள், பால் அல்வா, கோதுமை அல்வா முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். புணர்ச்சி, புகை முதலியவைகளை நீக்க வேண்டியது. சமயோசிதம்போல் அரை முதல் ஒரு மண்டலம் உபயோகிக்கலாம். நோய் இல்லாதவர்களும் இதனை உபயோகித்து வந்தால் வேறுவகை நோய்கள் வராமல் நீங்கி உடல்நலம், உடல் வளமை முதலியவையுண்டாகும். இது ஒரு கற்பமுறைக்குச் சமானமானது.

குறிப்பு :— இந்தப் பாகத்தில் அபின், கஞ்சா, கோரோசனை, குங்குமப்பூ ஆகிய இவைகளை வகைக்கு ஒவ்வொரு பலம் சேர்த்துச் செய்வதுமுண்டு. அப்படிச் செய்ய விருப்பமுள்ளவர்கள் அவ்விதம் செய்யும் பட்சத்தில் மிகவும் குறைந்த அளவாக உபயோகிக்க வேண்டியது.

## 1207. தாளிசப்பத்திரி வடகம்

**தாளிசப்பத்திரி, மிளகு, மேற்றோல் சீவிய இஞ்சி, (இதனைத் தனியே சிறு துண்டுகளாகத் துண்டித்து நெய்யில் வறுத்துப் பொடித்துக் கொள்ளவும்).** செவியம், கொத்துமல்லிவிதை, கண்டத்திப்பிலி, இவற்றின் சூரணம் வகைக்கு 1 பலம்(35 கிராம்), நற்சீரகத் தூள் 2 பலம், இலவங்கப்பட்டைத் தூள் ¼ பலம், இலவங்கப்பத்திரித் தூள் ¼ பலம், ஏலரிசித் தூள் ½ பலம், இலவங்கத் தூள் 1 பலம், கற்கண்டு 20 பலம்.

**செய்முறை** :— கற்கண்டைத் தூள் செய்து அதிற்கொஞ்சம் தண்ணீரை விட்டுக் காய்ச்சிப் பாகு செய்து மேற்படி தூள்களெல்லாம் ஒன்ருகக் கலந்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு அதில் மேற்படி பாகைச் சிறுகச் சிறுகவிட்டுக் கையால் அளந்து பிசைந்து வடக பதமாக எடுத்துக் கொள்ளவும். இதனை இளகமாகவும் செய்துகொள்ளலாம்.

**அளவு** :— 1 முதல் $1\frac{1}{2}$ வராகன் எடை.

**தீரும்நோய்** :— கபக்கட்டு, தொண்டைக்கட்டு, குரற்கம்மல் கீச்சுக்குரல், கோழைக்கட்டு, இருமல் முதலிய எல்லா நோய்களும் **தீரும்.** செரியாமை, தொடர்கழிச்சல், மலப்போக்கு முதலிய இரைப்பை சார்பான நோய்களும் தீரும்.

**மருத்துணவு** :— இச்சாபத்தியம்.

## 1208. தேற்ருன் இளகம் (வேறு)

தேற்ருன்கொட்டை 2 பலம் (70 கிராம்.) (இதனை மெல்லிதாகச் சீவிப் பாலில் வேக வைத்து அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும்). நற்சீரகத் தூள் 1 பலம்(35 கிராம்), கசகசா $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்.) (இதனை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்துக் கொள்ளவும்.) சன்னலவங்கப் பட்டை, வால்மிளகு, சப்ஜா விதை இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை. சாதிக்காய், சாதிப்பத்திரி, மிளகு, இசுபகோல் விதை, சாலாமிசிரி, ரூமிமஸ்தகி, பேதாணுவிதை, நீர்முள்ளி விதை இவற்றின் தனித்தனித் தூள்கள் வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை, சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்குத்தூள், நிலப்பனைக் கிழங்குத் தூள்கள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), சொறியோமத் தூள் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), விதைநீக்கிய திராட்சைப்பழம் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), விதை நீக்கிய பேரீச்சங்காய் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்). (இவ்விரண்டையும் தனித்தனியாகப் பசுவின் பாலில் வேகவைத்து அம்மியில் வெண்ணெய் போலரைத்துக்கொள்ளவும்.)

சாரப்பருப்பு $\frac{1}{2}$ பலம், பாதாம்பருப்பு 4 பலம். இவைகளை வெந்நீரில் போட்டு மேற்ருேலை நீக்கிவிட்டு அம்மியில் வைத்து வெண்ணெய் போல் அரைத்துக்கொள்ளவும். சர்க்கரை 10 பலம் (350 கிராம்), கற்கண்டு 5 பலம் (175 கிராம்), நெய் 5 பலம்.

**செய்முறை** :— சர்க்கரையைக் காய்ச்சிப் பாகு செய்து அதில் மேற்படி தூள்களையும், அரைத்த சரக்குகளையும் ஒன்ருகக் கலந்து சிறுகச் சிறுகப் போட்டு மத்தால் கடைந்து கீழிறக்கி நெய்யையும் விட்டுக் கிளறி கற்கண்டைத் தூள் செய்து தூவி மறுபடியும் சேர்த்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— $1\frac{1}{2}$ முதல் 3 வராகன் எடை.

**தீரும்நோய்** :— பிரமேகசுரம், இந்திரிய ஒழுக்கு, விந்து ஒழுக்கு, விந்து வெளிப்பாடு, வெட்டைச்சூடு, பித்தச்சூடு முதலிய மேக சம்பந்தமான நோய்களெல்லாம் தீரும். உடல் வலிமை, தாது வளமை முதலியவை உண்டாகும்.

**மருத்துணவு** :— நோயின் வலிமை, உடல் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தது போல் புளி, புகை ஆகியவைகளை நீக்கவேண்டியது. புணர்ச்சி நீக்குதல் அவசியமாகும்.

**குறிப்பு** :— இந்த இளகம் அதி சீக்கிரம் பூசணம் பூத்துப்போகுமாகையால் இதனை அடிக்கடி வெய்யிலில் வைத்துக்கொண்டு வரவேண்டியது. ருமஸ்தகித் தூளை எல்லாத் தூள்களுடனும் கலந்து சூட்டில் போடாமல் அதைத் தனியே வைத்துக்கொண்டு குளிர ஆறின பின்பு சேர்ப்பது கையாகம் முறை. இவ்விதமே அபின், கோரோசனை முதலியவைகளையும் சூட்டுடன் சேர்ப்பது அவ்வளவு சிறந்ததாகாது. குளிர ஆறின பின்பு சேர்ப்பதுதான் உத்தமம்.

அனுபோக வைத்திய நவநீதம் எட்டாம் பாகம்
முற்றுப் பெற்றது.